

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

G. C. E. A/L

# இந்து நாகரிகம்

## (புதிய பாடத்திட்டம்)

## வினா - விடை

⌘ 1997 முதல் நடைமுறைப்படுத்தப்படும் இந்து நாகரிகம் புதிய பாடத்திட்டத்திற்கமைய உருவாக்கப்பெற்ற வினா – விடை நூல்.

⌘ பரீட்சையில் மாணவர்கள் உச்சப்புள்ளி பெற உதவிடும் வழிகாட்டி


மீள் பார்வை
'இளங்கோ'



வெளியிடுவோர்

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபா. 125/=

102

முதற் பதிப்பு : ஆவணி 1998

வெளியிடுவோர்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

கொழும்பில் அச்சிட்டு வெளியிடுவோர்:
லங்கா புத்தகசாலை
F.L. 1.14 டயஸ் பிளேஸ்
குணசிங்கபுர
கொழும்பு - 12.
தொலைபேசி: 341942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி 1

1.. பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

**01) பின்வருவனவற்றுள் இந்துநாகரிகத்தோடு தொடர்புடையவையும் தொடர்புடையோரும்.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| குதிரை | அரப்பா | சிவலிங்கம் | சேர்.ஜோன்மார்ஷல் | அதிதி |
| காண்டாமிருகம் | பிப்ரஹ்வா | திருமால் | மாக்ஸ்முல்லர் | கொற்றவை |
| புலி | தேனுதாரோ | முத்தலைமூர்த்தி | அலெக்சாந்தர் கன்னிங்காம் | தாய்த்தெய்வம் |
| யானை | சங்குதாரோ | உமாமகேஸ்வரர் | சோப்பநோர் | சரசுவதி |

**02) பின்வருவனவற்றுள் வேதகாலத் தெய்வங்கள் எனக்கொள்ளத்தக்கவை.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| சாஸ்தா | அக்கினி | சிவன் | யமுனை | பிருதிவி |
| வருணன் | சுப்பிரமணியர் | பிரஜாபதி | உஷை | இலக்குமி |
| உருத்திரன் | இந்திரன் | சண்டேசுரர் | இராத்திரி | ரிதம் |

**03) பின்வருவனவற்றுள் யாகத்தைக் குறிக்கும் சொற்கள்.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மகம் | அவுத்திரி | வேள்வி | வழிபாடு | யஜ் |
| தியானம் | இஷ்டி | கிரியை | யக்ஞம் | பூர்வம் |
| கிருஹியம் | பூசை | தியாகம் | சம்ஸ்காரம் | சிரௌதம் |

**04) பின்வருவனவற்றுள் ஐவகை வேள்விகளில் (பஞ்சயக்ஞங்களும்) இடம் பெறுவன.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| வருணன் | இந்திரன் | ரிஷிகள் | மூத்தோர் | பூதம் |
| பிதிரர் | விருந்தினர் | அரசர் | தேவர் | பிராமணர் |
| பெற்றோர் | புருடன் | சிவன் | ரிதம் | பிரமம் |

**05) பின்வருவனவற்றுள் பிராமணர் இயற்றவேண்டிய கடன்கள் எனக் குறிப்பன.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| போர்புரிதல் | வாணிகம் | ஓதுவித்தல் | போர்புரிதல் | ஏற்றல் |
| ஓதல் | வேட்டல் | குடியோம்பல் | வேட்பித்தல் | ஒறுத்தல் |
| உழவுத்தொழில் | ஆநிரை ஓம்பல் | ஈதல் | ஊழியம் செய்தல் | நீதிவழங்கல் |

**06) பின்வருவனவற்றுள் வேதாங்கங்களாகக் கூறப்படுவன .**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| பூர்வமீமாம்சை | சிட்சை | வாஜபேயம் | மந்வர்தரம் | பவிடியம் |
| வியாகரணம் | யோகம் | உத்தரமீமாம்சை | நிருத்தம் | சோதிடம் |
| தற்புருடம் | பிரம்ம வித்தை | சந்தோவிசிதி | கற்பம் | சகஸ்ரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07) பின்வருவனவற்றுள் சிவாகமங்கள் என்பன.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மகுடம் | சதருத்திரியம் | சர்வோக்தம் | அஞ்சுமான் | நிர்சுவாசம் |
| ஐயம் | சிந்தியம் | கிரணம் | பாஞ்சராத்திரம் | சாமம் |
| சாமளம் | தந்திரம் | பௌரவம் | ரௌரவம் | வீரம் |

08. பின்வருவனவற்றுள் அறுவகைத் தரிசனங்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| தருக்கம் | வைசேடிகம் | சாங்கியம் | அஞ்சுமான் | நியாயம் |
| சதுஷ்டிரியம் | யோகம் | பூர்வமீமாம்சை | விப்பரம் | பலப்பிரதரம் |
| உத்தரமீமாம்சை | பிரரிபவனம் | சகஸ்திரம் | காலபேதம் | |

09) மெய்கண்ட சாத்திரங்களுள் அடங்குவன.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| திருமந்திரம் | தத்துவத்திரியம் | திருக்குறள் | கொடிக்கவி | சிவப்பிரகாசம் |
| திருவருட்பயன் | போற்றிப் பஃறொடை | தத்துவ போதம் | சந்திரவிம்பம் | திகளறு போதம் |
| சிவஞானசித்தியார் | திராவிட மாபாடியம் | இருபா இருபஃது | திருவுந்தியார் | வினாவெண்பா |

10) ஆலயங்களில் காணப்படும் கலையம்சங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கூட்டுவழிபாடு | பூசைக்கிரமங்கள் | வாகனங்கள் | கோபுரச் சிற்பங்கள் | விக்கிரகஅமைப்பு |
| இசைக்கருவிகள் வாசித்தல். நடனம் | வேதபாராயணம் | கிரியைத்தொண்டுகள் | நேர்த்திக்கடன்கள் | அங்கப்பிரதட்சணம் |
| கோயில் அமைப்பு | திருவிழாக்கள் | கடைக்கண்ணிகள் | பண்ணிசை | தெய்வலீலைகளைப் புலப்படுத்தும் ஓவியங்கள் |

11) சங்ககாலத்தில் தமிழரின் வழிபாட்டிற்குரிய தெய்வங்களாகக் கொள்ளப்படுபவை.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| சிவபெருமான் | வருணன் | திருமால் | இந்திரன் | உருத்திரன் |
| அக்கினி | முருகன் | ஐயனார் | கதிரவன் | கந்தவி |
| ஆவிகள் | சண்டேசுரர் | முத்துமாரி | கொற்றவை | விநாயகர் |

12) சங்ககாலத்தில் சிவனைப் போற்றி அவனுக்கு வழங்கிய பெயர்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| உருகெழுகுரிசில் | புட்கொடிவிறல் வெய்யோன் | முக்கட் செல்வர் | மணிமிடற்றந்தணன் | ஆலமர்கடவுள் |
| சுடர்ப்பூட்சேய் | மழுவாள் நெடியோன் | மணிமிடற்றோன் | அஞ்சன உருவன் | மூவெயில்முருக்கிய முரண்மிகு செல்வன் |
| புன்னணி நீள்கொடிச் செல்வன் | பிணிமுகவூர்வோன் | கணிச்சிக் கூரம்படை கடுந்திறலொருவன் | காரியுண்டிக் கடவுள் | ஈர்ஞ்சடை அந்தணன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13) பதினொராம் திருமுறையில் இடம் பெற்ற பிரபந்தங்கள் என்பன.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| இருபா இருபஃது | திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | க்ஷேத்திர வெண்பா | அற்புதத்திருவந்தாதி | திருக்களிற்றுப்படியார் |
| திருமுருகாற்றுப் படை | பொன்வண்ணத் தந்தாதி | திருவாரூர்மும்மணிக் கோவை | கோயில் நான்மணி மாலை | திருக்கோவையார் |
| கோயிற் பிராரதம். | சிவப்பிரகாசம் | திருவிசைப்பா | திருவுந்தியார் | திருமுகப் பாசுரம் |
| உண்மைவிளக்கம் | | | | |

## 14) பன்னீராழ்வாரின் பிரபந்தங்கள் என்பன.

| 1. | 2. | 3. | 4. | 5 |
|---|---|---|---|---|
| திருப்பல்லாண்டு | திருப்பாவை | இராமானுச நூற்றந்தாதி | திருச்சந்த விருத்தம் | பெரிய திருமொழி |
| திருமாலை | ஆழ்வார் திருமொழி | நான்முகன் திருவந்தாதி | திருவிருத்தம் | குருபரம்பரைப் பிரபாவம் |
| திருவெம்பாவை | திருப்பள்ளி எழுச்சி | கண்ணன் பாட்டு | திருவாய்மொழி | திருவந்தாதி |

## 15) திருமுறைகளில் பாடியோராய் இடம்பெறும் சமயகுரவரல்லாத சிவனடியார்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மங்கையர்க்கரசியார் | திருமூலர் | சேரமான் பெருமாணாயனார் | நம்பியாண்டார் நம்பி | கபிலர் |
| காரைக்காலம்மையார் | மனவாசகங்கடந்தார் | பரணர் | வேணாட்டடிகள் | பட்டினத்தார் |
| தாயுமானவர் | குமரகுருபரர் | சேக்கிழார் | ஔவையார் | மறைஞான சம்பந்தர் |

## 16) பல்லவ மன்னரில் ஆலயம் அமைத்தோர்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மகேந்திரவர்மன் | பராந்தகன் | சிம்மவிஷ்ணு | பரமேசுவரவர்மன் | 3ஆம் நந்திவர்மன் |
| ஐயடிகள்காடவர்கோன் | நரசிம்மவர்மன் | 2ஆம் பரமேசுவரவர்மன் | அபராஜிதவர்மன் | ஆதித்தவர்மன் |
| 2ஆம் நந்திவர்மன் | பீமவர்மன் | பராங்குசன் | நந்திவர்மன் | இராசசிம்மன் |

## 17) பல்லவ மன்னனான மகேந்திரவர்மன் கட்டிய கோயில்கள் உள்ள இடங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| பல்லாவரம் | மகேந்திரவாடி | மண்டகப்பட்டு | காஞ்சிபுரம் | பல்லவபுரம் |
| நாமக்கல் | தளவானூர் | மாமல்லபுரம் | மாமண்டூர் | தஞ்சாவூர் |
| சிதம்பரம் | திருச்சி | வல்லம் | மதுரை | சீயமங்கலம் |

## 18) சோழப்பெரு மன்னரின் குறிப்பிடத்தக்க பெருங் கோயில்கள்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கோரங்கேசுவரர் கோயில் | ஐராவதேசுவரர் கோயில் | இராசராசேச்சரம் | மதுரைமீனாட்சியம்மன் கோவில் | விஜயாலய சோழேச்சரம் |
| சிதம்பர நடராசர் கோயில் | திருக்காம கோட்டம் | ஸ்ரீரங்கக் கோயில் | கம்பகேசுவரர் கோயில் | கங்கைகொண்ட சோழேச்சரம் |
| கண்டராதித்தப் பெரும்பள்ளி | ஆதித்தேச்சரம் | அரிஞ்சயேச்சரம் | திருவாரூர்த் தியாகேசுரர் கோயில் | திருப்புயம் |
| | | | | புரக்கற்றலரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) **சோழர் காலக் கோயிற் பணிகளிற் குறிப்பிடத்தக்கவை.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| | **கோயில்கட்டல் / மடங்கள்கட்டல்** | | | |
| அரண்மனைகளைக் கோயிலாக்குதல் சிறுதெய்வ வணக்கத்தை நிறுத்துதல் | பிறசமயிகளைத் தண்டித்தல் செங்கற் கோயில்களை கற்றகளியாக்கல் | தண்ணீர்ப்பந்தர் அமைத்தல் பள்ளிப்படை நிறுவல் | பிறசமயத்தவர் கோயி-ல்களை இடித்தல் கோயிற் கலைகளை வளர்த்தல் | கோயில்களுக்குப் பல தானங்களை வழங்கல். திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் தொகுத்தல். |
| | சிறுகோயில்களையிடித்தல் | கோயிற்கொடைகளைத் தாம் அனுபவித்தல் | கோயில் வரி அறவிடல் | விழாக்களைக் கட்டுப்படுத்துதல். |

20) **வேதகாலத்தில் அரசருக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகள்.**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| புரோகிதர் | சம்ஹரஹற்ருதி | விராஜபதி | கிராமணி | அக்ஷாவாபன் |
| சூதன் | சேனானி | குமாரமாத்யன் | நிருபன் | ஷத்ரி |
| புந்திரி | மகாபிரதானன் | விபிகாரன் | யுவராசன் | குலபர் |

21) **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

சிந்துவெளி மக்கள் 1.................... 2.................... 3....................ஆகிய நகரங்களில் வாழ்ந்தனர். அவர்களின் நகரங்களில் 4.................... 5....................என்பவற்றினை அமைத்துச் சுகாதாரத்தையும் பேணினர்.

22) அவர்களின் உணவாக 1.................... 2.................... 3....................என்பன பயன்பட்டன பொழுதுபோக்குக்காக 4.................... 5.................... என்பவற்றிலும் ஈடுபட்டனர்.

23) முன்வேத காலத்தில் 1....................என்ற அரசன் 2.................... 3....................என்பாருடன் 4.................... முதலிய வேறு அரசர்களோடும் நடத்திய போர் 5....................எனப்பெயர் பெற்றது.

24) வேதகாலத்தில் வாழ்ந்த மக்கள் 1....................2.................... 3.................... என்ற மூவகை உடைகளை அணிந்தனர். அவர்களின் இல்லங்கள் 4.................... 5....................என்பவை கொண்டு கட்டப்பட்டன.

25) அவர்கள் 1.................... 2.................... 3.................... என்பவற்றைப் போருக்குப் பயன்படுத்தினர். நுனியில் நஞ்சூட்டப்பட்ட 4.................... பயன்பட்டது. இரும்பினால் செய்த அம்பு 5....................எனவும் பெயர் பெற்றது.

26) வேதகாலத்தில் 1.................... 2.................... 3....................ஆகிய தெய்வங்கள் முறையே போர், ஒழுக்கநெறி ,அவிர்ப்பாகத்தினைக் குறித்த தெய்வங்களுக்குக் கொண்டுசென்று அளித்தல் ஆகியவற்றைக் கடன்களாய்க் கொண்டிருந்தன. ரிதம் என்பது 4....................க்கும் 5....................க்கும் குறியீடாகக் கொள்ளப்பட்டது.

27) வேதகாலத்தில் 1.................... 2.................... 3....................என்ற மூவகைத் தெய்வக்கோட்பாடுகள் நிலவின. இவற்றோடு 4....................என்ற ஒரு கோட்பாடும் இருந்ததாக 5....................குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28) உபநிடதங்களில் 1............................ 2............................ 3............................
என்ற மூன்று பற்றிப் பேசப்படினும் 4............................ ஒன்றே என்னும். 5............................
அவற்றின் அடி நாதமாய் விளங்கியது.

29) இதிகாசங்கள் 1............................ 2............................ 3............................
என்ற மூன்றுமாம். இவற்றுள் பாரதத்தில் இடம்பெறும் 4............................என்பது பகவானால்
5............................போதிக்கப்பட்டதாகும்.

30) பட்டத்துக் குதிரையைப் பலிகொடுக்கும் வேள்வி 1............................எனவும்.
இந்திரப்பதவி பெற நடத்தும் வேள்வி 2............................எனவும் பொன்வேண்டி நடத்தும் வேள்வி
3............................எனவும் பெயர் பெற்றன. வேள்வியை மேற்பார்வை செய்வோன்
4............................எனவும் பாசுரங்களை இசைப்போன் 5............................எனவும்
அழைக்கப்பட்டனர்.

31) உபநிடதஞானிகளாக 1............................ 2............................
3............................என்போர் கொள்ளப்படுகின்றனர் 4............................என்ற
பெண் 5............................உடன் தத்துவவாதம். நிகழ்த்தினாள்.

32) 1............................ 2............................ 3............................என்ற
மகாவாக்கியங்களூடாகப் பிரமத்தின் 4............................ உம் அதுவே
5............................என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றன.

33) வேதகால அறிவியல் துறைகளாக 1............................ 2............................
3............................என்பனவும் தொழில்நுட்பக் கலைகளாக 4............................
5............................என்பனவும் கொள்ளப்பட்டன.

34) சைவ ஆகமங்கள் போலவே சாக்தாகமங்களிலும் 1............................ 2............................
3............................ 4............................ என்பன இடம்பெறுவதோடு அவை
5............................ என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றன.

35) கலைகளின் மீட்சிக்காலம் எனக்கருதப்படும் காலகட்டத்தில் 1............................ 2............................
3............................ 4............................ 5............................என்னும்
இடங்களில் அக்காலக் கலைச்சின்னங்களின் எச்சசொச்சங்கள் காணப்படுகின்றன.

36) குப்தர் காலத்தில் சைவரிலே 1 ............................ 2............................
3............................ முதலிய பகுப்புக்களும் வைணவரிலே 4............................
5............................என்ற பகுப்புக்களும் காணப்பட்டன.

37) இந்திய ஓவியக்கலையின் மகோன்னதத்தை 1............................ 2............................
3............................ 4............................ ஆகிய இடங்களிற் காணலாம்.
இலங்கையிற் சிகிரியாவில் 5............................இன் சாயல் காணப்படுகின்றது.

38) மாமல்லபுரத்தில் 1............................ 2............................ 3............................
4............................ 5............................ ஆகியோரின் கோயில்கள் எனக் கருதப்பட்ட
ஒற்றைக்கற் கோயில்கள் உண்மையில் தெய்வ ஆலயங்களேயாகும்.

39) காஞ்சிக் கைலாசநாதர் கோயிலிலே 1............................ 2............................
3............................ 4............................ 5............................
என்பன கோயிலின் உறுப்புக்களாய் உள்ளன.

40) கழற்சிங்க நாயனார் எனப்படும் 1............................ 2............................
3............................முதலிய கோயில்களைக் கட்டியவனாகப் போற்றப்படுகிறான். இவன் காலத்தவரான
4............................நாயனார் 5............................கோயில் கட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுருக்கமான விடை தருக.

41) தருமம் என்ற சொல்லின் பொருள் யாது?

42) இந்துவெளி நகரங்களில் தெய்வத்துக்குத் தூபதீபம் காட்டி வழிபட்டதன் சின்னமாக எது கொள்ளப்படுகின்றது?

43) இந்துவெளியிலே பிள்ளைகளின் விளையாட்டுக்குப் பயன்பட்டவையாய் எவை கிடைத்துள்ளன?

44) இந்துவெளி நகரங்களின் வீதிகளின் சிறப்பு யாது?

45) இருக்கு வேதத்தில் எல்லாமாக எத்தனை பாடல்கள் உள்ளன?

46) உபநிடதங்களை வடமொழியில் இருந்து பாரசீக மொழியில் மொழி பெயர்த்தவன் யார்?

47) படைப்புப் பாடல் என்பது எதனைக் குறிக்கின்றது?

48) நால்வகை வருணங்களின் தோற்றத்தையும் குறித்ததாகக்கொள்ளும் முதல் ஆதாரம் எது? அது எங்கு வருகிறது?

49) மக்களின் இசைவுடன் ஆட்சி நடத்திய வேதகால ஆட்சி நிறுவனங்கள் எவை?

50) தனா, யவ என்பன எவ்வெவற்றைக் குறித்து வழங்கின?

51) சாம்ராட் என்ற பட்டப் பெயருடன் புகழ்பெற்று விளங்கிய வேதகால மன்னன் யார்? அவன் எந்த நாட்டுக்கு அரசன்?

52) உருத்திரனின் நூறு நாமங்களைக் குறிக்கும் சதருத்திரீயம் எந்த நூலில் உள்ளது?

53) பிருஹ தாரணியக உப நிடதத்தில் குறிக்கப்படும் மைத்ரேயி என்ற பெண்மணி பற்றி யாது அறிவீர்?

54) துவிஜர் என்பதன் பொருள் யாது? இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டோர் யாவர்?

55) வாஜபேயம் என்பதென்ன? இதில் இடம்பெறும் முக்கியமான போட்டி எது?

56) வடகலை, தென்கலை என்பன யாவை?

57) பாரத, இராமாயண இதிகாசங்கள் எக்காலத்தில் எழுந்தவை?

58) "எவை எவை மன்னனுக்கு நிறைவளிப்பனவோ அவை நலங்களல்ல; குடி மக்களுக்கு எவை நலங்கள் அளிப்பனவோ அவைதாம் நலங்கள் எனக்கொள்ளல் வேண்டும்" இக்கூற்று எந்த நூலில் உள்ளது? அந்நூலின் ஆசிரியர் யார்?

59) அஸ்வமேத யாகம் நிகழ்த்திய குப்தப் பேரரசன் யாவன்?

60) "திருவுடைமன்னர்க்காணில் திருமாலைக் கண்டேனே" என்னும் இக்கூற்றிலிருந்து தெரியவருவது யாது? இவ்வாறு கூறியவர் யார்?

61) குப்த அரசில் உபகரிகர் எனப்பட்ட அரசதிகாரிகளின் கடமை எது எனக் கூறப்பட்டுள்ளது?

62) விசித்திர சித்தனான மகேந்திரவர்மன் கோயிற் கட்டடக்கலையிற் புகுத்திய புதுமை யாது? இதுபற்றி அவன் பொறித்த கல்வெட்டு எங்குள்ளது?

63) குப்தர் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய நாடகக் கவியரசன் யார்? அவன் இயற்றிய இரு நாடகங்களின் பெயர் தருக?

64) குப்தர் காலக் கோயில்கள் ஒவ்வொன்றிலும் அமைந்த மூன்று பிரிவுகளும் எவை?

65) ஸ்ரீ ஆகூமப்பிரியன் என அழைக்கப்பட்ட பல்லவ மன்னன் யார்? அவன் அவ்வாறு அழைக்கப்பட்டமை ஏன்?

66) கட்டுவாங்கம் என்பது யாது?

67) சைவசித்தாந்தம் என்ற சொல் முதன் முதல் எந்த நூலில் குறிக்கப்பட்டுள்ளது? அந்த நூலின் ஆசிரியர் யார்?

68) தனிக்கற் கோயில் என்பது யாது? இக்கோயிற் கட்டடப்பாணியை முதன் முதல் தொடக்கி வைத்தவன் யார்?

69) சித்தன்ன வாசல் பற்றி யாது அறிவீர்?

70) பிரகதீஸ்வரம் என்ற ஆலயத்தின் மறுபெயர்கள் யாவை?

71) 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' – இது யாருடைய கூற்று? இந்தப் பாடலடியில் குலம் என்பது எவ்வெவற்றைக் குறிக்கும்?

72) "உண்படுகருமத் தலைவர்" என்பது பல்லவர்கால அரச அதிகாரி ஒருவரைக் குறிக்கும்? அவரின் கடமை என்ன?

73) சோழர் காலத்தில் கோயிற்றிருப்பணிகளில் ஈடுபட்ட அரசகுலப் பெண்மணிகள் இருவர் பெயர் தருக?

74) யோகசாரர் எனப்படுவோர் யார்? இவர்கள் எக்காலத்தவர்?

75) பிரமதேயம் என்பது யாது?

76) திருவிசைப்பாவில் ஒரு பதிகம் பாடிய சோழமன்னன் யார்? இவனது சமய சமரச நோக்கு எதனால் புலப்படுகின்றது?

77) இராசேந்திர சோழன் கட்டிய கோயில் யாது? அதற்கும் திருவிசைப்பாவிற்கும் உள்ள தொடர்பு யாது?

78) இட்ட தெய்வவழிபாடு என்பது யாது? இவ்வழிபாட்டு முறைமையால் சோழர் காலத்தில் வழிபாட்டில் இடம்பெற்ற தெய்வங்கள் எவை?

79) 'தேவராசா' எனக் குறிக்கப்பட்டோர் யார்?

80) நவராத்திரிப் பெருவிழாக்கள் எக்காலத்தில் தமிழகத்தில் யாரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **பின்வரும் விடயங்கள் சரி ஆயின் "✔" எனவும் பிழையாயின் "✘" எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**

81) ஆரியர் பசுவிற்கு முதன்மையளிக்க இந்துவெளி மக்கள் காளைக்கு முதன்மை அளித்தனர். (-----)
82) பெருங்குளிப்பிடம் மொகஞ்சதாரோவில் உள்ளது (-----)
83) வேதங்களிலே உப்பு பற்றிய செய்தி காணப்படுகின்றது. (-----)
84) இருக்கு வேதத்தில் பத்து மண்டலங்கள் உள்ளன. (-----)
85) வேதகாலத்தில் பால்ய விவாகம் ஊக்குவிக்கப்பட்டது. (-----)
86) அரசனுக்கு ஆலோசனை வழங்கிய குழு சபாவாகும். (-----)
87) மௌரியர் காலத்தில் சூத்திரரும் அரசராயினர். (-----)
88) மௌரியர் காலத்தில் வருணாச்சிரமதருமம் புறக்கணிப்புக்குள்ளாயிற்று. (-----)
89) மௌரியர் காலத்தில் வரிகள் அறவிடுவதில் தாராண்மை நிலவிற்று. (-----)
90) குப்தர் காலத்தில் பிராமணீயம் மீண்டும் மேலெழுந்தது. (-----)
91) குப்தர் காலத்தில் சமயச் சகிப்பின்மை காணப்பட்டது. (-----)
92) பூர்வமீமாம்சைக்குப் புத்துயிரளித்தோர் குமாரிலர், பிரபாகர் முதலியோர். (-----)
93) குப்தர் காலத்தில் உடன்கட்டையேறுதல் பெருவழக்காயிற்று. (-----)
94) காஞ்சிக் கைலாசநாதர் கோயிலைக்கட்டுவித்தவன் நரசிம்மவர்மன். (-----)
95) பல்லவர் தமிழிலும் வடமொழிக்கே முதன்மை வழங்கினர். (-----)
96) சதுர்வேதிமங்கலம் என்பது மூன்று வேதங்களில் வல்ல அந்தணர் குடியிருப்பு. (-----)
97) சோழர் காலத்தில் துறவிகள் மடங்களிலும் குகைகளிலும் வாழ்ந்தனர். (-----)
98) பள்ளிப்படை என்பது திருமால் பள்ளிகொள்ளும் கோயில் எனப்பொருள்படும். (-----)
99) விசுவநாத நாயக்கன், திருமலை நாயக்கன் ஆகியோர் மதுரை மீனாட்சியம்மன் கோயிலைப் புனருத்தாரணம் செய்த நாயக்க மன்னர். (-----)
100) நாயக்கர் கிறிஸ்தவரையும் இஸ்லாமியரையும் கொடுமைப்படுத்தினர். (-----)

## பகுதி 2

1. **"சிந்துவெளிநாகரிகம் சிவவழிபாட்டின் தொன்மைக்கு எடுத்துக்காட்டு"**
   1. இந்துவெளி நாகரிகத்திற்குச் சமமான உலகநாகரிகங்கள் மூன்றைக் கூறுக.
   2. இங்கு சிவவழிபாடு நிலவியமைக்கான சான்றுகள் தருக.
   3. வழிபாட்டிற்கு உறுதுணையானவை எனக்கொள்ளத்தகும் சின்னங்களாய் இங்கு காணப்படுவன எவை எனக்கூறுக.
   4. சிவவழிபாட்டுடன் வேறு எவ்வெவ் வழிபாடுகள் இங்கு இடம்பெற்றன என்பதைச் சான்றுகளுடன் நிறுவுக.

2. **வேதகால மக்களின் வாழ்க்கை குறிப்பிடத்தக்க பல சிறப்பம்சங்களைக் கொண்டது.**
   1. அவர்களின் குடும்ப அமைப்புப்பற்றி விளக்குக.
   2. அவர்களின் தொழில்கள், உணவு, உடை என்பன அமைந்தவாற்றினைத் தருக.
   3. வேதகாலத்தில் பெண்களின் நிலை எவ்வாறிருந்தது எனவிளக்குக.
   4. அவர்கள் மேற்கொண்ட தொழில்கள் பற்றி விளக்குக.

3. **'சங்ககாலத் தமிழ் மக்களின் வழிபாடுகளை இருவகையாகப் பிரித்து ஆராயலாம்'**
   1. பூதவழிபாடு எனப்படும் தொன்மையான வழிபாட்டு முறையை விளக்குக.
   2. நிலத்துக்கு ஒரு தெய்வமாக அவர்கள் கொண்டு வழிபட்டவை பற்றி விளக்குக.
   3. வேதவழிப்பட்ட வேள்விகள் அன்று பெற்ற இடத்தினை மதிப்பிடுக.
   4. சங்ககாலத்தில் சிவவழிபாடுபெற்றிருந்த இடத்தினை விளக்குக.

4. **பல்லவர் காலத்திற்கும் சங்ககாலத்திற்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் சைவம், வைணவம் தமிழ்நாட்டிலே சிறந்து விளங்கின.**
   1. காரைக்காலம்மையாரின் வாழ்க்கை சிவபக்திக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய வகையினை விளக்குக.
   2. அவர் யாத்தருளிய பிரபந்தங்களிலே சிவபக்தி வெளிப்படுமாற்றினைக் கூறுக.
   3. முதலாழ்வார் மூவரதும் பக்திச் சிறப்பினைத் தருக.
   4. அவர்கள் இயற்றியருளிய பிரபந்தங்கள் எவை? சிறு விளக்கம் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **'பல்லவர் காலம் தமிழகத்திலே வைதிக சமயங்கள் எழுச்சி பெற்றன.'**
   1. சைவசமய வளர்ச்சிக்கு சமயகுரவர்களின் பங்களிப்பைச் சுருங்கக் கூறுக.
   2. ஆழ்வார்கள் வைணவத்தை வளர்த்தவற்றினைத் தருக.
   3. இக்காலத்தில் கோயில்கள் பெற்ற முதன்மையை விளக்குக.
   4. பக்தி இயக்கம் பிறசமயங்களின் செல்வாக்கிற்கு முடிவுகட்டின வகையினைத் தருக.

6. **'மௌரியரின் காலத்தில் வைதிக மதங்களோடு பிறமதங்களும் எழுச்சி பெற்றன.'**
   1. இக்காலப்பிரிவில் வேதகாலத் தெய்வங்களில் செல்வாக்கிழக்காதன எவை எனக் கூறுக.
   2. இக்காலத்தில் செல்வாக்குப் பெற்ற தெய்வங்கள் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
   3. அவைதீக சமயமான பௌத்தம் பெற்ற இடத்தினைத் தருக.
   4. இக்காலத்தில் அறிமுகமான பிறசமயங்கள் எவை எனக் காட்டுக.

7. **'குப்தர் காலத்தில் இந்துக்கலைகள் மறுமலர்ச்சி பெற்றன.'**
   1. கோயிற் கட்டடக்கலை பற்றிக் கூறுக.
   2. சிற்பக்கலை வளர்ச்சியின் நிலைபற்றித் தெரிவிக்குக.
   3. ஓவியக்கலை முதன்மை பெற்றவாற்றினைத் தருக.
   4. இக்காலத்தெழுந்த நாணயம், விக்கிரகம் ஆகிய கலைகளின் சிறப்புப் பற்றிக் குறிக்குக.

8. **'சோழர் காலத்தில் பக்தியோடு தத்துவமும் வளர்ச்சி காண்கின்றது'.**
   1. இக்காலத்தில் செல்வாக்குப்பெற்ற தத்துவக்கோட்பாடுகள் எவை?
   2. இக்கோட்பாடுகளை நிறுவியோர் பற்றிக் குறிப்பிடுக.
   3. சித்தாந்த சாத்திரங்களாக இக்காலப்பிரிவில் தோன்றியவை எவை?
   4. பக்தி சார்ந்த நூல்களாய் எழுந்தவை எவை?

9. **'இசுலாமியச் செல்வாக்கினால்– குன்றியிருந்த வைதீக சமயங்கள் மறுமலர்ச்சி பெற்ற காலம் என நாயக்கர் காலத்தினைக் கொள்ளலாம்.'**
   1. நாயக்கர் காலத்தில் இடம்பெற்ற சமய வைபவங்கள் எவை?
   2. கோயிற்கட்டடக் கலைக்கு எவ்வெவ் வகையில் நாயக்கர் பங்களிப்பாற்றினர்?
   3. நாயக்கர் கால ஓவியங்கள் எந்த அளவிற்குச் சமயச்சார்புடையன.
   4. அவற்றுக்கும் முற்பட்டகால ஓவியங்களுக்குமுள்ள வேறுபாடுகளைக் கூறுக.

10. **'இலங்கையில் இந்துசமயம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நிலவுகின்றது.'**
   1. பெருங்கற் பண்பாட்டுக் காலம் என்பது எக்காலத்தைக் குறிக்கும்? அக்காலத்தோடு இலங்கைக்குள்ள தொடர்பினைத்தருக.
   2. அக்காலச் சமயநிலைபற்றிக் (இலங்கை) கூறுக.
   3. இராவணன் பற்றி வரலாற்றுக்கும் இலங்கைச் சமய வரலாற்றுக்கும் உள்ள தொடர்பைத் தருக.
   4. விஜயன் வருகையின் போது இலங்கையின் சமயநிலை எவ்வாறிருந்தது எனக் காட்டுக.

11. **'பொலநறுவைக் காலத்தில் இலங்கையில் திராவிடக் கட்டடக்கலை (கோயிற் கட்டடக்கலை) சிறப்புற்றது.'**
   1. பொலநறுவைக் காலத்தில் சோழமன்னர் ஆதிக்கம்பெற்ற காலப் பிரிவு எது?
   2. அக்காலத்தில் பொலநறுவையில் எழுந்த கோயில்கள் பற்றிக் கூறுக.
   3. அவற்றில் இன்றும் சிதைவின்றி விளங்கும் கோயிலின் அமைப்புப்பற்றி விளக்குக.
   4. சிங்கள மன்னர் இக்காலப்பிரிவில் இந்துமதத்தினை ஆதரித்தவாற்றினைத்தருக.

12. **'போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் இந்துசமயம் அடைந்தநிலை மிகவும் வேதனைக்குரியது. '**
   1. போர்த்துக்கீசர் தமது சமயத்தைத் திணித்து, இந்துசமயத்தை அழிக்க முற்பட்ட வகையினைத் தருக.
   2. ஒல்லாந்தர் ஓரளவு சமய சுதந்திரம் வழங்கிய வகையினைக் கூறுக.
   3. இந்துமக்கள் தமது சமயத்தைப் பேண எடுத்த முயற்சிகளைக் கூறுக.
   4. ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு கோயில் பற்றி அறிந்தவற்றைத் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவசமயக் காவலர்'**

1. நாவலர் காலத்தில் சைவம் அடைந்திருந்த தாழ் நிலையினைக் கூறுக.
2. நாவலர் சைவசமயிகளைப் பிறசமயம் சாராது காத்த வகையினைக் கூறுக.
3. அவர் சைவசமய வளர்ச்சிக்காற்றிய பணிகள் யாவை எனக் குறிப்பிடுக.
4. நாவலரின் கல்வித்தொண்டு சமய வளர்ச்சிக்கு உதவியவாற்றினை விளக்குக.

**14. 'பிரமசமாஜத்தின் தாபகர் இராஜாராம் மோகன்ராய்' ஆவர்.**

1. இராஜாராம், மோகன்ராய் இந்துசமய வழிபாட்டில் அறிமுகம் செய்த முறைமை யாது?
2. அவர் தமது பணிகளை எவ்வெவ் வகையில் மேற்கொண்டார்?
3. அவர் சட்ட மூலம் நிறுத்த முற்பட்டு வெற்றிபெற்ற, (இந்து மக்களிடையே நிலவிய) மூடப்பழக்கம் யாது? சுருக்கமாக விளக்குக.
4. பிரமசமாஜத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தோர் யாவர்?

**15. '19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒப்பற்ற இந்து ஞானி பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.'**

1. இராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் காணப்பட்ட – மற்றவருக்கு அடைய முடியாத தனித்துவமாய் விளங்கியது எது எனக் குறிக்குக.
2. அவருடைய சாதனைகள் எவை என விளக்குக.
3. தமது மனைவியான சாரதாமணிதேவியாரை அவர் எவராகப் பாவனை செய்தார். சிறிது விளக்குக.
4. ஸ்ரீ இராமகிருஷ்ணர், 'ஒரே தெய்வம்' என்ற கோட்பாட்டை நிறுவிய வகையினை விளக்குக.

## பகுதி 3

1. இந்து வெளி மக்களின் நகர அமைப்பு, சுகாதாரம் பேணல், தொழில் பற்றி விரிவாக ஆராய்க.
2. வேதகாலத்தில் நிலவிய அரசியல் முறையினை விரிவாக விளக்குக.
3. இந்துமக்களின் புராதனக் கல்வி முறையின் சிறப்பம்சங்களை மதிப்பிடுக.
4. பல்லர் காலப் பக்தி இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, விளைந்த பயன் என்பவற்றை விரிக்குக.
5. "பல்லவ மன்னர் இந்துக்கோயிற் கட்டடக் கலைக்கு " ஆற்றிய பணிகளை விரிவாக விளக்குக.
6. "தென்னாட்டில் பல்லவர் காலம் போலவே வடநாட்டில் குப்தர் காலம் இந்துமத மறுமலர்ச்சி வரலாற்றில் முதன்மையிடம் வகிக்கின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
7. 'மத்தியகால இந்துக்கோயில் (சோழர் கால இந்துக் கோயில்) எவை எவையெல்லாம் நாகரிக வாழ்வினை அறத்தின் அடிப்படையில் உருவாக்க உதவுகின்றனவோ அவை அனைத்தையும் பெற்றிருந்தது.' ஆராய்க.
8. நாயக்கர் காலத்தில் தமிழகத்தில் இந்துசமயம் நிலவியவாற்றினைத் தகுந்த சான்றுகளுடன் விளக்குக.
9. தென்கிழக்காகிய நாடுகளில் இந்துகலாச்சாரம் செல்வாக்குப் பெற்ற வகையினைத் தகுந்த ஆதாரங்களுடன் விளக்குக.
10. 'மீண்டும் வேதகாலத்துக்குத் திரும்புங்கள்' என்று அறிவுறுத்திய தயானந்தர் நிறுவிய ஆரிய சமாஜத்தின் தோற்றம், பணிகள், பயன்கள் பற்றி விளக்குக.
11. 'இந்துசமய மறுமலர்ச்சியில் விவேகானந்தர் பெறும் முதன்மையிடத்தை மதிப்பிடுக.
12. 'ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் ' ஆற்றிவரும் சமய, கல்வி, சமூகப்பணிகளை விரிவாக விளக்குக.
13. ஆதி பிரம்ம சமாஜத்தின் அடித்தளத்தின் அதன் கொள்கைகளில் சிலவற்றை ஏற்றும் சிலவற்றை விலக்கியும் பணியாற்றிய சமாஜங்களின் முதன்மையான தொண்டுகளை விளக்குக.
14. மகாத்மாகாந்தி இந்துசமய சீர்திருத்தத்தில் பெறும் இடத்தினை மதிப்பிடுக.
15. 'இலங்கையில் முருக வழிபாடு ' பற்றி விரிவாக விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துநாகரிகம் I
## பகுதி I

### விடைகள்

**I.**

01)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| காண்டாமிருகம் | அரப்பா | சிவலிங்கம் | சேர்.ஜோன்மார்ஷல் | தாய்த்தெய்வம் |
| புலி | தேனுதாரோ | முத்தலை மூர்த்தி | அலெக்சாண்டர் கன்னிங்காம் | – |
| யானை | சங்குதாரோ | – | – | – |

02)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| வருணன் | அக்கினி | பிரஜாபதி | உஷை | பிருதிவி |
| உருத்திரன் | இந்திரன் | – | இராத்திரி | ரிதம் |

03)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மகம் | இஷ்டி | வேள்வி | யக்ஞம் | யஜ் |

04)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| பிதிரர் | விருந்தினர்(புருடன்) | ரிஷிகள் | தேவர் | பூதம் |

05)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ஓதல் | வேட்டல் | ஓதுவித்தல் | – | ஏற்றல் |
| – | – | – | வேட்பித்தல் | – |
| – | – | ஈதல் | – | – |

06)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | சிட்சை | – | – | – |
| வியாகரணம் | – | – | – | சோதிடம் |
| – | – | சந்தோவிசிதி | கற்பம் | – |

07)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மகுடம் | – | சர்வோக்தம் | அஞ்சுமான் | நிச்சுவாசம் |
| – | சிந்தியம் | கிரணம் | – | – |
| – | – | – | ரௌரவம் | வீரம் |

08)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | வைசேடிகம் | சாங்கியம் | – | நியாயம் |
| – | யோகம் | பூர்வ மீமாம்சை | – | – |
| உத்தரமீமாம்சை | – | – | – | – |

09)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | – | – | கொடிக்கவி | சிவப்பிரகாசம் |
| திருவருட்பயன் | போற்றிப்பஃறொடை | – | – | – |
| சிவஞானசித்தியார் | – | இருபாஇருபஃது | திருவுந்தியார் | வினாவெண்பா |

10)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | – | வாகனங்கள் | கோபுரச்சிற்பங்கள் | விக்கிரக அமைப்பு |
| இசைக்கருவிகள் வாசித்தல், நடனம் | – | | – | – |
| கோயில் அமைப்பு | திருவிழாக்கள் | – | பண்ணிசை | தெய்வலீலைகளைப் புலப்படுத்தும் ஓவியங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| சிவபெருமான் | வருணன் | திருமால் | இந்திரன் | – |
| – | முருகன் | – | சுதிரவன் | கந்தளி |
| – | – | – | கொற்றவை | – |

12)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | – | முக்கட்செல்வர் | மணிமிடற்றந்தணன் | – |
| – | மழுவாள் நெடியோன் | மணிமிடற்றோன் | – | மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன் |
| – | – | – | காரியுண்டிக் கடவுள் | ஈர்ஞ்சடை அந்தணன் |

13)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் | க்ஷேத்திர வெண்பா | அற்புதத்திரு வந்தாதி | – |
| திருமுருகாற்றுப்படை | பொன்வண்ணத்தந்தாதி | திருவாரூர் மும்மணிக்கோவை | கோயில்நான் மணிமாலை | – |
| கோயிற்பிரசாதம் | – | – | – | திருமுகப்பாசுரம் |

14)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | திருப்பாவை | – | திருச்சந்த விருத்தம் | பெரியதிரு மொழி |
| திருமாலை | – | நான்முகன் திருவந்தாதி | – | – |
| – | திருப்பள்ளியெழுச்சி | | திருவாய்மொழி | திருவந்தாதி |

15)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| – | திருமூலர் | சேரமான் பெருமாணாயனர் | நம்பியாண்டார் நம்பி | கபிலர் |
| காரைக்காலம்மையார் | – | பரணர் | – | பட்டினத்தார் |
| – | – | சேக்கிழார் | – | – |

16)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மகேந்திரவர்மன் | – | – | பரமேசுவரவர்மன் | – |
| – | நரசிம்மவர்மன் | இரண்டாம் பரமேசுவரவர்மன் | – | – |
| – | – | – | நந்திவர்மன் | இராசசிம்மன் |

17)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| பல்லாவரம் | மகேந்திரவாடி | – | – | பல்லவபுரம் |
| நாமக்கல் | தளவானூர் | – | மாமண்டூர் | – |
| – | திருச்சி | வல்லம் | – | சீயமங்கலம் |

18)

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கோரங்கேசுவரர் கோயில் | ஐராவதேசுவரர் கோயில் | இராசராசேச்சரம் | – | விசயாலய சோழேச்சரம் |
| – | – | – | கம்பகேசுவரர் கோயில் | கங்கைகொண்ட சோழேச்சரம் |
| – | ஆதித்தேச்சுரம் | அரிஞ்சயேச்சுரம் | – | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 19) 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கோயில் கட்டல் | – | – | – | கோயில்களுக்கு பல தானங்கள் வழங்கல் |
| – | செங்கற்கோயில்களை க்கற்றகழியாக்கல் | பள்ளிப்படை நிறுவல் | கோயிற் கலைகளை வளர்த்தல் | – |
| – | – | – | கோயில் வரி அறவிடல் | – |

| 20) 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| புரோகிதர் | சம்ஹரஹ்ருதி | விராஜபதி | கிராமணி | அக்ஷாவாபன் |
| சூதன் | சேனானி | – | – | ஷத்ரி |
| – | – | – | – | குலபர் |

**2.**

21) 1. அரப்பா 2. மொகஞ்சதாரோ 3. சங்குதாரோ 4. மனைதோறும் குளிப்பிடம் 5. கழிநீர்க்கான்கள்

22) 1. கோதுமை 2. வாற்கோதுமை 3. மச்சமாமிசம் 4. சதுரங்கம் 5. பந்து விளையாட்டு

23) 1. சுதாஸ் 2. விபாஸ் 3. சதுட்ரி 4. புரு 5. தசராக்ஞ

24) 1. நீலி 2. த்ராபி அல்லதுசுட்கா 4. பரிதா 4. மண், மரம் 5. நாணற்புல்

25) 1. வில், அம்பு 2. வாள் 3. ஈட்டி 4. அம்பு 5. அயோமுகம்

26) 1. இந்திரன் 2. வருணன் 3. அக்கினி 4. உலக ஒழுங்கு 5. ஒழுக்கம்

27) 1. பல்லிறைக் கோட்பாடு 2. ஓரிறைக்கோட்பாடு 3. ஒருங்கமைக் கோட்பாடு 4. ஹீனோதீய்ஸம் 5. மாக்ஸ்முல்லர்

28) 1. பிரமம் 2. ஆன்மா 3. பிரபஞ்சம் 4. பிரமம் 5. ஒருமைக்கோட்பாடு

29) 1. இராமாயணம் 2. பாரதம் 3. சிவரகசியம் 4. பகவத்கீதை 5. அருச்சுனனுக்கு

30) 1. அஸ்வமேதம் 2. இராசசூயம் 3. ஹிரண்யகர்ப்பம் 4. புத்திரகாமேஷ்டி 5. அதிதியக்ஞம்

31) 1. யக்ஞவல்கியர் 2. சுவேதகேது 3. கௌதமர் 4. கார்க்கிவாசனவி 5. யக்ஞவல்கியர்

32) 1. அதுநீயாகிறாய் (தத்சத்) 2. உள்பொருள் ஒன்றே (ஏகம்சத்) 3. நான் அதுவாகிறேன் (அஹம்பிரஹமாஜ்மி) 4. இருப்பையும் 5. உள்பொருள்

33) 1. கணிதவியல் (இராசிவித்யா) 2. வாக்கோவாக்யா (முரணிலைத்தருக்கவியல்) 3. வானியல் (நக்ஷத்ரவித்யா) 4. கட்டடச்சிற்பவியல் 5. தேர்சமைத்தல்

34) 1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம் 5. தந்திரம்

35) 1. பாகர்கட் (மத்திய இந்தியா) 2. புத்தகயை 3. சாஞ்சி 4. மதுரா 5. காந்தாரம்

36) 1. பாசுபதம் 2. கபாலர் 3. காளாமுகர் 4. பாகவதர் 5. பாஞ்சராத்திரர்

37) 1. அஜந்தா 2. எல்லோரா 3. பாதாமி 4. சித்தன்னவாசல் 5. அஜந்தாவின்

38) 1. தருமன் 2. திரௌபதி 3. வீமன் 4. அருச்சுனன் 5. சகாதேவன்

39) 1. கோபுரம் 2. முன்மண்டபம் 3. பிரகாரச்சுற்றுச்சுவர் 4. தெய்வப்படிமங்கள் 5. கர்ப்பக்கிருகம் (சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது)

40) 1. இராசசிம்மன் 2. இராசசிம்மபல்லவேச்சரம் 3. பள்ளிகொண்ட தேவர் கோயில் 4. பூசலார் நாயனார் 5. மனத்தில் சிவனுக்கு

**3.**

41) த்ரு என்ற அடிச்சொல் போஷிப்பது, தாங்குவது என்று பொருள்படும் அதன் அடியாகத் தோன்றிய தருமம் என்ற சொல் ஒழுக்கத்தைப் போஷித்துத் தாங்குவது எனப்பொருள்படும்.

42) மாடப்பிறைகளிலே படிந்துள்ள கரிப்படலம்.

43) நாற்காலி, தலையாட்டிக் குரங்குப் பொம்மை.

44) நேரானவை, சராசரி 33 அடி அகலமானவை, வண்டிகள் வாகனங்கள் செல்ல வசதியானவை.

45) 1028

46) முகலாயப் பேரரசனான ஷாஷிகானின் மகன் தாராசுக்கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47) ஒருமைக்கோட்பாட்டை (அதன் சாரத்தைக்) க்குறிக்கின்றது.

48) புருஷ சூக்தம். இருக்குவேதத்தில்

49) சபா, கணம்

50) அரிசி, வாற்கோதுமை.

51) ஜனகன், விதேகநாடு

52) யஜூர்வேதம், வாஜசனேயி சங்கிதையில்

53) யாக்ஞவல்கியரின் மனைவிகளில் ஒருத்தி. மைத்ரேயியும் கார்த்தியாயினியும் தமது கணவர் தமக்குச் சொத்துக்களைப் பகிர்ந்தளித்துவிட்டுத் தாம் சந்நியாசம்பெற முற்பட்டபோது, தனக்கு நிலையற்ற செல்வம் வேண்டியதில்லை என்றும் நிலையான மெய்ஞ்ஞானத்தை உபதேசிக்குமாறும் மைத்திரேயி கணவரை வேண்டினாள்.

54) இருபிறப்பாளர். பிராமணர் (உபநயனத்தின் பின் க்ஷத்திரியர், வைசியரும் துவிஜர் எனப்பட்டாலும் பிற்காலத்தில் இப்பெயர் பிராமணருக்கே வழங்கியது)

55) வலிமைப்பானம் என்பது வாஜபேயம் என்பதன் பொருள்.

56) வடகலை, தென்கலை என்பன வைணவரிடையே காணப்பட்ட இரு பிரிவுகள். வடகலையார் வடமொழிநூல்களுக்கும், தென்கலையார் நாலாயிரத் திவ்விய பிரபந்தமாகிய தமிழ் நூல்களுக்கும் முதன்மை வழங்கி அவற்றின் வழி திருமால்மீது பத்தி கொண்டோர்.

57) மௌரியர் காலத்தில் (கி.மு. நான்காம் நூற்றாண்டு) தோன்றியவை.

58) அர்த்த சாஸ்திரம், சாணக்கியர் (கௌடில்யர் எனவும் பெயர் பெறுவர்)

59) சமுத்திரகுப்தன்.

60) அரசன் தெய்வாம்சம் பொருந்தியவன் என்பது, திருமங்கையாழ்வார்

61) மாகாண ஆளுனர்

62) குடைவரைக்கோயிற்பாணி. மண்டகப் பட்டுக்கல்வெட்டு

63) காளிதாசன். இரகுவம்சம். சாகுந்தலம்

64) சதுரவடிவமைந்த முன் மண்டபம், கருவறை (கருப்பக்கிரகம்), தாழ்வாரம்,

65) இராசசிம்மன், ஆகமங்களிலே பற்று வைத்து அவற்றைக்கற்றுத் தேர்ந்தவன். (சைவசித்தாந்தி எனத் தன் பெயரைக் கல்வெட்டிலே பொறித்த முதல்வனும் இவனே.)

66) சிவபெருமானின் ஆயுதங்களில் ஒன்று, பல்லவரின் சமய அடையாளமாகப் பொறிக்கப்படும் முத்திரை.

67) திருமந்திரத்தில், திருமூலர்

68) தனித்த ஒரு கருங்கல் கொண்டு கட்டப்படும் (இரதவடிவில்) கோயில், முதலாம் நரசிம்மவர்மன்.

69) சித்தன்னவாசல் திருச்சிராப்பள்ளியில் இருந்து 25 மைல் தொலைவில் உள்ள மலையில் உள்ள குகைக் கோயில்களைக் குறிப்பது. இக்குகைச் சுவர்களிலே எழில்வாய்ந்த ஓவியங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

70) தஞ்சைப் பெரியவுடையார் கோயில், இராசராசேச்சரம்.

71) திருமூலரின் கூற்று. குலம் – பரம்பரை, அடியார் கூட்டம், கோயில்

72) அரசனுக்கு அந்தரங்க ஆலோசனைகள் வழங்குவது.

73) செம்பியன்மாதேவி, குந்தவைப்பிராட்டி.

74) சைவசமயத்தின் (பாசுபதர், காளாமுகர் போல) ஒரு பிரிவினர், சோழர் காலத்தவர், சிறந்த அறிவாளிகள்.

75) பிராமணருக்கு இறையிலியாக வழங்கப்படும் நிலத்தானம்,

76) கண்டராதித்தன், கண்டராதித்த சதுர்வேத மங்கலத்தில் எழுப்பிய திருமால் கோயில் சான்று.

77) கங்கை கொண்ட சோழேச்சரம், இத்திருத்தலத்தின் மீது பாடப்பட்ட பதிகம் ஒன்று திருவிசைப்பாவினுள் அடக்கப்பட்டுள்ளது.

78) தாம் விரும்பிய தெய்வத்தை விரும்பிய உருவில் அமைத்தோ, தரிசித்தோ வழிபடல், சிவன், திருமால் ஆகிய கடவுளரின் பல மூர்த்தங்களோடு கணபதி, சுப்பிரமணியர், சூரியன், துர்க்கா பரமேஸ்வரி, காலபிடாரி, ஏமழத்துத் துர்க்கையார் முதலிய தெய்வங்களும் சண்டேசுரர் முதலாம் நாயன்மாரும் இட்ட தெய்வங்களாக வழிபடப்பட்டனர்.

79) சோழமன்னரில் இறந்தவர் தேவராசா என அழைக்கப்பட்டதோடு அவரின் அஸ்தியின்மீது கோயில் எழுப்புவதும் அவர்களின் காலவழக்கம். இவ்வாறான கோயில்கள் பள்ளிப் படைகள் எனப்பட்டன.

80) நாயக்கர் காலத்தில் நாயக்கமன்னரால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4\. 81) ✔

82) ✔ (மொகஞ்சதாரோவில் உள்ளது)

83) ✖ (உப்புப்பற்றிய செய்தி இல்லை)

84) ✔

85) ✖ (இருக்கு வேதத்தில் பால்ய விவாகம் இடம்பெறவில்லை)

86) ✔

87) ✖ (மௌரியர் காலத்துக்கு முன்பு நவநந்தர் (சூத்திரர்) அரசராயினர்)

88) ✖ (வருணாச்சிரமம் திட்டவட்டமான உறுதிநிலை அடைந்துள்ளது. அது மௌரியர் காலத்தில்)

89) ✖ (கடும் வரிகள் அறவிடப்பட்டன)

90) ✔

91) ✖ (சமயசமரசம் பேணப்பட்டது)

92) ✔

93) ✖ (மேற்குலத்தில் பெண்கள் சிலரே உடன்கட்டை ஏறினர்)

94) ✖ (இராசசிம்மனே காஞ்சிக்கைலாசநாதர் கோயிலைக் கட்டுவித்தவன்)

95) ✔

96) ✖ (நான்கு வேதத்திலும் அறிவுபெற்றோர்க்கான வதிவிடம்)

97) ✔

98) ✖ (சோழமன்னரில் இறந்தோர்க்கு எழுப்பப்பட்ட கோயில்)

99) ✔

100) ✖ (நாயக்க மன்னரிற் பலரும் இஸ்லாமியரையும் கிறிஸ்தவரையும் ஆதரித்தனர்)

## இந்துநாகரிகம் I
## பகுதி II

(1) இந்து வெளி நாகரிகம் நிலவிய காலத்திலே சமமும் சமாந்தரமுமான நாகரிகங்கள் எகிப்து, சுமேரியா, பபிலோனியா முதலாம் நாடுகளிலே நிலவின.

(2) இந்து வெளியிலே நிலவிய சமயம் பற்றி அறிவதற்குச் சான்றுகளாய்ப் பல இலச்சினைகள் கிடைத்துள்ளன. இவ்விலச்சினைகளில் ஒன்றிலே பத்மாசனமிட்ட ஆண் உருவம் பீடத்தில் அமர்ந்த நிலையிலே காணப்படுகிறது. அதனைச் சூழ்ந்து யானை யொன்றும் புலி ஒன்றும் காண்டா மிருகமும் எருமையும் காட்சிதருகின்றன. உருவம் நிருவாணமாகக் கைகளிலே கடகங்களும் (வளையல்களும்) கழுத்தில் ஆமுசிம் அணிந்து விளங்குகின்றது. பீடத்தின் அருகே மான்கள் இரண்டு நிற்கின்றன. உருவத்தினது தலையின் இரு பக்கங்களிலும் கொம்புகள் முளைத்துள்ளன. கொம்புகளின் நடுவே செடியொன்று முளைத்து நிற்கின்றது. நிமிர்ந்து நிற்கும் ஆண்குறியோடு கூடிய இவ்வுருவம் யோகபசுபதியாகிய சிவனைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. (சிவபெருமான் நிருவாணியாயும் காட்சிதருவான் என்ற பொருளிலே அவனுக்கு (நக்கன் – நிருவாணி) நக்கன் என்ற பெயர் வழங்குவதும் இவ்விடத்திலே கருதத்தக்கதாகும். இவை எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு இந்து நதிப் புதைபொருளாராய்ச்சியின் முன்னோடியான சேர் ஜோன் மார்ஷல் வந்த முடிவே சிவவழிபாட்டுச் சின்னமே இவ்வுருவம் என்பதாகும்; இவர் தலையின் இரு பக்கங்களிலும் காணப்படும் கொம்புகளையும், நடுவிலுள்ள செடியையும் சிவபெருமானுடைய முத்தலைகளைக் குறிப்பதாகும் எனக் கொள்வர். சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் எனும் ஐந்து திருமுகங்கள் இருப்பதாகக் கொள்வர். அவ்வாறிருக்க மூன்று முகங்களைக் கொள்வதேன் என்ற வினாவிற்கு விடையளிக்கும் முகமாகச் சில ஆய்வாளர் எஞ்சிய இருமுகங்களும் (பின்பக்கத்திலுள்ள) மரத்தில் மறைந்தனவாகலாம் என்பர்.

மற்றுமோர் உருவம் ஒருதலை கொண்டது. நாகம் நிழலிட அதன்கீழ் அது அமர்ந்துள்ளது. இதுவும் சிவனாகிய பசுபதியையே குறிப்பதாகக் கொள்வர். குளவி போன்ற அமைப்பிலே உருளைக் கற்களும், நடுவில் துளை கொண்ட வட்டக்கற்களும் சிவலிங்கத்தின் குறியீடுகளாகக் கொள்ளப்பட்டுச் சிவலிங்க வழிபாடும் நிலவியது என்ற கருத்து எழுந்துள்ளது.

(3) வழிபாட்டிற்குரிய துணைச்சாதனங்களாகக் கோயில், வழிபாட்டின் முன்பு உடற்தூய்மை பேணக் குளிப்பிடம், பூசையின் போது பயன்படும் தூபதீபம் முதலியன கொள்ளப்படுகின்றன. தூண்களால் தாங்கப்படும் விசாலமான பொது மண்டபங்களின் எச்சசொச்சங்கள் ஆலயங்களோ எனச் சிலர் ஐயம் கொள்வர். ஆனால் இந்த ஐயத்தினைத் தெளிவுபடுத்தக்கூடிய சான்றுகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொகஞ்சதாரோ நகரத்தில் 39,23 அடிப்பரப்பும் 8 அடி ஆழமும் கொண்ட செவ்வக வடிவமானதொரு நீராடு மடு காணப்படுகின்றது. நீர்கசியாதவாறு பிற்றுமின் சேர்த்துச் செங்கலால் அழகுற அமைக்கப்பட்டதாய் இந்நீராடும் மடு அமைந்துள்ளது. நாற்புறமும் மூடப்பட்ட நடைவழியும் அந்நடை வழியை நோக்கியவாறு பல சிற்றறைகளும் உள்ளன. இவை ஆடைமாற்றப் பயன்பட்டிருக்கலாம். இவற்றையெல்லாம் அவதானித்த ஏ.எல் பசாம் "ஓர் இந்துக் கோயிலிலுள்ள "கேணி" போன்று இதுவும் ஒருகாற் சமயத் தேவைக்காகக் கட்டப்பட்டதாகலாம்" என்கின்றார்.

வீடுகளின் மாடப்பிறைகளிலே கரி படிந்திருக்கின்றது. மாடப்பிறை வழிபடு தெய்வத்தை பிரதிஷ்டை செய்த இடமாகவும், படிந்துள்ள கரி தூபதீபம் காட்டியதன் அறிகுறியாகவும் கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(4) சிவவழிபாடு மட்டுமன்றித் தாய்த்தெய்வ வழிபாடும் நிலவியதற்குச் சான்றுகள் சில உள்ளன. நடனகோலத்தில் கைகள் நிறைய வளையல்கள் அணிந்து நிருவாண கோலத்தில் காணப்படும் பெண்வடிவம் ஒன்றும், தலைகீழாக நிற்கும் நிலையில் வயிற்றிலே செடி ஒன்று முளைத்து வரும்கோலத்தில் மற்றொருபெண் வடிவமும் காட்சிதருகின்றன. உலகையெல்லாம் தன்னுள்ளடக்கி, வளம் அனைத்தும் வழங்கும் அகிலலோக மாதாவான தாய்த்தெய்வத்தை இவ்விருவுருவங்களும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது, திமில் உடையதும், திமில் அற்றனவுமான காளைகளின் உருவங்கள் விலங்கு வழிபாடு நிலவியமைக்குச் சான்றுகளாகலாம். இலச்சினைகளிலே மரங்களும் சிறப்பாக அரசமரமும் காணப்படுவதால் அவை மர வழிபாட்டின் சின்னங்களாகலாம்.

**2.** வேத காலத்தில் கூட்டுக் குடும்ப முறை நிலவியது. தந்தை, தாய் மக்கள், தாய், தந்தையரின் பெற்றோர், உடன்பிறந்தார் என்ற பலரும் ஒரு குடும்பமாக வாழ்ந்தனர், மணவினை காரணமாக ஒருவன், தன்மனையாளை புது இல்லம் அமைத்து அழைத்துச் செல்வதும் வழக்கிலிருந்தது. அவ்வாறு செல்கையில் அவன் ஒரு பாண்டத்தில் மனையில் வளர்த்த தீயினை எடுத்துச் செல்வதுண்டு. ஏனெனில் அக்கினி வளர்த்தலும் சிறிய அளவில் வேள்வியியற்றலும் இல்வாழ்வினது இன்றியமையாக் கடன்களாகும், புதல்வரைப் பெறுவதையே வேதகாலத்தவர் பெரிதும் விரும்பினர். புதல்வியரைப் பெறுவது கவலைக்குரியதாகவே கருதப்பட்டது. எனினும் பிறந்த பெண் குழந்தைகள் அன்பாகவே நடத்தப்பட்டனர்.

பிரதான தொழிலாக விவசாயம் இருந்து வந்தது. திருஷ்டி அல்லது கார்ஷனி என்ற பெயர் கொண்டு விவசாயம் அழைக்கப்பட்டது. தானியத்தை விதைத்து, நீர்ப்பாசனம் செய்து விளைந்த தானியத்தை அறுவடை செய்து அவற்றைக் கட்டுக்களாய்க்கட்டி தரையில் இட்டு மிதித்து வைக்கோல் வேறு தானியம் வேறாக்கினர், பின்பு தானியங்களைத் தொகுத்து இடித்து மாவாக்கினர்.

இவ்வாறு பெறப்பட்ட மாவிலிருந்து ' அபூப' என்ற றொட்டி தயாரித்து விரும்பி உண்டனர். உணவிற் பால், தயிர், நெய் பயன்படுத்தினர். இறைச்சியும் தள்ளுபடியன்று. மந்தை மேய்த்தலும் பிரதான தொழிலாய் இருந்தது. யமுனா நதி தீரம் மந்தைச்செல்வத்திற்கும் பெயர் பெற்றிருந்தது. மற்றும் வாணிபம், தச்சுத்தொழில், கொற்றொழில் நெசவு, மட்பாண்டம் செய்தல் முதலாம் தொழில்களும் இடம்பெற்றன.

வேத காலத்தில் பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்களாகக் கொள்ளப்படவில்லை. எனினும் ஆடவனின் இல்லறக்கடன்களிலும் சமயக்கிரியைகளிலும் அவன் மனைவிக்கு நல்லிடம் கிடைத்தது கிருபதி, தம்பதி என்ற பெயர்களால் இல்லத் தலைவன் அழைக்கப்பட்டான். சில வேளைகளில் தம்பதி என்ற சொல் இல்லாருக்கும் வழங்கியது. ஆணுக்கு அனுமதிக்கப்பட்ட பலதாரமணம் பெண்ணுக்கு அனுமதிக்கப்படவில்லை. விதவை விவாகம் செய்வது அனுமதிக்கப்பட்டது. பெண்கள் சிலர் கல்வியிற் சிறந்து புலமை நலம் பெற்றிருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. கார்க்கிவாசனவி என்பாள் அக்காலத்தில் விளங்கிய தலை சிறந்த ஞானியான யாக்ஞவல்கியருடன் விவாதம் செய்து அவரை விடைமிறுக்க முடியாத நிலைக்கு ஆளாக்கினாள் என்று தெரிகின்றது. யாக்ஞவல்கியரின் மனைவியான மைத்ரேயியும் மெய்யுணர்வு பெற்றவளாயிருந்தாள். பெண்கள் சிலர் வேதபாசுரங்கள் இயற்றியதாகவும் தெரிகின்றது.

**3.** (1) போர்க்களத்தில் வீரச்சாவெய்தியவர்களின் நினைவாக நடுகல் நாட்டிப் பெருஞ்சோறு படைத்து வழிபடும் வழக்கம் சங்ககாலத்தில் நிலவியது. பூதவணக்கத்தின் தொடக்கம் இது எனலாம். காதலுற்று வருந்தித் தலைவனை அடைதலுக்காய் ஏங்கும் பெண்களைக் காட்டிவுள்ள அணங்கு என்னும் தெய்வப் பெண் பிடித்து விட்டாள் என்று மயங்கிய தாய், வேலன் என்னும் பூசாரியைக் கொண்டு வெறியாட்டுவித்துத் தன்மகளுக்கு நிகழ்ந்ததை அறிய நிகழ்த்தும் வழிபாடும் பூதவழிபாட்டினுள் அடங்கும் நெறியாகும். வேலன் முருகனை வழிபட்டே வெறியாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிற்றோகைகள், நெற்பொரி, ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு இறைச்சி முதலியவற்றைப் படைத்து வழிபடலும் பூதவழிபாட்டில் இடம் பெற்றது. இவ்வழிபாட்டின் போது குரவை பாடுதல், துணங்கையாடுதல், என்பனவும் இடம் பெற்றன. இவ்வழிபாட்டு முறைமைகள் திருமுருகாற்றுப்படையிலே கூறப்படல் காணலாம்.

சிறுதினை மலரொடு, விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொரு அமிற்பட நிறீ,இ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழரினும்.

என்பது திருமுருகாற்றுப்படை. சங்ககாலத்தின் பின்னர் தோன்றியதாகக் கொள்ளப்படும். சிலப்பதிகாரத்திலே வேட்டுவவரி என்ற பகுதியிலே, கொற்றவை வழிபாடு நிகழ்வதாய்க் குறிக்கும் செய்திகள் பூதவழிபாட்டின் எச்ச சொச்சங்களே.

(11) தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களுக்கும் உரிய தெய்வங்களாக முறையே முருகன், மாயோன்(திருமால்), இந்திரன், வருணணன்,ஆகிய நான்கு தெய்வங்களைக் குறித்தல் காணலாம். முருகனை அவனது சிவந்த நிறங்காரணமாகவும் இளமை காரணமாகவும் சேயோன் (செம்மை நிறத்தன்: சேய் இளைஞன், மகன்) எனத் தொல்காப்பியர் அழைத்தல் காணலாம், இந்திரன் வேந்தன் எனப்படுகின்றான்.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருத, நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்பது தொல்காப்பியம். மழையின்றி வறண்ட காலங்களில் குறிஞ்சியாகிய மலை நிலமும் முல்லையாகிய காட்டுநிலமும், புல்பூண்டற்று, மரங்கள் இலையுதிர்ந்து கொடு வெப்பம் நிறைந்து பாலையாகக் காட்சிதரும், இப்பாலை நிலத்துக் கொற்றவையும், கதிரவனும் தெய்வமாக வழிபடப்பட்டது பற்றிச் சங்ககாலப்பாடல்களிலே செய்திகள் உள்ளன.

கி.பி.100-300 வரையுள்ள காலப்பகுதியாகக் கொள்ளப்படும் சங்ககாலத்திலே வேதங்களிலே குறிக்கப்பட்ட இந்திரன், வருணனாகிய தெய்வங்களும் வழிபாட்டிற்கு உரியனவாகக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இத்தெய்வங்களுக்கு வேள்வியியற்றித் தமது இட்டங்களைப் பூர்த்தி செய்யச் சங்ககால மன்னர்கள் விரும்பியிருத்தல் இயல்பேயாகும். சோழப்பெருமன்னரான கரிகாலன், பெருநற்கிள்ளி முதலியோரும் பாண்டியப் பெருவேந்தனான முதுகுடுமிப் பெருவழுதியும் வேள்விகள் இயற்றியதாகப் புற நானூற்றிலே செய்திகள் உண்டு. பெருநற்கிள்ளி இராசசூய வேள்வி நடத்தியவன் என்பதைக் குறிக்க அவன் பெயரோடு இராசசூயம் என்பதை இணைத்து இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என அழைக்கப்பட்டான். பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி பகைவரை வெற்றிபெற்று நாட்டிய வெற்றித்தம்பங்களோ (யூபங்களோ) வேள்விகள் செய்து அவற்றிற்காய் நாட்டிய யாகத்தம்பங்களோ எவை தொகையால் அதிகமானவை என்று புலவர் ஒருவர் வினாவுவது போல் அவனது போர்ப் பெருமையையும் யாகப் பெருமையையும் வியந்துரைத்தல் காணலாம்.

நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நாட்ட வியன்களம் பலகொல்?

(புறநானூறு)

இவ்வாறு வேள்விகள் பல நிகழ்த்தியமையால் முதுகுடுமிப் பெருவழுதி பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என அழைக்கப்பட்டான்.

இவற்றிலிருந்து சங்ககாலத்தில் வேள்விகள் பெற்றிருந்த இடத்தினை அறிந்து கொள்ளலாம்.

(111) சிவபெருமானின் திருநாமம் வெளிப்படச் சங்க இலக்கியங்களில் எவ்விடத்தும் கூறப்படவில்லை. ஆனால் அவரின் வழிபாடு நிகழ்ந்தமைக்கு ஆதாரங்கள் உண்டு. பேராசிரியர் சுப. மாணிக்கம் என்பார் கைலாயமாகிய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவன் சிவந்த நிறமுடையோன் என்பதைக் கருத்திற்கொண்டு, குறிஞ்சி ஆகிய மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்துக்குரிய கடவுளாகக் குறிக்கப்படும் முருகன் (முருகன் என்று கூறப்படாது) சேயோன் எனவே அவனது சிவந்த நிறத்தைத் தொல்காப்பியம் குறிப்பதால் "சேயோன்" என்பது சிவபெருமானைக் குறித்து வழங்கியதே என்பர். இது ஆய்விற்கு உரியது எனினும் 'முக்கட்செல்வர்' முதலாகச் சிவனின் அங்கங்கள், ஆயுதங்கள் பற்றியெல்லாம் வந்துள்ள குறிப்புக்களாலும், சிவன் இராவணனைத் தன்காற்பெருவிரலால் அழுத்திய செய்தியாலும் (கலித்தொகை) சிவவழிபாடு சங்ககாலத்தில நிலவியது என்பதற்கு ஐயம் இல்லை. சிவபெருமானைக் கோயில் கட்டி ஆகம முறைப்படி வழிபட்டமைக்குப் பின்வரும் புறநானூற்றுப் பாட்டடிகள் சான்றாகும்.

பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலர் செயற்கே

ஆதிகாலத்திற் கோயில் நகர் என அழைக்கப்பட்டது. பிற்காலத்திலே (பல்லவர் காலத்தில்) பரமேசுவரவிண்ணகரம் எனக் கோயில், நகரம் எனக்குறிக்கப்படுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

**4** (1) சோழநாட்டிலே காரைக்கால் என்னும் துறைமுகப்பட்டினத்திலே வணிகர் குடியிலே தனதத்தன் என்பானின் திருமகளாராய் அவதரித்தவர் புனிதவதியாராகிய காரைக்காலம்மையார். தளர்நடை நடக்கும் குழந்தைப்பருவத்திலேயே அம்மையார் பாம்பணியும் பரமனின் அடியிணைகளுக்குத் தொண்டு புரியும் அடியவராக மாறிவிடுவதிலிருந்து அவரின் பக்திப்பெருக்கினை அறிந்து கொள்ளலாம்.

அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையும்நடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்கு.

என்று இவ்வுண்மையைச் சேக்கிழார், காரைக்காலம்மையார் புராணத்தில் கூறுவதிலிருந்து அறியலாம். உரிய பருவத்தினை அவர் அடைந்தபொழுது நாகபட்டினத்து நிதிபதி என்பானின் மைந்தன் பரமதத்தனுக்கு இவர் மணம் செய்துவைக்கப்படுகின்றார். கணவனுக்கு உண்மையாகவும் இல்லற தருமம் வழுவாதும் அம்மையார் வாழ்ந்துவந்த போதிலும் அவரின் இதயக்காதல் இறைவனாகிய சிவன்மீதே இருந்து வந்தது. சிவனடியார் இல்லம் வரின் திருவமுது செய்வித்தலும் அவர்களுக்கு வேண்டியன வழங்கலும் தமது இன்றியமையாக் கடன்களாக அவர் இயற்றிவந்தார்.

ஒரு நாள் பரமதத்தன் தனது வணிக சாலையிலே அன்பளிப்பாக வழங்கப்பட்ட இரு மாங்கனிகளை இல்லத்துக்கு அனுப்பி அவற்றை 'வைக்க' எனப் பணிப்புரையும் கூறி அனுப்புகின்றான். ஆனால் அந்தப் பணிப்பினை மீறவேண்டிய நிலை அம்மையாருக்கு ஏற்படுகின்றது. சோறுசமைத்துக் கறிசமைக்கும் வேளையில் பசியுடன் வந்த முதிய சிவனடியாருக்குச் சோறு படைத்துக் கறிக்குப் பதிலாக ஒரு மாங்கனியையும் அளிக்கின்றார்.

அன்று மதியவேளையில் பசியோடு வந்த பரமதத்தன், குளித்து உணவருந்துகையில் அம்மையார் எஞ்சியிருந்த மாங்கனி ஒன்றையும் அவனுக்குப் படைக்க அவன் அதை உண்டு மற்றதையும் உண்ண அவாவுற்று அதனையும் கொணர்க என்கிறான். அம்மையாருக்குப் பெரும் சோதனை. அவர் உள்ளே சென்று சிவனை வேண்டி நிற்க அவர் கையிலே சிவன் அருளால் மாங்கனி ஒன்று வந்தமர்கின்றது. அதனைக் கொணர்ந்து பரமதத்தனுக்குக் கொடுக்க அதன் அதிமதுரச் சுவை அவனுக்கு ஐயத்தை உண்டாக்க "இது முன்னைய கனியிலும் மிகுந்த சுவையடைந்துள்ளது. இது எவ்வாறு வந்தது?" என்கிறான் பரமதத்தன். கணவனுக்கு உண்மை கூறவேண்டிய கடப்பாட்டினால் நடந்தவற்றை அம்மையார் எடுத்துரைக்க அவற்றை நம்பாத பரமதத்தன் "நீ சொல்வது உண்மையானால் இன்னுமொரு கனி வரவழை" என்றான். அம்மையார் உள்ளே சென்று மீண்டும் இறைவனை மன்றாட முன்போல் மற்றுமொரு மாங்கனி அவர் கையில் வந்தமர்கிறது. அதனைக்கொணர்ந்து கணவரிடம் கொடுக்க அவர் கைப்பட்டதும் அது மறைந்துவிடுகிறது.

பரமதத்தனுக்கு அச்சம் உண்டாகிறது. அவன் தன் மனைவியாரைத் தெய்வப்பெண் என அஞ்சி அவரைவிட்டு அகலுவதற்கான சமயம் பார்த்து, அதற்குச் சாட்டாகக் கடல்மிசை வங்கம் ஓட்டிப் பிறநாடு சென்று வணிகம் செய்யப்போவதாகக் கூறி அதற்கான கப்பலும் செய்து வணிகப் பண்டங்களை ஏற்றிக்கொண்டு காரைக்காலிலிருந்து புறப்படுகின்றான். வெளிநாட்டில் வணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டியபின் பாண்டிய நாடு சென்று அங்குள்ள நகரம் ஒன்றில் வணிகரிடையே புகழுடன் வாழ்ந்து, தான் முன்பே திருமணம் செய்துள்ளதை மறைத்து வணிகர் குலப் பெண்ணொருத்தியை மணந்து புதல்வி ஒருத்தியையும் பெற்று மகிழ்வோடிருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்தியை அறிந்து அது உண்மையா என்று உறுதி செய்து கொண்டு, அம்மையாருடன் உறவினர், அம்மையாரை அழைத்து வந்து தாம் வந்த செய்தியை பரமதத்தனுக்கு அறிவிக்கின்றனர். அவன் அச்சத்தோடு அம்மையாரும் உறவினரும் இருந்த இடத்துக்குத் தன் மனையாளொடும் மகளோடும் வந்து அம்மையாரின் காலடிகளில் வீழ்ந்து நடந்தவற்றைக் கூறுகின்றான். உறவினர் அதிசயிக்கின்றனர். அம்மையார் இதுவரை தாம் தமது கணவனுக்காகத் தாங்கி நின்ற தசைபொதியுடலை விடுத்து எலும்புருவாக மாற இறைவனை வேண்டி அவ்வாறே எலும்புருவாகின்றார். சூழ நின்ற அனைவரும் அஞ்சி விலக, அம்மையார் வடநாட்டுக்கு யாத்திரை புரிந்து இறுதியிலே கைலாயத்தை அடைந்து அங்கு காலால் நடப்பது தகாது என்று கொண்டு தலையால் நடந்து சிவனிருந்த இடத்தை அடைகிறார். இறைவனாலேயே அம்மை என்று அழைக்கும்பேறு பெற்று அவர் பணிப்பின்படி மீண்டும் பூவுலகு வந்து திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் முதலிய பிரபந்தங்கள் பாடி ஈற்றில் முத்திப்பேற்றினை அடைகின்றார்.

**4** (2) காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், என்பவற்றைப் பாடியருளினார். குழந்தைப்பருவத்திலேயே சிவன்மீது ஆராத பக்தி மிக்கிருந்த அவருடைய பிரபந்தங்கள் பக்திநலம் மிக்கன என்று சொல்லவேண்டியதில்லை.

ஈசன் அவன் அல்லா தில்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்தது – பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமற் காக்கும் பிரான்.

என்ற அற்புதத்திருவந்தாதிப் பாடலிலே அவரது பக்தி வைராக்கியம், அந்தப் பக்தி வைராக்கியத்தினால் தம்போன்ற அடியவர்களின் பிறவித்தளை அறுதல், அவ்வாறு அறுத்திடும் பெம்மானின் அற்புதச்செயல் என்பன மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டப் படுகின்றன.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி"

என்பது மணிவாசகரின் மணிவாக்கு. சிவபெருமானின் திருவருளைத் தவிர வேறு ஒன்றும் எவ்வித பயனும் தராது என்ற பற்றுறுதியை அம்மையாரின் பின்வரும் பாடல்கள் தெளிவாகக் காட்டும்.

அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானால் – அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவதெனக்கு.

மற்றும் ஆடலழகன் காளிகூளிகள் பேய்களோடு திருவாலங்காட்டு மயானத்திலே ஆடியருளுகின்ற அற்புதத்திருக்காட்சியை அம்மையார் அழகும் பயங்கரமும் குழையும் வகையிலே பாடித் தாம்பெற்ற தரிசன இன்பத்தினைப் படிப்போரும் பெற வைப்பது விதந்துரைக்கவேண்டுவதாகும்.

**4** (3) 'அன்பேதகளியாய் ஆர்வமே நெய்யாக இன்புருகும் சிந்தை இடுதிரியாய் நாரணற்கு ஞானச் சுடர்விளக்கேற்றியும் வையம் தகளியாய் வார்கடலே நெய்யாகப் பிரபஞ்சம் அனைத்தையுமே தீபமாய் ஏற்றியும் பரந்தாமன் மீது என்றும் திரியாத, குறையாத பெரும்பக்தியை வெளிப்படுத்தியோர் பொய்கையாழ்வார். பூதத்தாழ்வார், பேயாழ்வார், முதலாம் முதலாழ்வார், மூவருமாவர். என்றதும் அளவன்றால்'. 'யானுடைய அன்பென்னும்' 'கோல் •நாடி ஓடும் கொழுந்ததே போன்றதே மால்நாடி ஓடும் மனது' என்றும் தங்களின் ஆராமையை உருகிக் கனிந்து வெளிப்படுத்திய பெருமை இம்முதலாழ்வார் மூவர்க்கும் உண்டு.

இவர்கள் ஒவ்வொன்றும் நூறு நூறு வெண்பாக்களாய் அந்தம் ஆதியாய்த் தொடக்கப்பட்டனவாய் நூறு நூறு பாடல்கள் கொண்ட பிரபந்தங்களை இயற்றினர். இவை முதல் திருவந்தாதிகளாக வகுக்கப்பட்டு நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்துள் நாத முனிகளால் அடக்கப்பட்டன. திருமாலின் திருவருளிலே தளராத நம்பிக்கை, அவனையே சரணடைந்து இனி எமக்கு என்ன நிகழினும் அக்கறை இல்லை என்று கொள்ளும் அசாத்தியத்துணிவு, அவனது திருவுருவப் பேரெழிலைத் தரிசித்துப் பெறும் பேரானந்தம். அப்பெருமான் அடியார்களுக்காய் நிகழ்ந்திய அற்புதச் செயல்கள், அவனது பெருமைகள் என்பன மிகவிரிவாக உருக்கமாக முதலந்தாதிகளிலே சித்தரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடிலும் நின்னடியே நாடுவேன் எம்பெருமான்
பாடிலும் நின்புகழே பாடுவேன் - சூடிலும்
பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவோர்க்கு
என்னாகி லென்னே எனக்கு.

என்பது பொய்கையாழ்வாரின் பத்தி வைராக்கியத்திற்கு எடுத்துகாட்டு.

அறிந்தைந்தும் உள்ளடக்கி ஆய்மலர் கொண்டார்வம்
செறிந்த மனத்தராய்ச் செவ்வே - அறிந்தவன்தன்
பேரோதி ஏத்தும் பெருந்தவத்தார் காண்பரே
காரோத வண்ணன் கழல்.

என்பது பூதத்தாழ்வார் போற்றும் நாரணன் திருநாமச்சிறப்பு.

மனத்துள்ளான் மாகடல்நீ ருள்ளான் மலராள்
தனத்துள்ளான் தண்டுளாய் மார்பன் - சினத்துச்
செருநர் உகச் செற்றுகந் தேங்கோத வண்ணன்
வருநரகம் தீர்க்கும் மருந்து.

என்பது பேயாழ்வார் நாரணனை மகாலட்சுமியுடன் கண்டு உருகி, பிறவிப்பிணிக்கு அவனே மருந்து என அறிவுறுத்தி வழிகாட்டுவது.

**5.** (1) சைவசமயத்தின் வளர்ச்சியைத் தடைசெய்யுமுகமாகச் சமண பௌத்த சமயங்கள் பல்லவ, பாண்டிய அரசர்களின் ஆதரவோடு மேலெழுந்தன, கடவுள் உண்டோ இல்லையோ என்ற ஐயவாதமும், துறவை வலியுறுத்தி உலகியல் வாழ்வினை உவர்க்கும் வறட்டுக்கோட்பாடும் தலையெடுத்தன. இந்நிலையிலே சமய குரவர்களுள் முன்னவர்களான திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமணத்தை ஒடுக்கும் முயற்சியிலீடுபட்டுச் சிவபெருமானருளினால் வெற்றியும் பெற்றனர், திருஞானசம்பந்தர் மதுரையிலே கூன்பாண்டியனான அரிகேசரி மாறவர்மனைச் சைவத்துக்குத் திருப்பியதோடு சமணர் எண்ணாயிரவரைக் கழுவேறவும் வைத்தார். திருநாவுக்கரசர் தாமே சமணத்தில் சேர்ந்து சமண குரவராகவும் மாறி, பின் தமக்கையாம் திலகவதியாரால் சைவத்துக்கு மீண்டு, சமணரின் வலியை ஒடுக்கியதோடு பல்லவ மன்னனான மகேந்திர வர்மனையும் சைவனாக்கினார். மகேந்திர வர்மன் குடை வரைக்கோயில்கள் சமைத்துச் சிவ வழிபாட்டையும் பக்தி நெறியையும் மேலேடுக்கத் திருநாவுக்கரசரே தூண்டுகோல் எனலாம்.

இறைவனின் திருவுருவத் திருமேனியின் சிறப்பு, அவன் அம்மையோடு ஆலயங்களில் எழுந்தருளி அருள் பாலித்தல், அடியவர்க்கு அருள் பாலித்தல் அவனது பேரருள், அவன் நிகழ்த்திய அற்புதங்கள் சிவனது அடியார்களைச் சிவனெனவே வழிபடல், ஆலயத்தொண்டு புரிதல் முதலாகப் பக்திக்கு அநுசரணையான அமிசங்களைச் சைவமக்களிலே பதித்தற்கு இவர்களதும் பின்வந்த சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரதும் திருவருட்பாக்களாகிய தேவார, திருவாசகங்கள் பேருதவியாயின. நாளும் இன்னிசையால் சைவத்தோடு தமிழும் வளர்ந்தன. குரு, லிங்க, சங்கம வழிபாடுகள், திருநீறு, உருத்திராக்கம். ஸ்ரீபஞ்சாட்சரம் சிவசின்னங்கள் ஆகியன ஊக்குவிக்கப்பட்டன. இவ்வகையில் சுந்தரர் அடியார்களின் பெருமையை எடுத்துரைத்தும் மாணிக்கவாசகர் பௌத்தரை வாதில் வென்றும் சைவசமயம் நிலைபெறப் பெரிதும் உதவினர் எனலாம்.

சிவபெருமானை வழிபடுவதற்கான நால்வகை மார்க்கங்களுக்கும் வித்திட்டவர்கள் சமயகுரவர்களே. சம்பந்தர் சற்புத்திர மார்க்கத்திற்கும் அப்பர் தாச மார்க்கத்திற்கும் சுந்தரர் சகமார்க்கத்திதற்கும் மாணிக்கவாசகர் சன்மார்க்கத்திற்கும் தமது வாழ்வாலும் வாக்காலும் எடுத்துக்காட்டாயினர். அவர்கள் இயற்றியருளிய திருமுறைகள் சைவ பக்தி மார்க்கத்தை மட்டுமன்றி பின்வந்த சைவ சித்தாந்த தத்துவத்திற்கும் வழிகோலின என்பதற்கு ஐயமில்லை.

(2) வைணவ ஆழ்வார்களும் நலிந்துவந்த வைணவத்தினைப் பலமான அத்திவாரத்தில் நிலைநிறுத்த அரும்பாடுபட்டனர். பிரபத்தி என்ற சரணாகதி மார்க்கத்தை வைணவ மக்களிடையே பரப்பி அவர்களின் வாழ்க்கையிலே நம்பிக்கையையும் பக்தியையும் வளர்த்தனர். திருமாலின் அவதாரத்திலே தம்மை முற்றாக ஈடுபடுத்தி அப்பெருமானது அவதாரங்களில், சிறப்பாக இராம, கிருஷ்ண அவதாரங்களில் மக்களைக் கவர்ச்சிகொள்ள வைத்தும் பிற தெய்வங்களில் ஈடுபடாதவாறு காத்தனர். சிலவேளைகளில் அவர்கள் சைவம் உள்ளிட்ட சமணம், பௌத்தம் ஆகியவற்றை மிகவும் கண்டித்தபோதிலும் அன்பு, ஒழுக்கம், அடியார்களிடையே சமத்துவம், இடையறாத பக்தி வழிபாடுகள் என்பவற்றை வளர்த்து வைதிகமாகிய வைணவத்தினைக் காத்த பெருமை ஆழ்வார்களுக்கு உண்டு. சைவசமய குரவர்கள் போலவே ஆழ்வார்களும் தாஸ்ய (தொண்டரடிப் பொடியாழ்வார், திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார்), வாத்சல்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(குலசேகரர், பெரியாழ்வார்), சக்ய (ஆழ்வார்களில் இம்மார்க்கத்தைக் கடைப்பிடித்தமைக்குச் சான்று காண்பது அரிது). மதுர (ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார்) பாவங்களை அநுசரித்து அவ்வழியின் பக்திசெய்ய வழிகாட்டியமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஆலயத்தொண்டுகள், தலயாத்திரைகள், திருமாலின் மூர்த்தங்களைக் கனிவோடுகண்டு உருகல், வழிபடல் முதலாக வைணவ சமய வளர்ச்சிக்கு ஆழ்வார்கள் ஆற்றிய தொண்டு ஈடிணையற்றதாகும்.

(3) சைவர்களின் ஆலயங்கள் திருக்கோயில்கள் எனவும் வைணவர்களின் ஆலயங்கள் திருநகரங்கள் எனவும் அழைக்கப்பட்டன. இவ்விருவரதும் சமய வழிபாடும் பக்தி இயக்கமும் ஆலயங்களையே மையமாகக்கொண்டு வளர்ச்சிபெற்றன. காடு, கா, ஆற்றிடை மேடு, ஆற்றங்கரை, மரநிழல், மலை என்பவற்றிலும் பொதியில் என்ற பொது இடத்திலும் மண்ணாலும் மரத்தாலும் கட்டிய அழியும் தன்மையுடைய – சிறிய கோயில்களிலும் நடைபெற்று வந்த வழிபாடுகள் பல்லவர் காலத்திலே குடைவரைக்கோயில்கள், தனிக்கற்கோயில்கள், கோபுரம், கருவறை, சுற்றுச் சுவர், பிராகாரம் கொண்ட நடுத்தரப் பெருங்கோயில்கள் என்பவற்றிலே புறப்பாதிப்புக்களின்றி நடைபெறலாயின. கோயில்களிலே வழிபாடோடொட்டிய தோத்திரப்பாவிசைத்தல், நடனமாடல், வாத்தியங்கள் வாசித்தல், விழா எடுத்தல் ஆகிய கலாசார அம்சங்களும் விரிவாக இடம்பெறத்தொடங்குகின்றன. தேவரடியார்கள், சிவாச்சாரியார்கள், இசைக்கலைஞர்கள் முதலாகக் கோயிலைச் சார்ந்து ஒரு தொழிற் சமூகமே உருக்கொள்கின்றது. சோழர் காலத்திலே கோயில்கள் பெருமெடுப்பிலே சமூக நிறுவனங்களாய் வளர்ச்சி கண்டமைக்குப் பல்லவர் காலத்திலேயே வித்திடப்பட்டதெனலாம்.

**5 –(4) <u>பக்தியியக்கம் பிறசமயங்களின் செல்வாக்கிற்கு முடிவுகட்டியவகை பின்வருமாறு</u> :–**

(I) இளமை, செல்வம், யாக்கை நிலையாமைக் கோட்பாடுகளை வற்புறுத்திய பிறசமயங்களின் வறண்ட தத்துவத்திற்குச் சவால்விடும் வகையில், உலகில் வாழ்ந்து இன்பங்களை அனுபவித்த வண்ணமே இறைபக்தியிலும் ஈடுபடலாம் என்ற நம்பிக்கை ஊட்டப்பட்டது. சிவபெருமான், உமாதேவியார், கணபதி, கந்தன் என்று கடவுளரை ஒரு குடும்பமாக்கி இல்வாழ்வும் குடும்ப உறவும் தெய்வீகத்துக்கு மாறானவை அல்ல என்று சைவரும்; கண்ணனின் லீலைகளைச் சித்தரித்து வைணவரும் உலகியலில் 'வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டிப் பக்தி இயக்கத்தை' உயிர்த்துடிப்புடையதாக்கினர்.

(11) அடியார் கூட்டத்தோடு தல யாத்திரை சென்று வழியெல்லாம் இறை நாமம் ஓதியும் ஆலயத்தில் பதிகங்கள் பாடியும் மக்களுக்குச் சமய வாழ்வில் கவர்ச்சி ஊட்டப்பட்டது.

(111) இசை, நடனம் முதலிய கவின்கலைகளூடாகவும் பக்தியியக்கம் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தியது.

(1V) சமயகுரவரும் ஆழ்வாரும் இறையருளின் பின் எதுவும் அரிதன்று என்று காட்டப் பல அற்புதங்களை நிகழ்த்தியதும் பக்தியியக்கத்துக்கு வலுச்சேர்த்தது.

(V) கோயிற் சிற்ப, கட்டட ஓவியக்கலைகள், திருவுருவப்பேரெழில் என்பனவும் பக்தியியக்க வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயின.

**6.** (1) மௌரியர் காலத்திலே வேதகாலத் தெய்வங்களிலே இந்திரன், வருணன் தவிர்ந்த பிற தெய்வங்கள் தமது செல்வாக்கை இழக்கின்றன: இதிகாச புராணக்கதைகளும் அவற்றினூடாக எழுந்த பக்திமார்க்கமும் உருவற்ற இயற்கைத் தெய்வ வழிபாட்டிலே கவர்ச்சியை இழப்பதற்குக் காரணமாயிற்றெனலாம். மௌரியர் காலத்தில் வேள்விகளும் ஓரளவு செல்வாக்கை இழக்கின்றன. உபநிடதங்கள் புறக்கிரியைகளைக் கண்டித்து ஏளனம் செய்தமையும் வேள்வி வழிபாட்டு முறை தளர்ச்சியடைந்தமைக்கு ஓரளவு காரணம் என்று கொள்வதில் தவறில்லை.

கங்கை புனித நதியாக விளங்கி இக்காலகட்டத்தில் தெய்வமாக வழிபாட்டுக்குரியவளாய் மாறக்காண்கின்றோம். வேதகாலத்தில் உருத்திரனாய் வழிபாட்டுக்குரியவனாய் விளங்கிய தெய்வம் சிவனாக மாற்றங்கொள்கின்றான். தத்துவஞானி இராதாகிருஷ்ணனின் " ஆரியர், சுதேசிகளான திராவிடரோடு கலந்து அவர்களின் வழிபாட்டு முறைமைகளையும் தெய்வங்களையும் தமதாக்கிக் கொண்டனர்" என்ற கூற்றிற்கிணங்க இந்துவெளித் தெய்வமான சிவன் வேதகாலத் தெய்வமான உருத்திரனோடு இனங்காணப்பட்டு, மௌரியர் காலத்திலே முதன்மை பெற்றான் எனலாம். சிவனோடு விசாகன் என்ற தெய்வமும் மௌரியர் காலத்தில் செல்வாக்குப் பெறுகின்றது. (விசாகன்– முருகன், ஆரியன் சுப்பிரமணியன் ஆகலாம்.) விசாகம் என்ற நட்சத்திரத்திற்கு உரியவன் முருகன் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதகாலத்தில் விஷ்ணு முதன்மைக் கடவுளாகக் கொள்ளப்படவில்லை. ஆனால் படிப்படியாக விஷ்ணுவின் செல்வாக்கும் அதிகரிக்கின்றது. மௌரியர் காலத்துக்குச் சற்று முன்னரே விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடும் வழிபாடு தொடங்கிவிட்டது. வாசுதேவன் என்ற நாமத்தால் வைகானசரும், நாராயணன் என்ற பெயரால் பாஞ்சராத்திரிகளும் அவனை வழிபடக் காண்கின்றோம். வாசுதேவனின் சகோதரனாகச் சங்கர்ஷணன் என்ற தெய்வமும் உருவாகி வழிபாட்டிற்குரித்தாகின்றது. வைணவ மார்க்கம் உறுதிபெற்று பகவத் இயக்கமாக வளர்ச்சிகாண்கின்றது.

(111) மௌரியப் பேரரசனான சாம்ராட் அசோகன் ஆட்சிக்காலத்திலே பௌத்தம் முன் எக்காலத்திலும் இல்லாதவாறு மேலாண்மை பெறக்காண்கின்றோம். கலிங்கத்துப் போரில் வெற்றிபெறும்வரை இந்துவாகவே இருந்த அசோகன் அப்போரில் இடம்பெற்ற படுகொலைகளாலும், குருதிப்பெருக்கலாலும் மனமாற்றம் அடைந்து புத்தர் வகுத்த அஹிம்சா வழியிலே நடக்க முற்பட்டுப் பௌத்த சமயத்தைத் தழுவினான். தருமசாலைகள், வைத்திய சாலைகள்(விலங்குகளுக்கும்), அறப்போதனைகள் பொறித்த தூண்கள், பௌத்த தாபனங்கள் என்ற பலவும் மௌரிய சமய கலாச்சாரத்தில் பெரும் செல்வாக்கைப் பெறுகின்றன. அசோகன் தனது ஆட்சிப் பிரதேசத்தில் மட்டுமன்றிக் கடல்கடந்து இலங்கையிலும் மேற்காசிய நாடுகளிலும் பௌத்தத்தைப் பரப்பினான். அவன் ஆட்சியைத் தொடர்ந்தும் பௌத்தம் நிலவியமைக்கு பப்கர்ட் (மத்திய இந்தியா), புத்தகயை, சாஞ்சி (போபால் சமஸ்தானம்) மதுரா, காந்தாரம், அமராவதி, நாகர்ஜுன கொண்டா ஆகிய இடங்களிலே இன்றும் எச்சசொச்சமாய் விளங்கும் பௌத்த தாபகங்கள் ஆகியவற்றின் சிதைவுகள் சாட்சிபகர்கின்றன. பௌத்தம் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் வரை இந்தியாவில் செல்வாக்குப் பெற்றிருந்து வைதிக சமய எழுச்சியிலே கரைந்து மறைந்தது.

(1V) பௌத்தமதத்தோடு சமணமதமும் சமாந்தரமாக நிலவிற்று. பௌத்தம் வைதிகசமய எழுச்சியால் ஒடுங்கியது போலச் சமணமும் ஒடுங்கிய போதிலும் பௌத்தம் போல இந்தியாவிலிருந்து முற்றாய் மறைந்துவிடவில்லை. குஜராத்தில் (மும்பாய் மாகாணம்) இன்றும் சமணர்கள் சில ஆயிரக்கணக்கிலாவது தமது கடைப்பிடிகளில் உறுதியாய் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. கொண்டா பேணஸ் என்பான் ஆட்சிபுரிந்த கரையோரப்பகுதியிலே கிறிஸ்தவம் நிலவியதாகவும் கூறப்படுகின்றது. இது மௌரியர் ஆட்சியின் கடைசிக்காலத்தில் ஏற்பட்டதாகும். ஆனால் கிரேக்கர் ஆள்பதிகளாய் இருந்த பகுதிகளில் கிரேக்க தெய்வங்களும் சிறிய அளவில் வழிபடப்பட்டதாகத் தெரிகின்றது. சிறப்பாக மிகரன் என்ற கிரேக்கதெய்வம் வழிபாட்டில் இடம்பெற்றது.

07. 1. குப்தரின் ஆட்சிக்காலம் ஏறக்குறையப் பல்லவர் ஆட்சிக்காலத்துக்குச் சமமானதாகும். குப்தர் காலம் சிற்ப, ஓவிய, விக்கிரக, நாணயக் கலைகளிலே சிறந்து விளங்கியது உண்மையே. ஆனால் பல்லவர் அளவு கோயிற் கட்டடக்கலையிலே சிறந்து விளங்கினர் எனல் இயலாது. இவை பெரும்பாலும் அளவாலும் சிறியவை, காஞ்சியிலே இவ்வாறான ஓர் இந்து ஆலயத்தின் சிதைவு இன்றும் காணப்படுகின்றது. டியோகர் என்ற இடத்தில் உள்ள கோயிலை ஒத்தது சாஞ்சிக் கோயில். பித்தர்கா ஒன் என்ற இடத்திலே மேற்குறித்த கோயில்கள் இரண்டிலும் அளவாற் பெரியதொரு கோயில் இருந்தது. செங்கற்களாற் கட்டப்பட்ட இந்தக் கோயில் இன்று அழிபாட்டிற்கு இலக்காகி விட்டது. நச்ன – கே – தாலாய் என்ற இடத்திலும் பிற இடங்களிலும் காணப்படும் கோயிற் சிதைவுகள் ஊடாக அவை கட்டப்பட்ட காலத்தில் எவ்வாறிருந்தன என்று ஓரளவு ஊகிக்கக் கூடியனவாயுள்ளன. இவை நன்கு அணி செய்யப்பட்டிருந்திருக்க வேண்டும். இவை மூன்று பிரிவுகள் கொண்டவை.

1. சதுரமான முன் மண்டபம்
2. தெய்வப்படிமம் வைக்கப்பட்ட கருவறை
3. தாழ்வாரம்

சுவர்களிலே பல திறப்பட்ட சிற்ப, ஓவிய அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கலாம் என்பது ஊகிப்பு. அவை கோயிற் கட்டடத்தோடு ஒத்திசைவு பெற்றிருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. குப்தர் காலத்திலே அளவாற் பெரிய கோயில்களும் கட்டப்பட்டிருத்தல் கூடும். எனினும் அவை யாவும் அழிந்துபட்டன.

2. கட்டடக்கலையின் குறைபாட்டினைப் போக்கிவிடுமளவிற்குக் குப்தர் காலத்திலே சிற்பக் கலை சிறந்தோங்கியிருந்தது.

"இக்காலப்பிரிவின் தனித்தன்மை யாதெனில் தெய்வப்படிமங்களில் இந்தியச் சிற்பி வெளிப்படுத்திய உன்னத கலைத் திறனாகும்" எனப்போற்றப்படும் இக்காலத்தில் இந்துமதம், பௌத்தமதம் இரண்டிற்கும் பொதுவான படிமங்கள் கல்லாலும், செம்பாலும் ஆக்கப்பட்டன. சாரநாத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலைகள் மிகப்பலவாகும். இவற்றுட்சில இந்தியாவிலே கிடைத்துள்ள புத்தர்சிலைகள் அனைத்திலும் சிறந்த கலைத்திறனும் அழகும் பொருந்தி விளங்குகின்றன. தொடக்கத்தில் புத்தரின் பாதச்சுவடு. தாமரை, தரும சக்கரம் என்பனவே செதுக்கப்பட்டுப் பின்புதான் உருவச்சிலைகள் செதுக்கப்பட்டன. இவை பஃறூட், புத்தகயை, சாஞ்சி என்ற இடங்களிற் கிடைத்தவையாகும். காந்தாரத்திலே கண்டெடுக்கப்பட்ட, புத்தரின் முதல் உருவச்சிலையில் இந்துச் சிற்பக்கலை நுட்பத்துக்குப்பதிலாகக் கிரேக்க சிற்பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்திறனே காணப்படுகிறது என்பர். ஜான்சி மாவட்டத்தில் தியோகர் ஆலயத்தில் காணப்படும் சிவன், விஷ்ணு சிற்பங்கள் கோமிற் சுவரிலே எழிலொழுகப் பொறிக்கப்பட்டுள்ளன. கம்பீரம், கவர்ச்சி, தெய்வீகம் என்ற அனைத்தினதும் சங்கமமாகவுள்ள இவற்றில் இந்தியச் சிற்பியின் ஆன்மிக வெளிப்பாட்டுத்திறன் நன்கு புலனாகின்றது. "குப்தர் காலக்கலைகளிலே நன்கு வளர்ச்சிபெற்ற அறிவார்ந்த போக்கும் உணர்வும் ஒன்றுடன் ஒன்று சங்கமிக்கின்ற இயல்பினை உணரலாம்" என்பது குப்தர் காலச்சிற்பக்கலை பற்றி கலாரசிகரின் கணிப்பீடாகும்.

3. குப்தர் காலம் ஓவியக்கலையின் உச்சக்கட்டக்காலம் எனலாம். பம்பாயிலிருந்து 250கல் தொலைவிலுள்ள அஜந்தாவிற் காணப்படும் 29 குகைகளுக்குள்ளே 16 குகைகளிலுள்ள சுவர்களிலே காணப்படும் ஓவியங்களுக்கு இணைகாண்பதரிது. ஓவியக்கலைக்கீடாக இங்குச் சிற்பத்திறனும் மேலோங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1899 வரை பழுதுறாதிருந்த அஜந்தா ஓவியங்கள் போற்றுவாரின்றிக் கைவிடப்பட்ட நிலையில் பழுதுபட்டு, அழிபாட்டிற்கிலக்காகி, ஒளிமழுங்கி இன்று காட்சிதருகின்றன. ஓவியங்களின் உருவ அமைதி, பொருத்தமானதும், காலத்தால் அழியாததுமான வர்ணச் சேர்க்கை, பார்ப்போரின் கவனத்தைக் கௌவிமிழுக்கும் கவர்ச்சியுடன் கூடிய வனப்பு என்பன இவற்றின் இன்றைய நிலையிலும் வெளிப்படத் தவறவில்லை. புத்தஜாதகக் கதை நிகழ்ச்சிகள் இவ்வோவியங்களின் கருப்பொருளாகும். இவற்றுள்ளும் 'புத்தரின் தாய் இறந்து கொண்டிருத்தல்', 'தாயும் சேயும்' என்ற இரண்டு ஓவியங்களும் தலைசிறந்தனவாகும்.

குப்தர் காலக்கலைகளின் தனித்தன்மையை அக்காலத்தில் உருவாக்கப்பட்ட நாணயங்களிலும் காணலாம். இவற்றில் வெளிநாட்டுச் செல்வாக்கிருப்பது உண்மையே. எனினும் இந்திய உலோகக்கலைஞர்களின் தனித்துவமான கலை வண்ணமும் இந்நாணயங்களின் அமைப்பிற் கலந்தே காணப்படுகின்றன. நாணயங்களோடு செப்புப்படிமங்களும் ஆன்மிகத்தோடு இசைந்து அதேசமயம் அழகொழுக உருவாக்கப்பட்டுள்ளன. குப்தர்கால உலோகக்கலைஞர்கள் தங்களின் கருத்துக்களையும் உணர்வுகளையும் சுதந்திரமாக வெளிப்படுத்தி அலங்கார அணிநயம் பொருந்திய நாணயங்களையும் விக்கிரகங்களையும் உருவாகியுள்ளனர். இவையும் இந்தியக் கலையின் தலைசிறந்த வெளிப்பாடு என்றே கொள்ளலாம்.

08) (1) சோழர் காலத்தில் சிறப்பாக உருக்கொண்ட சமய தத்துவங்களாக நான்கு தத்துவங்களைக் குறிப்பிடலாம். வேதாந்த தத்துவங்களான கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவிதம், சைவசித்தாந்தம் என்பனவே அந்த நான்குமாம். கேவலாத்துவிதத்தை நிறுவியர் ஆதிசங்கரர், விசிட்டாத்துவிதத்தை உருவாக்கியவர் ஸ்ரீஇராமானுசர். துவிதத்தின் தாபகர் மத்துவர் என்னும் மாதாவாசாரியர். வேத சிவாகமங்களினது அடிப்படையிலும் திருமுறைகளின் அடிப்படையிலும், திருமூலரின் திருமந்திர அடிப்படையிலும் மெய்கண்டசிவாசாரியாரை முதல்வராகக் கொண்ட சந்தானகுரவர் சுத்தாத்துவித தத்துவத்தை உருவாக்கினர்.

(2) ஸ்ரீசங்கரர் எட்டாம் நூற்றாண்டினர் எனக்கொள்ளப்படுகின்றார். இவர் திருஞானசம்பந்தருக்கு முற்பட்டவர் என்பது இவரியற்றிய நூலொன்றில் திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று குறிப்பிடுவதிலிருந்து புலனாகின்றது. மாணிக்கவாசகர் இவரின் தத்துவக் கோட்பாட்டினை 'மிண்டிய மாயாவாதம்' எனக் கண்டிப்பதிலிருந்து இவர் மாணிக்கவாசகருக்குப் முற்பட்டவர் என்று கொள்ளலாம். எனினும் பல்லவர் காலத்தின்பின்னரே தத்துவங்கள் எழுச்சி கண்டன என்பதால் சங்கரரையும் சோழர்காலத்தோடு தொடர்புபடுத்திப்பார்ப்பது பொருத்தமானதே. பிரமசூத்திரத்திற்கு மாபாடியம் வகுத்தவராயும், பத்து உபநிடதங்களுக்கு உரைவழங்கியவராகவும், சண்மதத் தாபகராகவும், கனகதாரா, சிவானந்தலகரி, சௌந்தரியலகரி முதலாம் தோத்திர நூல்களின் ஆசிரியராகவும், சிருங்கேரி, துவாரகை, பூரி, காஞ்சி ஆகிய இடங்களிலே வேதாந்த மடங்களை உருவாக்கியவராகவும் தமது முப்பத்திரண்டு அகவையினுள் இவர் சாதித்த சாதனைகள் அளவிறந்தன.

பத்தாம் நூற்றாண்டினரான ஸ்ரீஇராமானுஜர் தமிழகத்தில் அவதரித்தவர், வைணவ மதத்தினைத் தென்னாட்டில் மட்டுமன்றி வடநாட்டிலும் பரப்பியவர்: நூற்றாண்டுக்கு மேல் வாழ்ந்தவர். வேதங்களோடமையாது ஆகமங்களையும் ஆதாரமாகக் கொண்டு தமது விசிட்டாத்துவித தத்துவத்தினை இவர் நிறுவினார். இவர் பிரமசூத்திரத்திற்கு எழுதிய பேருரை ஸ்ரீபாஷ்யம் எனவும் வழங்கும். பகவத்கீதைக்குப் பாடியமும் வேதாந்த சாரம், வேதாந்ததீபம், கத்தியத் திரவியம், வேதாந்த சங்கிரகம் ஆகிய நூல்களும் இவரால் இயற்றப்பட்டன. பலரை வைணவராய் மாற்றியதோடு வைணவ ஆலயங்களை நிறுவியும் வைணவ மத வளர்ச்சிக்கு இராமானுஜர் தொண்டு புரிந்ததாகத் தெரிகிறது

. கன்னட நாட்டிலே உடுப்பி என்ற இடத்திலே 1199ஆம் ஆண்டு தோன்றிய மத்துவர் தமது துவிதத்துவ நிறுவலுக்கு வேதங்கள், வைணவ ஆகமங்கள் என்பவற்றோடு புராணங்களையும் பயன்படுத்தினார் என்று தெரிகின்றது. இவர் 37 நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் பிரம்மசூத்திரம், கீதை, தசோபநிடதம் ஆகிய மூன்றுக்கும் எழுதிய பாஷ்யங்கள் பிரதானமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தத்தின் தத்துவ விளக்கம் முழுமையும் மிக ஆழமாகவும் செறிவாகவும் விளக்கப்படும் நூல் சிவஞானபோதம். இதனை ஆக்கிய மெய்கண்ட தேவர், திருக்கைலாய ஞானபரம்பரையில் வந்த சத்தியஞான தரிசினிகளின் திருநாமத்தையே தமிழாக்கி அவரின் மாணாக்கரால் ஞானோபதேசமும் அருளப்பெற்றவர். தமது தந்தையாரின் குருவும் சகலாகம பண்டிதருமான அருணந்தி சிவாச்சாரியாருக்கே உபதேசம் புரிந்து தமது சீடராக்கிக்கொண்ட பெருமைக்குரியவர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் போலவே குழந்தைப் பராயத்திலேயே ஞானங்கைவரப்பெற்ற இப்பெருந்தகையாளரால் சைவசித்தாந்தம் தமிழில் துலக்கம்பெற்றது.

(3) திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் தவிர்ந்த பன்னிரண்டு மெய்கண்ட சாத்திர நூல்களும் சோழர் காலத்திலேயே தோன்றியவையாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவஞானபோதம் | – | மெய்கண்ட சிவாச்சாரியார் |
| 2. | சிவஞானசித்தியார் | – | அருணந்தி சிவாச்சாரியார் |
| 3. | இருபாஇருபஃது | – | " |
| 4. | உண்மை விளக்கம் | – | மனவாசகங்கடந்த தேவர் |
| 5. | சிவப்பிரகாசம் | – | உமாபதி சிவாச்சாரியார் |
| 6. | திருவருட்பயன் | – | " |
| 7. | வினாவெண்பா | – | " |
| 8. | போற்றிப்பஃறொடை | – | " |
| 9. | கொடிக்கவி | – | " |
| 10. | உண்மைநெறி விளக்கம் | – | " |
| 11. | சங்கற்பநிராகரணம் | – | " |
| 12. | நெஞ்சுவிடுதூது | – | " |

(4) இக்காலகட்டத்தில் சைவசமயத்தைப் பொறுத்தவரையில் தத்துவநூல்கள் (சாத்திரநூல்கள்) தோன்றிய அளவு, தோத்திர நூல்கள் தோன்றவில்லை எனலாம். திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திகாடநம்பி, கண்டராதித்தசோழர், புருடோத்தமநம்பி, வேணாட்டடிகள், சேதிராயர், திருவாலியமுதனார் ஆகிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாக்களும் சேந்தனாரின் திருப்பல்லாண்டும் உள்ளடங்கிய ஒன்பதாம் திருமுறை சோழர் காலத்தெழுந்த சிறந்த தோத்திர நூல் எனலாம். காரைக்காலம்மையார், சேரமான் பெருமாணாயனார் தவிர்ந்த நம்பியாண்டார் நம்பி உள்ளிட்ட நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார் முதலாம் பதினொருவர் பாடிய திருப்பாடல்கள் அமைந்த பதினொராம் திருமுறையும் பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணமும் (சேக்கிழார்) சோழர்காலப்பக்தி நூல்களாக விளங்குகின்றன.

**09.** (1) சோழர் காலத்தில் இட்ட தெய்வ வணக்கமும் சிவன், உமை, விநாயகர், முருகன், சிவனடியார், திருமால், ஆழ்வார் மற்றும் சிறு தெய்வ வணக்கங்களும் முன்னரிலும் பரவலாகவும் பல மூர்த்தங்களை விக்கிரக வடிவில் அமைப்பதாகவும் விரிவடைந்தன. நாயக்கர் காலத்திலே இவ்வழிபாட்டுமுறை மேலும் பரந்த அளவில் இடம்பெறலாயிற்று. முன்னரிலும் பெருமளவில் தெய்வங்களுக்குப் பெருவிழாக்கள் எடுத்தல், தீபாவளி முதலாம் பண்டிகைகளுக்கு முதன்மையளித்துக் கொண்டாடுதல் என்பன இடம்பெறுகின்றன. மதுரை நாயக்கர் மீனாட்சியம்மைக்கும் சோமசுந்தரக் கடவுளுக்கும் பெருவிழாக்கள் பல எடுத்தனர். நவசக்திகளுக்கும் சிறப்பாக துர்க்கை, இலக்குமி, கலைமகள் ஆகிய தெய்வங்களுக்கும் நவராத்திரி விழாவினை மிகக் கோலாகலமாகக் கொண்டாடியதோடு, கலைப்பெருவிழாவாகவும் வீரவிளையாட்டுக்கள் இடம்பெறுவதாகவும் புலவர் பெருமக்களைக் கௌரவிப்பதாகவும் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(2) கோயிற் கட்டடக்கலையைப் பொறுத்தவரையில் நாயக்கர் கோயிற் புனருத்தாரணம், அவற்றை முன்னரிலும் விசாலமாகவும் பெரியனவாகவும் சிற்பக்கலைத்திறம் பொதிந்த தாழ்வாரங்களைத் தமக்கேயுரிய பாணியில் அமைத்தல், குளம்வெட்டல் முதலாகப் பலவகையில் விரிவுபடுத்தினர். விசுவநாதநாயக்கன், திருமலை நாயக்கன் ஆகிய இருவரும் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலைப் புனருத்தாரணம் செய்து புதிய மண்டபம் அமைத்து அரும்பணி செய்தனர், இக்கோயிற் பெருவிழாக்கள் முட்டின்றி நடைபெறப் பலகிராமங்கள் மானியங்களாய் விடப்பட்டன.

வைணவம், சைவம் என்று மதவேறு காட்டாது நாயக்கர் இருசமயக் கோயில்களிலும் திருப்பணிகளை மேற்கொண்டனர். செஞ்சித் தலைவராகிய கிருஷ்ணப்ப நாயக்கன் சிதம்பரத்தில் நடராஜப்பெருமான் சந்நிதியிலே சில சீரமைப்பு வேலைகள் நடத்தினார். இத்திருப்பணிகள் நடந்த வேளையில் வைணவர் கிளர்ச்சி செய்தபோதும் அக்கிளர்ச்சியைப் பொருட்படுத்தாது கிருஷ்ணப்பநாயக்கன் தனது திருப்பணியைச் சிறப்பாகச் செய்துமுடித்தான். விசுவநாதநாயக்கன் மதுரைத் தெப்பக்குளத்தை வெட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும். கிருஷ்ணப்ப நாயக்கன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் வடகோபுரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுப்பினான், திருமடைப்பள்ளி கட்டினான். மூர்த்தி, அம்மன் மண்டபம், இரண்டாம் பிரகார மண்டபம், கொடிக்கம்பத்தின் முன் வீரப்பர் மண்டபம் என்பனவும் இவனுடைய திருப்பணிகளாகும். திருமலைநாயக்கன் கரியமாணிக்கப்பெருமானின் சங்கீத மண்டபத்திலே சிதைவுற்றிருந்த தூண்களையும் பிறசிற்ப உருவங்களையும் பெயர்த்துவந்து அவற்றைக்கொண்டு மீனாட்சி மண்டபத்தை அணிசெய்ததோடு, மீனாட்சி அம்மன் சந்நிதியின் முன்பு துவாரபாலகரைப் பிரதிட்டை செய்தும் இரு சந்நிதிகளிலும் பலிபீடங்கள், கொடித்தம்பங்கள் அமைத்தும் பொற்றகடு பதிப்பித்தும் பணிபுரிந்தான். நாயக்கர் அரசியான இராணிமங்கம்மாளும் கோயிற் புனருத்தாரணப் பணிகளில் ஈடுபட்டதோடு, குளம் அமைத்தும் சத்திரம் அமைத்தும் கலைத்திறன்வாய்ந்த கட்டடங்கள் எழுப்பியும் பணியாற்றினாள்.

(3) அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் ஆகிய இடங்களிலே உருவாக்கப்பட்ட ஓவியங்கள் போலப் பெருமளவு சமயச்சார்பு குறைந்து, நவீனத்தன்மையும் குன்றி ஆக்கப்பட்டவையே நாயக்கர் கால ஓவியங்கள். நாயக்கர், மங்கம்மாள் முதலியோரின் ஓவியங்கள் எதார்த்தத் தன்மையை அதிகமாய்ப்பெற்றுள்ளன. "இவற்றில் ஆண்களின் ஓவியங்கள் வலிமைபெற்ற உடலமைப்புடன், தாடி கீழ்நோக்கிய மீசையுடன் காட்சிதருகின்றன. பெண்வடிவங்கள் தசைபருத்த உடலமைப்பும் உருண்டு திரண்ட மார்பகங்களும் காதளவோடியகண்களும் பெருமளவு ஆடை அணிகளும் உடையனவாய் விளங்குகின்றன. இவற்றிலே கவர்ச்சிமிகுதியாகவும் காமச்சுவை மிகுதியாகவும் அமைந்துள்ளன.

**10.** (1) திருநெல்வேலி, ஆதிச்ச நல்லூர் ஆகிய இடங்களிலே பெருங்கற் பண்பாட்டின் எச்சசொச்சங்கள் கண்டெடுக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இப்பெருங்கற் பண்பாடு கி.மு. 2000ஆண்டு பழமை கொண்டதாகக் கருதப்படுகின்றது. ஈமத்தாழிகள், சேவல், மயிற்சிலைகள், வேற்செதிள்கள் என்பன இங்கும் கண்டெடுக்கப்பட்ட பழமைச் சின்னங்களாகும். முன்னதுகொண்டு பெருங்கற் பண்பாட்டுமக்கள் இறந்தோரின் அஸ்திகளை மட்பாண்டத்திலிட்டுப் புதைத்தமையும் பின்னவை முருக வணக்கத்தையும் புலப்படுத்துகின்றன. பெருங்கற்பண்பாடு தமிழ்நாட்டுக்குச் சமமும் சமாந்தரமாகவும் இலங்கையிலும் நிலவியமைக்கு, 1955 ஆம் ஆண்டிலே புத்தளப் பகுதியில் நிலவிய புதைபொருளாய்வின்போது கிடைத்த தொல்பொருட் சான்றுகள் உதவின. இதேபோன்று பொன்பரிப்பு (மேற்கரையோரம்) வளவகங்கைப்பள்ளத்தாக்கு (கீழ்க்கரையோரம்), வல்லிபுரம், வரணி (வடகரையோரம்), மாதோட்டம் (மாந்தை) ஆகிய இடங்களிலும் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைத்தன.

(11) கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலே தேவநம்பியதீசன் (கி.மு. 247-207) காலத்தில் பௌத்த சமயம் இலங்கையிலே புகுத்தப்பட்டது. அதற்கு முன்பு இந்து சமயமே இங்கு வாழ்ந்த மக்களின் சமயமாய் விளங்கியது. வரலாற்றுக் காலத்தில் இருந்து பல நூற்றாண்டுகளாய் அநுராதபுரமே இலங்கையின் தலை நகரமாய் விளங்கியபோதிலும் ஆங்காங்கே சில சிற்றரசுகள் நிலவியதாகவும் அச்சிற்றரசுகளின் மன்னர்கள் இலங்கையின் தேசிய மதமாகப் பௌத்தம் அமைந்த காலத்திலும் இந்து மதத்தினைப் பின்னரும் பின்பற்றினர் என்பதாகவும், எனவே மக்களிற் பலரும் இந்து சமயிகளாய் இருந்ததாகவும் கலாநிதி சி.க.சிற்றம்பலம் குறிப்பிடுவர். இதற்கு ஆதாரமாக கி. பி. முதலாம் நூற்றாண்டில் திஸ்ஸமகாராமவில் அரசுபுரிந்த மன்னன் இந்துமதத்திலிருந்து பௌத்தத்திற்கு மாறிய வரலாற்றுச் செய்தியைச் சிற்றம்பலம் சான்றாகக் காட்டுவர்.

யாழ்ப்பாண வைபவ மாலையில் அநுராதபுரம் இலங்கையின் தலைநகராக முன்னே, முதற்சிங்கள அரசனான விஜயன் கோணேஸ்வரம் (கிழக்கு), சந்திர சேகரம் (தெற்கு), தம்பலேஸ்வரம் (வடக்கு), திருக்கேதீஸ்வரம் (வடக்கு), ஆகிய சிவாலயங்களை நான்கு திசைகளிலும் கட்டினான் எனக்கூறப்படுகின்றது. (முருக வழிபாடு இலங்கையின் மிகப்புராதன வழிபாட்டில் இடம்பெற்றமை முன்னரே காட்டப்பட்டது.) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் 'யஜ்' வழிபாடு இந்துசமயத்தின் புராதனக்கூறான மதவழிபாட்டிற்கு அடிகோலியது என்பர். சப்த கன்னியர், நாச்சிமார், பத்தினித்தெய்வ வழிபாடுகளெல்லாம் யஜ்வழிபாட்டின் வளர்ச்சிகளே எனவும் கூறப்படுகின்றது. பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் உப்புலவன் (நீலத்தாமரை நிறத்தவன்) என்னும் பெயரில் விஷ்ணுவழிபாடும் நிலவியதென்பர்.

(111) இராமாயணத்தில் கூறப்படும் தென்னிலங்கை இன்றைய இலங்கையே என்பது ஆய்வாளர் பலரும் ஏற்றுள்ள முடிபு. இலங்கையில் இயக்கர் என்ற சாதியர் வாழ்ந்தனர் எனவும் அவ்வியக்கரின் மன்னனாக இராவணன் விளங்கினான் எனவும் தெரியவந்துள்ளது. இராவணன் கைலையைப் பெயர்க்க முற்பட்டது சிவபெருமானால் வழங்கப்பட்ட சிவலிங்கத்தைத் திருக்கோணேச்சரம் என்னும் திருக்கோணமலையில் அவன் தாபித்த முதலாம் செய்திகள் தக்ஷண கைலாய புராணமூலம் தெரியவரும் செய்தியாகும். இராவணனின் சிவபக்தி, அவன் வீணாகானத்தில் பெற்றிருந்த அசாத்தியத்திறமை என்பனவும் அவன் கைலையைப்பெயர்த்த செய்தியும் அவன் மனைவியான மண்டோதரி சிவபக்தி மிக்கவள் என்பதும் தேவார திருவாசகங்கள் வாயிலாக அறியவரும் செய்திகள்.

(1V) கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு விஜயன் வந்த பொழுது ' யஜ் ' வழிபாடும் இந்துசமயத் தெய்வங்களின் வழிபாடும் இங்கு நிலவின என்பதை மகாவம்சம் முதலாம் சிங்கள வரலாற்று நூல்களே ஏற்றுக் கொண்டுள்ளன. விஜயனே இந்துமதத்தவன்தான் (அவன் இலங்கையிற் காலடி பதித்த அதேநாளில் புத்தர் பரிநிர்வாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தார் என்று மகாவம்சம் உரைக்கும்) அவன் நாற்றிசைகளிலும் காவற்தெய்வமாகச் சிவபெருமானை அமைத்துக் கோயில்கள் எடுத்த செய்தி முன்னரே தரப்பட்டது.

**11** (1) கி.பி. 1017 தொடக்கம் 1070 வரையுள்ள காலப்பகுதியில் இலங்கை சோழ அரசுக்கு அடிப்பட்டு மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரோடு, பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு விளங்கியது. இக்காலப்பகுதியிலும் தொடர்ந்து சிங்கள அரசர் பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டிருந்த காலத்திலும் சிவாலயங்கள் பல இங்குக் கட்டப்பட்டன. இவ்வாலயங்களூடாகத் திராவிடக் கட்டட சிற்பக்கலையின் செல்வாக்கு ஏற்பட்டது.

(11) பொலனறுவையில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சியின் பயனாக அங்கு பத்துச் சிவன்கோயில்கள், ஐந்து விஷ்ணு கோயில்கள், ஒரு காளி கோயில் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. கட்டட இடிபாடுகளுக்கிடையே தெய்வப்படிமங்களும் கல்வெட்டுக்களும் காணப்பட்டன. பொலனறுவைச் சிவாலயங்களுக்கு முதலாவது சிவாலயம், இரண்டாவது சிவாலயம் எனப்பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் அதிக அழிபாடுகளின்றியுள்ளது, இரண்டாவது எண்ணைக்கொண்ட சிவாலயமாகும். இராசேந்திர சோழன் (முதலாம்) தன் தாயாகிய வானவன்மாதேவி பெயரால் அமைத்த ஆலயம் வானவன்மாதேவி ஈச்சரமெனவழங்குகின்றது. கோயில்களில் அளவாற் சிறியதாயினும் சோழர்மரபிற்கேயுரிய கட்டட அமைப்பையும் கலையம்சத்தையும் கொண்டு விளங்குகின்றது. இதற்கு அடுத்தபடியில் சிறப்புடைய சிவாலயம் ஐந்தாவது எண்ணைக் கொண்டதாகும். இவை கருங்கற் கட்டடங்கள் ஆதலால் இன்றுவரை அழிவுக்குத் தப்பி விளங்குகின்றன. இவற்றைவிட வடமத்திய மாகாணத்தில் பதவியாக்குளம் அமைந்துள்ள பதன்னொரு என்ற பழைய நகரத்தில் மொரகொட என்ற பகுதியில் நானாதேசியர், நகரத்தார் என்ற வணிகக் கணத்தினரால் சிவாலயங்கள் கட்டப்பட்டன என்றும் தெரிய வருகின்றது. எனினும் அவை பெரிதும் சிதைவுற்றுக் காணப்படுகின்றன. சோழர் ஆட்சிக்காலத்தில் மாந்தை என்னும் மாதோட்டத்தில் இராஜராஜேச்சரம் என்னும் கோயில் கட்டப்பட்டது. இதனைக் கட்டியவன் தாழிகுமாரன், இது முற்றாக அழிந்துவிட்டது. இதே காலப்பகுதியில் திருவிராமீஸ்வரம் என்ற பெயரில் வேறு ஒரு கோயிலும் மாதோட்டத்தில் கட்டப்பட்டது. பொலனறுவைக்கு அண்மையில் மண்டலகிரி என்னும் இடத்தில் இராஜேந்திரனின் பட்டப்பெயரான பண்டித சோழன், என்பதை நினைவூட்டும் வகையில் பண்டிதசோழ ஈச்சரம் அமைந்தது. சோழனின் பின்பு அரச கட்டிலேறிய சிங்கள மன்னனான விஜயபாகு கந்தளாயில் கட்டியகோயில் விஜயராஜ ஈச்சரமாகும். பொலனறுவைக்காலத்தில் குருநகரில் குடியேறிய இந்துக்கள் எழுப்பிய கோயில்களில் விக்கிரமசாலமேக ஈச்சரம் குறிப்பிடத்தக்கதாகும்.

(111) வானவன் மாதேவி ஈச்சரம் சோழர்காலக் கோயில்களுக்குள்ளே தலைசிறந்ததாகும். இதன் கர்ப்பக்கிருகத்துள் சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. மண்டபத்தில் நந்தி உள்ளது. இவை இரண்டும் ஓரளவு சிதைவுற்றிருப்பினும் சோழச்சிற்பியின் கைவண்ணத்தை நன்கு புலப்படுத்துவன. மேற்கூடு, மண்டபம் என்பன சோழர் பாணியில் அமைந்தவை, அழகானவை, ஒரே பிரகாரம்கொண்ட பெரிய கோயில் இது.

(1V) பொலனறுவைக் காலத்தில் தலைசிறந்த பெருமன்னனான மகாபாக்கிரமபாகு பௌத்த சமயத்துக்கு பெருந்தொண்டாற்றியவனாயினும் இந்து சமய வளர்ச்சிக்கும் உறுதுணை புரிந்தான். இவன் பிராமணருக்காக ஹேமமந்திரம், தரணஹாரம் என்ற இரு மண்டபங்கள் கட்டி வேதக்கிரியைகள் சிறப்பாக நிகழ உதவினான். இதனோடு சூழவம்சம் என்ற நூல் இவன் பதின் மூன்று சிவாலயங்கள் கட்டியதாகவும் குறிப்பிடுகின்றது. மகாபராக்கிரம பாகுவின் வழிவந்த நிசங்க மல்லன் பார்வதி அன்னசத்திரம் கட்டியதோடு பிராமணருக்காக வேறு சில அன்னசத்திரங்களும் கட்டினான். சோழப்படைகளை அகற்றிப் பொலனறுவையிலே சிங்கள ஆட்சிக்கு வித்திட்ட விஜயபாகு கந்தளாயில் விஜயராம ஈச்சரம் அமைத்ததோடு, கந்தளாயில் பிராமணர் குடியேறிவாழச் சதுர்வேதி மங்கலமும் அமைத்துக் கொடுத்தான். இவற்றிலிருந்து அக்காலச் சிங்கள வேந்தர்கள் இந்துசமய வளர்ச்சிக்கு உதவியமை நன்கு புலனாகும்.

**12.** போர்த்துக்கீசர் சமயச்சகிப்பற்றோர். தமது ஆதிக்கத்தின் கடுமையையும் எதேச்சாதிகாரப் போக்கையும் நன்கு பயன்படுத்தி இந்நாட்டில் நிலவிய பௌத்த இந்துசமயங்களை அவர்கள் அழித்திட முற்பட்டார்கள். போர்த்துக்கீசரின் சமயரீதியான துவேஷம், அவர்கள் தமது சமயத்தினை மக்களிடையே பலவந்தமாகத் திணிப்பதோடு நின்றுவிடவில்லை, இந்துக்கோயில்கள் பலவற்றை இடித்துக் தரைமட்டமாக்கியும் அங்கிருந்த அணிகலன்கள், விக்கிரகங்களைச் சூறையாடியும் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்தனர். இக்காலத்தில் நிகழ்ந்த சமயக் கொடுமைகள் பற்றி, நவரத்தினம் என்பார் தமது இலங்கையில் இந்து சமயம் ஒரு சுருக்க வரலாறு என்ற ஆங்கில நூலிலே பின்வருமாறு விபரிக்கின்றார்.

> "போர்த்துக்கீசர் இந்துக்கோயில்களை இடித்துத் தகர்த்து அங்குள்ள செல்வம் அனைத்தையும் சூறையாடினர். இந்துக்களின் ஆட்சி முறைகள் தடைசெய்யப்பட்டன. அவர்கள் கிறிஸ்தவ தேவாலயங்களிலே சென்று வழிபடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள். கிறிஸ்தவனல்லாத எவனும் போர்த்துக்கல்லுக்கும் யேசுநாதருக்கும் எதிரானவன் எனக்கணிக்கப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின்காட்டுமிராண்டித்தனமும் கொடுமையும் இவர்கள் பின்வந்த ஆட்சியாளர்கள் அனைவர்மீதும் மக்களை வெறுப்புக்கொள்ள வைத்தன. சீதாவாக்கைக்கு அண்மையிலுள்ள பெரண்டி கோயில் (வைரவ ஆண்டி – சிவன்) போர்த்துக்கீசரால் அழிக்கப்படாது இருந்திருப்பின் இன்று அது திராவிடரின் கட்டடக்கலைக்கு மதிப்பார்ந்த சின்னமாய் விளங்கியிருக்கும்.

(11) இவர்களின் பின்வந்த ஒல்லாந்தரும் ஆரம்பத்தில் சமயசகிப்பற்றவர்களாய் விளங்கியது உண்மையே. எனினும் காலப்போக்கில் இவர்கள் ஓரளவு சமயப் பொறையைக் கடைப்பிடித்தனர் என்றே கொள்ளக்கிடக்கின்றது. எனினும் தமது சில தன்னலத்தேவைகளை நிறைவேற்றற்கு இந்து மக்களின் மனத்துக்கிசையாத செயல்களை அவர்கள் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டமையையும் மறுத்தலியலாது. யாழ்ப்பாணத்துக்கு ஆட்சியாளனாய் இருந்த ஒல்லாந்தத் தளபதி ஒருவன் தனது சமயலறைக்கு நாள்தோறும் ஒவ்வொரு குடிமகனும் மாடு ஒன்றினை அனுப்பிவைக்குமாறு விதித்தமை இதற்குத் தகுந்த சான்றாகும். இக்கொடும் பாதகத்துக்கு இஃசயாத ஞானப்பிரகாசர் என்ற பெரியார் இரவுக்கிரவே கப்பலேறி இந்தியா சென்றதும், இவர் நாவலரின் மூதாதையர் என்பதும் குறிப்பிடத்தக்கன. ஒல்லாந்தர் காலத்திலேயே அவர்களின் அனுமதியோடு நல்லூர்க்கந்தசுவாமி கோயில், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கட்டப்பட்டன. சின்னத்தம்பிப் புலவர் போன்றோர் சைவப்பிரபந்தங்கள் இயற்றினார்.

(111) போர்த்துக்கீசர் காலத்தில் விக்கிரகங்களை வைத்துக் கோயில்களில் வழிபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டது. எனினும் இந்து மக்கள் முற்றாகத் தமது வழிபாட்டைக் கைவிடவில்லை. தத்தம் வீடுகளிலே சூலம் வைத்து வழிபட்டனர். போத்துக்கீச அதிகாரிகள் சூலத்தைச் சுட்டி அது என்ன என்று விசாரித்தால், தேங்காய் உரிக்கப்பயன்படும் அலவாங்கு என்று அவர்களால் விளக்கம் கொடுக்கப்பட்டது. வாழையிலையிலே உணவிட்டு அருந்துவது தடை செய்யப்பட்டபோது விரத காலங்களிலே ஒளித்து இலையில் உண்டபின் இலைகளைக் கூரைகளிலே செருகி வைத்தனர். பிராமணருக்கு வரிவிலக்களிக்கப்பட்டபோது, பிராமணரல்லாதாரும் அந்த வரிச்சலுகைக்காகப் பூணூல் தரித்து தம்மை வரியிறுப்பில் இருந்து தவிர்த்துக் கொண்டதாகவும் தெரிகின்றது. அவ்வாறு ஏதோ ஒரு வகையில் அக்கால இந்துமக்கள் தமது சமயக் கடைப்பிடிப்புகளைக் கைவிடாது பேணியே வந்தனர்.

(1V) ஒல்லாந்தர் காலமாகிய 1787 இல் வைத்திலிங்கச் செட்டியார் என்ற வணிகச் செல்வர், அக்காலத்தில் யாழ்ப்பாண அதிபதியாய் இருந்தவனின் மனைவியினுடைய ஆசியுடனும் அநுசரணையுடனும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்டினார். யாழ்ப்பாணத்திதல் உள்ள கோயில்களிலே அளவாற் பெரியதும், மூன்று திருவீதிகள் கொண்டதும், பெருந்தொகையான மானிய நிலங்களை ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் பெற்றதுமான இக்கோயில் யாழ்ப்பாணப் பெருநகரத்தின் நடுவண் அமைந்து விளங்குகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவரின் சகாவான கார்த்திகேய ஐயரும் சைவசமயப் பிரசங்கங்கள் நிகழ்த்திய சிவாலயமும் இதுவே என்பது குறிப்பிடத்தக்கதாகும். வட்டுக்கோட்டைக் கணபதி ஐயர் என்பார் வைத்திலிங்கச் செட்டியார் மீது குறவஞ்சி பாடியுள்ளார். இச்சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள பெருமானின் திருநாமம் வைத்தீஸ்வரர் என்பதாகும். அம்பாள் தையல்நாயகி, இருவருக்கும் ஆண்டில் இரு மகோற்சவங்கள் முறையே பதினைந்து நாள்களும் நடைபெறுகின்றன.

**13.** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822 – 1879) காலத்தில் சைவசமயம் ஈழத்திலே மிகவும் தாழ்ந்த நிலையிலே வீழ்ந்து கிடந்தது. கோயில்களிலே புராணபடனங்கள், மகோற்சவங்கள் நடைபெற்ற போதிலும் மக்களிடையே சைவசமயம் பற்றிய விரிந்த அறிவு காணப்படவில்லை. ஆலயங்கள் கேளிக்கைக்கான இடங்களாகக் கொள்ளப்பட்டன. வாணவேடிக்கை, தேவதாசிகளின் சதிர், மிருகபலி போன்றவற்றிற்கு அவை இடமளித்தன. திருமுறைகள் புறக்கணிப்புக்குள்ளாயின. மது, மாமிசம், விபசாரம், பொய், களவு, ஆகிய பஞ்சமாபாதகங்களிலும் மக்கள் ஈடுபட்டுத் தம்வாழ்வினை அவமாக்கிவந்தனர். போதிய கல்வி அறிவின்மையாலும் மூடநம்பிக்கைகளே சமய அடிப்படைகள் என்ற தவறான எண்ணத்தினாலும் சமய ஆசாரங்களும் ஒழுக்கங்களும் வழிபாட்டு முறைமைகளும் கைந்நெகிழ்க்கப்பட்டன. கோயில் திருவிழாக்களைப் பொழுது போக்குக்கான சாதனங்களாகக் கொண்டு இளைஞர்கள் அவற்றின் பரிசுத்தத்தைக் கெடுப்பதும் வழக்கமாயிருந்தது. யாழ்ப்பாணச் சமய நிலை, நல்லூர் கந்தசுவாமி கோயில் முதலிய துண்டுப்பிரசுரங்கள் வாயிலாக நாவலர் அக்காலச் சமய இழிவுகளை மிகவும் விரிவாகக் காட்டியுள்ளார்.

(11) இவற்றுக்கும் மேலாக அந்நிய சமயமான கிறிஸ்துவத்தின் ஊடுருவலும் சகிக்கவியலாத அளவிற்கு மிகுந்து காணப்பட்டது. பாதிரிமார் சைவசமயத்தைக் கேலிசெய்தும் கண்டித்தும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டனர். தங்கள் கல்வி நிலையங்களுக்குக் கற்பதற்கென வந்த இளம்பிள்ளைகளுக்குத் தமது சமயத்தின் மேன்மைகளை எடுத்துரைத்து அவர்களைத் தமது சமயத்திற் சேர ஆசைகாட்டினர். அவ்வாறு சமயம் மாறியவர்களுக்கு உத்தியோகம் அரசிடமிருந்து பெற்று வழங்கியும் ஊக்குவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றையெல்லாம் கண்டு ஆற்றாமையும் சீற்றமும் கொண்ட நாவலர் பாதிரிமாரின் கண்டனப் பிரசுரங்களை எதிர்த்துத் தாமும் பிரசுரங்கள் வெளியிட்டார். அவற்றின்மூலம் கிறிஸ்தவத்தின் குறையும் சைவத்தின் குறையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டன. தம்மிலும் மூத்தோரையும் அரவணைத்துச் சைவ உண்மைகளை அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் பிறசமயம் சாராது காத்தார். சைவப்பிரசாரங்கள் மூலம் படிப்பறிவற்ற பாமரரையும் ஒழுக்கங் கெட்டவர்களையும் மனந்திருந்தி நல்ல சைவர்களாய் வாழ வழிகாட்டினார். நாவலரது கண்டனங்களும் அறிவாற்றல்களும் கிறிஸ்தவ மிஷனறிகளின் ஆயுதங்களை மழுங்கடிக்க வைத்ததோடு சைவமக்களையும் பிறசமயம் சாராது காத்தமையும் சிறப்பாக எடுத்துக்கூற வேண்டுவனவாகும்.

(111) சைவசமயம் வளர்ச்சிகாணவேண்டுமாயின் சைவச் சிறார்களைச் சைவசமய, கலாசார சூழலிலே கற்பிப்பதே சிறந்த வழியென நாவலர் உணர்ந்தார். கிறிஸ்தவ மிஷனறிகளின் சூழலிலே கற்கும் பிள்ளைகள் சமயத்தாலும் கலாசாரத்தாலும் அந்நியராய்ப் போவது அவருக்குப் பெருங் கவலை அளித்தது. இதிலிருந்து அவர்களை விடுவிக்கத் தாமே பாடசாலை தொடக்கினார். 1848 இல் வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவினார். ஆங்கிலக் கல்வியளிக்க 1860 இல் ஆங்கிலப் பாடசாலை ஆரம்பித்தபோதிலும் பொருளாதார வளம்போதாமையால் அது இடையில் கைவிடப்பட்டது.

கிறிஸ்தவரின் தந்திர உத்தியையே தாமும் கையாண்டு பிரசங்கங்கள் நிகழ்த்தியதோடு நின்றுவிடவில்லை. அவர்களின் வழியிலேயே சைவ வினாவிடைகள்(முதலாம், இரண்டாம் புத்தகங்கள்), பெரியபுராண, திருவிளையாடற்புராண வசனங்கள், முதலாம், நான்காம் பாலபாடங்கள் முதலாம் நூல்களை எழுதி அவற்றைப் பாட நூல்களாகப் பயன்படச்செய்து மாணவருக்குச் சைவ உணர்வினை நாவலர் ஊட்டியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(1V) மேலே காட்டிய பாடசாலை நிறுவனம், பாடநூலாக்கம் என்பவற்றோடு தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும் நாவலர் விரிவான தொண்டாற்றினார், சைவம், தமிழ் இரண்டிலும் ஆழமான கல்வியை மாணவருக்கு வழங்கிய நல்லாசானாய்த் திகழ்ந்த அவரின் மாணவ பரம்பரை இன்றுவரை இந்நாட்டில் மட்டுமின்றித் தமிழகத்திலும் விளங்கி அறிவொளி பரப்பி வருவது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் வசன நடையைச் செப்பம்செய்து வசனநடை கைவந்த வல்லாளராயும் விளங்கியவர் நாவலர். கண்டனப்பிரசுரங்கள், புராண வசனங்கள், பாடநூல்கள் என்பவற்றில் அவர் கையாண்ட வசனநடை நிகரற்றதென்றே கூறலாம். திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணம் முதலாம் நூல்களுக்கு உரை எழுதித் தாமொரு சிறந்த உரையாசிரியர் என்பதை புலப்படுத்தியுள்ளதோடு, பிழையற்ற நூற்பிரசுரிப்பாளராயும் அவர் விளங்கினார். திருக்குறள் – பரிமேலழகர் உரை, திருக்கோவையார்உரை, தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனாவரையருரை முதலாம் நூல்கள் அவரால் ஆராய்ந்து வெளியிடப்பட்ட நூல்களாகும். தமிழ், சைவசமயக் கல்வித்துறைகளிலே நாவலரின் பங்களிப்பு மகத்தானது. அவரின் இலக்கணச் சுருக்கம் 19 ஆம் நூற்றாண்டில் வெளியான மிகச்சிறந்த இலக்கண நூலாக அறிஞர்களால் கொள்ளப்படுவதும், அவரின் நன்னூற்காண்டிகை உரை, சிறந்த இலக்கண உரை நூலாகக் கொள்ளப்படுவதும் அவர் தம் இலக்கண ஆற்றலுக்கு எடுத்துக்காட்டுகளாகும். தொகுத்துச் சொல்வதாயின் நாவலர் நமது கற்பித்தலாலும் நூலாக்கத்தாலும் ஆற்றிய கல்வித்தொண்டு எம்மால் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியதேயாம்.

**14** (1) வேதகாலத்தின் பின் புராணங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள் தோன்றியதைத் தொடர்ந்து தெய்வங்களுக்கு விக்கிரகங்கள் அமைத்து வழிபடும் முறைமை அறிமுகமாயிற்று, (சிந்துவெளிக்காலத்தில் உருவ வழிபாடு நிலவியது உண்மையே, ஆனால் பின் வேதகாலத்தில் உருவ வழிபாடு இருக்கவில்லை.) இராஜாராம் மோஹன்ராய் பல தெய்வக் கோட்பாட்டுக்கு எதிரானவராயும் ஒரு தெய்வத்தையே பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவதில் நம்பிக்கையுடையவராயும் இருந்ததோடு, உருவவழிபாட்டையும் மூடப்பழக்கம் என்று வெறுத்தார். இஸ்லாமியச் செல்வாக்கும் (மத்ரசாவில் ஆரம்பக்கல்வி பெற்றவர் இராஜாராம் மோகன்ராய்) உபநிடதங்களை ஆழமாகக் கற்ற அறிவும் அவர் இம்முடிவக்கு வரக்காரணங்களாயின எனலாம். பொதுமண்டபத்திலே உபநிடதத்திலிருந்து சில பகுதிகளை வாசித்து உருவமற்ற பரம்பொருளை வழிபட வேண்டும் என்பதே அவர் இந்துசமயத்தில் அறிமுகம்செய்த முறைமையாகும்.

(11) தாம் வகுத்துக்கொண்ட வழிபாட்டுக்கொள்கையையும் பிற இந்து சமய சீர்திருத்தக்கொள்கைகளையும் நடைமுறைப்படுத்த 'பிரமசாமஜம்' என்பதோர் நிறுவனத்தை அவர் உருவாக்கினார். தமது முப்பதாவது வயதில் ஆங்கிலத்தைக் கற்றுத்தேர்ந்த அவர், முன்னரே சமஸ்கிருதம், வங்காளம், பாரசீகம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தமையால் தமது சமயக் கருத்துக்களையும் சீர்திருத்தக் கோட்பாடுகளையும் கட்டுரைகளாயும் நூல்வடிவாயும் வங்காளத்திலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டமை அவரின் பணிகளிற் குறிப்பிடத்தக்கதாகும். எல்லாச்சமயங்களின் குறிக்கோள்களும் ஒன்றே என்ற சமரச ஞானம் கைவரப்பெற்றவராய் விளங்கிய போதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவம், இஸ்லாம், தாந்திரிகம் முதலான சமயங்களைச் சேர்ந்தோர் இந்துசமயக்கோட்பாடுகளைக் கண்டித்தபோது அது பொறாது அச்சமயவாதிகளை எதிர்த்து வாதம்செய்து சொற்பொழிவுகள் ஆற்றியமையும் அவரின் பணிகளில் மற்றுமொரு முக்கியமானதாகும். கணவர் இறந்தால் அவர்களோடு உடன்கட்டை ஏறும் 'சதி' என்ற கொடிய வழக்கத்தினை எதிர்த்து இங்கிலாந்து வரை சென்று நாடாளுமன்றத்தவருக்கு எடுத்துரைத்தமையும் குறிப்பிடத்தக்கதோர் பணியேயாம்.

(111) மேற்குறித்த 'சதி' என்ற உடன்கட்டை ஏறும் மூடவழக்கம், இந்துப்பெண்களின் வாழ்வினைப் பெருமளவு பாதித்தது என்பதற்கையமில்லை. பொதுவாகப் பெண்களை அடிமை நிலைக்குத் தள்ளி வைத்து அவர்களின் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் துன்பத்தைப் பெரும் பாரமாக ஏற்றிவைத்து இந்து சமுதாயம் அவர்களுக்கு மரணத்தையும் பரிசாக வழங்கியதை ராயினால் சகிக்க முடியவில்லை. இவர் 1818 ஆம் ஆண்டில் எடுத்த தீவிர நடவடிக்கையின் பயனாய் 1829 ஆம் ஆண்டில் ஆளுகையிலிருந்த வில்லியம் பென்டிங் பிரபு உடன் கட்டை ஏறுதலைச் சட்ட மூலம் தடுத்துப் பல்லாயிரக்கணக்கான பெண்களின் உயிரையும் வாழ்க்கையையும் "காத்தார்" என்று மூதறிஞர் க.சி குலரத்தினம் தமது 'இந்துநாகரிகம் முதலாம் பகுதி' என்ற நூலிலே கூறியுள்ளார்.

(1V) ராயின் பிரமசமாஜத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர் வரிசையிலே அக்காலத்து வங்கப்பேரறிஞர், சமூகசேவையாளர் இடம் பெற்றனர், வங்க மகாகவி இரவீந்திரநாத்தாகூரின் தந்தை மஹரிஷி தேவேந்திரநாத்தாகூர், ராயின் மரணத்தின்பின் சமாஜம் பிளவுற்றவரை சமாஜத்தின் தலைவராய் விளங்கினார். பண்டித இராமச்சந்திர வாகீஸ் பிரம சமாஜத்தின் குறிப்பிடத்தக்க உறுப்பினராய் விளங்கி உபநிடதங்களுக்கு வியாக்கியானம் வழங்கினார். இளைஞரும் பல முற்போக்குக் கருத்துக்கள் கொண்டவருமான அக்ஷய்குமார் பிரமசமாஜ வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர் எனினும் இவர், ராயின் மரணத்திற்குப் பின்பு சமாஜத்துடன் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து விலகவேண்டியவரானார்.

15.

(1) வங்காளத்திலே ஹுக்ளி மாவட்டத்தில் காமர்புகூர் என்ற சிற்றூரிலே குடிராம்சட்டர்ஜி என்ற கோயில் அர்ச்சகருக்கும் சந்திராதேவி என்ற அம்மையாருக்கும் புதல்வராய் அவதரித்த கதாதரர் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்ட ஸ்ரீஇராமகிருஷ்ணர் மற்றைய ஞானிகளுக்குக் கிடைக்காத பெரும் தனித்துவம் ஒன்றினைத் தமது சிறுபராயத்திலே பெற்றிருந்தார். அவருடைய உள்ளமானது எந்தப் பொருளிலே சென்று பதிகின்றதோ அப்பொருளாகவே தம்மைப் பாவிப்பதோடு அதன் மயமாகவே மாறிவிடும் இயல்புதான் அந்த அசாதாரணமான தனித்துவமாகும். உதாரணமாகத் தமது எட்டாவது வயதிலே நாடகமொன்றிலே சிவனாக நடிக்க வேடமிட்டவர். தாம் நடிப்பது நாடகம் என்பதையே மறந்து சிவனாகவே பாவித்து அந்நிலையில் ஏகாக்கிர சித்தத்தோடு விளங்கியதைக் கூறலாம். பின்னாள் அநுமான், கண்ணன், சீதை முதலானவர்களாய்த் தம்மைப்பாவித்த போதிலும் இதே இயல்பில் அவர் பலநாள்கள் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. ஞானிகள் ஆழ்ந்த யோகசமாதி நிலையில் அடைதலாகிய அந்த நிலை இராமகிருஷ்ணருக்கு மிகச்சிறு வயதிலேயே மிக எளிதாக ஏற்பட்டதிலிருந்து அவரின் அதிபக்குவ நிலை நன்கு புலனாகின்றது.

(11) பிற்காலத்தில் இத்தகைய யோகசமாதியில் ஆழ்ந்துபோய்த் தம்முன்னேயே பரம்பொருளாகிய மகாசக்தியைத் தரிசிப்பதும் அதனால் உண்டாகும் தெய்வானுபவமும் அவருக்குக் கைகூடின. ஆனால் அவர் சித்தர்கள் போல எவ்வித அற்புதங்களைச் செய்வதிலும் ஈடுபட்டவரல்லர். ஏட்டுக்கல்வியறிவு அதிகம் பெறாத சாதாரணரான அவர் வேத உபநிஷத தத்துவங்களையெல்லாம் ஓதாதுணர்ந்து மிக எளிமையாகத் தம் சீடர்களுக்கு விளக்கினார்; உருவகக் கதைகளின் வாயிலாக ஆழ்ந்த உண்மைகளைப் போதித்தார். மகாவிவேகமும், கல்வித்தேர்ச்சியும், நம்பிக்கையீனமும் கொண்டு தம்மை அணுகிக் கடவுளைக் காட்டுமாறு கேட்ட நரேந்திரர் (விவேகானந்தர்) என்ற இளைஞரை அவரது நெஞ்சிலே தமது கையை வைத்ததன் மூலம் நேரடிக் கடவுள் அனுபவத்தினை அவர் பெற ஸ்ரீராமகிருஷ்ணர் செய்தார் என்றால், அவரின் ஆன்மீக சாதனை எத்தகையதாய் இருந்திருத்தல் வேண்டும் என்பது சொல்லாமலே தெரியவரும்.

(111) உலகம் அனைத்துமே சக்தியின் தோற்றம் என்ற ஞானத்தினை அடைந்திருந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர். தமையனும் தாயும் வற்புறுத்தி வேண்டியதால் தம்மிலும் பதினெட்டு வயது இளைய (இராமகிருஷ்ணருக்கு வயது 23 சாரதாமணித்தேவிக்கு 5 வயது) சாரதாமணியை அவர் மணந்தார். ஆனால் அவர் தம் மனைவியைத் தாரமாகக் கருதியதில்லை. அகிலலோக மாதாவாகவே கண்டார். அவ்வாறே அவரைப் பூசை செய்து வழிபடவும் தவறவில்லை. இந்த வழிபாடும் ஆன்மஞானமும் சாரதாமணிதேவியிலே தொற்றிக் கொண்டு அவர் விவேகானந்தர் முதலிய சீடர்களுக்குத் தாயாகவே விளங்கி அவர்களை வழிநடத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(IV) இந்துவாகப் பிறந்தும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு தெய்வமாகத் தம்மைப் பாவித்து அத் தெய்வமாகவே மாறிநின்று வழிபட்டவர் ஸ்ரீஇராமகிருஷ்ணபரஹம்சர். ஆனால் அவர் "ஏகம் சத் விப்ரா பஃதாவதந்தி" (உள்ள பொருள் ஒன்றே, ஞானிகள் அதனைப் பல பெயரால் அழைக்கின்றனர்) என்ற தேவமகா வாக்கியத்தைத் ஓதாதுணர்ந்து அந்த ஞானத்திலேயே தலைநின்றவர் என்பதை மறுத்தற்கில்லை. அதாவது அவர் ஏகதெய்வக் கோட்பாட்டை முற்றாக ஏற்றவர் என்பதாகும். இவ்வுண்மையைப் பிறர்க்கு உணர்த்த அவர் கையாண்ட எளிமையான உவமை பின்வருவாறு.

**"தண்ணீரை ஹிந்தியில் பாணி என்பர், சமஸ்கிருதத்தில் அதற்குப் பெயர் வர்ஷம். ஆங்கிலத்தில் அது வாட்டர் எனப்படுகின்றது. இவ்வாறு பல பெயர்களால் அழைத்தாலும் தண்ணீர் ஒன்றே. இது போன்றே பரம்பொருளைப் பல மதத்தவரும் பல பெயர்களால் அழைத்தாலும் அது ஒன்றேயாகும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

**01.** இந்துவெளியின் குறிப்பிடத்தக்க பெருநகரங்கள் அரப்பா, மொகஞ்சதாரோ என்பனவாகும், சங்குதாரோ, தேனுதாரோ ஆகிய நகரங்களும் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. எனினும் அவை ஆய்விற்கு அதிக தகவல்கள் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அரப்பா, மொகஞ்சதாரோவில் நன்கு அரண்செய்யப்பட்ட கோட்டை அமைந்திருந்ததென்றும் அது சமயஞ் சார்ந்த தேவைக்கு பயன்பட்டிருக்கலாம் என்றும் பசாம் (வியத்தகு இந்தியா) கூறுகின்றார்.

"நகரங்களின் தெருக்களெல்லாம் ஒழுங்காகத் திட்டமிட்டமைக்கப்பட்டவை. அவை வளைவுகளின்றி நேராகவும் சராசரி 30 அடி அகலமுடையனவாயும் இருந்தன. இத்தெருக்களுக்குக் குறுக்கும் நெடுக்குமாக ஒழுங்கைகள் காணப்படுகின்றன. "நிறைகள் அளவைகள் ஆகியவற்றிலும் செங்கற்களின் பருமனிலும் பெருநகரங்களின் தளக்கோலத்திலுமே கண்டிப்பான ஒரு சீர்மை போற்றப்பட்டுள்ளமையும் இப்பண்பாடு கட்டற்ற பல சமுதாயங்களைக் கொண்டிருந்தது என்னும் கருத்துக்கு மாறாக ஒரு முனைப்படுத்திய தனியரசொன்றை உடையதாயிருந்ததெனுங் கருத்தையே தருகின்றன."

(பசாம்–வியத்தகு இந்தியா பக்.19)

ஏறக்குறைய 950 மைல்கள் வரை ஒரே சீர்மையான நகரமைப்பு, ஒழுங்கு முறைமை நிலவியது என்பதை அறியும் போது கட்டமைப்புக்குலையாத ஒரே அரசின் கீழ் இந்துவெளி மக்கள் வாழ்க்கை நடத்தினர் என்ற உண்மை மேலும் உறுதியடைகின்றது. அரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களின் அமைப்பு முறைகளும் ஒரே திட்டத்தில் அமைந்திருப்பதைக் காணலாம்.

நகரங்களுக்கு மேற்கேயமைந்த அரண் 30 – 50 அடி உயரமும் ஏறக்குறைய 400–200 யார் பரப்பும் உடைய செவ்வக வடிவான ஒரு செயற்கை மேடையாகும். இதனைச்சூழ்ந்து மதில்கள் காவலாக அமைந்திருந்தன. அவற்றிற்குமேலே பொதுக்கட்டடங்கள் விளங்கின. நகரம் இவற்றிற்குக் கீழ்த்தரையில் அமைந்திருந்தது. நகரில் அமைந்த குடிமனைகளின் கட்டுமானத்திற்குச் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. நகரின் இரு புறங்களிலும் கழிவுநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டு அவற்றின் ஊடாகக்கழிவு நீர் வெளியேறிக் கடலிற்கலக்கும் ஒழுங்கு காணப்பட்டது.

வீடுகள் தோறும் குளிப்பிடங்களும், பொதுக்குளிப்பிடங்களும் அமைந்திருந்தன. மாடிக்கட்டிடங்களிலிருந்து கழிவுகளை வெளியேற்றும் களிமண்ணாலான குழாய்களும் காணப்பட்டன. குழாய்கள் மூலம் வெளியேற்றப்பட்ட அவை வீதியிலுள்ள கழிநீர்க் கால்வாயுடன் கூடின. இவற்றை நோக்குகையில் மக்களின் சுகாதாரப்பழக்க வழக்கத்திற்குச் சான்றுகளே இவை எனக் கொள்ளலாம்.

இந்துவெளி மக்களின் பிரதான தொழிலாய் விளங்கியது உழவுத்தொழிலே ஆகும். இவர்கள் உழவு மூலம் பெறப்பட்ட கோதுமை, வாற்கோதுமை முதலிய தானியங்களை உணவுக்குப் பயன்படுத்தியதோடு எஞ்சியவற்றை ஏற்றுமதி செய்யும் வணிகத்திலும் ஈடுபட்டனர் எனத் தெரிகிறது. அரப்பா நகரிலே தானியக்களஞ்சியமாக பயன்பட்ட பெரியதொரு கட்டடம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இவ்வுண்மை புலனாகின்றது. சிறுகப்பல்களின் சித்திரங்களைக் கொண்டு கடல்வணிகமும் இங்கு இடம் பெற்றதாக ஊகிக்கப்படுகின்றது.

செங்கல், மரம் முதலியவை கொண்டு கட்டடங்கள் கட்டும் கலையிலும் இந்துவெளி மக்கள் சிறந்திருந்தனர் என்பதற்கு சேர் ஜோன் மார்ஷலின் பின்வருங்கூற்று எடுத்துக்காட்டு.

"முதன்முதல் (அரப்பாவின்) கட்டடச் சிதைவுகளை நான் பார்த்த பொழுது அவை வரலாற்றுக்கு முற்பட்டவை என என்னால் நம்பமுடியவில்லை. புராதன (கட்டடக்) கலைகள் பற்றிய கருதுகோள்கள் அனைத்தையம் அவை தலைகீழாக மாற்றிவிட்டன. புராதன உலகில், கிரேக்க நாட்டின் கட்டடக் கலை நிலவிய காலத்திலேதான் இவற்றையொத்த மாதிரிகளைக் காணமுடிகிறது" எனினும் இந்துவெளிக்கட்டடங்களின் பயன்பாட்டமிசமே மேலோங்கி, கலையமிசம் சற்றே குறைந்திருப்பதாகவே பல ஆய்வாளர் கொள்வதும் குறிப்பிடத்தக்கதே. தூண்கள் யாவும் சதுரமானவையாக (சுமேரியக் கட்டடத்தூண்கள் உருளை வடிவானவை) அமைந்துள்ளன என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விற்கு வேண்டிய அனைத்துத் தொழில்களுமே சிந்துவெளியில் இடம்பெற்றதாய் அறிகின்றோம். சிறப்பாக மட்பாண்டத் தொழிலில், செங்கல் உருவாக்கும் தொழிலில், தலைசிறந்த தொழில்நுட்பத்தைக் காணமுடிகின்றது. உருவச்சிற்பங்கள் அமைப்பதிலும் அவற்றில் எதார்த்தத்தைப் பேணுவதிலும் அக்காலச்சிற்பிகள் தலைசிறந்து விளங்கினர் எனலாம்.

பருத்தி, கம்பளி கொண்டு நூல்நூற்றுத் துணிகளை நெசவு செய்தல், ஆடைகள் தயாரித்தல், கனத்த கைவளைகள், அட்டிகைகள், ஆரங்கள், மேகலைகள், மூக்குத்திகள் என்பனவற்றைப் பொன்னாலும் வெள்ளியாலும் செம்பாலும் செய்யும் தொழிலிலும் அக்காலத்தவர் ஈடுபட்டிருந்தனர். இந்நகைகளிலும் கலைத்திறனிலும் தொழிலிலும் பயன்பாட்டம்சமே முதன்மை பெற்றுள்ளன என்பர். ஆனால் மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட சித்திரங்கள் சிறந்த கலைநுணுக்கம் பொருந்தியவை. குழந்தைகள் விளையாடுவதற்கான சக்கரவண்டிகள், தலையாட்டும் குரங்குப் பொம்மை, சிறு நாற்காலிகள் என அக்காலத்திலே தச்சுத் தொழிலும் இடம் பெற்றிருந்தமைக்குச் சான்றுகளாகும். ஊசிகள், சீப்புகள் எலும்புகளில் இருந்தோ விலங்குக் கொம்புகளில் இருந்தோ செய்து பயன்படுத்தப்பட்டன. கோடரிகள், கத்திகள், உளிகள், அரிவாள்கள், தூண்டில்கள் செய்வதாகிய கொற்றொழிலும் அக்காலத்தில் இடம்பெற்றதாகத் தெரிகின்றது.

02. இருக்குவேதம் தோன்றிய காலத்தை முன்வேதகாலம் என்றும், மற்றைய வேதங்களும் உபநிடதங்களும் தோன்றிய காலத்தைப் பின்வேதகாலம் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் இருபிரிவுகளாகப் பிரித்து விளக்குவது வழக்கம். இவ்வழக்கத்திற்கமைவாக முன் வேதகால அரசியல்நிலை, பின்வேதகால அரசியல் நிலை என இருதலைப்புக்களில் அக்கால அரசியல் நிலை விளக்கப்படுகின்றது.

### (அ) <u>முன்வேதகால அரசியல் நிலை:</u>

இந்தியாவினுள் ஆரியர்கள் சனக்குழுக்களாகப் பிரிந்துவந்து குடியேறினர். இச்சனக்குழு ஒவ்வொன்றிற்கும் வீரமும் ஆற்றலும் பொருந்திய தலைவன் அமைந்து அவற்றை அவை குடியேறிய பகுதிகளில் நிலைப்படுத்தி ஆட்சி புரியலானான். இவ்வாறு அரசனானவனின் சந்ததியினர் ஒருவர் பின் ஒருவராய் இக்குழுக்களின் ஆட்சிக்குப் பொறுப்பேற்றனர். இவர்களைப்பற்றிய செய்திகள் இருக்கு வேதத்தில் ஆங்காங்கு காணப்படுகின்றன.

இருக்கு வேத அரசர்களுள்ளே பிரசித்தி பெற்றவன் சுதாஸ் ஆவன். இவன் சரஸ்வதி யாற்றிற்கும் யமுனை நதிக்கும் இடைப்பட்ட நிலத்திற் குடியேறிய பரத இனத்தைச் சேர்ந்தவன், த்ரிட்சு என்னும் இனத்தோடு உறவு பூண்டவன். இவன் தந்தை பிஜவனன். இவன் தன்காலத்தில் நிலவிய பிற இனக்குழுக்களாகிய புரு, துர்வாச, யது, அநு, திருஹ்யு, அலின, பக்தா, பலான, ஷிவ, விஷானின் ஆகியவற்றின் அரசர்களோடும் நிகழ்த்திய போர் <u>தசராக்ரு</u> எனப்படும். பெயரளவில் தெரிந்த இவர்களோடு முன்வேதகாலத்தில் மற்றும் சில அரசர்கள் பற்றியும் ஆங்காங்குத் தெளிவற்ற சில செய்திகள் காணப்படுகின்றன. அரசுருவாக்கத்தின் தொடக்க நிலைக்கு இச்செய்திகள் ஆதாரங்களாகும்.

மன்னன் 'இராஜன்' எனப்பட்டான், அவனுடைய ஆள்நிலம் 'இராஷ்டிரம்' எனப்பட்டது. 'பகைவரை அழிப்போன்' என்று இராஜனின் மகிமை குறிப்பிடப்பட்டது. இராஜன் என்ற சொல் (மக்களை) மகிழ்விப்போன் என்னும்பொருள் தரும். ரஞ்சயதி என்ற அடிச்சொல்லில் இருந்து தோன்றியது என்பர். போர் செய்தல் மூலம் மக்களைக் காத்து அவர்களின் நல்வாழ்விற்கு வழிஅமைப்பனவாக அரசன் கருதப்பட்டான். இவனுக்கு ஆரம்பத்தில் வரையறை அற்ற அதிகாரங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. "இராஜன் மக்களின் அங்கீகாரத்தைப் பெறல் வேண்டும். என்று இருக்கு வேதம் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். இக்கால அரசனுக்கு சாம்ராட் (பேரரசன்) என்ற பெயர் வழங்கிய போதிலும் அப்பெயர் பிற்காலத்திலேயே மாமன்னனைக் குறிப்பதாக அமைகின்றது. ஏனெனில் இருக்கு வேதகாலத்தில் மன்னனின் ஆள்நிலம் சிறிய அளவிலேயே இருந்தது.

மக்களைக் காக்கும் திறனும், வெல்லும் வீரமும் பொருந்தியவனே உண்மையான இராஜன் எனக்கொள்ளப்பட்டான். இத்தகைய அரசன் சாதாரண மக்களில் இருந்து தன்னைத் தனது ஆடம்பர உடைகளாலும் தனது மாளிகை வாசத்தினாலும் வேறுபடுத்திக்கொண்டான். மக்களின் நடத்தைகளை அறிதற்கு இவனுக்கு உளவாளிகள் இருந்தனர். சமயச் சடங்குகளை நடத்தி இவனை ஆசீர்வதித்து ஆட்சியில் நீடித்து இருக்கப் புரோகிதர் குழு ஒன்றும் இருந்தது. புரோகிதர்களின் தலைவர் மன்னனது நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கும் தகுதியையும் பெற்றிருந்தமையால் இவருக்கு(அரசவையில்) பெருமதிப்பிருந்தது. இவருக்கு அடுத்தபடியில் படைத்தளபதி இருந்தான். இவன் சேனானி என அழைக்கப்பட்டான். நாட்டின் காப்புக்கெனக் கோட்டை (புரம்) இருந்தது. படைப்பிரிவுகள் சார்த்தவை, விராட் எனப்பட்டன. இவற்றின் தலைவன் 'விராஜபதி' எனப்பட்டான். கிராமத் தலைவன் கிராமணி எனப்பட்டான். அரசனுக்கு ஆட்சி நிருவாகத்தில் ஆலோசனை வழங்க, சமிதி என்பதொன்று அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசரும், பிரமுகர்களும் சமிதியில் இடம்பெற்றனர். சபா என்ற வேறோர் ஆலோசனைக்குழுவும் நாட்டின் மேல்தட்டு வர்க்கத்தினை அங்கத்தவர்களாய்க் கொண்டு இயங்கியது. பொதுசனச் செயற்பாடுகளுக்கும், நீதி சார்ந்த விசாரணைகள் தீர்ப்புக்களுக்கும் சபாவே பொறுப்பாயிருந்தது.

இக்காலப்பிரிவில் சபா, கணம் என்ற ஆட்சி நிறுவனங்களும் நிலவியதாக அறிகின்றோம். நாட்டின் மூத்தோர், சான்றோராயுள்ள சிலரின் ஆட்சி நிறுவனங்களே சபை, கணம் என்பன, இவை மக்களால் தெரியப்படும் ஒருவகைச் சனநாயகப் பண்பு கொண்டவையாக மன்னனாட்சியினின்றும் வேறுபட்டவையாக ஆட்சி நடத்தின என்று கூறப்படுகின்றது.

## ஆ) பின்வேதகால அரசியல் நிலை

இக்காலத்தில் அரசர்களின் ஆற்றலும் அதிகாரங்களும் முன்னரிலும் விரிவடைகின்றன. சிற்றரசுகள் நிலவிய காலம் மாறிப் பேரரசுகள் உருக்கொள்ளும் சூழ்நிலை தோன்றுகின்றது. நால்வகை வருணக்கோட்பாடுகள் முன்னரிலும் உறுதியடைந்து அரசன் க்ஷத்திரியனாகி பாரம்பரிய அரசுரிமையும், கடமைகளும் கொண்டவனாக வரையறை செய்யப்படுகின்றான். முதல் பிராமணர் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரியவர்களாயிருந்தபோதிலும் க்ஷத்திரியனான இராஜன் சில சந்தர்ப்பங்களில் அவர்களின் மேலாண்மையைக் கேள்விக்கு உள்ளாக்கி அவர்களைக் கட்டுப்படுத்தும் நிலைக்கு உயர்கின்றான். "பிராமணரை விருப்புக்கேற்ப அவர்களின் பதவியினின்றும் நீக்கலாம் "என்பதுவரை அரசர் சென்றனர். அரசர்களின் ஆட்சித்தேவைகளுக்கும் சொந்தத்தேவைகளுக்குமாக மக்களிடமிருந்து பலி, சுல்கம், பாகம் என்ற பெயர்களால் வரிகள் அறவிடப்படுகின்றன. அரசனின் கடமைகள் இராணுவ நிர்வாகம், நீதிநிருவாகம், சட்ட ஆக்கம், மக்கள் காப்பு என விரிவடைகின்றன. இவ்விரிவுகளுக்கேற்ப அரச அலுவலர் தொகையும் முன்னரிலும் அதிகரிக்கின்றது. அரசன் தனது ஆட்சிப் பரம்பல், அதிகாரமேட்டிமை என்பவற்றிற்கேற்ப 'சர்வஜனீன ராஜா' (உலக மக்களின் அரசன்), சர்வபூமி (பூமி முழுவதையும் உடையோன்) என்ற விருதுகளைத் தனக்கு உரித்தாக்குகின்றான். தனது அதிகாரத்தை நிலைநிறுத்தவும், அதன் மேன்மையைப் புலப்படுத்தவும், அஸ்வமேதம், ஹிரண்ய கர்ப்பம், இராசசூயம் முதலாம் வேள்விகளை நடத்தியதால் அவ்வேள்விக்கிரியைகளை நடத்தும் புரோகிதர்களது மகிமையும் மேலோங்குகின்றது.

இக்கால ஆட்சியியலில் முதன்மைபெறும் அரச அலுவலர் சூதன், கிராமணி என்போர். இவர்களுள்ளும் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தவன் கிராமணியே. அரசரை உருவாக்குவோன் எனப்பொருள்படும் 'ராஜ்கிருத்' என அவன் குறிக்கப்படுவதிலிருந்து அவனது மேலாண்மை தெரியவருவதாகும். சபாவும், சமிதியும் இக்காலத்திலும் முக்கிய ஆட்சி உறுப்புக்களாய் விளங்கின. கொடுங்கோல் ஆட்சி நடத்தி மக்களுக்குப்பேரிடர் புரியும் அரசர்களையும், தீய அதிகாரிகளையும் பதவிநீக்கம் செய்யக்கூடிய உரிமையும் செல்வாக்கும் இச்சபாவிற்கும் சமிதிக்கும் இருந்தன.

அரசின் ஆதிக்கப்படர்ச்சிக்கு ஏற்ப நிருவாக விரிவாக்கம் ஏற்படுகின்றது. எனவே இந்நிருவாகப்பிரிவுகளுக்குப் பொறுப்பாளர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1. | கருவூலகர் | – நிதியமைச்சர் போன்றோர் |
| 2. | சூதன் | – வரிதொகுப்போன் |
| 3. | க்ஷத்ரி | – அரண்மனைக் காரியாதிகாரி |
| 4. | சூதன் | – தேர்ச்சாரதி அல்லது அரச தூதுவன் |
| 5. | அக்சுஷவாபன் | – சூதாட்டத்துறை அத்தியட்சகன் |
| 6. | கோவிகர்த்தனன் | – அரசனின் வேட்டைக் கூட்டாளி |
| 7. | பாலகலன் | – செய்தியுரைப்போன் |

அரசர்கள் பரிபூரண மேலாதிக்கத்தை அவாவியபோதிலும் அதற்கும் சில தடைகள் இருந்தன. அரசன் முடிசூடும்போது அரசுத் தூய்மைச் சடங்கு என்ற ஒரு கிரியை இடம்பெறும். அக்கிரியையின்போது அரசன் தனது அரியணையிலிருந்து இறங்கிவந்து,

1. " புரோகிதருக்குக் குற்றம் இழையேன் "
2. " பிராமணரைக் காப்பதில் விசேட கவனம் சேலுத்துவேன் "

என்ற சத்தியப்பிரமாணத்தைச் செய்ய வேண்டியிருந்தது.

இவ்வாறு வேதகால அரசியலானது ஆட்சியாளனின் எதேச்சாதிகாரப் போக்கினை ஓரளவு கட்டுப்படுத்தி அவனை மக்களின் விருப்பினை மனங்கொண்டு ஆட்சி நடத்த வழி செய்தது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) புராதன காலத்தில் இந்துமக்களின் கல்வி குருகுலவாச முறைமையில் நிகழ்ந்தது. அக்காலக் கல்வியின் முதலும் முடிவுமான நோக்கம் ஆன்மிகஞானம் பெறுவதன்மூலம் முடிவற்ற இன்பமாகிய வீடுபேற்றினை அடைவதையே பெரும்பாலும் தனது இலக்காகக் கொண்டிருந்தது எனலாம்.

"எதனைத்தெரிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்தவனாக இருக்கலாம்? ஐயனே! அதனை அருளுக எனக்கே." என்னும் முண்டக உபநிடதம் அக்கால மாணாக்கன் ஒருவனின் கல்வி இலட்சியத்தினை நன்கு புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

"அசத்திலிருந்து சத்தினை நோக்கி என்னைக்கொண்டு செல்க.
அறியாமையில் இருந்து அறிவை நோக்கி என்னை அழைத்துச்செல்க
மரணத்திலிருந்து சாவாமையை நோக்கி என்னை வழிப்படுத்துக."
என்னும் பிருஹதாரணியக உபநிடதப் பிரார்த்தனையும் இதனையே உறுதி செய்கின்றது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாஅள் தொழாஅ ரெனின்"
என்ற திருக்குறட்பொன்மொழி வகுத்துள்ள இலட்சியமே புராதன இந்து மக்களின் கல்விக்கோட்பாடாகும் என்பதற்கு ஐயம் இல்லை. தமது மகனான சுவேதகேது குருவினை அடுத்து வேத வேதாங்கங்களையெல்லாம் கசடறக் கற்றுத் திரும்பியவிடத்தும் அவன் அறியவேண்டியதான பிரமஞானம் அவனுக்குக் கைவரவில்லையே என்று கவலையுற்ற உட்டாலகர், அவனுக்கு அதனைப்போதனை மூலமும் சாதனை மூலமும் உபதேசித்த பாங்கும் புராதன கால இந்துக்களின் கல்வி நோக்கினை நன்கு புலப்படுத்துவதாகும்.

இத்தகைய உன்னதமான கல்வியைப் பெறுவதற்கு ஒருவன் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டுமெனில் அவன் பிரமசரியத்தை அதற்குரிய ஒழுக்கந்தவறாது கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. புலனடக்கம், எளிமை, பொருட்பற்றின்மை, பிச்சையேற்றுண்ணல், குருவை நாடியடைந்து அவரை வணங்கி வழிபட்டு அவர் பணிப்பையெல்லாம் தலைமேற்கொண்டு நடந்து அவரின் பூரண அன்பிற்கு உரியவனாதல் ஆகிய நெறிகளைத் திரிகரணசுத்தியோடு கடைப்பிடிப்பவனே உண்மையான மாணாக்கனாவான்.

இத்தகைய மாணாக்கனை நெறிப்படுத்தும் ஆசானாகிய குரு கல்வி அறிவு ஒழுக்கங்களிலே சிறந்தவராயும் மாணாக்கனைத் தமது புதல்வனாகவே கருதி அவன் மீது அன்பு செலுத்தி அவனது நலம், தீங்கு யாவற்றிலும் பங்கு கொள்பவராயும் இருத்தல் இன்றியமையாததாகும். இத்தகையவர் சாட்சாத் பரம்பொருளாகவே கணிக்கப்படுவார்.

"குருப் பிரம்மா குரு விஷ்ணு குருதேவோ மகேஸ்வரா:
குரு சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம" என்ற
சுலோகமானது குருவின் தகைமையை எடுத்துணர்த்தி அவருக்கு வணக்கம் செலுத்துவதையும் காணலாம்.

சீடனானவன் குருவை அடைந்து வணங்கித் தனது கோத்திரம் இன்னது என்பதை உரைத்து ('அபிவாதயே' கூறல் என்பர்), அவரின் வேள்விக்கான சமித்துக்களை (விறகுச்சுள்ளிகளை)க் காணிக்கையாக வழங்கி அவர் அநுமதித்தால் அவரது சீடனாகலாம் என்ற ஒருவிதி உபநிடதத்தின் மூலம் தெரியவருகின்றது. ஆனால் சத்தியகாமன் என்பான் ஏவல் மகளாகிய ஜாபாலா என்பவளின் மகனாகப்பிறந்து, தனது கோத்திரம் இன்னது என்று கூற முடியாதவனாய், ஆனால் தாயின் அறிவுரைப்படி தன்னைச் "சத்தியகாம ஜாபாலா என்ற பணிப்பெண்ணின் மகன்" என்று உண்மையை உரைத்ததால், மனநிறைவடைந்த கௌதமர் அவனைச்சீடனாக ஏற்றுக் குலம் கோத்திரத்திலும் சத்தியமே உயர்ந்தது என்ற உண்மையை எடுத்துக்காட்டியுள்ளார். எனவே 'சத்தியமே வெற்றி' தரும் என்பதை உளங்கொண்டு உண்மைவழி நின்று ஒழுக்கசீலனாய் எவன் விளங்குகின்றானோ அவனே உண்மையான மாணாக்கன், கற்றற்குத் தகுதியானவன் என்று அக்காலத்தவர் கொண்டனர்.

குருவின் இல்லம் சென்று அவருக்கும் அவர் மனைவியாகிய குருபத்தினிக்கும் பணிவிடை செய்து கற்கவேண்டியவற்றைக் கற்பதே அக்காலக் கல்வியின் முறைமை. எனினும் எடுத்த எடுப்பில் உடனடியாகவே கற்பித்தலைத் தொடங்காது கற்கவேண்டிய உன்னத தத்துவத்தினைக் கற்றற்குரிய தகுதிப்பாடு மாணாக்கனுக்கு எந்த அளவுக்கு உண்டு என்ற பரிசோதனையை அவனது நடை உடை பாவனைகளால் தீர ஆராய்ந்த பின்னரே குரு அவனுக்குக் கற்பித்தலை மேற்கொண்டார்.

குருகுலக்கல்வியில் மாணாக்கனது ஒழுக்கசீலமும் திறமுமே பெருமளவு கவனிக்கப்பட்டதேயன்றி அவனது சமூக அந்தஸ்து கவனிக்கப்படவில்லலை. குருவின்முன் அரசனின் மகனும் ஆண்டியின் மகனும் சமமாகவே கணிக்கப்பட்டனர். சாந்தீபமுனிவரின் ஆச்சிரமத்திலே ஸ்ரீகிருஷ்ணனும், ஏழைப்பார்ப்பனச்சிறுவனான குசேலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகக்கற்றனர். இருவரிலும் சாந்தீப முனிவர் ஒரேவகையான அன்பையே செலுத்தினார். சக்கரவர்த்தித் திருமக்களாயிருந்த இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கன் ஆகியோர் தமது அரண்மனையிலிருந்து கால்நடையாகச் சென்று வசிட்ட முனிவரின் ஆச்சிரமத்தில் அவரை வழிபட்டே கல்விகற்றனர்.

ஆனால் இம்முறை பாண்டவர், கௌரவரிடையே தலைகீழாக மாறுகின்றது. இவர்களுக்குப் போர்வித்தைகளைக் கற்பித்த கிருபாசாரியாரும், துரோணரும் அரண்மனை நாடிவருகின்றனர். பாண்டவ கௌரவரிடையே போட்டி பொறாமைக்கும், துரோணரிலே மாணாக்கரிடையே பாரபட்சமும் நிலவியதைக் காண்கின்றோம். தனுர்வேதமாகிய போர்க்கலையை அக்காலத்தில் அவற்றில் திறமைபடைத்த ஆசிரியர்கள் மாணாக்கரை நாடிச் சென்று கற்பித்தனர் போலும். எனினும் எந்தக் கலைசிறந்தது என்பதை இராமாயணம் மூலமும் அம்முறை தவறி மாணவரை நாடி ஆசிரியர் செல்லும் முறைமை தாழ்ந்தது என்பதைப் பாரதம் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

ஆன்மிகக்கலை குருகுலவாசம் மூலமும், போர்க்கலை அரண்மனை வாசம் மூலமாகவும், தொழிற்கலைகள் தந்தை மகற்கு அளிக்கும் குடும்பபரம்பரை மூலமாகவும் புராதன காலத்திலே இந்துக்களிடையே நிலவின எனக்கொள்ளலாம்.

04) பல்லவர் காலம் கி.பி. 600 தொடக்கம் கி.பி. 900 வரையானது. இக்காலத் தொடக்கத்தில் சமணமும் பௌத்தமும் தலையெடுத்தன. பல்லவ பாண்டிய மன்னர் அச்சமயங்களுக்கு ஆதரவளித்தனர். சமணரும் பௌத்தரும் சிறந்த அறிஞர்களாயும் மக்களை ஆதரித்து அவர்களுக்கு அன்னதானம், ஔடததானம் (மருந்து வழங்கல்), அபயதானம் (சமூகக் கொடுமைகளாலே புறக்கணிப்புக்கு உள்ளாகி அநாதைகளானோருக்கு அடைக்கலம் வழங்கல்) என்பவற்றை வழங்குவோராயும் இருந்ததால் மக்களும் அவர்களை நாடினர். அவர்கள் இலக்கண இலக்கிய நூல்கள் இயற்றித் தமிழுக்குத் தொண்டு புரிந்தமையும் அவர்களின் சமயங்கள் பிரபலமடையக் காரணங்களாய் அமைந்தன.

எனினும் அவர்கள் கடவுள் நம்பிக்கையற்றோராயோ, கடவுள் பற்றிய ஐயமுடையோராயோ விளங்கினர். உலக வாழ்க்கை நிலையற்றது எனப் பிரசாரம் செய்தனர். செல்வம் இளமையாகியவற்றில் பற்று வைத்தல் தகாது என்று வற்புறுத்தினர்; பெண்ணாசை பொல்லாதது என்று தூற்றினர். இவை காரணமாக வாழ்க்கையை வெறுப்பதும், துறவை நாடுவதும், கலைகளை அவை சிற்றின்பத்தை மிகுவிப்பன என்று உவர்ப்பதுமான துன்பியற் கொள்கை தலையெடுக்கலாயிற்று. பத்தி மார்க்கம் பின்தள்ளப்பட்டது. வேத சிவாகமங்கள் புறக்கணிப்புக்குள்ளாயின. விழாக்கள், பண்டிகைகள் தவிர்க்கப்பட்டன.

வையத்து வாழ்வாங்கு வாழல், இல்லறம் பேணுதல், மொழிப் பற்றுக்கொள்ளல், நலத்திலும் தீங்கிலும் இறைவனே அடைக்கலம் என்று கொண்டு அவனைப் பலவடிவங்களில் வழிபடல் முதலான அடிப்படையான சமய அமிசங்கள் புறக்கணிக்கப்படுவதும், விபூதி, உருத்திராட்சம், ஸ்ரீபஞ்சாட்சரம் முதலிய சமய சின்னங்கள் புறக்கணிப்புக்குள்ளாவதும் சமய குரவர்களின் மனங்களை நோகச் செய்தன. ஆழ்வார்களும் தமது பிரபத்தி நெறி புறக்கணிப்புக்குள்ளாவது கண்டு மனங்குமுறினர்.

இந்நிலையிலே பத்தி இயக்கம் தலை எடுக்கலாயிற்று. வைதிக சமயங்களுக்கெதிரான போர்க்கொடி தூக்கப்பட்டது. சமய குரவர்கள் மக்களிடையே இறைவனின் மகிமைகளை இசையமைத்துப்பாடியும், ஆலயங்கள் தோறும் சென்று அவ்வாலயத்தைச் சூழ்ந்துள்ள மக்களிடையே அவ்வாலயப் பெருமைகளைப் பதிகங்களாய்ப்பாடி இறையுணர்வையும், பிரதேச உணர்வையும் வளர்த்தும் வைதிக சமயப் பிரசாரத்திலே தீவிரமாக விளங்கினர்.

" இறைவன் எங்கோ வானத்தில் மறைந்திருக்கவில்லை. அவன் தானே வந்து எம்மைத் தலையளித்தாட்கொள்ளும் மகா கருணாநிதி, அவன் அடியவர்க்கு எளியன். அம்மையாய், அப்பனாய் ஒப்பரிய மாமனாய் மாமியாய் எல்லாம் அவனோடு உறவு கொள்ளலாம், பொய்மையாளரைப் பாடாது எந்தையாம் இறைவனைப் பாடினால் இம்மையிலே சோறும் கூறையும் கிட்டும். மறுமையிலும் இன்பம் அனுபவிக்கலாம். முடிவில் பேரின்பமாகிய முத்திப் பேற்றையும் பெறலாம்" என்றெல்லாம் மக்களிடையே நம்பிக்கையும் பத்தியுணர்வும் சமயகுரவர்களாலும், ஆழ்வார்களாலும் வளர்க்கப்பட்டன. தொண்டர் குலமே தொழுகுலம் என்றும்.

ஆவுரித்துக் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே

என்றும் அடியார்களிடையே சமத்துவம் பேசி, உயர்வு தாழ்வை அகற்றி அனைவரையும் பக்தி இயக்கம் ஒன்றுதிரட்டியது.

சமண பௌத்த சமய குருமார்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்த மன்னர்களின் அறியாமையை போக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைச் சிவசின்னங்களாலும் அற்புதங்களாலும் களைந்து, அவர்களை வைதிக சமயங்களுக்குத் திருப்பிய வகையிலும் பக்தி இயக்கத்தின் பணி பெரியதாகும். இன்பியற் கோட்பாட்டை அறிமுகம்செய்து, வறட்டுத்துறவையும் வாழ்வில் வெறுப்பையும் போக்கி, மக்களை உலகியல் வாழ்வில் வாழ்வாங்கு வாழ்ந்தே இறைவனை அடையலாம் என்ற தளராத நம்பிக்கையைச் சமயச்சான்றோர்கள் ஊட்டினர்.

இசை, நடனம் முதலாகிய அழகியற் கலைகளில் ஆர்வத்தை ஊட்டி, தமிழில் அபிமானத்தை ஏற்படுத்தி (நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன், 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்', 'ஞானத்தமிழ் புரிந்த நான்; 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்') அவை மூலமாகவும் பக்தி இயக்கத்திற்கு உறுதியான அடித்தளம் இடப்பட்டது.

இறைவன் திருமேனியழகு, அவனுக்குத் தொண்டுபுரியும் வழிவகை, அவன் அடியார்களுக்காக நிகழ்த்திய அற்புதங்கள் என்ற பலவற்றையும் அடிக்கடி தமது பாசுரங்கள் மூலமாக வெளிப்படுத்தியும், சமண பௌத்த மதங்களை வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் அவற்றின் குறைகளை எடுத்துரைத்துக் கண்டித்தும், பக்தி இயக்கத்தைச் சமயகுரவரும் ஆழ்வார்களும் வளர்த்தெடுத்ததன் பயனாக வைதிக சமயங்கள் பல்லவர் காலத்தில் மேலோங்கின என்பதற்கு ஐயம் இல்லை.

05) "செங்கல் சுண்ணாம்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகளுக்கு விசித்திரசித்தன் (மகேந்திரவர்மன்) அமைத்த கோயில் இது" என்பது மண்டகப்பட்டுக்கல்வெட்டில் உள்ள வாசகமாகும். மகேந்திரவர்மனுக்கு முன்பே தமிழகத்தில் சிவாலயங்கள் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. கோச்செங்கட் சோழன் என்பவன் காவிரிக்கரையிலே சிவனுக்கு அறுபது ஆலயங்கள் அமைத்ததாகச் சேக்கிழாரின் பெரியபுராணம் இயம்பும். அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொய்கையார் பாடிய களவழிநாற்பது என்ற நூலிலும் இச்செய்தி காணப்படுகின்றது. ஆனால் மண்ணும், மரமும் கொண்டு கட்டியவை அவையாதலால் இயற்கையின் அழிவில் இருந்து அவை தப்பவில்லை. இதை உணர்ந்த காரணத்தினாலேயே மகேந்திரவர்மன் சமணரின் கட்டடப்பணியை பின்பற்றி மலைக்குகைகளைக் குடைந்து கோயில்கள் அமைத்தான். இவை குடைவரைக் கோயில்கள் எனப்படும். இவற்றின் தனித்தன்மை கருதி இவற்றை மகேந்திரன் பாணிக் கோயில்கள் என அழைப்பர்.

சராசரி ஏழுமுழ உயரங்கொண்ட சதுரமான தூண்கள், அவற்றின் உச்சியிலே போதிகைகள் (இவை சதுரக்கற்களால் ஆனவை) அவற்றில் கீழும்மேலும் செதுக்கப்பட்ட தாமரை மலர்கள் என்பவற்றோடு, தூண்களிலே மகேந்திரவர்மனின் விருதுப் பெயர்கள் செதுக்கப்பட்டிருத்தல் காணலாம். இவ்வாறமைந்த குடைவரைக் கோயில்கள் மூன்று அல்லது ஐந்து அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நடு அறையே கருவறை, அதிலும் பக்க அறைகளிலும் தெய்வ விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. கருவறையில் இருபக்கங்களிலும் கைகளில் தண்டேந்தித் துவார பாலகர் காட்சி தருவர். கோயிற் சுவர்களிலே புராணக்கதைகள் சிற்ப வடிவங்களாக அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பத்துக் கோயில்கள் பல்லாவரம், தளவானூர், பல்லவபுரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, சீயமங்கலம், மண்டகப்பட்டு, திருச்சி, நாமக்கல் ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றோடு மாமல்லபுரத்தில் தருமராசர் மண்டபமும் மகேந்திரவர்மனாலேயே கட்டப்பட்டதென வரலாற்றாய்வாளர் கொள்வர்.

மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மன். இவன் தந்தையின் கட்டடப் பாணியில் இருந்து வேறுபட்ட தனிக்கற் கோயில்களாகக் கட்டித் தனக்கென ஒரு பாணியை வகுத்துக்கொண்டான். இந்தத் தனிக்கற் கோயில்கள் இரதவடிவில் அமைந்தமையால் இரதங்கள் எனவும் இவை தருமராசன், திரௌபதி, வீமன், அருச்சுனன், சகாதேவன் ஆகியோரின் தேர்களாக உருவகிக்கப்பட்டவை எனவும் நீண்ட காலமாக ஒரு கருத்து நிலவி வந்தது. ஆனால் அவை பாண்டவர் இரதங்கள் அல்ல, ஆலயங்களே என்று இன்று முடிவுசெய்துள்ளனர். இரதவடிவினதாயினும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதான தனித்துவம் பொருந்தி விளங்குவதும் கலைத்திறன் அமைந்து காட்சி தருவதும் குறிப்பிட்டுக் கூறவேண்டியனவாகும். இவற்றோடு மகிடாசுர மண்டபம், வராகமண்டபம், திரிமூர்த்தி மண்டபம் என்பனவும் இவனால் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டன. மேலும் மலைப்பாறைகளிலே இவனால் செதுக்குவிக்கப்பட்ட சிற்பங்கள் கலைத்திறன் மிக்கனவாய்க் காட்சிதருகின்றன. கோவர்த்தன மலையைக் கண்ணன் குடையாகப் பிடித்தல், கங்கைக்கரைக் காட்சி என்பனவே அவை.

நரசிம்மவர்மனின் மகனான பரமேசுவரவர்மன் மாமல்லபுரத்தில் கணேசருக்கு ஆலயமும் இராமானுசர் மண்டபமும் கட்டுவித்தார். தருமராசர் தேரின் மேலடுக்கில் தனது விருதுப் பெயர்களான ரணசயன், அத்தியத்தகமென் என்பவற்றைப் பொறிப்பித்தான் என்றும் தெரிகிறது.

மகேந்திரவர்மன் பாணி, நரசிம்மவர்மன் பாணி என்ற இரு கோயிற் கட்டடச் சிற்பப்பாணிகளைத் தொடர்ந்து அவற்றிலும் பன்மடங்கு சிறப்பானதொருபாணியை ஆகமப் பிரியனும் சைவசித்தாந்தியும் கழற்சிங்க நாயனாருமான (சேக்கிழாரின் பெரிய புராணத்தில் வகையடியாராக இடம் பெற்றவன்) இராசசிம்மன் உருவாக்கியது மிகுதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடற்பாலதாகும். இவனுடைய பாணியின் முழுச் சிறப்பினையும் உள்ளடக்கியதாய் இன்றும் விளங்குவது காஞ்சிக் கைலாய நாதர் கோயில் என்பர். வரவரச் சிறுத்து உயர்ந்து செல்லும் மாடங்கள் கொண்ட கோபுரம், முன்மண்டபப் பிரகாரச் சுற்றுச்சுவர், உள்மாடங்களிலே தெய்வப்படிமங்கள், தூண்களின் அடிகளிலே பொறிக்கப்பட்ட சிங்க உருச்சிற்பங்கள், கருவறையிற் சிவலிங்கம் என்பவற்றோடு பிற்காலச் சோழருடைய கோயிற்கட்டட அமைப்புகளுக்கு வழிகாட்டியாகவும் இச்சிவாலயம் விளங்குகின்றது. "காஞ்சிக் கைலாசநாதர் கோயில் திருக்கைலையின் அளவு கொண்டே கட்டப்பட்டதாகும்." என்று விபுலானந்த அடிகள் இதன் சிறப்பினைப் பெரிதும் புகழ்ந்துரைக்கக் காண்கின்றோம். இதனோடு மாமல்லபுரத்தின் கடலோரத்தில் க்ஷத்திரிய சிகாமணிப்பல்லவேச்சரம், பள்ளி கொண்ட தேவர் கோயில், இராசசிம்ம பல்லவேச்சரம் என்பனவும் இராசசிம்மனின் கோயிற் பணிகளை இன்றும் மௌன காவியங்களாய் நின்று இசைத்துக்க கொண்டிருக்கின்றன. இராசசிம்மனோடு முடிவடைந்து, இரண்டாம் பரமேசுவர வர்மனோடு தொடங்கும் புதிய பல்லவர் பரம்பரையினரும் கோயில் கட்டும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்களே. வைணவனான இரண்டாம் பரமேசுவரவர்மன் காலத்தில் கூரம் என்ற இடத்தில் கேசவப்பெருமாள் கோயிலும், திருவதிகை வீரட்டானத்தில் ஈசுவரர் (சிவன்) கோயிலும் புதுக்கோட்டையிற் குன்றாண்டாம் கோயிலும் கட்டப்பட்டன. அடுத்து வந்த நந்திவர்மன் காலத்தில் மலையாடிப்பாடி என்ற இடத்தில் குடைவரைக் கோயில் ஒன்று கட்டப்பட்டது. இதனைக் கட்டுவித்தவன் குவாலன் சாத்தன் என்பவன். நந்திவர்மன் தலம்பாக்கம் என்ற இடத்தில் கைலாச நாதருக்குக் கோயில் எடுத்ததாகத் தெரிகின்றது.

இவ்வாறு பல்லவமன்னர்கள் கோயிற்திருப்பணியிலே முன்னின்று கலைத்திறனும், நீடித்தவாழ்வும் கொண்ட ஆலயங்களை அமைத்துப் பின்வந்தோருக்கும் வழிகாட்டினர்.

06) குப்தர் காலம் கி. பி. 4ஆம் நூற்றாண்டிலே சந்திரகுப்தன் ஆட்சியோடு தொடங்கி கி. பி. 7ஆம் நூற்றாண்டளவிலே முடிவுறுகின்றது. களப்பிரர் காலம் எனக் குறிக்கப்படும் கி. பி. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் 6ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியினை வரலாற்றாய்வாளர் சிலர் முற்காலப்பல்லவர் காலம் எனக் கொள்வர். அஃது எவ்வாறாயினும் குப்தர் காலம் பல்லவர் காலத்துக்கு அண்ணளவில் சமமானதாகவும், பல்லவர் காலம் போலவே இந்துமதமலர்ச்சி குப்தர் காலத்தில் ஏற்பட்டதாகவும் கொள்வது பொருத்தமானதே. இந்து சமயம் பல துறைகளிலும் விகசித்ததும், வடமொழிக் கலை, கலாசாரம் என்பன பெருவளர்ச்சி கண்டதும் (வடநாட்டில்) குப்தர்காலமே ஆகும்.

வேதகாலத்துக்குப் பின்னர் ஓரளவு தளர்ந்திருந்த பிராமணியம் குப்தர் காலத்தில் மீண்டும் மேலெழுகின்றது. அதனோடு சைவ வைணவ சமயங்களும் எழுச்சி கண்டன. சைவத்தின் குறிக்கோள்கள் ஏலவே சுவேதாசுவதா உபநிடதம், யஜுர்வேதம், வாஜசனேயிசங்கிதை (14இல் வரும் சதருத்ரீயம்) ஆகியவற்றின் மூலம் தெரியவந்தன. வைணவத்தின் மேலான கோட்பாடுகள் இதிகாசங்களான பாரத ராமாயணங்களூடாகவும், பகவத்கீதை வாயிலாகவும் வெளிப்பட்டிருந்தன. குப்தர் காலத்திலே பாகவதம் முதலாம் புராணங்கள் தோன்றி வைணவ பக்திமார்க்கத்தினை மேலோங்க வைத்தன. இவற்றால் சைவ வைணவ மதங்கள் மேலாண்மை பெறலாயின.

சிவாலயங்களும், திருமாலின் கோயில்களும் வட இந்தியாவிலே கட்டப்பட்டுப் பேணப்பட்ட வகையிலும் குப்தராட்சிக்காலம் குறிப்பிடத்தக்கதாகும், குப்தப் பெருமன்னர்கள் மட்டுமன்றி அரச அதிகாரிகளும் கோயில் கட்டும் பணியிலே ஈடுபட்டமைக்கு இரண்டாம் சந்திரகுப்தனின் அமைச்சர் உதயகிரியிலே சிவனுக்குக் குடைவரைக் கோயில் எடுத்தமை தக்க சான்றாகும். பல்லவர்காலம் போலவே அரசகுடும்பத்தினர், குருமார், வணிககணத்தினர் ஆகியோரும் எழிலார்ந்தனவும், சமயம் சார்ந்தனவுமான தூண்கள், வனப்புமிக்க தோரணவாயில்கள், தெய்வப்படிமங்கள், கோயில்கள் என்பவற்றை உருவாக்கிச் சமயப்பணிபுரிந்ததாகத் தெரிகின்றது. விஷ்ணு, சிவன், கார்த்திகேயன், சூரியன் முதலாம் இந்து சமயத் தெய்வங்களுக்கு மட்டுமன்றி, மௌரியர் காலத்தின் தொடர்ச்சியாகத் தீர்த்தங்காரர் (சமணர்) புத்தர் ஆகியோருக்கும் கோயில்கள், தாகபங்கள், பள்ளிகள் என்பனவும் கட்டப்பட்டன. இவைமூலம் அக்காலத்திலே சமயசமரச நன்னோக்கு நிலவியமை புலனாகின்றது. பெரிய எடுப்பில் அங்கு வீர விளையாட்டுக்கள், இசைநிகழ்ச்சிகள், தானங்கள் என்பன நிகழ்ந்தனவென்று, இக்காலப்பிரிவில் இந்தியாவிற்கு வருகைதந்த சீனயாத்திரிகனான பாகியன், தனது பயணக்குறிப்பிலே எடுத்துக்காட்டியுள்ளான்.

ஒவ்வொரு சமயத்திலும் பல பிரிவுகள் காணப்பட்டன. சைவரிலே பாசுபதர், காளாமுகர், பைரவர் முதலிய வகுப்புக்களும் வைணவரின் பாகவதர் (வாசுதேவனின் அடியார்), பாஞ்சராத்திரர் (நாராயணனின் அடியார்) என்னும் வகுப்புக்களும் சமணத்திலே திகம்பரர்(திக்கை ஆடையாகத்தரித்தோர் - நிருவாணிகள்), சுவேதாம்பரர் (வெள்ளை ஆடை தரித்தோர்) என்ற பகுப்புக்களும், பௌத்தரிடையே கௌதகர், ஆசீவகர் முதலாம் பகுப்புக்களும் காணப்பட்டன நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை ஆகிய அறுவகைத் தரிசனங்களும் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் உருவாகிக் குப்தர் காலத்திலே முழுமை பெறுகின்றன.

குப்தர் காலத் தொடக்கத்தில் மேல் நாட்டுவர்க்கத்தினர் சிவவழிபாட்டில் பெரிதும் ஈடுபட்டனர், குப்தரின் சமகாலத்திலும் பின்னரும் வரையப்பட்ட ஆவணங்களிலே பாசுபதர் பற்றிய செய்திகள் அடிக்கடி வருகின்றன. இலக்கிய ஆதாரங்களும் காணப்படுகின்றன. கி.பி. 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளில் வைணவத்தின் இடத்தையும் பிடித்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் மேலோங்கியதாகத் தெரிகின்றது. ஆட்சியாளரிற் பலரும், அதிகாரிகளிற் பலரும் பற்றுறுதிமிக்க சிவனடியார்களாய் விளங்கினர். வைணவ ஆசாரியர்கள் பற்றிய செய்திகள் குப்தர் காலத் தொடக்கக்கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றன. கி.பி.6ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தக்கணம் வரை வைணவம் பரவியிருந்தமையும் இதே காலத்தில் தமிழகத்தில் முதலாழ்வார்கள் சிறந்தமையும் குறிப்பிடத்தக்கன.

வேத வேள்விக் கிரியைகள் ஊக்குவிக்கப்பட்டன. குப்தப்பேரரசனான சமுத்திரக்குப்தன் அஸ்வமேத யாகம் செய்தான், இதிலிருந்து அவன் வேதவேள்விகளுக்கு புத்துயிர் வழங்க முற்பட்டமை புலனாகின்றது. பூர்வமீமாம்சை என்னும் தரிசனம் வேதவேள்விகளுக்கு முதன்மை வழங்கியுள்ளதை நாம் அறிவோம். குப்தர் காலத்தில் சுஷவரஸ்வாமி, பிரபாகர், குமாரிகர் ஆகிய பெருமக்கள் பூர்வமீமாம்சையை வலியுறுத்தி அதனைக்கைக் கொள்ளுமாறு தூண்டினர்.

கோயிற்கட்டடக்கலையிலே பல்லவரளவு சிறப்பினைக் குப்தர் பெற்றிருக்காவிடினும் அவர்கள் காலத்தில் சிற்ப விக்கிரகக் கலை பெரிதும் சிறந்து விளங்கியது. "இக்காலப்பிரிவின் தனித்தன்மை யாதெனில் தெய்வப்படிமங்களில் இந்தியச் சிற்பி வெளிப்படுத்திய உன்னத கலைத்திறனாகும்" எனக் கலாவிற்பன்னர் கொள்கின்றனர். பௌத்தம், இந்துமதம் ஆகிய இரண்டிற்குமான படிமங்கள் கல்லாலும் உலோகத்தாலும் ஆக்கப்பட்டன. ஜான்சி மாவட்டத்தில் தியோகர் ஆலயத்தில் சிவன், விஷ்ணு சிற்பங்கள் கோயிற் சுவரில் அழகொழுகப்பொறிக்கப்பட்டுள்ளன. கம்பீரம், கவர்ச்சி, ஒத்திசைவு, ஆன்மீக வெளிப்பாடு என்பவற்றை நன்கு வெளிப்படுத்தும் கலை வடிவங்களாக இக்காலச்சிற்பங்கள், படிமங்கள், நாணயங்கள் என்பன விளங்குகின்றன.

குப்தர் காலத்தில் பீகார், நாலந்தா, வல்லபி (கூர்ஜரம்) ஆகிய இடங்களிலே உயர்கல்வி நிலையங்கள் புகழ் பெற்று விளங்கின. இவற்றில் கல்வி மொழி சமஸ்கிருதமாகவே இருந்தது. வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், ஸ்மிருதிகள், இலக்கணம், தருக்கம், வேதாந்தம், வானவியல், சோதிடம், வைத்தியம் என்பவற்றோடு தனுர்வேதமாகிய போர்க்கலையும் கற்பிக்கப்பட்டது.

வடமொழி இலக்கியங்கள் சிறப்பாக நாடகங்கள் பெருமளவு இயற்றப்பட்ட காலமும் குப்தர் காலமே. குப்தப் பேரரசனான ஹர்ஷனே சிறந்த நாடகாசிரியனாய் விளங்கினான். உலக மகா கவிகளுள் ஒருவனான காளிதாசன் அபிக்ஞானசகுந்தலம் என்ற தலைசிறந்த நாடகம், இரகுவம்சம் என்ற காவியம், மேகதூதம் என்ற காதற்பிரபந்தம் முதலானவற்றை இயற்றி இறவாப்புகழுக்குரியவனானான். யாக்ஞவல்கியர், நாரதர், காத்தியாயனர், பெயர்களால் வழங்கும் மிருதிகளும் குப்தர் காலத்தனவே. காமாந்தகனுடைய நீதிசாஸ்திரம், அமரசிம்மன் தொகுத்த அமரசேகரம் என்னும் நிகண்டு நூல், சந்திரகோமி எழுதிய சந்திரவியாகரணம் என்னும் இலக்கண நூல் ஆரியபட்டரால் இயற்றப்பட்ட ஆரியபட்டீயம் என்னும் வானவியல் நூல் என்பனவும் குப்தர் காலத்திற்குரியன எனக் கொள்ளப்பட்டன.

இவ்வாறு இந்துசமயத்தின் மறுமலர்ச்சிக்கான அமிசங்கள் யாவும் இடம் பெற்றதோர் பொற்காலமாகக் குப்தர் காலம் விளங்கியது.

07) சோழர் காலம் இந்திய வரலாற்றின் மத்திய காலம் எனக் கொள்ளப்படுகின்றது. பல்லவர்காலத்திலே வளர்ச்சி பெற்ற கோயிற் கட்டடக்கலையானது சோழர்காலத்திலே அதன் உச்ச கட்டத்தினை அடையக் காண்கின்றோம். சோழப்பெருமன்னரின் கோயிற் பணிகளை மூன்று வகையுள் அமைத்து நோக்கலாம்.

**அ) <u>செங்கல் சுண்ணந் கொண்டு கட்டப்பட்டவற்றைக் கற்றளிகளாய் (கருங்கற் கோயில்களாய்)ப் புனரமைப்புச் செய்தல்.</u>**

இப்புனரமைப்புக்கு உதாரணங்களாய் முதலாம் ஆதித்தன் காவிரிக்கரையில் இருந்த பல செங்கற் கோயில்களை கற்றளிகளாய் மாற்றியமைமையைக் குறிப்பிடலாம். இவ்வாறு இவன் கற்றளிகளாய் அமைத்தவற்றுள் திருப்பயம் புறக்கற்றளி இவன் பெயரைக் கொண்டு ஆதித்தேச்சரம் என அழைக்கப்படுகின்றது. இதன் சிற்பத்திறம் மிகுதியும் போற்றத்தக்கதாகும். இவன் மகனான முதலாம் பராந்தகன் காலத்திலே திருவிடை மருதூர், திருச்செந்துறை, உறுமூர்ச்சிவாலயங்கள் கற்றளிகளாய் மாற்றப்பட்டன.

**ஆ) <u>புதியனவாய் கற்கோவில்கள் எழுப்புதல்.</u>**

பல்லவர் கோயிற் பாணியைப் பின்பற்றியும் அவற்றிலும் கூடிய நுட்பமான கட்டட, சிற்ப முறைகளைக் கையாண்டும் சிறியனவும் பிரமாண்டமானவையுமான பல கோயில்கள் சோழப்பெருமன்னராலே கட்டப்பட்டன. திருவிசைப்பாவில் ஒரு பதிகம்பாடிய சிறந்த சிவபக்தன் கண்டராதித்தன். இவனுடைய தம்பியான அரிஞ்சயன் பெயரை நினைவு கூருமுகமாக முதலாம் இராசராசன் எடுத்த அரிஞ்சயேச்சரம் (மேற்பாடியிலுள்ளது) சிறிய கோயிலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு. இவன் தான் நிகழ்த்திய போர்களிலே பெற்ற செல்வங்கொண்டும் மக்களிடம் பெற்ற வரிகளைக் கொண்டும் கட்டுவித்த மாபெருங் கோயில் தஞ்சாவூரில் உள்ள பிரகதீச்சரம் அல்லது இராசராசேச்சரம் என வழங்கும் தஞ்சைப் பெரிய உடையார் கோயிலாகும். இக் கோயிற் பாணியைப் பெரிதும் பின்பற்றி இவன் மகன் இராசேந்திரன் எழுப்பிய கோயில் கங்கை கொண்ட சோழேச்சரம், திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீநிவாச நல்லூரில் அமைத்த கோரங்கேசுவரர் கோயில் என்பனவும் சோழரின் கோயிற் கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

## இ) கோயில்களுக்குப் பலவகையான தானங்கள் வழங்கல்.

கோயில்களுக்கு நிபந்தங்கள் விடல், கோயில் நிலங்களை இறையிலியாக்குதல் (வரியினின்றும் தவிர்த்தல்) அணிகலன்கள், பாத்திரங்கள், வழங்கல், பால், நெய், தயிர் பெற ஆவினங்களை அளித்தல் என்பன இராசராசன் போன்ற பெரு மன்னர்களால் மட்டுமன்றி அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மகளிர் (குந்தவை – இராசராசன் தங்கை – செம்பியன் மாதேவி – சுந்தர சோழனின் தாய்) அரச அதிகாரிகள் என்பவர்களாலும் இவ்வகைத் தானங்கள் பெருமளவில் வழங்கப்பட்டன. இவைமூலமாகக் கோயிற் பூசைகள், நைமித்தியங்கள் முட்டின்றி நடைபெற வாய்ப்பு ஏற்பட்டது.

கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாய் மட்டும் இருந்த நிலை மாறி அவை சமூக நிறுவனங்களாக மிக விரிந்த அளவில் இயங்கிய காலம் சோழர் காலமே ஆகும். கோயில் அருச்சகர்கள், வேதம் ஓதுவோர், திருமுறைகளைப் பண்ணுடன் இசைப்போர், வாத்தியக்கலைஞர், நடனமாதர் முதலாக பன்னூற்றுக்கணக்கானோர் கோயிலின் பல்வேறு பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இவர்களுக்கெல்லாம் தொழில் வழங்கும் நிறுவனமாக கோயில்கள் மாறுகின்றன. கோயில்களுக்கென விடப்பட்ட நிலங்களில் இருந்து பெறும் வருவாயைத் தொகுத்தல், கோயிலுக்குப் பணமாக வருவனவற்றை வட்டிக்குக் கடனாக வழங்கி அந்த முதலை வளர்த்தல் முதலிய கருமங்களும் இடம் பெற்றமையால் கோயில்கள் வணிக நிலையங்களாகவோ வங்கிகளாகவோ உருக்கொண்டன. கோயில்களிலே வேதங்கள், தமிழ்மறைகள், சமய சாஸ்திரங்களைக் கற்பித்தமையால் அவை கலைக்கழகங்களாயும் உருக்கொள்ளக் காணலாம். இவற்றில் கற்பித்த ஆசிரியர்களுக்கு ஊர்ப் பொது நிலங்களிலிருந்து வேதனம் வழங்கப்படுவதும் மாணாக்கருக்குக் குறிப்பிட்ட அளவு நெல், சனிதோறும் எண்ணெய் முழுக்குக்கென எண்ணெய் என்பன இலவசமாக வழங்கப்பட்டன. திருமுக்கூடற் கோயிற் கல்வெட்டு மூலம் இச்செய்திகளை அறிந்து கொள்ளலாம்.

பெருமழை, புயல் என்ற இயற்கை அழிவுகள் ஏற்பட்ட காலங்களிலே கோயில் மண்டபங்களை அகதிகள் தஞ்சமடைந்ததால் சிற்சில காலங்களில் அகதிகள் முகாம்களாயும் செயற்பட்டன. கோயில்களின் முன்றில்களிலே நாடகங்கள் நிகழ்ந்தமைக்கான சான்றுகளும் உள்ளன. இவ்வாறு அரங்கேறிய நாடகங்களாய் இராசராசேச்சர நாடகம்(தஞ்சைப் பெரிய உடையார் கோயில் கட்டப்பட்ட வரலாறு) பூம்புலியூர் நாடகம் (அப்பரைச் சமணர் கல்லிற் கட்டிவிட அவர் பூம்புலியூரிற் கரையேறிய வரலாறு) என்பன பற்றிய செய்திகள் கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆராய்ந்த வரலாற்றுப் பேராசிரியரான கே.ஏ.நீலகண்டசாஸ்திரி அக்காலக்கோயில்கள் பற்றிப்பின்வருமாறு கூறியுள்ளார்.

> "நிலவுடைமையாட்சி, தொழில் வழங்குகை, பொருள்கள், சேவைகளை நுகர்கை என்பவற்றோடு வங்கி, கல்லூரி, அரும்பொருட் காட்சியகம், மருத்துவ நிலையம், கலையரங்கு என எவை எவையெல்லாம் நாகரிக வாழ்வினை அறத்தின் அடிப்படையிலே உருவாக்க உதவுகின்றனவோ அவையனைத்தையும் மத்திய கால இந்தியக் கோயில் பெற்றிருந்தது. மனித இன வரலாற்றுத் தொடரில் இதற்குச் சமனும் சமாந்தரமுமான ஒன்றைக்காணல் அரிதாகும்."
>
> (சோழர் வரலாறு – பக் 654)

08) விஜயநகர மன்னரின் பிரதிநிதிகளாகத் தெற்கில் மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளுக்கு நியமிக்கப்பட்ட நாயக்கர், கிபி. 1529 தொடக்கம் 1736 வரை அவ்விடங்களிலே ஆள்பதிகளாகி, விஜயநகர மன்னருக்குச் சில வேளைகளில் அடங்கியும் சிலவேளைகளில் சுயேச்சையாகவும் ஆண்டுவந்தனர். இடையிற் சில காலம் வடக்கிலிருந்து படையெடுத்துவந்த இசுலாமியரின் கொடுங்கோலாட்சியினாலும் மதச்சகிப்பின்மையாலும் வீழ்ச்சி கண்டிருந்த இந்துசமயமானது நாயக்கர் காலத்திலே மீண்டும் மறுமலர்ச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுரை நாயக்கருள் முதல்வனான விசுவநாத நாயக்கன் வைணவன். அவன் பரம்பரையினரும் வைணவர்களே. எனினும் அவர்கள் சைவம், வைணவம் என்ற பாகுபாடின்றி சமயப்பொறையுடன் நடந்துகொண்டமையால் வைதிக மதங்கள் தழைத்தோங்கின. விசுவநாதனும் மதுரை மீனாட்சி அம்மனின் கோயிலைப் புனருத்தாரணம் செய்து புதிய மண்டபம் எழுப்பினான். செஞ்சித் தலைவரான கிருஷ்ணப்ப நாயக்கர் சைவரின் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது சிதம்பரத்தில் நடராசப் பெருமானின் கோயிலில் இருக்கும் கோவிந்தராசர் சந்நிதியைப் புனருத்தாரணம் செய்தான்.

இக்கால கட்டத்தில் சக்தி வழிபாடு முதன்மையுற்றது. நவராத்திரி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சிவன், விஷ்ணு மட்டுமன்றி விநாயகர், முருகன் ஆகிய கடவுளரின் வழிபாடும் தலையெடுத்தது. இவற்றோடு மதுரைவீரன் என்ற மாவீரன் ஒருவனையும் தெய்வமாக்கிப் பாமர மக்கள் வழிபட்டனர். ஐயனார், முனியப்பர், முத்துமாரியம்மன் முதலாம் சிறு தெய்வ வழிபாடுகளுக்கும் குறைவிருக்கவில்லை.

சைவ, வைணவ மடாதீனங்கள் வளரத் தொடங்கிய காலமும் நாயக்கர் காலமேயாகும். இக்காலத்தில் மடாதீனங்களைச் சார்ந்து இருந்து தமிழோடு சைவசமயம், வைணவம் சார்ந்த பக்தி நெறியினை வளர்க்கும் வகையிலே பிரபந்தங்கள் இயற்றியும் தத்துவ நூல்களுக்குப் பேர் உரைகள், வியாக்கியானங்கள் செய்தும் பெரும்பணியாற்றிய சான்றோர் பலராவர். இவர்களுள்ளே குமரகுருபர சுவாமிகள், சிவப்பிரகாச சுவாமிகள் முதலியோர் குறிப்பிடத்தகுந்தோர். அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியனவும், அபிராமிப்பட்டரின் அபிராமியந்தாதியும் வில்லிபுத்தூராரின் பாரதமும், கச்சியப்ப சிவாச்சாரியாரின் கந்தபுராணமும் நாயக்கர் காலத்து இந்துமத மேன்மையைப் பறைசாற்றியதோடு மக்களையும் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தின.

நாயக்க மன்னர்களே முன்னின்று மதுரைப் பெருநகரிலே சோமசுந்தரக் கடவுளுக்கும் மீனாட்சியம்மனுக்கும் பெருவிழாக்கள் எடுத்தனர். நவராத்திரி விழாக்களோடு தைப்பூசத்தில் தெப்பத் திருவிழாவினையும் மிகச் சிறப்பாக நடத்தினர். இவர்கள் பண்டிகைகளுள்ளே தீபாவளிப் பண்டிகையையும் மிக விமரிசையாக நடத்தி மக்களையும் அதில் ஈடுபடுத்தினர்.

நாயக்கரில் சிலர் கிறிஸ்தவத்துக்கும் இஸ்லாத்துக்கும் ஆதரவளித்ததன் மூலம் சமய சமரச நோக்கினை வெளிப்படுத்தினராயினும் அவ்வப்போது சமய வாதங்களும் சண்டைகளும் இடம்பெற்றமையும் மறுக்கவியலாததே. சிறப்பாக வைணவர்களுள்ளேயே வடகலையார், தென்கலையார் என்ற இரு பிரிவினரிடையே இடைவிடாது போராட்டம் நிகழ்ந்தமை குறிப்பிட்டுக் கூற வேண்டுவதாகும். வடகலையார் 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வேதாந்த தேசிகரைப் பின்பற்றி வேதங்களுக்கு முதன்மையளித்தும் வருணாச்சிரமத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்தும் வந்தார்கள். தென்கலையாரோ பன்னிரு ஆழ்வார்களதும் நாலாயிர திவ்விய பிரபந்தத்திற்கு முதன்மை அளித்தும் வருணாச்சிரம தருமத்திற்கு மதிப்பளிக்காது சாதிவேற்றுமையைக் களைந்தும் பக்தி நெறியில் தலைப்பட்டும் நின்றார்கள். வடகலையார் திருமாலின் திருப்பாதக் குறியிடாத நாமத்தையும் (U), தென்கலையர் அதனைக் குறியிலிட்ட நாமத்தையும் ( ⩛ ) தரித்து அதன்மூலம் தம்முடைய தனித்துவத்தை வெளிப்படுத்தினர். இவர்களின் போராட்டமானது நாயக்கர் காலத்தோடு நின்றுவிடவில்லை. அண்மைக்காலத்திலும் இவர்கள் தத்தம் கோட்பாட்டை நிறுவ நீதி மன்றம் ஏறி வழக்காடியும் வந்தனர் என்று தெரிகிறது.

சமயத்தின் பெயராலும் மரபாசாரங்களின் பெயராலும் முன் எக்காலத்திலும் இல்லாத அளவிற்குச் சாதிப்பிரிவினைகள் நாயக்கர் காலத்தில் தலையெடுத்தன. வருணப்பாகுபாட்டிற்கு அப்பாலும் பல்வேறு சாதிப்பிரிவினைகள் இக்காலத்தில் நிலவின. சௌராஷ்டிரத்தில் இருந்து வந்து குடியேறிய தெலுங்கர்களைப் பூணூல் தரிக்க மங்கம்மாள் இசைவு வழங்கியதாகத் தெரிகிறது. கைவினை சார்ந்த தொழிலாளரும், உழவை மேற்கொண்டோரும் வலங்கை, இடங்கை எனப் பிரிந்து நின்று ஏற்றத்தாழ்வு பேசி இடைவிடாது போராடி வந்தனர். இவர்களிடையே 98 சாதிப்பிரிவுகள் காணப்பட்டன என்று வரலாற்றாசிரியர் கூறுவர். சாதிக்கலப்பு மணத்திற்கு இக்காலத்தில் அனுமதி வழங்கப்படவில்லை.

நாயக்கமன்னரின் கோயில் கட்டடக் கலையோடு, சிற்ப ஓவியக் கலைகளும் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்திருந்தன. பிரதான கோயிலைச் சூழ்ந்து நாலு பக்கமும் சிற்பத்திறன் பொலிந்த தாழ்ந்த தாழ்வார மண்டபங்கள் நாயக்கரின் தனித்துவமான கோயில் கட்டடக்கலை ஆகும். இதனோடு எதார்த்தத் தன்மை பொருந்திய சிற்பங்களை வடிப்பதிலும் ஓவியங்கள் வரைவதிலும் – இவை பெரும்பாலும் சமயச் சார்பானவை– நாயக்கர் காலக் கலைஞர்கள் ஈடுபாடு கொண்டமைக்குச் சான்றுகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்க மன்னர் கோயில்களைப் பேணுவதோடு நிர்வகித்து அவற்றின் ...
கைக்கோளர் முதலாம் அலுவலர்களை நியமித்ததாகத் தெரிகின்றது. பல்லவர் காலத்தில் தலங்கள் மீது பதிகங்கள் பாடப்பட்டதனால் மக்கள் அவற்றை வழிபட்டதோடு, புறத்தாக்கங்களால் அழிவு நேராமலும் அவற்றைப் பாதுகாத்தனர். நாயக்கர் காலத்தில் இத்தகுபணியிலே மக்கள் ஆர்வத்தோடு ஈடுபடத் தொண்டைப்புராணம், முதலாம் தலப்புராணங்கள் உதவின. தொகுத்துக்கூறுமிடத்து நாயக்கர் காலம் இந்துமதத்தில் மீட்சிக்காலம் என்பதும் இந்த மீட்சிக்கு நாயக்க மன்னர் பணி பெரிது என்பதும் விசேடித்துக் கூறவேண்டுவனவாகும்.

09) பர்மா, மலேசியா, சயாம், கம்போடியா (கம்பூச்சியா), சம்பா (வியட்நாம்) ஆகிய கிழக்காசிய நாடுகளிலும் சுமாத்ரா, யாவா, பாலி, லாம்பக், போர்னியோ ஆகிய கிழக்கிந்தியத் தீவுகளிலும் இந்துசமயமும் கலாசாரமும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே பரவியுள்ளன.

இந்தியர் இந்நாடுகளுக்குக் கடல் வணிகம் செய்தமையாலும் அரசர்கள் ஆதிக்கவாயிலாகவும் குடியேற்ற வாயிலாகவும் சென்று தங்கியமையாலும் இக்கலாச்சாரப்படர்ச்சி ஏற்பட்டது. இது பற்றிய செய்திகள் பௌத்த ஜாதகக் கதைகளிலும் கதாசரித்சாகரம், வாயுபுராணம் ஆகிய நூல்களிலும் கூறப்பட்டுள்ளன.

**அ) <u>கடாகத்துவீபம் (மலேயா):</u>**

கடாகத்துவீபம் என்பது பிற்காலத்தில் கெட்டா, கடாரம் என மருவி வழங்கியது. மலையகம் என்ற தமிழ்ப் பெயரே பின்னாளில் மலாயா எனத்திரிந்தது. கி.பி. 514 இல் மலேயாவில் இலங்காசுகம் என்ற பகுதிக்கு அரசனாய் விளங்கிய பகதத்தன் சீன நாட்டிற்கு ஆதித்தியன் என்ற தூதனை அனுப்பினான். ஆதித்தன் அரச குடும்பத்தினனாய் இருந்திருக்கலாம். கெட்டாக் குன்றின் உச்சியிலே சிவன் கோயில் ஒன்றின் சிதைவு காணப்படுகின்றது. பரமசிவன், துர்க்கை, கணேசர், நந்திவிக்கிரகங்கள் அக்கோயிலில் கண்டு எடுக்கப்பட்டன.

மலேயா அரசு, இலங்காசுகம், கடாமல், பகானுஸ், பண்பாக் என்ற நான்கு பிரிவுகளையும் உள்ளடக்கியிருந்தது. பகானுசில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் ஸ்ரீபாலவர்மன் அரசனாயிருந்தான். வர்மன் என்றது பின்னெட்டுப் பல்லவ மன்னரை நினைவூட்டுவது, பாண்பாக் பகுதியில் இந்தியர் குடியேறி இருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கிருந்து இந்துக்கலாசாரம் காம்போஜம், சம்பா முதலிய நாடுகளிற் பரவியது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இந்தியத் தமிழரும் இலங்கைத் தமிழரும் தொழில் காரணமாக மலேயா சென்று பெருமளவிற் குடியேறினர். இதனால் இடைக்காலத்தில் இசுலாமியராற் பாதிப்புற்ற இந்துசமயமும் கலாசாரமும் மீண்டும் பெருவளர்ச்சி கண்டுள்ளன.

**ஆ) <u>சாவகம் (ஜாவா) :</u>**

யவத்துவீபம், சாவகம் என்ற பெயர்களால் முன்பு வழங்கிய ஜாவாவில் கிலிங் என்ற கலிங்க நாட்டின் இளவரசன் 20,000 மக்களைக் குடியேற அனுப்பிவைத்தான். இவ்வாறு குடியேறியவர்கள் 400 ஆண்டுகள் செல்வாக்குப்பெற்றிருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. கி.பி. 78 இல் ஃபாகியன் என்ற பௌத்த யாத்திரிகன் ஜாவாவில் நிலவிய சமயநிலை பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளான்.

> "இந்துசமயம் இந்நாட்டில் ஓங்கி நின்றது. மக்கள்
> அதில் பற்றுக் கொண்டுள்ளனர். புத்த பிரானின்
> மதம் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது."

இடைக்காலத்தில் குணவர்மன் என்ற காஷ்மீர அரசனால் பௌத்தம் இங்கு பரப்பப்பட்ட போதிலும் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர், பூரணவர்மன், தர்மா என்ற இடத்தில் ஆட்சி நடத்திய காலத்தில் மீண்டும் இந்து சமயம் புத்துயிர் பெற்றது. இதனால் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்களில் சங்கு, சக்கரம், திரிசூலம்,, அகத்தியரின் கமண்டலம் என்பன பொறிக்கப்பட்டுள்ளன. பூரண வர்மன் காலத்தில் இந்து மதம் அரசமதமாய் நிலவிற்று. இந்திய மரபும் சுதேச மரபும் கலந்த கட்டடச் சிற்பக்கலை இங்குச் சிறப்புப் பெற்றிருந்தது.

மயானத்தின் அருகிலே சண்டிக்கும் (துர்க்கைக்கும்), இந்துசமய மூர்த்திகளுக்கும் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிவனை இலிங்கவடிவிலும், உமாசகித வடிவிலும் அமைத்து வழிபாடு நடந்தது. தியை என்ற இடத்திலே கிடைத்த கல்வெட்டுக்கள் மூலம் விநாயகர் கோயில் இருந்ததாகவும் தெரியவருகின்றது. பாண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடோற்கஜன் (வீமன் மகன்) ஆகியோரும் வழிபடப்பட்டனர். காலசன் என்ற இடத்தில் தாரா என்ற பெண் தெய்வத்துக்கும் கெடு என்ற இடத்தில் சண்டிக்கும் கோயில்கள் (சண்டிமேதூத்) இருந்தன. எனினும் இக்கோயில்கள் யாவிலும் பெரியது சண்டிசேவு என்ற துர்க்கையின் ஆலயமாகும்.

ஜாவாவின் ஆலயங்கள் அனைத்திலும் அளவாற் பெரியதும் கலைநுட்பம் வாய்ந்ததும் பரபுதூர் என்ற இடத்தில் கட்டப்பட்ட புத்தர் கோயிலேயாம். பசுமையான புல்வெளியின் நடுவிலே சிவப்பு வர்ணம் தீட்டப்பட்ட இவ்வாலயம் பச்சைக்கம்பளத்தில் பதித்த பவளமலை போல எழிலுறக்காட்சி தருகின்றது என்பர். ஆறு அடுக்குகள் கொண்ட இவ்வாலயம் மண்ணுலக இன்ப துன்பங்களைப் படிப்படியாகக் கடந்து பரிபூரண ஞானமான பரிநிர்வாணத்தை அடைவதைக் குறியீடாகக் காட்டி நிற்கின்றது என்பர். இவ்வாலயம் சைலேந்திர அரசர் பரம்பரையினரால் எழுப்பப்பட்ட (அவர்களுக்கான) சமாதிக் கோயில் எனவும் கருதப்படுகின்றது.

### இ) சுமாத்ரா (சுவர்ணத்துவீபம்)

சுமாத்ரா இராமாயணத்தில் சமுத்திரத்துவீபம் என அழைக்கப்பட்டது. கி. பி. 6ஆம் நூற்றாண்டில் இந்து மன்னர் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து ஆதி வாசிகளைக் கலைத்துவிட்டுத் தமது மக்களை இங்குக் குடியேற்றினர். ஆதிவாசிகளைச் சீர்திருத்தினர். சோழிய, பாண்டிய, மெலின, பேவலி என்ற பெயர்கள் கொண்ட குலக்குழுக்கள் இங்கு வந்ததை நோக்க இவை தமிழக ஆதிக்கத்தால், உருவானவை என்று கொள்ளத்தோன்றுகின்றன. (பேவலி - பல்லவர் என்பதன் திரிபு) மெலியான - சேரர் (மலையாள) என்பதன் திரிபு.

### ஈ) போர்னியோ:

கர்ப்பூரத் துவீபம் என முன்பு அழைக்கப்பட்ட இத்தீவு, இந்தியர் சீனா சென்ற வழியில் அமைந்தது. இந்தியர் தமது பயண காலத்தில் இத்தீவில் தங்கிச் சென்றதோடு கடற்கரை ஓரத்திலே குடியேறியும் வாழ்ந்தனர். அரசும் அமைத்தனர். மூவார்காமன் என்ற இடத்திலே காணப்படும் கல்வெட்டுக்கள் கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுக்களிலே மூலவர்மன் என்ற மன்னன் நிகழ்த்திய வேள்விகள் பற்றிய செய்திகள் உள்ளன. வேள்விக்காக இவன் நாட்டிய தூண் ஒன்றிலே சிவன் பற்றிய வாசகங்கள் உள்ளன. ஒரு தூணிலே அவன் கொடுத்த பூமி தானம், கற்பகவிருட்சதானம், பசுத்தானம் (100 பசுக்கள்) பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. கிழக்கு போர்னியோவில் கோம்பேஸ் என்ற இடத்தில் ஒரு குகையினுள்ளே சிவன், கணேசர், நந்தி, அகத்தியர், பிரமன் ஆகியோரின் சிலைகள் காணப்பட்டன. முஸ்லீம்களின் படையெடுப்பின்போது இவற்றை இவர்களின் அழிப்பினின்றும் காப்பாற்ற இங்கு ஒளித்து வைத்தனர் போலும். கி. பி. 4ஆம் அல்லது 5ஆம் நூற்றாண்டில் இந்தியர் இங்குக் குடியேறி இருந்தமைக்குச் சான்றாக ஒரு பட்டயம் கண்டெடுக்கப்பட்டது.

### உ) சம்பா (வியட்நாம்)

இந்தோ சீனாவில் அமைந்த காம்போஜம், சம்பா என்ற இரு அரசுகளில் குறிப்பிடத்தக்க பரப்பளவு கொண்டது சம்பா. இதனைத் தமக்கு உடைமையாக்கி கி.பி. 1050 தொடக்கம் ஏறக்குறைய 1000 ஆண்டுக்கு மேலாக இந்து மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். ஸ்ரீபரமேசுவர வர்மதேவ ஈசுவரமூர்த்தி, உருத்திரவர்மன், ஹரிவர்மன், ஜெயசிங்கவர்மன் என்போர் இவர்களில் குறிப்பிடத்தகுந்தோர். இசுலாமியப் படையெடுப்பு நிகழ்ந்து சம்பா அவர்கள் வசமாகும்வரை இம்மன்னர் பரம்பரையே இங்கு ஆட்சி புரிந்திருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. இங்கு கிடைத்துள்ள பல சமஸ்கிருத மொழிக்கல்வெட்டுக்கள், மைசான் என்ற இடத்தில் பத்திரவர்மன் என்பான் கட்டிய சிவன்கோயிற் சிதைவுகள், அந்தக் கோயில் மூர்த்தியான சிவனுக்கு வழங்கும் பத்திரகேசுவரசுவாமிகள் என்ற பெயர், வடமொழி வல்லவனான அம்மன்னன் ஈசானேசுவரர், அம்புத்வேசுவரர் ஆகியோருக்கு எழுப்பிய கோயிற் சிதைவுகள், வியட்னாமில் காணப்படும் குபேரன் கோயிற் சிதைவுகள், சிவனை அர்த்தநாரீசுவரராய் வழிபட்ட முறைமை என்பன, நீண்ட நெடுங்காலமாக இங்குச் சைவநெறி செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குச் சான்றுகளாகும்.

### ஊ) காம்போஜம் - கம்பூச்சியா

கௌண்டின்யன் என்ற பார்ப்பனன் காம்போஜத்திற்கு வந்து நாக இளவரசியான சோமி என்பாளை மணந்து, அவள் உதவியோடு காம்போஜ ஆட்சியைக் கவிழ்த்து அரசனானான் என்ற கர்ண பரம்பரைக் கதை விஜயன் குவேனி கதையை நினைவூட்டுவதாகும். தனது நாட்டாட்சிக்குச் சின்னமாக, பாண்டவ கௌரவரின் குருவான துரோணாச்சாரியாரின் மகன் அசுவத்தாமனிடம் பெற்ற குத்தீட்டியை மண்ணில் ஊன்றி வைத்தான் கௌண்டின்யன் என்றும் இக்கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கின்றது. இக்கதையின் நம்பகத்தன்மை எவ்வாறாயினும் கி.பி.2ஆம் நூற்றண்டிலிருந்து இந்துப்பேரசு ஒன்று இங்கு நிலவிவந்தமை ஆதாரபூர்வமானதாகும். இவ்வரசுக்கு அன்று வழங்கிய பெயர் ∴புணான் என்பதாகும். காம்போஜத்தின் தெற்கில் வழனான் என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டுக்கள் இங்குத் தென்னிந்தியக் குடியேற்றம் நிகழ்ந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

காம்போஜ அரசனான ஈசான வர்மன் **சிவனுக்கு விஞ்சிய தெய்வம் இல்லை** என்று நம்பியவன். இவனுடைய அரசகுருவாய் விளங்கியவன் ஆதிசங்கராச்சாரியாரின் சீடனான சோமன் எனக் கூறப்படுகின்றது. இவன் வழித்தோன்றலான யசோவர்மன் பிமானகல் என்ற கோயில் அமைத்தான். பிமானகல் என்ற சொல் விமானாகாசம் என்பதன் திரிபு. யசோவர்மன் இந்துத் துறவிகளுக்காக 100 ஆச்சிரமங்கள் அமைத்தான். இவன் பின்வந்த ஜெயவர்மன் மதுவனம் என்ற தலத்தினை அமைத்தான் இப்பெயர் யமுனா நதிதீரத்தில் அமைந்த திருத்தலப் பெயரைத் தழுவியதாகும். 2ஆம் சூரிய வர்மனின் கல்வெட்டுக்கள் 'நமச்சிவாய' என்ற மந்திரத்தை தொடக்கமாய்க் கொண்டிருந்தன.

யசோவர்மனின் கோயிற் கட்டடப்பணிகளிலே தலையாயது இவன் தன்னுடைய குருவாகிய திவாகர் என்பவரின் தூண்டுதலால் கட்டி எழுப்பிய அங்கோர்வேது அல்லது அங்கோர்வாட் என்னும் விஷ்ணு கோயிலாகும். உலகத்திலேயே மிகப்பெரிய இந்து ஆலயமாக இன்றும் கொள்ளத்தக்கதாய் உள்ளது அங்கோர்வாட் என்பதற்கு ஐயம் இல்லை.

40 அடி உயரத்தில் 570 சதுர அடி மேடையில் நான்கு கோபுரங்கள் கொண்டதாய்க் கர்ப்பக்கிருகத்தின் மேல் ஐந்து விமானங்கள் அமைந்ததாய்ச் சிகரத்திலே தங்கக்கலசம் பொருந்தியதாய் விளங்குவது. அங்கோர்வாட் நடுச்சிகரத்தின் உயரம் 130 அடி. 13அடி உயரமான மதிலால் இக்கோயில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. மதில்களுக்கும் வாயிலுக்குமிடையே பிரதான வழி, தம்பங்களையும், அத்தம்பங்களை இணைக்கும் பாம்புவடிவிலமைந்த சங்கிலிகளையும் இருபக்கத்திலும் கொண்டுள்ளது. கர்ப்பக்கிருகத்தில் கருடவாகனத்தில் அமர்ந்த விஷ்ணுவின் தங்கவிக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தது. சிற்பங்களிலே பாற்கடல் கடைதல், சிவலீலைகள், சுவர்க்கபோகம், நரகவேதனை என்பன எழிலொழுகப் பொறிக்கப்பட்டுள்ளன. "தேவேந்திரனே மண்ணுலகில் வந்து இவ்வாலயத்தை அமைத்தான்" என்று கலாரசிகர்கள் வியந்து புகழ்வதிலிருந்து, அங்கோர்வாட்டின் பெருமை நன்கு புலனாகும். இன்று இவ்வாலயம் பெரும் சிதைவுக்கும் அழிவுக்குமுள்ளாகியிருப்பது கவலை தருவதாகும்.

யசோவர்மனின் பின்வந்த 7ஆம் ஜெயவர்மன் 'அங்கோத்தம்' என்ற கோயிலைப் பேயான் என்ற தெய்வத்திற்கு எடுத்தான். 'பேயான் முகங்கள்' என்று இவை அழைக்கப்படுகின்றன. கடற்கரையில் அமைந்து வருவாரை வசீகரிக்கும் 'பேயான் முகங்கள்' உலகப்புகழ்பெற்றவை. இங்கு இந்து சமயக் கடவுளரின் சிற்பங்களும் காணப்படுகின்றன.

### எ) பாலித்தீவு :

கி.பி. 4ஆம் நூற்றாண்டின் இறுதியிலே இங்கு ஆட்சிபுரிந்தவன் கவுண்டின்யன் என்று சீன வரலாற்றுக்குறிப் பொன்றினால் தெரியவருகின்றது. இங்கு அக்காலத்தில் வாழ்ந்தோர் அணிந்த உடை குபே எனப்பட்டது. கூபே என்று பருத்தியாடைக்கு வழங்கிய சமஸ்கிருதப் பெயரின் திரிபே 'குபே' யாகும். இராமாயண பாரதக்கதைகள் சில திரிபுகளோடு இன்றும் இங்கு வழங்கிவருகின்றன. இக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நடனங்கள், நாட்டிய நாடகங்கள் என்பன இன்னும் இங்கு ஆடப்படுகின்றன. இராமாயணம் தொடர்பான ஓவியங்களும் இங்கு உள்ளன.

### ஏ) செலிப்பஸ் :

சம்பாவிற் குடியேறிய இந்து மதத்தினர் இங்கு வணிகம் நடத்தியதோடு அவர்களில் ஒரு பகுதியார் இங்கும், சீனாவின் குவாங்கோ நதிப்பிரதேசத்திலும் குடியேறினர் எனத் தெரிகிறது.

### ஐ) சயாம் (சியாம், தாய்லாந்து)

இங்குள்ள இடப்பெயர்களிற் பல இந்தியப் பெயர்களாகும். இங்குள்ள தக்குவாபாவில் தமிழ்க்கல்வெட்டொன்று காணப்பட்டது. கால–பிரா–நாராய என்ற பெயரில் ஒரு மலைக்குன்று உள்ளது. இதன் பொருள் நாராயணர் குன்று என்பதே, இக்குன்றிலே சிதைவடைந்த நிலையிலே விஷ்ணு கோயில் ஒன்று உள்ளது. அக்கோயிலில் நாராயணர் சிலையும் உள்ளது. ராம் கமா ஒன் என்பவன் இங்கு ஆட்சிசெய்தான். இப்பெயர் இராமராயன் என்பதன் திரிபாகும். இவன் கி.பி. 15 இல் சிவன் கோவில் ஒன்று கட்டினான் என்பர். இவன் மனுதர்மசாத்திரப்படி நாட்டை ஆண்டான் எனவும் கூறப்படுகின்றான். 1350 இல் சயாம் தனி நாடான போதிலும் இந்தியப் பண்பாட்டிலிருந்து அது முழுமையாக விடுபடவில்லை. இங்குள்ள சிற்பங்களிலே இந்தியப் பண்பாட்டின் தாக்கம் உள்ளது. முகாசின் முதலிய கோயில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய இந்துக்கட்டடக் கலையம்சம் பொருந்தியவை. கோபுரங்களிலும் இந்தியச் செல்வாக்குக் காணப்படுகின்றது. விஷ்ணு, இலட்சுமி, துவாரபாலகர் முதலிய சிற்பங்களிலும் இந்திய விக்கிரகங்களின் சாயல் உண்டு. பொட்பிறம் என்ற இடத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விநாயக விக்கிரகத்தின் பீடத்திலே தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன. நடராசப் பெருமானின் நடனச்சிற்பமும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டது.

இராமாயணக் கதை இங்கு திரிபடைந்து விளங்குகின்றது. அசோகர் என்ற சயாமிய மன்னர் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோயில் கட்டினார். அரசர்களின் சிற்பங்களிலே காணப்படும் வெண்கொற்றக் குடை, விசிறி, வாள், முடி, மிதியடி ஆகிய அரசச் சின்னங்களிலே இந்தியச் செல்வாக்கினைக் காணலாம்.

ஒ) <u>பர்மா (சுவர்ணபூமி)</u>

இன்று மியன்மார் எனப்படும் பர்மா பிரித்தானியரின் காலத்திலே இந்தியாவுடன் இணைக்கப்பட்டுப் புற இந்தியா என அழைக்கப்பட்டது. இதற்கு முன்னரே பர்மாவில் பௌத்த, இந்துசமயப் பரம்பலும் செல்வாக்கும் மிக விரிந்த முறையில் ஏற்பட்டன. இந்திய மக்கள் பல்லாயிரக்கணக்கில் இன்றும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். பர்மாவில் தேசிய சமயம் பௌத்தம் என்பதும் குறிப்பிடத்தக்கதே.

வர்மன் என்ற பின்னொட்டுப் பெயருடன் அரசர்கள் பர்மாவை ஆண்டு உள்ளனர். பல்லவ மன்னரின் எழுத்து முறையினைப் பர்மிய அரசவமிசத்தனரான 'மான்' மன்னர்கள் பின்பற்றினார்கள். இங்குள்ள பாமன் என்ற இடம் முன்பு அரிமர்த்தனபுரம் என வழங்கியது. பாளிமொழியும், காஞ்சி புரத்தில் செல்வாக்குப் பெற்ற மகாயான பௌத்தமும், தேரவாதமும் இங்கு பரவலாகக் காணப்படினும் விநாயகர், விஷ்ணு கடவுளரின் சிலைகள், கோயில்கள் பரவலாக இடம் பெற்றிருந்தமையை அறிந்து கொள்ளலாம்.

(10) மகரிஷியும் வேத உபநிடதங்களில் முதிர்ந்த அறிவாளரும், துறவியுமான தயானந்த சரஸ்வதி, (1834-1883) 1875 ஏப்ரல் 10ஆந் திகதி பம்பாயில் ஆரிய சமாஜத்தை நிறுவினார். 1877 யூன் 24 இல் லாகூரில் ஆரிய சமாஜ மாநாடு நிகழ்ந்தது. பின்வரும் பத்து நியமங்களையும் ஏற்போரே சமாஜ உறுப்பினராகலாம் என்ற தீர்மானம் மாநாட்டில் நிறைவேறியது.

அ) எல்லா அறிவிற்கும் அதன் மூலம் அறியப்படும் எல்லா விடயங்களுக்கும் நிமித்த காரணர் ஈஸ்வரனேயாவார்.

ஆ) ஈஸ்வரன் என்றும் உள்ளவர் எல்லாம் அறிபவர், அருளே உருவானவர், ஆனந்த வடிவினர், எல்லா வலிமையும் பொருந்தியவர், நீதிமான், எங்கும் உறைபவர், காலங்கடந்தவர், அநாதியானவர், புனிதமானவர், யாவையும் படைப்பவர்.

இ) வேதமே உண்மையான ஞான நூல், ஆரியர் ஒவ்வொருவரும் அதனைக் கற்கவும், கற்பிக்கவும் ஓதவும் கேட்கவும் வேண்டும்.

ஈ) எவரும் உண்மையை ஏற்கவும் பொய்யைத் தவிர்க்கவும் எப்பொழுதும் தயாராயிருத்தல் வேண்டும்.

உ) தருமத்தின் வழி ஒழுகுதல் வேண்டும். நன்மை, தீமை ஆகிய பாகுபாடுகள் தருமத்திற்கேற்பவே அமைவன.

ஊ) சமூகத்தின் முதன்மையான குறிக்கோள் உலகம் அனைத்துக்கும் நன்மை புரிதலே. சேதன, அசேதன, ஆன்மிக சமூக நலன்கள் யாவும் இந்நன்மைகளுள் அடங்கும்.

எ) ஒவ்வொருவரும் பொருளையும் பொருண்மையையும் உணர்த்துவதான வித்தையைக் கற்பதும் அதற்கு எதிரான அவித்தையைக் களைவதும் தமது கடன்களாய்க் கொள்ளல் வேண்டும்.

ஏ) சுயநலத்தைக் களைவதும் பிறர் நலன்களில் தம்முடைய நலன்கள் அடங்குவதுமாகிய உண்மையை ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும்.

ஐ) சமூகத்தில் கட்டுப்பாடுகளை மீறாது, அவற்றிற்கு அமைவாக நடக்கும் அதே வேளை, தமது சுயதருமங்களைத் தீர்மானித்துக் கடைப்பிடிக்கும் உரிமையை ஒவ்வொருவரும் பெற்றிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசுவரனில் அழுத்தமான நம்பிக்கை, வேதங்களிலே பற்றுறுதி, சத்தியத்தில் வேட்கை, தருமவழி ஒழுகல், தன்னலமற்ற சமூகசேவை, சமூகக்கட்டுப்பாடுகளை அங்கீகரிக்கும் அதே வேளை சமயதருமத்தைக் கைநெகிழ்க்காமை ஆகிய குறிக்கோள்களை அத்திவாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட மாளிகையே ஆரிய சமாஜம் என்பது புலனாகின்றது. ஆரிய சமாஜத்தின் செயற்பாடுகளும் இலட்சியங்களும் அது உருவாகி விரிவு பெற்ற காலத்தில் இந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இந்துக்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்கு இந்தியாவின் பல பகுதிகளிலும் (பஞ்சாப், ஐக்கியமாகாணம், மத்திய மாகாணம், இராசபுதனம் முதலாம் பத்து மாகாணங்கள்) வெளிநாடுகளிலும் (கிழக்காபிரிக்கா, மொரிஷியஸ் ஃபீஜித் தீவுகள், பாக்தாத், லண்டன், பேர்லின் ஆகியன.) கிளைகள் தோன்றியமையே சான்றாகும்.

ஆரிய சமாஜம் வேதங்களை அதிகாரபூர்வமாக ஏற்கவேண்டும் எனவும் அந்நிய மத கலாச்சாரங்களை உவர்த்து ஒதுக்கவேண்டும் எனவும் வற்புறுத்தியதால் அதற்குச் சாதகமும் பாதகமும் ஆன ஆதரவும் எதிர்ப்பும் நிலவின. எதிர்த்தோர் வன் முறைகளைக் கையாண்டு ஆரிய சமாஜப் பணிகளுக்குக் குந்தகம் விளைவிக்க முற்பட்ட வேளைகளிலும் சமாஜ உறுப்பினர் அமைதியான வழிகளையே கையாண்டு தமது இயக்க இலட்சியங்களை நாடளாவிய முறையிலே பரப்பினர்.

வேதங்களுக்கு மகிமை அளித்துப்பழைய வாழ்க்கை முறைகளை வற்புறுத்திய போதிலும் ஆரிய சமாஜம் சமூக சீர்திருத்தத்திற்கான பணிகளையும் முற்றாகக்கைந்நெகிழ்க்கவில்லை. விக்கிரக ஆராதனையை ஏற்காமை, ஓரிறைக்கோட்பாட்டை வலியுறுத்தியமை, சாத்திரங்களின் பிற்பட்ட போக்குக்களை ஏற்காது அவற்றைத் தவிர்க்குமாறு பிரசாரம் செய்தமை, பால்ய விவாகத்தை எதிர்த்தமை, கடல் கடந்து செல்வதால் சாதி இழக்கப்படாது என வலியுறுத்தியமை, பெண் கல்வியை ஊக்குவித்தமை, விதவை விவாகத்தை ஆதரித்தமை ஆகியவற்றில் ஆரிய சமாஜம் முற்போக்குடையதாகவே செயற்பட்டது.

தயானந்தர் சமாஜக் கோட்பாடுகளை மக்களிடையே பரப்பவும் வேதஞானத்தை ஏற்படுத்தவும் வேதாந்தப் பிரகாசிகை முதலான பல நூல்களை இயற்றினார். தத்துவ விளக்கம், தருமம் என்னும் ஒழுக்கக் கோட்பாடு, கிரியைகள், வீடுபேறடைதற்கான நெறி என்பன இந்நூல்களின் உள்ளடக்கங்களாய் விளங்கி அவற்றைக் கற்போரின் அறிவுக் கண்களையும் திறந்தன. புராதன முறையைப் பின்பற்றிக் குருகுலம், சமஸ்கிருதக் கல்லூரி என்பன அவரின் நெறிப்படுத்தலிலே நிறுவப்பட்டன. சமாஜத்தின் இலட்சியங்களையும் செயற்பாடுகளையும் பிரசாரம் செய்ய ஆங்கிலம், ஹிந்தி, உருது மொழிகளிலே பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தொடக்கப்பட்டன.

அந்நிய கலாச்சாரங்களும் போலி வாழ்க்கை முறைகளும் அந்நியரின் ஆட்சியாலும் அவர்கள் அறிமுகம் செய்த நவீன கல்வி முறையாலும் ஆங்கில மொழி அறிமுகத்தாலும் பாரதத்தில் ஊடுருவி அழிவுகளை ஏற்படுத்த முற்பட்டபோது அதன் பழைமையான சமய மொழி கலாசாரங்களைப் பேணிப்பாதுகாக்க முற்பட்ட வகையில் ஆரிய சமாஜத்தின் பணிகள் விதந்தோதத்தக்கன.

(11) வேதாந்த கேசரி என்றும் 'வீரத்துறவி' என்றும் போற்றப்படும் சுவாமி விவேகானந்தரின் பிள்ளைத் திருநாமம் நரேந்திரர் என்பதாகும். அவர் வங்காளி, (1863 – 1902), கலைப்பட்டதாரி, நியாயவாதிக் கல்வியைத் தொடங்கி இடை நடுவில் விடுத்து, பற்றுக்கள் யாவும் துறந்த சந்நியாசியாய் இந்தியாவெங்கும் ஞானகுரு ஒருவரை நாடி அடையும் வேட்கையுடன் அலைந்து திரிந்தவர். தமது எண்ணம் நிறைவேறாத ஏமாற்றத்துடன் நம்பிக்கை வறட்சி கொண்டவராய் இறுதியில் பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணரை நாடிவந்தார். கல்வியறிவற்றவரும் பித்தர்போற் காட்சிதந்தவருமான ஸ்ரீஇராமகிருஷ்ணர் மூலம் தமது எண்ணம் நிறைவேறும் என்று அவர் நினைக்கவில்லை. அவரை நோக்கி "நீர் கடவுளைக் கண்டதுண்டா? அவ்வாறு கண்டிருந்தால் எனக்குக் காட்டுவீரா?" என்று ஏளனத்துடன் வினாவினார். ஸ்ரீ இராமகிருஷ்ணரோ சற்றுங் குழப்பமடையாதவராய் மிகுந்த அமைதியோடு "ஆம் குழந்தாய் இறைவனை நான் கண்டிருக்கிறேன். நீயும் காணலாம்" என்று கூறிய வண்ணம் நரேந்திரரின் (நரேந்திரர் அவரது பிள்ளைத் திருநாமம்) மார்பிலே தமது கரத்தால் தொட்டார். மின்சாரம் பாய்ச்சியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டு நரேந்திரரினுள்ளே ஓர் ஒளிதோன்றிக் கடவுள் அனுபவத்தை அவருக்கு ஏற்படுத்திற்று. அந்தக்கணத்திலிருந்து தம்மை அர்ப்பணித்தார். அவரின் அன்பிற்குரிய சீடருமானார், விவேகானந்தர் ஆனார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் (1836 – 1886) மறைந்த பொழுது அவரின் ஞானச்சுடரை ஏந்தும் நந்தா விளக்காய் அவரின் சீடர்களை வழிகாட்டி அவர் மனைவியாரான ஸ்ரீசாரதாமணிதேவியை ஞானத்தாயாய் ஏற்று விவேகானந்தர் செயற்படத் தொடங்கினார். இந்து மதத்தின் தத்துவங்களை ஆழமாகக் கற்றுத் தெளிவு பெற்றிருந்த அவர், இந்து மதத்தின் பெயரால் நிலவிய அறியாமைகளைக் களைவதிலும் முன்னணிவகித்தார்; புராணங்கள், சாத்திரங்கள் வாயிலாக மக்களிடையே நிலவிவந்த அறியாமைகளைப் போக்கினார். "பாரதநாடு பழம் பெரும்நாடு ஞானத்தின் விளைநிலம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரச் சீர்கேடு என்பவற்றால் வறுமையின் பிடியில் சிக்கிய மக்கள் அறியாமையினாலும் மூடப்பட்டிருப்பது கண்டு அவர் பெரிதும் வருந்தினார். "பசித்திருப்பவனுக்கு உடனடித் தேவை உறொட்டி. அதுவே அவனுக்குக் கடவுள். அவனது பசியைப் போக்காமல் கடவுள் பற்றிப் போதிப்பது அபத்தம்" என்பது அவரது முடிவு. எனவே மீண்டும் தேசிய உணர்வு ஏற்பட்டு மக்கள் தமது அடிமைத் தளையைக் களைந்து எல்லோரும் எல்லாமும் பெற்று வாழும் நிலைக்கு இந்தியாவை உயர்த்திய பின்பே ஞானோபதேசம் அளிக்கலாம் என எண்ணிச் செயற்பட்டார். தம்முடைய சகாக்களான துறவிகளை நோக்கி: "யன்னல்களையும் கதவுகளையும் மூடிக்கொண்டு அறையினுள்ளே இருந்து யோகமுயற்சிகளில் ஈடுபடுவதை விட்டு வெளியே வாருங்கள். ஏழைப் பாமர மக்களுக்குக் கல்வியாகிய கண்களை வழங்குவதே இன்று உங்கள் முன்னுள்ள முதன்மையான கடன்" என்று இடித்துரைத்தார். "கல்வி என்பது உள்ளத்தில் உறையும் ஞானத்தை வெளிக்கொணரும் முயற்சியே "என்று கல்விக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்திய பெருமையும் விவேகானந்தருக்கு உண்டு.

1897 இல் அமெரிக்காவில் சிக்காக்கோ என்ற நகரிலே உலகச் சர்வமத மாநாடு நடைபெற்றது. அதற்கு இந்துமதப் பிரதிநிதியாக விவேகானந்தர் சென்று கலந்து கொண்டார். ஆராய்ச்சிக் குறிப்புக்களோ, கட்டுரையோ தயாரித்துச் செல்லாது எவ்வித முன்னாயத்தமுமின்றித் தமது உள்ளுணர் ஞானமே துணையாக அவர் நிகழ்த்திய சொற்பொழிவு இந்து மதத்தின் பாரம்பரியச் சிறப்புக்களையும் அது போற்றிப் பேணிவரும் விழுமியங்களையும் வெளிப்படுத்தி மாநாட்டிலே கலந்து கொண்ட அனைவர்க்கும் தெளிவை உண்டாக்கியது. "சீமாட்டிகளே சீமான்களே" என்று சபையினரை விளித்து வந்த முறைமையை விடுத்து "சகோதர சகோதரிகளே" என்று அவர் அழைத்த முறையானது இந்துமதத்தின் சமரச சகோதரத்துவ மனப்பாங்கினை வெளிப்படுத்தி எல்லோரையுங் கவர்ந்தது. "சாக்கடைகளையும் அசுத்தங்களையும் குருட்டு நம்பிக்கைகளையுமே கொண்டதென்று இந்து சமுதாயம் எள்ளி நகையாடப்பட்ட ஒரு காலம் மறைந்து, இந்து மதம் உலகின் கவனத்தை ஈர்த்து மதிப்புப் பெறும் நிலைக்கு அவரின் சொற்பொழிவுகள் வழிவகுத்தன. இவ்வகையில் 19ம் நூற்றாண்டின் இறுதியிலே இந்து சமய மறுமலர்ச்சிக்கு அடித்தளம் இட்டவர் சுவாமி விவேகானந்தர் என்பது தெள்ளிதிற் புலனாவதாகும்.

இந்து சமயத்தின் மறுமலர்ச்சி மேலும் வலுவான மாளிகையாகக் கட்டி எழுப்பப்படவேண்டுமாயின் அது நவீனத்துவத்தின் நலங்களையெல்லாம் உள்வாங்கல் வேண்டும் என்பதும் விவேகானந்தரின் கனவாக இருந்தது. இவற்றை நிறைவேற்ற ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் தோற்றுவிக்கப்பட்டது. சமயப்பரம்பலோடு அமைந்துவிடாது கல்வி, அறிவியல், மருத்துவம், அநாதர்க்காப்பு என்றபல துறைகளில் அது விரிந்து செல்வதற்கு விவேகானந்தரே வித்திட்டார் என்பது மறுக்கொணாத உண்மையாகும்.

இந்து சமுதாயம் நிலை பெறவும் மேன்மையுறவும் பாரத இளைஞர்களின் பணி மிக இன்றியமையாதது என்பதையும் விவேகானந்தர் உணரத்தவறவில்லை. எதிர்காலம் அவர்களின் கைகளிலேயே உண்டு என்று அவர் உறுதியாக நம்பினார். அவர்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்றும் அவர் சிந்தித்து வெளியிட்ட அறைகூவல் "இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்கவியலாத ஆற்றலும் பொருந்திய இளைஞர்களே இன்று நமக்குத் தேவை" என்பதாகும்.

ஆக இந்து மத மறுமலர்ச்சியிலும், இந்தியாவின் புத்தெழுச்சியிலும் விவேகானந்தரின் பங்களிப்பு மகத்தானது. என்பதற்கு ஐயமில்லை.

12) ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பெயரால் கல்கத்தாவில் உருவாக்கப்பட்ட நிறுவனமே ஸ்ரீஇராமகிருஷ்ண மடமாகும். இதன் பணிகள் இன்று மிக விரிவடைந்து உலகளாவியதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இலங்கை, மொறிஷஸ், ஆபிரிக்கா முதலாக விரிவடைந்து வேதாந்தக் கல்வி, யோகம், முதலியவற்றோடு சமூக, கல்வி, மருத்துவப் பணிகளையும் உள்ளடக்கியனவாய் அதன் பணிகள் சிறக்கின்றன.

எந்தப் பணியும் அதனைச் செய்பவரின் உள்ளத்தூய்மையிலும் ஆன்மிக எழுச்சியிலுமே தங்கியுள்ளது என்பதற்கு இராமகிருஷ்ண மடத்துறவிகளின் சிஷ்டாசாரம் எடுத்துக்காட்டாயுள்ளது. கல்வியும் சமய உணர்வும் மிக்க அவர்கள் நான்காண்டுகள் துறவிப்பயிற்சியைக் கடுமையாக மேற்கொண்டதன் பின்பே குருமூலம் தீட்சைஷ பெற்றுப் பரிபூரண துறவிகளாக, சுவாமிகளாக மாறுகிறார்கள். சமய சமுதாயத் தொண்டுகளுக்கு அவர்கள் தம்மை அர்ப்பணிக்கின்றார்கள். ஆசிரியர்களாக, மதப்பிரசாரகர்களாக, எழுத்தாளர்களாக, கல்விமான்களாக அவர்கள் உலகெங்கும் பரந்துசென்று தமது பணிகளைச் சிறப்பாக நடத்திவருவது மிகவும் பாராட்டிற்குரியதாகும்.

"நீங்கள் யாவரும் கடவுளின் குழந்தைகள், சாசுவதமான கடவுளாசிக்குப் பங்காளர்கள். உங்களை ஏன் பாவிகள் என்கிறீர்கள்? சிங்கங்களே உங்கள் குகைகளில் இருந்து வெளியில் வாருங்கள். நீங்கள் ஆட்டுமந்தைகள் அல்ல. உங்கள் அடிச்சுவடுகள் உங்களுக்கே சொந்தமானவை. பூமி எங்கணும் வலிமைவாய்ந்த அரசுகள் தலையெடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் பாரதபுத்திரர்களான நீங்கள் மட்டும் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதேன்? மக்களே வாருங்கள், கண்திறந்து உலகை நோக்குங்கள், இரும்புத் தசைகளும் எஃகு நரம்புகளும் வாய்ந்த நீங்கள் கோழைகளாக ஏன் அழுதுகொண்டிருக்கின்றீர்கள், கடவுள் உங்களுக்கு அனைத்து வெற்றிகளும் தருவார் என்பதை உணர்ந்து ஆற்றலுடன் முயலுங்கள் வெற்றி உமதே."

என்ற விவேகானந்தரின் செய்தியை வடக்கே இமயத்தின் அடிவாரத்தில் இருந்து தெற்கே குமரிமுனைவரை பரப்பிவரும் சிறந்த பணியினை விவேகானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஸ்ரீஇராமகிருஷ்ண மடம் கடந்த ஒரு நூற்றாண்டாகச் செயற்படுத்திவருகின்றது. இராமகிருஷ்ண மடப்பள்ளிகள், கல்லூரிகள், அநாதைகள் இல்லங்கள், மடங்கள், வைத்தியசாலைகள், துறவகம், தபோவனம் என்ற பல கிளைகள் வாயிலாக அதன் அரும்பணிகள் தொடர்கின்றன. 'இராமகிருஷ்ண விஜயம்' என்பது சென்னையில் இருந்து மாதந்தோறும் வெளியாகிவரும் சஞ்சிகை. விவேகானந்தரின் விருதுப்பெயரான வேதாந்த கேசரி என்பது ஆங்கிலச்சஞ்சிகை. வடக்கேயிருந்து 'பிரபுத்த பாரத்' என்ற ஆங்கிலச் சஞ்சிகை வெளியாகின்றது. இவைபோன்றே இந்தியாவின் சுதேச மொழிகள் அனைத்திலுமே சஞ்சிகைகள் வெளியாகி இந்துமத தத்துவங்கள், ஒழுக்கநெறிகள், சமூகப்பணிகள் என்பவற்றை ஆற்றலோடு வெளிப்படுத்துகின்றன.

ஸ்ரீஇராமகிருஷ்ணரின் உபதேசங்கள், விவேகானந்தரின் சொற்பொழிவுகள், கட்டுரைகள், கடிதங்கள் என்பனயாவும் தொகுக்கப்பட்டுப் தொகுதிகளாக இதுவரை மடத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. திருவாசகம் தொடக்கம் பகவத்கீதை வரை மலிவுப்பதிப்புகளாக, வெளியானவையும் எளிமையானவையுமான முறைமையில் வெளிவந்தனவும் வெளிவரவிருப்பனவும் பல ஆயிரக்கணக்கான நூல்களாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையின் இராமகிருஷ்ணமிஷன் ஆற்றிவரும் பணிகள் எண்ணுக்கணக்கற்றவை. கொழும்பில் இராமகிருஷ்ணமிஷன் தலைமையகம், விடுதி ஏற்படுத்திப் பிரமாண்டமான கட்டட வசதிகளோடு இந்துமத அறப்பணிகளை நடத்திவருகின்றது. முன்னர் கதிர்காமத்திலே யாத்திரிகர் மடம் அமைத்து உண்டியும் உறையுளும் யாத்திரிகருக்கு வழங்கிய இதன் பணி, கதிர்காமம் புனித நகராகப் பிரகடனம் செய்யப்பட்டதோடு இடைநிறுத்தப்பட்டது.

இலங்கையிலே இராமகிருஷ்ண மடத்தின் முதல் துறவியாகிய பெருமை கிழக்கிலங்கையைச் சேர்ந்த விபுலானந்த அடிகளையே சாரும். அவர் திருகோணமலையில் இந்துக்கல்லூரி, மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயம், சாரதா இந்து மகளிர்கல்லூரி என்பவற்றை நிறுவினார். மட்டக்களப்பில் அனாதைக் குழந்தைகளுக்கான நல்வாழ்வில்லத்திற்கு வித்திட்டார். ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமையாளராய் விளங்கி இலங்கையில் யாழ்ப்பாணம் உட்படத் தமிழ் இந்துக்கள் வாழும் இடங்களிலே பள்ளிகள் இராமகிருஷ்ணர் பெயரால் தொடக்கப்பட்டபோது அவற்றின் வளர்ச்சிக்கு வித்திட்டார்: ஊக்கினார். இன்று இப்பாடசாலைகள் அரசுடமையாகிவிட்டன. இன்று பருத்தித்துறையிலே சாரதாசேவாச்சிரமம் நடத்திவரும் கல்வி, சமூகப் பணிகள் மிகப்பலவாகும். இலங்கையிற்போலவே உலகநாடுகள் பலவற்றிலும் இராமகிருஷ்ணமிஷன் பணிகள் தொடர்கின்றன.

இந்துமத நிறுவனங்களிலே ஸ்ரீஇராமகிருஷ்ண மடம் மற்றைய அனைத்திலும் சிறப்பாகத் தன்பணிகளை நடாத்துவதற்கு அடிப்படையாய் அமைந்துள்ள காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

01. சொந்த நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் கிளைகள் அமைத்துப் பணியாற்றுவதால், அதற்கு ஒரு பரந்த பார்வையும் உலக சகோதரத்துவ உணர்வும் உண்டு என்பதை அவ்வந்நாடுகளும் உணர்ந்துள்ளமை.

02. தனித்தொருமதக்குழுவாகத் தனக்கு முத்திரை குத்திக்கொள்ளாது இந்து சமய நிறுவனமாகவே தன்னைவெளிப்படுத்துகின்றமை.

03. சமய மாற்றங்கள், துவேஷப்பிரசாரங்களில் ஈடுபடாது மற்றைய மதங்களையும் கௌரவித்து நடந்துகொள்ளல்.

04. துறவுள்ளத்தோடும் கல்விப் பாண்டித்தியத்தோடும் மடத்துறவிகள் நடத்தும் தூயவாழ்க்கை.

05. தனது பணிக்கு இடமான நாட்டில் நிலவும் சமூக, சமய உறவுகளுக்கு ஊறுவிளைவிக்காமல் ஒத்துமேவி நடந்துகொள்ளல்.

(13) பிரமசமாஜத் தாபகரான இராஜாராம்மோகன்ராய் 1833இல் இங்கிலாந்திலே பிறிஸ்டல் நகரிலே மறைந்தார். அவரின் மறைவோடு பிரமசமாஜம் சிறிது தளர்ச்சியடைந்தது. அவ்வேளையில் அதன் தலைவரான தேவேந்திரநாத் தாகூர் அதற்குப் புத்துயிர் அளிக்க முற்பட்டு, பிரமசமாஜ உறுப்பினருக்குத் தீக்ஷை வழங்கல், தமது 'தத்துவபோதினி பத்திரிகா' என்ற சஞ்சிகைமூலம் சமாஜப்பிரசாரங்களை மேற்கொள்ளல், வேதம் கடவுளால் இயற்றப்பட்டது என்பதை வலியுறுத்தல், விதவாவிவாக ஒழிப்பு, பாலிய விவாகம், சாதி வேறுபாடு என்பவற்றை மறுக்காமை என்ற கோட்பாடுகளை வலியுறுத்தினார். இவரின் பழைமை வாதங்களும், சீர்திருத்தங்களை ஏற்காமையும் இளைஞரான சமாஜஉறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளமுடியாதனவாய் இருந்தன. எனவே அவர்களை விலக்கிவைத்துத் தேவேந்திரநாதர் சமாஜத்தைத் தூய்மை செய்ய முற்பட்டபொழுது பிளவு ஏற்பட்டதை அவரால் தவிர்க்கமுடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளவுக்குக் காரணமாய் இருந்தவர் தேவேந்திரசென் என்பவர். அவர் 'இந்தியப்பிரமசமாஜம்' என்ற புதியதோர் அமைப்பை உருவாக்கினார். தம்மை இப்புதிய சமாஜத்தினின்றும் வேறுபடுத்தத் தேவேந்திரநாதரும் அவரைச் சார்ந்தோரும் தமது சமாஜத்தை ஆதி பிரமசமாஜம் என அழைத்தனர். எனினும் பழைமைவாதிகளான இவர்களால் ஆதி பிரமசமாஜத்தைக் கட்டிக்காக்க முடியவில்லை. அதுமிக விரைவில் மறைந்துபோயிற்று.

கேசவ சந்திரசென்னின் இந்திய பிரமசமாஜமோ அவரின் ஆற்றல் நிறைந்த தலைமையில் உயிர்த்துடிப்புடன் செயற்படலாயிற்று. வங்காளத்தில் மட்டுமன்றி இந்தியாவில் பல பகுதிகளிலும் அதற்குக் கிளைகள் அமைந்தன. இவை எல்லாமாக 54 என்பர். வீதிபஜனைகள், சொற்பொழிவுகள் மூலம் 'இந்தியப் பிரமசமாஜம்' மக்களோடு நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திச் செயற்படலாயிற்று. தாழ்த்தப்பட்டோர், சமுதாயத்தின் கொடுமைகளுக்கு ஆளானோர், அடிமை நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு அவர்களின் அல்லல்களினின்றும் நிவர்த்திபெற இந்திய பிரமசமாஜம் மிகவும் உதவிற்று. ஆதி பிரமசமாஜம்போல வறட்டுத்தனமான தியானத்தோடு அமைந்துவிடாது, அன்புவழியான பத்திநெறிக்கு அது முதன்மையளித்தமையும் அது மக்களிடையே செல்வாக்குப் பெற வழிவகுத்தது. 1877இல் கேசவசந்திரசென் பாலிய விவாகத் தடைச்சட்டத்தை அரசு ஏற்படுத்தக் காலாய் அமைந்தார். ஆண்கள் பலதார மணம் செய்வதை ஒழித்தல், கலப்பு மணத்தை ஊக்குதல், விதவா விவாகத்திற்கு வழியமைத்தல் என்பன இந்திய பிரம சமாஜத்தின் செயற்றிட்டமாயும் அதன் தலைவரான கேசவசந்திரசென்னின் வாழ்வுக் குறிக்கோளுமாயின எனினும் துரதிஷ்டவசமாக அவர் தமது 48ஆவது வயதில் மறைந்தபொழுது, இந்தியப்பிரமசாமாஜத்துக்கும் ஆதிபிரமசமாஜத்தின் கதியே ஏற்பட்டது. அதன் இடத்தில் சாதாரணபிரம சமாஜம், எனப் புதியதொரு சீர்திருத்த நிறுவனம் தோன்றி, பிரமசமாஜக் கிளைகளையெல்லாம் தன்னோடு இணைத்துக்கொண்டு செயற்படலாயிற்று.

சாதாரண பிரமசமாஜம், ஆதி பிரமசமாஜத்தினது சமயதத்துவநோக்கையும் இந்திய பிரமசமாஜத்தின் பக்திநெறிப்போக்கையும் முதன்மைப்படுத்தாது, சமூகசீர்திருத்தப்பணிகளிலேயே தன்னை அதிகம் அதிகமாக ஈடுபடுத்திக்கொண்டது. பெண்கள் முகத்திரை இடுவதாகிய பர்தா வழக்கத்திற்கு எதிராகப் பிரசாரம், சாதிகளிடையே சமபோசனம், பொதுவைபவங்களிற் சாதிவேறுபாடு காட்டாமை, கடல் கடந்து செல்வதால் சாதியாசாரம் போய்விடும் என்ற நம்பிக்கையைக் களைதல் (ஆதிபிரமசமாஜமும், ஆரிய சமாஜமும் இந்நம்பிக்கையைக் களைவதில் தாமும் ஈடுபட்டன என்பது குறிப்பிடத்தக்கது.) முதலான பல்வேறு சமூகசீர்திருத்தங்களை அமைதியாகவும் நிதானமாகவும் மேற்கொண்டது. எனினும் இந்துக்களிடையே உறுதியாக நிலைபெற்றுவிட்ட விக்கிரக வழிபாட்டையும் பல்லிறைக் கோட்பாட்டையும் எவ்வளவோ முயன்றும் சாதாரண பிரமசமாஜத்தால் வெற்றி பெறக்கூடவில்லை.

கேசவசந்திரசென் தமது வாழ்நாட் காலத்திலே 1867இல் மகாரஜ்டிரத்தில் 'பிரார்த்தனை சமாஜம்' என்ற ஒன்றினை நிறுவினார். இதற்குப் 'பிரமசமாஜம்' என்ற பெயர் வழங்கப்படாமைக்கான காரணம் 'பிரமசமாஜம்' என்பது புதியதொரு மதத்தினரையோ பிரிவையோ குறிப்பது என்று மகாராஷ்டிரர் கருதி அப்பெயரினை ஆதரிக்காமையேயாகும். அதனோடு பாரம்பரியமான இந்துமத அநுசாரங்களில் இருந்து விலகவும் பிரார்த்தனை சமாஜம் தயாராயிருக்கவில்லை. மகாராஷ்டிரத்தில் நாமதேவர், துக்காராம், இராமதாசர் முதலாம் பக்திப் பாவாணர் வழியினைப் பின்பற்றுவதிலேயே 'பிரார்த்தனை சமாஜம்' நாட்டங்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் சமபோசனம், பெண்சமத்துவம், விதவா விவாகம் என்பவற்றில் அது கூடிய ஈடுபாடு காட்டத்தவறவில்லை.

பிரார்த்தனை சமாஜத்தின் தொடக்ககாலத்தில் இருந்து அதன் தலைவராய் விளங்கியவர் மகாதேவ கோவிந்தரானடே என்ற நீதிபதியாவர். இந்தியத் தேசியக் காங்கிரசின் நிகழ்ச்சி நிரலிற் 'சமூகமாநாடு' கூடுதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டதோடு மகாராஷ்டிரத்தின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவரும் ரானடேதாம்.

பிரமசமாஜத்தைத் தொடர்ந்து ஆரிய சமாஜம் உருவாகி அது தேசிய உணர்வுக்கு முதன்மையளித்து, மீண்டும் வேதகாலத்துக்குத் திரும்புங்கள் என்று குரல் கொடுத்தது. இதன் எழுச்சியும் தொடர்ந்து மேலோங்கிய தேசவிடுதலைப் போராட்டமும் பிரம சமாஜங்களின் செல்வாக்குப் படிப்படியாகத் தளர்ந்துபோகக் காரணங்கள் ஆயின எனலாம்.

(14) மகாத்மாகாந்தி (1869 – 1948) இந்துசமயாசாரங்களும் ஒழுக்கச் சீர்மையும் நிறைந்த ஒரு குடும்பத்திலே தோன்றியவர். இவரின் தந்தையான காபாகாந்தி தமது கொள்கையிலே எவ்வளவுக்கு எவ்வளவு உறுதியானவரோ அந்த அளவிற்குப் பிறர்தீமை கண்டு பொங்கி எழாது தாமே அதற்காக வருந்தி மன்னிப்பைக் கோருபவருக்கு பெருந்தன்மையோடு மன்னிப்பருளும் சுபாவத்தினர். (காந்தி சிறுவராய் இருந்தபொழுது தாம் செய்த குற்றங்களுக்காக வருந்தி அவற்றைக் கடித உருவில் தந்தைக்கு எழுதிக்கொடுத்த பொழுது மகனைத் தண்டிக்காது தாமே கண்ணீர்விட்டு வருந்தி அதன்மூலம் மகனைத் திருத்தியவர்) தாயோ, திருவள்ளுவர் கூறிய

உற்றநோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்தின் உரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஈரிலட்சியங்களையும் தம் உயிர்நாடிகளாகக் கொண்ட உத்தமி. விரதமும் வழிபாடும் மிகவும் உறுதியாகக் கொண்ட தாயின் சீலமும் தகப்பனின் கருணையுள்ளமும் காந்திக்கு முதுசொமாகக் கிடைத்தவை எனலாம்.

காந்தி இந்துமதத்தை மட்டுமன்றிக் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களையெல்லாம் நன்கு அறிந்திருந்ததால், ஈஸ்வரன், அல்லா என்ற பெயர்களால் வழங்கப்படுபவர், ஒரே கடவுள் தாம் என்ற உறுதிப்பாட்டோடு சமய சமரசம் பேணியவராயினும் தாம் இந்து என்பதில் பெருமையும் அம்மதக் கோட்பாடுகளில் மிகுந்த நம்பிக்கையும் கொண்டிருந்தார். நாளாந்தம் நடத்தும் பிரார்த்தனையில் இருந்து இறக்கும் நாள்வரை அவர் தவறியதேயில்லை.

'சத்தியமே வெற்றி' என்ற உபநிடத வாக்கியத்தில் சிறுவயதிலேயே அழுத்தமான நம்பிக்கை அவருக்கு இருந்தது. தம்மைத் தீயவன் என்பதைக் கேட்டு, அவர் பொறுத்தாலும் உண்மையில் இருந்து தவறியவன் என்பதைக்கேட்க ஒருப்படாத சத்தியவாதியாக அவர் விளங்கினார். அரிச்சந்திரன் நாடகத்தால் உருவான இந்தக் குறிக்கோளை வாழ்நாள் முழுவதுமே கடைப்பிடித்துத் தமது வாழ்க்கையையே சத்தியத்தின் சோதனைக்களமாக ஆக்கியவர் மகாத்மாகாந்தி.

> "சத்தியமே கடவுளை அடையும் வழிஎன்று இதுநாள்
> வரை நம்பிவந்தேன். இன்றோ சத்தியமே கடவுள் என்று
> முடிவு செய்துவிட்டேன். ஆம் சத்தியம் வேறு- கடவுள் வேறு
> என்று என்னால் கருதவேகூடவில்லை"

என்பது அவர் கூற்று.

உலகில் அரசியற் போராட்டங்கள் எப்பொழுதுமே இரத்தம் சிந்தும் ஆயுதப்போராட்டங்களாகவே நிகழ்ந்து வந்தன. இப்போராட்டத்திற்கு இந்துக்களும் விதி விலக்கானவர்கள் அல்லர். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னவர் எனப் போற்றப்படும் பாலகங்காதரதிலகர் கூட ஆயுதம் ஏந்தி நடத்தும் தீவிரவாதத்தினையே கடைப்பிடித்தார். பகவத்கீதைக்கு விரிவுரை எழுதிய அவர், பகவானின் தூண்டுதலால் கொடியோரைக் களத்தில் குருதி சிந்தவைத்து அழிப்பதையே அருச்சுனன் மேற்கொண்டான், என விளக்கமளித்தார். ஆனால் அதே பகவத்கீதையைத் தமது அகிம்சைப் போருக்கு ஆதாரமாகக் கொண்டவகையில் மகாத்மா காந்தி இந்து அற நெறிக்குப் புதுவிளக்கம் அளித்தார் என்று கொள்ளலாம். "துப்பாக்கி ஒருவனுடைய உயிரை வாங்கவே உதவும். அது ஒருவனுக்கு உயிரை வழங்குமா?" என்பதே அவர் கேள்வி. மனித உயிரை மதித்து மனிதனின் தீமைகளைத் தமது அஹிம்சையால், அவன் உணருமாறு செய்து அத்தீமைகளை அழிப்பதேயன்றி அவனை அழிப்பதோ அவன் உடலுக்கு ஊறுவிளைவிப்பதோ இந்து தருமத்துக்கு எதிரானவை என்று அவர் உறுதியாக நம்பினார். ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் போராடிய காலத்திலும் அவர்களின் ஆதிக்கக் கொடுமைகளை எதிர்த்தாரேயன்றி ஆங்கிலேயரை அவர் என்றும் வெறுத்ததில்லை. இவ்வகையில் இந்துசமயத்துக்கு அதன் சிந்தனைக்குப் புதிய வாழ்வளித்தவர் அவர் என்பதை மறுக்கவியலாது.

வருணப்பாகுபாடு பற்றிய கொள்கையானது மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்த இந்து சமுதாயத்தில் அதன்கொடுமைகளை நேரிற் கண்ட மகாத்மாகாந்தி அதனை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு போராடினார்.

"வருண தருமம் அது தோன்றிய கால வாழ்க்கை முறைக்கு (மனுவாழ்ந்த கால நெறிமுறைக்கு)ப் பொருத்தமாய் இருந்திருக்கலாம். ஆனால் அது இக்காலத்திற்கு எவ்வகையிலும் பொருந்தாது என்பதால் வருணத்தின் பேரால் சாதி உயர்வு, தாழ்வைக் கடைப்பிடித்தல் தவறாகும்." என்பது அவரின் கொள்கை. 'கடையனுக்கும் கதிமோட்சம்' என்ற ஆங்கில நூலைப்படித்ததிலிருந்து "எல்லாத் தொழிலுமே சமமானவை, ஒரு நியாயவாதியின் தொழிலுக்கு, சாதாரணதொழிலாளியின் தொழில் பயன்பாட்டில் எவ்வகையிலும் தாழ்ந்ததன்று. எனவே தொழிலின் பயனை இருவரும் சமமாய் அனுபவிப்பதும், சமூகத்தில் சமமாகக் கருதப்படுவதும் அவசியமானவை." என்ற அந்நூற் கருத்து அவரின் மனத்தை மிகுதியும் கவர்ந்தது. அக்காலம் தொடக்கம் தொழிலால் உயர்வு தாழ்வு கற்பித்தல் என்ற மனப்பான்மை அவரைவிட்டுப் போயிற்று.

மேற்படி நிகழ்ச்சி அவர் தென்னாபிரிக்காவில் வாழ்ந்தபொழுது நிகழ்ந்ததாகும். அக்காலத்தில் இருந்து தமது வீட்டிலே தோட்டி வேலையையும் தாமே மனமுவந்து செய்ததோடு, தமது மனைவியான கஸ்தூரிபாயையும் அவ்வாறு செய்ய வற்புறுத்தினார். இதனால் மனைவி கணவனுக்கிடையே சச்சரவு ஏற்பட்டதையும் அவர் பொருட்படுத்தவில்லை. இந்தியா வந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்திலே தம்முடன் தொண்டாற்றி ஒரு குடும்பமாய் வாழ்ந்தோரையும் இத்தகைய தொழில்களில் ஈடுபடுத்தி அவர்களின் மனங்களில் இருந்து தொழிலில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனநிலையைப் போக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் சாதிக்கட்டிறுக்கம் தொடர்ந்தும் இந்துக்களாலே கடைப்பிடிக்கப்பட்டே வந்தது. சமூகவைபவங்களிலும் நாளாந்த வாழ்விலும் உயர்ந்த சாதியார் தாழ்த்தப்பட்டோர்களை மிகவும் கொடுமையாக நடத்தினார்கள். இவையாவிலும் பெருங்கொடுமை எல்லாக் குழந்தைகளுக்கும் தந்தையாகிய இறைவன் எழுந்தருளிய ஆலயங்களினுள்ளே தீண்டப்படாதவர் சென்று வணங்க உயர் இந்துக்கள் அனுமதிக்காமையே. இந்த அறியாமை நிறைந்த கொடுமையைப் போக்கிடத் தாழ்த்தப்பட்டோரை 'ஹரியின்மக்கள்' எனப்பொருள்படும் 'ஹரிஜனங்கள்' என்று அழைத்ததோடு, அவர்களை ஆலயத்துட் பிரவேசிக்க வகைசெய்வதிலும் காந்தி மிகத்தீவிரமாக ஈடுபட்டார். ஹரிஜனங்களைப் பிரவேசிக்க அனுமதிக்காத கோயில்களுக்குத் தாமும் செல்வதில்லை என்று பிரகடனம் செய்தார். மக்களால் தெய்வம் போலவே மதிக்கப்பட்ட மகாத்மாவிற்கு மதிப்பளித்துப் பல ஆலய உரிமையாளர்கள் ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்துவிட்டார்கள்.

காந்தி தாம் செய்யாத ஒன்றைப்பிறர் செய்யவேண்டும் என்று வற்புறுத்தியதில்லை. கொள்கையளவில் மட்டுமன்றி மனப்பூர்வமாகவே 'மாந்தரில் உயர்வு தாழ்வு கற்பிப்பது மாசு' என நம்பி அதனைச் சொல்லுக்குச் சொல் கடைப்பிடித்து இந்துசமய சீர்திருத்தத்திற்கு வழிவகுத்தவர் ஆவர். ஹரிஜனங்களோடு சமமாக உண்டார், பெண் குழந்தை இல்லாத அவர் ஹரிஜனக் குழந்தை ஒன்றைத் தமது குழந்தையாகவே வளர்த்து அக்குழந்தைக்கு வாழ்வளித்தார். தம் நண்பராகிய ராஜாஜியின் மகளுக்குத் தமது மகன் தேவதாஸ் காந்தியை மணஞ்செய்துவைத்து, கலப்பு விவாகத்துக்கு வழிகாட்டினார். ஹரிஜனங்களின் மலத்தை எடுத்துத் தூய்மை செய்தும் வழிகாட்டினார்.

ஆச்சிரம தருமம் என்னும் வாழ்க்கை நிலை இந்துக்களின் இலட்சியமாய்க் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்றாகும். அவற்றுள் பிரமச்சரியம் முதலானது மட்டுமன்றி முதன்மையானது என்பதும் காந்தியின் கருத்தாய் இருந்து வந்தது. கணவன் மனைவி என்போர் இல்வாழ்க்கையில் உடன்பிறந்தார்போல வாழ்தல் வேண்டும். குழந்தைப் பேற்றுக்காக மட்டுமே பாலுறவு கொள்ளலாம். குழந்தை பிறந்தபின் இல்லறத்தில் பிரமச்சாரியத்தைக் கட்டாயமாகக் கடைப்பிடித்தல் வேண்டும். இதற்கு இல்லறப் பிரமச்சாரியம் என்று பெயர் என அவர் வற்புறுத்தினார். எல்லாநிலைகளிலும் புலனுணர்ச்சிக்கு ஆட்படாத ஒழுக்கமே சிறந்தது என்பதும் அவ்வொழுக்கங்களுக்கெல்லாம் மிக உயர்ந்தது இல்லறப்பிரமச்சாரியம் என்பதும் அவரின் கொள்கைகளாய் இருந்துவந்தன. தீண்டாமையை ஒழிப்பதில் மகாத்மாகாந்தி பெற்ற அளவு வெற்றியை இக்கோட்பாட்டில் அவர் பெறவில்லை என்பது உண்மையே. சுருங்கச் சொன்னால் மதசீர்திருத்தத்திற்கு ஆழமான ஓர் அர்த்தத்தை வழங்கி அதனைத் திரிகரணசுத்தியோடு செயற்படுத்த முன்வந்த மகாத்மாகாந்தி தமது முயற்சியில் கணிசமான வெற்றி பெற்றார் எனலாம். ஆனால் அவருடைய சீர்திருத்தக்கருத்துக்கள் நூற்றுக்குநூறு வெற்றிபெற்றன என்று கொள்ளவியலாது.

(15) 1955ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தில் நிகழ்ந்த புதைபொருளாராய்ச்சியின் பயனாகத் தமிழ்நாட்டிற்போலவே இலங்கையிலும் பெருங்கற்பண்பாடு நிலவிய ஒரு காலம் இருந்ததென்ற உண்மை புலனாயிற்று. பெருங்கற் பண்பாட்டு நாகரிகம் கி.மு.2000ஆண்டுப் பழமையானது என்பதும் அந்நாகரிகத்தில் முருகனை வழிபடும் முறைமை நிலவியது என்பதும் வரலாற்றாதாரங்களுடன் நிறுவப்பட்டுள்ளன. புத்தளத்தில் மட்டுமன்றிப் பொன்பரிப்பு, வளவகங்கைப் பள்ளத்தாக்கு, கதிரைவெளி, வல்லிபுரம் ஆகிய இடங்களிலும் பெருங்கற்பண்பாடு நிலவியதற்கான சான்றுகள் கிடைத்துள்மையால், முருகவழிபாடு அக்காலத்தில் இலங்கை முழுவதும் பரவலாக நிலவிற்று என்ற உண்மை பெறப்படுகின்றது.

முருகவழிபாடு இலங்கை வரலாற்றின் தொடக்கத்திலும் தொடர்ந்து நிலவியது. இலங்கையின் முதற் சிங்கள மன்னன் விஜயன். இவன் மனைவியான குவேனி என்ற இயக்கி இவனைக் கொல்லமுற்பட்டபொழுது கதிர்காமத் தெய்வமான கந்தகுமாரன் விஜயனைக் காப்பாற்றி அருளினான் என்று 'இராஜவலிய' என்ற இலங்கை வரலாற்று நூலிலே காணப்படுகின்றது. துட்டகைமுனு தன்பகைவனும் தமிழ் மன்னனுமாகிய எல்லாளனை வென்றால் நிறைவேற்றுவதாகக் குறித்த நேர்த்திக்கடனை, நிறைவேற்றிக் கதிர்காமக் கந்தனைத் திருப்திசெய்ததாய்க் 'கந்த உபத' என்ற சிங்கள நூல் கூறுகின்றது. கதிர்காமத்திலேயே கந்தன்வள்ளி திருமணம் நடைபெற்றது என்பது புராணவரலாறு. கந்தனுக்கும் வேடுவர்க்கும் உள்ள தொடர்பு, இன்றும் வேட்டுவ பரம்பரையினரான கப்புறாளைகள் கதிர்காமக்கோயிலில் பூசகர்களாயும் உரிமையாளர்களாயும் விளங்குவது கொண்டு உறுதிப்படுகின்றது.

முருகன் தமிழரின் பழைமையான கடவுள். வேதவழிபாட்டு மரபு ஏற்பட முன்பு முருகனுக்குப் பூதவழிபாட்டடிப்படையிலே பலியிட்டும் வெறியாடியும் அவனை வழிபட்டதற்குச் சங்கநூல்களிலே சான்று காணப்படுகின்றது. கதிர்காமம், சந்நிதி, திருக்கோயில் முதலாம் பழம்பெரும் முருகத்தலங்களிலே பலியிடும் வழக்கம் இன்று இல்லையாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியாட்டும் மௌனமான (வேத மந்திரங்கள் ஓதாது) வழிபாட்டுப் பூசையும் நிகழ்வதை நோக்கும் பொழுது இலங்கையிலே புராதனமான முருக வழிபாட்டுமுறை பெற்றுள்ள செல்வாக்கைக் காணலாம். இவற்றோடு குமார தந்திர ஆகம முறைப்படியான வழிபாடும் மாவிட்டபுரம், நல்லூர் முதலிய தலங்களிலே நிகழ்வது பழைமையோடு புதுமையும் இணைந்த முருக வழிபாட்டு முறைக்குச் சான்றுகளாகும். 15ஆம் நூற்றாண்டினராகக் கொள்ளப்படும் அருணகிரிநாதர் கதிர்காமம், நல்லூர், திருகோணமலை (கந்தசுவாமிகோயில்) ஆகிய தலங்களிலே எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகன் மீது திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையிலே சைவப்புலவராய் உள்ள பலரும் முருகனாலயங்கள் மீது தனிப்பாடல்களாயும் பிரபந்தங்களாயும் பாடியுள்ளவை எண்ணுக்கணக்கற்றவை.

இலங்கையில் உள்ள சைவ ஆலயங்களிலே பெருமளவு சிறப்பும் செல்வ வளமும் பக்தி நலமும் அமைந்தவையாக முருகனாலயங்களே விளங்கக் காணலாம். மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் சரித்திரப் பிரசித்திபெற்ற பிரதான முருகத் தலங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. சந்நிதிக்கந்தன் அன்னதானக் கந்தனாய் விளங்கித்தன்னை வழிபடவரும் அடியார்களுக்கு அன்னம்பாலித்து அருளும் பாலிப்பது யாவரும் அறிந்ததே. நேரந்தவறாத பூசைக்கிரமம், சூழலெங்கும் பரிசுத்தம், பிற ஆலயங்களுக்கெல்லாம் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றால் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இலங்கையில் மட்டுமன்றித் தமிழ்நாட்டிலும் புகழ்பெற்று ஒளிர்கின்றது. மற்றும் கிழக்கு மாகாணத்துத் திருக்கோயில் முருகப்பெருமான் அங்குள்ள மக்களின் நலந்தீங்குகளில் எல்லாம் பங்குகொண்டு அருள்பாலித்து வருகின்றார்.

கந்தன் கலியுகவரதன். இன்று நடந்து கொண்டிருப்பது கலியுகம். எனவே முருக வழிபாடு பெரும்பான்மையான சைவ மக்களால் கடைப்பிடிக்கப்பட்டுவருவது வியப்பிற்குரிய ஒன்றன்று. கந்தசஷ்டி முதலாம் கடுமையான விரதங்களை அநுட்டிப்பது, ஆட்டக்காவடி தொடக்கம் தூக்குக்காவடி, பறவைக்காவடி என்ற பலவகைக் காவடிகள் எடுப்பது அங்கப்பிரதட்சணம் செய்வது முதலாக முருக வழிபாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களும் முறைதவறாது கதிர்காமம், நல்லூர், மாவிட்டபுரம், சந்நிதி, திருக்கோயில் ஆகிய தலங்களிலே இடம்பெற்றுவருகின்றன.

ஈழத்துச் சைவ மக்கள் தமக்கு இட்டுவழங்கும் பெயர்களிலே பெரும்பாலானவை, ஆண்களாயின் முருகனின் திருநாமங்களாகவோ, அவனது வேல், மயில் முதலியவற்றோடு இணைந்த பெயர்களாகவோ, பெண்களாயின் வள்ளி, தெய்வயானையோடு தொடர்பான பெயர்களாகவோ விளங்குவதும் விசேடித்துக் கூறவேண்டுவதேயாகும்.

இலங்கையிலே சிறப்பாக யாழ்ப்பாணத்திலே நிலவும் கலாசாரம், கந்தபுராண கலாசாரம் என்பர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. கந்தசுவாமியின் திரு அவதாரம் தொடக்கம் அவர் சூரபன்மனாதியரை வதைசெய்து தெய்வானை, வள்ளி ஆகிய சக்திகளைத் திருமணம் செய்துள்ள வரலாற்றினைப் பன்னீராயிரத்துக்கு மேற்பட்ட திருப்பாடல்களால், காஞ்சிக்குமரகோட்டத்து அருச்சகராயிருந்த கச்சியப்ப சிவாச்சாரியார் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு இயற்றியருளினார். முருகப்பெருமானின் வரலாற்றோடு சைவசித்தாந்த அறிவின் களஞ்சியமாகவும் புறச்சமயங்களின் குறைகளை எடுத்துக்காட்டிச் சைவத்தின் பெருமையை நிலைநாட்டும் கருவூலமாகவும்விளங்குவது கந்தபுராணம். இது தோன்றிய தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலேயே அதிகமான சைவசமயிகளால் பக்திக்கனிவோடு படிக்கப்பட்டும் அந்தத் தெய்வீகபுராணம் காட்டும் வழியிலே அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டும் வருவதால் யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம் நிலவுகின்றது என்ற கூற்று முற்றிலும் பொருந்துவதே.

முருகனாலயங்களில் மட்டுமன்றிச் சிவாலயங்கள் பலவற்றிலும் முற்காலத்தில் கந்தபுராணத்தைப் படனம் செய்யும் வழக்கம் நிலவியது. கந்தபுராணப் பாடலை ஒருவர் இசையுடன் படிக்க, அவர் எந்த இராகத்தில் அப்பாடலைப் படிக்கின்றாரோ அதே இராகத்தில் மற்றொருவர் உரை கூறுவதே புராணபடனம் என்பதாகும். நாவலர் அவரின் மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை முதலிய சைவப்பெரியார்கள் சென்ற நூற்றாண்டிலே கந்தபுராணபடன மரபினை மிகச்சிறப்பாகக் கடைப்பிடித்துச் சாதாரண மக்களிடையேயும் சைவசமய அறிவினை, பக்தியைப் பரப்பினர். புராணபடனமே யாழ்ப்பாணத்திலே தான் தோன்றியது என்பர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. அஃதெவ்வாறாயினும் புராணபடன மரபு இன்று இங்கு அருகிவருவது கவலைதருவதாகும். மீண்டும் புராணபடன மரபிற்குப் புத்துயிர் அளிக்கவேண்டியது சைவப்பெரியார்களின் அவசிய கடமை என்பதற்கு ஐயமில்லை.

தொகுத்துக் கூறுவதாயின் இலங்கையில் முருக வழிபாடு இனமதங்கடந்து சைவத்தமிழ் மக்களால் மட்டுமன்றிச் சிங்கள பௌத்த மக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனலாம். (சிங்களவர் முருகனைக் 'கந்ததெய்யோ' என அழைத்துப் பக்தி சிரத்தையுடன் வழிபட்டுவருகின்றனர். பௌத்தவழிபாட்டு இடங்களில் முருகனும் எழுந்தருளி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்சேர்க்கை

இந்துநாகரிகம் 11 மாதிரி வினாத்தாளிலே சுருக்க வினாக்களுக்கு நான்கு வகையான உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

உதாரணம் 1 பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக:

இதன்கண் ஒவ்வொரு வினாவுக்கும் 5 விடைகள் தரப்பட்டுப் பொருத்தமானதைத் தெரிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

உதாரணம் 11 பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புக:

ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வோர் இடைவெளி நிரப்பப்படவேண்டும்.

உதாரணம் 111 சுருக்கமான விடை தருக:

ஒரு சொல்லிலோ இரண்டு, மூன்று சொற்களிலோ விடை அளித்தல் வேண்டும்.

(இவ்வகையில் இந்துநாகரிகம் 11 பகுதியிலே (இந்நூலிலே) நூறு மாதிரி வினாக்களும் விடைகளும் உள்ளன.

உதாரணம் 1V பின்வரும் விடயங்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✕ எனவும் அடைப்புக்குள் அடையாளம் இடுக.

உதாரணம் 1, 2, 3, 4 வகைகளுக்கும் இப்பிற்சேர்க்கையின் பத்துப்பத்து மாதிரி வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் தரப்படுகின்றன.

## 01) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக:

01. வேதாந்தக் கோட்பாட்டிற்கு அடிப்படையாய் அமைந்த பிரமசூத்திரத்தினை இயற்றியவர்.
1. கௌடபாதர் 2. கோவிந்தர் 3. பாதராயணர்
4. சங்கரர் 5. இராமானுசர்

02. 'உள்ளது போகாது, இல்லது வராது' என்னும் வாதம்.
1. பரிணாமவாதம் 2. சற்காரியவாதம் 3. விவர்த்தவாதம்
4. சூனியவாதம் 5. பன்மைவாதம்

03. யோகமூர்த்தியாய் எழுந்தருளித் தமது சின்முத்திரையால் முனிவர் நால்வர்க்கும் உபதேசித்தருளியவர்.
1. சோமாஸ்கந்தர் 2. உமாசகிதர் 3. நடராசர்
4. கலியாணசுந்தர் 5. தட்சணாமூர்த்தி

04. நான்கு நிலங்களுக்கும் நான்கு தெய்வங்களைக் கூறிய நூல்,
1. பரிபாடல் 2. தொல்காப்பியம் 3. திருமுருகாற்றுப்படை
4. புறநானூறு 5. குறுந்தொகை

05. 'பிரத்ய பிஞ்ஞான தரிசனம்' தோன்றிய இடம்,
1. காஷ்மீரம் 2. கர்நாடகம் 3. தமிழ்நாடு
4. ஆந்திரம் 5. வங்காளம்

06. சத்தியின் பரம்பொருளாந்தன்மையைக் கூறும் உபநிடதம்,
1. கடோபநிடதம் 2. பிரச்ன உபநிடதம் 3. கேனோபநிடதம்
4. சுவேதாசுவதர உபநிடதம் 5. பிருஹதாரணியக உபநிடதம்

07. 'வாயு புத்திரனான அனுமான் மூலம் சீவன்கள் ஈசுவரனைச்சென்று கூடுவதே முத்தி' என்று உரைத்தவர்,
1. இராமானுசர் 2. மத்துவர் 3. குமாரிலர்
4. சங்கரார் 5. நீலகண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. வடஇந்தியாவில் சூரியனுக்குக் கோயில் அமைத்த இடம்,
1. சூரியனார் கோயில்  2. வங்காளம்  3. கோனாறக்
4. ஒரிஸ்ஸா  5. மகாராஷ்டிரம்

09. பிரஸ்தானத்திரையத்துள் அடங்கியது,
1. பகவத்கீதை  2. மாண்டுக்கியக்காரிகை  3. பாரதம்
4. சிவரகசியம்  5. வேதம்

10. பிரபஞ்சத்தின் இசைவிற்கும் ஒழுக்கத்திற்கும் மூலகாரணமாகப் பிரகிருதி உள்ளது எனக் கூறும் தரிசனம்.
1. யோகம்  2. நியாயம்  3. வைசேடிகம்
4. சாங்கியம்  5. உத்தரமீமாம்சை

## 02) பொருத்தமான சொல்லைக்கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

01) மனைவியோடு வனத்திற் சென்று செபம், தவம் முதலாகிய முயற்சிகளில் ஈடுபடுவது............................................................................................எனப்படும்.
02) விநாயக வணக்கம் இந்தியாவில் முதன்மையாக இடம்பெறும் இடம்..............................................ஆகும்.
03) சக்தியை வழிபடும் முறையினைச் சங்கராச்சாரியாரின்..............................................என்ற நூலிற் காணலாம்.
04) வடிவாம்பிகை சமேத..............................................அமர்ந்தருளி அருள் பாலிக்கும் திருத்தலம் சிலாபத்தில் உள்ளது.
05) இராசேந்திர சோழன் தன் தாயாகிய..............................................யின் நினைவாகப் பொலனறுவையிற் சிவாலயம் கட்டினான்.
06) "ஒரு பொல்லாப்பும் இல்லை, நாம் ஒன்றும் அறியோம்" என்ற மகாவாக்கியத்தினை அருளியவர் ..............................................
07) ஆலயங்களை அமைக்கும் சிற்பிகளின் தலைவன்..............................................என அழைக்கப்படுவான்.
08) பிரமசூத்திரத்திற்குச் சைவசித்தாந்த அடிப்படையில் மகாபாடியம்..............................................என்பவரால் இயற்றப்பட்டது.
09) சிவதத்துவங்கள் விந்து, நாதம்.............................................., சாதாக்கியம், ஈசுரம் என்னும் ஐந்துமாகும்.
10) ஆகமத்தை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாடுபற்றியும் அமைப்புப்பற்றியும்..............................................கூறுகின்றார்.

## 03) பின்வரும் விடயங்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடைப்புக்குள் அடையாளம் இடுக.

01. ஆகமாந்தம் எனச்சைவ சித்தாந்தம் குறிக்கப்படும். ( )
02. கேவலாத்துவிதம் என்ற தத்துவக் கோட்பாட்டை இராமானுசர் நிறுவினார். ( )
03. வீரம், வாதுளம் என்பன வீரசைவத்திற்கு முதன்மையான ஆகமங்கள். ( )
04. ரிதம் என்ற உலக ஒழுக்கினைக் காப்பவன் இந்திரன். ( )
05. படைப்புப் பாடல் ஒருமைக்கோட்பாட்டின் சாரமாகும். ( )
06. அநிர்வசனீயம் என்பது வேதாந்திகள் அவித்தையைக் குறிக்கக் கையாண்ட பதம். ( )
07. 'சத்தியும் சிவமுமாய தன்மையிவ்வுலகம் எல்லாம்' எனச் சிவஞானசித்தியார் உரைக்கும். ( )
08. சுப்பிரமணியக் கடவுளின் இச்சா சத்தியாக வேல் கொள்ளப்படுகின்றது. ( )
09. பெரியபுராணம், தொகையடியார் அறுபத்துமூவரதும் வரலாற்றினை உரைப்பது. ( )
10. இருக்குவேதப் பிரமாணங்களாய் உள்ளவை ஐதரேயம்,கௌஷீதகீயம் என்னும் இரண்டுமாம். ( )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

01)
1. பாதராயனர்
2. சற்காரியவாதம்
3. தட்சிணாமூர்த்தி
4. தொல்காப்பியம்
5. காஷ்மீரம்
6. கேனோபநிடதம்
7. மத்துவர்
8. கோனாறக்
9. பகவத்கீதை
10. சாங்கியம்

02)
1. வானப்பிரஸ்தம்
2. மகாராஷ்டிரம்
3. பிரபஞ்சசாரம்
4. முன்னேச்சுரநாதர்
5. வானவன்மாதேவி
6. சிவயோகசுவாமிகள்
7. ஸ்தபதி
8. நீலகண்டசிவாசாரியார்
9. சுத்தவித்தை
10. திருமூலர்

03)
01. ✔
02. ✗
03. ✔
04. ✗
05. ✔
06. ✗
07. ✔
08. ✗
09. ✗
10. ✔

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நாகரிகம் I

## பகுதி–2

01 மகாராஷ்டிரத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள சமயம் எது?

02. வேதங்களின் கிளைகள் எப்பெயரால் அழைக்கப்படும்?.

03. உரையும் பாட்டும் இணைந்த வேதம் எது?

04. 'ரிக்' என்ற சொல்லின் பொருள் யாது?

05. இருக்கு வேதத்தில் பெரும் எண்ணிக்கையான பாசுரங்களாற் போற்றப்பட்டவன் யார்?

06. 'ஏகம் சத் விப்ரா ப.:தா வதந்தி' இம்மகாவாக்கியத்தால் வெளிப்படும் கோட்பாடு எது?

07. ஒரு தெய்வத்தை, குறித்ததொரு சந்தர்ப்பத்தில் எல்லாத் தெய்வ அமிசங்களும் பொருந்திய தலைமைத் தெய்வமாகப் போற்றும் வழிபாட்டு முறைமைக்கு மாக்ஸ்முல்லர் வழங்கிய பெயர் என்ன?

08. ஒருமைக் கோட்பாட்டினைப் புலப்படுத்தும் இருக்கு வேதப்பாடல் எப்பெயரால் வழங்கும்?

09. "செங்கதிர்த்தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம் அவன் எங்கள் அறிவினைத்தூண்டி நடத்துக" என்பதோர் சுருதி மொழி எது?

10. ரிதஸ்யகோபன் (ஒழுக்கநெறிக்காவலன்) யார்?

11. 'நீ அது ஆகிறாய்' (தத்துவம் அஸி) இவ்வாறு கூறியவர் யார்?

12. மேலேயுள்ள கூற்றில் 'அது' எனச் சுட்டப்படுவது யாது?

13. இல்லத்தில் நிகழ்த்தப்படவேண்டிய கிரியைகளை விளக்கும் நூலின் பெயர் யாது?

14. யமனுலகு சென்று அவனிடம் உபதேசம் பெற்ற சிறுவன் பற்றிக் கடோபநிடதம் கூறுகின்றது. அச்சிறுவன் யார்?

15. வேள்வியில் வழங்கும் அவியுணவினைக் குறித்த தெய்வங்களுக்குக் கொண்டு சென்று வழங்கும் தேவதூதுவன் யார்?

16. தேவரை ஈன்ற பெருந்தாய் எனக்கொள்ளப்பட்டவள் யார்?

17. பொன்வேண்டி இயற்றிய வேள்வி எது?

18. இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களையும் கற்றற்கான முறைமை எப்பெயரால் வழங்கும்?

19. வேள்வியின்போது மந்திரங்களை இசைப்பவன் யார்?

20. 'பிரமத்தை அறிபவன் பிரமமேயாகின்றான்' இவ்வாக்கியம் எந்த உபநிடதத்தில் உள்ளது.

21. விருந்தினரை உபசரிப்பதும் ஒருவேள்வியே, அவ்வேள்விக்கு வழங்கிய பெயர் யாது?

22. 'உண்மை பேசுக, தர்மத்தைக் கடைப்பிடிக்குக' – இக்கூற்று அமைந்த உபநிடதம் எது?

23. நான் பிரமம் ஆகிறேன் (அஹம் பிரஹ்மாஸ்மி) இம்மகாவாக்கியத்தில் 'நான்' என்பது யாரைக் குறிக்கும்?

24. வேதமந்திரங்களைத் தம் உள்ளொளியாற் கண்ட ஞானிகள் யார்?

25. 'பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தாலும் எஞ்சுவது பூரணமே' இக்கூற்றிலே பூரணம் என்பது எதைக்குறிக்கின்றது?

26. வேள்விகளிலே தலைமைபெற்று அவற்றை மேற்பார்வை செய்து நடத்துவிக்கும் புரோகிதனை எப்பெயரால் அழைத்தனர்?

27. முதன்மையான மூன்று பெருநூல்களுள் ஒன்று பகவத்கீதை. இம்மூன்று நூல்களும் எப்பெயரால் வழங்கும்?

28. புராணங்களின் உள்ளடக்கமான பஞ்சலட்சணங்களுள், அழிந்த உலகினை மீண்டும் படைத்தலைக் குறிக்கும் சொல் யாது?

29. சைவவழிபாட்டு முறைமைகளைக் கூறும் புராணம் எது?

30. விஷ்ணுவின் அவதாரங்களைக்கூறும் புராணங்களில் ஒன்றின் பெயர்தருக.

31. சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தினை விளக்கும் புராணம் எது?

32. "எத்துணைக்காலம் திரும்பித் திரும்பிப் படிப்பினும் கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாததும் நித்தியமானதும் அத்தியற்புத அதிமதுரத்திவ்விய வாக்காகியகந்தபுராணம்" இவ்வாறு கூறியவர் யார்?

33. சைவசமயம் சார்ந்த இதிகாசம் எனக் கொள்ளப்படுவது எது?

34. "தருமத்தைக் காக்கவும் அதருமத்தை ஒழிக்கவும் நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்" இக்கூற்று எந்த இதிகாசத்தில் உள்ளது,

35. செயலில் பற்று வையாது கடனாற்றுவதை எவ்வாறழைப்பர்?

36. 'அண்ணல் அருளால் அருளுஞ்சிவாகமம்' இந்த அடி எந்தநூலில் உள்ளது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. கோயிற்கிரியைகள் நிகழ வழிகாட்டும் வகையில் உருவாக்கப்பட்டவை யாவை?
38. ஆகமங்கள் சிறப்பித்துக்கூறும் முப்பொருள்கள் எப்பெயர் பெறும்?
39. நிலத்தை உழுது சமப்படுத்தி அளந்து சதுரமாக்கிப் பிரதிஷ்டை செய்வதனைக் குறிக்கும் சொல் யாது?
40. திருவுருவச் சிற்பநுணுக்கங்களைக் கூறும் ஆகமங்களில் ஒன்றன் பெயர் தருக.
41. தந்தையின் குருவே அத்தந்தையின் மகனுக்குச் சீடரானார். அவரது சமய ஞானத்தினைப்போற்றி வழங்கப்பட்ட பட்டப்பெயர் எது?
42. இவர் தமது குருவின் நூலுக்கு வழிநூலாய் இயற்றியருளிய நூல் எது?
43. 'சித்தாந்த அட்டகம்' என்ற பெயர் எவர் இயற்றியருளிய நூல்களைக் குறிக்கும்?
44. "பட்டகட்டையிலே பகற்குருடு போகிறது. பாருங்கள்" இது எவரின் கூற்று?
45. திருக்கைலாயஞான பரம்பரையின் அகச்சந்தான குரவர்களில் முதல்வர் யார்?
46. சுத்தமாயைக்கு வழங்கும் மற்றொரு பெயர் தருக.
47. சைவசித்தாந்தம் குறிக்கும் முப்பத்தாறு தத்துவங்களுள் ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்காகும். அவற்றுள் ஞானேந்திரியங்களுள் ஒன்று 'துவக்கு' எனப்படும். இதன் பொருள் யாது?
48. ஆணவத்தினால் மூடுண்டு தான்வேறு ஆணவம் வேறு என்ற உணர்வே இன்றி ஆன்மா நிற்கும் நிலை யாது?
49. பிறவிதோறும் செய்த கன்மங்களில் ஒரு பகுதி தொலையாது எஞ்சியிருப்பதை எப்பெயர் கொண்டு அழைப்பர்?
50. கோயிலில் அசல லிங்கம் அல்லது தூலலிங்கம் என்று எது அழைக்கப்படும்?
51. பத்திரலிங்கம் எனக்குறிக்கப்படுவது எது?
52. ஆன்மாவின் உறை அல்லது சட்டை என ஐந்து வகைகள் கூறப்படுகின்றன. இவ்வைந்தும் எப்பெயரால் வழங்கும்?
53. 'தாடலைபோற் கூடுதல்' இச்சொற்றொடர் தாள் தலை எனப்பிரிவுண்ணும். இவற்றில் தலை எதனைக் குறிக்கிறது.
54. 'ஒன்றும் அன்று இரண்டும் அல்ல' எனப் பொருள்படும் அத்துவிதம் பெறும் அடை மொழி யாது?
55. சங்கரவேதாந்திகள் மாயை சொல்லால் விளக்கவொண்ணாதது. எனப் பொருள்படும் சொற்றொடர் ஒன்றைக் கையாள்வர். அது யாது?
56. ஒன்றைப் பலவாகத் தோற்றுவிக்கும் அறியாமை எது?
57. வேதாந்த சூத்திரம் எனப்படுவது எது?
58. ஒன்று பிறிதொன்றாகத் தோன்றுவதாய் வாதிக்கும் வாதத்திற்கு என்ன பெயர்?
59. பிரபஞ்சத்தின் இசைவுக்கும் ஒழுங்கிற்கும் மூலகாரணமாய் உள்ளது பிரகிருதி என்பார் யார்?
60. காரணத்திலிருந்து காரியம் தோன்றும் என்பதை மறுக்கும் வாதம் எது?
61. 'உள்ளது போகாது, இல்லது வராது' இவ்வாதம் என்ன பெயர் பெறும்?
62. "அறிவற்ற ஆன்மா மனத்தோடு கூடும்போது அறிவுபெறுகின்றது" என வாதிப்போர் யார்?
63. நிர்க்குணப்பிரமமே உண்மையானது என்ற ஞானத்தைப்பெற்று இவ்வுலகில் உடலுடன் வாழும்போதே முத்திநிலைக்கு தகுதி பெற்றோர் யார்?
64. உடல் நீங்கியபின் முத்திக்குத் தகுதியடைவது எப்பெயரால் வழங்கும்?
65. "உலகிற்கு நிமித்தகாரணம் இறைவன். அவர் அரசர்போல உயிர்களை ஆண்டுவருகின்றார்" என வாதிடும் தரிசனம் எது?
66. கனவுலகும் திரிபுக்காட்சிகளும் குறிக்கும் நிலை எது?
67. சொரூபம் என்று சைவசித்தாந்தங்கள் குறிப்பிடும் சிவனின் கடந்த நிலைக்குச்சமமானதாய் வேதாந்திகள் கையாளும் சொற்றொடர் எது?
68. இல்லாத ஒன்றை தோற்றுவிக்கும் இயல்பு எது?
69. இராமானுசர் பிரம்மசூத்திரத்திற்கு எழுதிய பேருரை எப்பெயரால் வழங்கும்?
70. காரணமாகிய பிரமமும் காரியமாகிய உலகமும் உண்மையானவை என்னும் வாதம் எது?
71. அசித்து, சித்து, ஈசுரன் என்ற முப்பொருளையும் உள்ளடக்கி அவற்றை எப்பெயரால் வழங்குவர்?
72. ஈசுவரன், சீவன்கள், உலகம் பிரிக்கொணதவாறு ஒன்றாகி நிற்கும் நிலைக்கு என்ன பெயர்?
73. முதற்பொருளுக்கும் அதன் பகுதிகளுக்குமிடையேயான வேறுபாட்டை இராமானுசர் எவ்வாறழைப்பர்?
74. நித்திய முத்தர் என்போர் யார்?
75. கீழ்நிலைச் சீவாத்துமாக்கள் எவை?
76. சங்கரர் உலகம் சத்தும் அன்று அசத்தும் அன்று என்பதனைக் குறிக்கக்கையாண்ட சொற்றொடர் எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. இறைவனிடமே முற்றாகச் சரணடையும் பத்திமார்க்கத்தை வைணவர் எப்பெயரால் அழைப்பர்?
78. மாதவாச்சாரியாரின் மறுபெயர் யாது?
79. பூர்வமீமாம்சை எதற்கு முக்கியத்துவம் அளிக்கும்?
80. மாதவாச்சாரியரின் தத்துவக்கோட்பாடு எது?
81. இறைவன், ஆன்மா, சடம் ஆகிய மூன்றினிடையிலும் மத்துவர் காட்டும் வேறுபாடுகள் எத்தனை?
82. ஈசுவரனுக்கும் சடத்துக்குமிடையிலான பேதம் எது?
83. ஈசுவரனுக்கும் சீவனுக்குமிடையிலான பேதம் எது?
84. இறைவனை அடையும் ஒரே மார்க்கம் என மத்துவர் எதனைக் கொள்வர்?
85. இயல்பாகவே ஞானமும் ஆனந்தமும் உடைய சீவன்கள் எவற்றோடு சம்பந்தப்படுவதால் அவற்றை இழக்கின்றன?
86. மத்துவர் நோக்கில் முத்தர் எனப்படுவோர் யார்?
87. அவர் நோக்கில் பெத்தர் என்போர் யார்?
88. ஈசுவரனின் திருமேனியுட் புகுந்து அவரது பேரானந்தத்திற் பங்கு கொள்ளும் முத்திநிலைக்கு அவர் வழங்கிய பெயர் யாது?
89. சீவன்களிற் சில எக்காலத்திலும் வீடுபேற்றை அடையமாட்டா என்ற மத்துவரின் முடிவுக்குக் கிறிஸ்தவ சமயச் செல்வாக்கே காரணமாகலாம் எனக் கூறியவர் யார்?
90. சண்மதப் பிரதித்தாபகர் எனக் கொள்ளப்படுபவர் யார்?
91. கணபதிக்கு எல்லாமாக எத்தனை மூர்த்தங்கள் உள்ளன?
92. 'நீலமேனி வாலிழைபாகத்தொருவன்' என்று சிவபெருமானைப் போற்றும் பாடலடி எந்த நூலில் காப்புச் செய்யுளில் உள்ளது?
93. தமிழ்க் கொற்றவையை எந்த நிலத்துக்குத் தெய்வமாகக் கொண்டனர்?
94. 'சத்தியும் சிவமுமாய தன்மையில் உலகமெல்லாம்' இப்பாடலடி எந்நூலில் உள்ளது.
95. விட்டுணு (விஷ்ணு) என்ற சொல்லின் பொருள் யாது?
96. படைக்கப் பட்ட சீவராசிகள் யாவினுள்ளும் தோன்றாத்துணையாய் நின்று அருள்பாலிப்பதை எவ்வாறழைப்பர்?
97. சங்ககால நூல்கள் எனக் கொள்ளப்படுவனவற்றில் முருகனின் அவதாரவரலாற்றைக் கூறும் இரு நூல்கள் அடங்கும் அவற்றுள் ஒன்றின் பெயர் தருக.
98. பெருங்கற் பண்பாட்டுக்காலத்தில் முக்கியத்துவம் பெற்ற வழிபாடு எவருடன் தொடர்பானது?
99. குமரக் கடவுளின் கோயிலமைப்பு, பூசைவிதிகள் என்பவற்றைக் கூறும் ஆகம நூலெது?
100. சூரியனுடைய திருவுருவ அமைப்புப்பற்றி விரித்துரைக்கும் சிற்பசாஸ்திர நூல் எது?

## இந்து நாகரிகம் 1
## பகுதி-2

01 **"வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு" - மணிவாசகர்**

அ) வேதகால வழிபாட்டில் வேள்வி பெற்ற இடத்தினைக் கூறுக.

ஆ) இல்லத்தில் நடந்த சிறிய வேள்விகள் பற்றி விளக்குக.

இ) அரசர்கள் நடாத்திய பெருவேள்விகள் பற்றிய விபரம் தருக.

ஈ) வேள்விகளை நடத்திய புரோகிதர்களின் பங்களிப்பினைத் தருக.

02. **'தெய்வம் ஒன்றே, ஞானிகள் அதனைப் பல பெயர்களால் வழங்குவர்!' - இருக்கு வேத வாக்கியம்.**

அ) பல்லிறைக் கோட்பாடென்றால் என்ன?

ஆ) வேதகாலத் தெய்வங்களுள் முதன்மை பெற்ற மூன்று தெய்வங்கள் பற்றிக் கூறுக.

இ) ஓரிறைக் கோட்பாட்டை விளக்குக.

ஈ) வேதகாலத்தில் பெண் தெய்வங்கள் பெற்ற இடம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. “அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர். . . . – திருஞானசம்பந்தர்

அ) வேதாங்கங்கள் எத்தனை? அவை எவை.

ஆ) அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக.

இ) வேதாங்கங்களைக் கற்பதன் பயன் யாது?

ஈ) அங்கமும் வேதமும் ஓதுதல் என்பதன் பொருளைச் சுருக்கமாக விளக்குக.

04. **“ரிஷிகளது மெய்யுணர்வின் உச்சம் உபநிடதங்களிற் காணப்படுகிறது”**

அ) உபநிடதங்களை வேதாந்தம் என்பதேன்?

ஆ) உபநிடதங்கள் 'மறை' என்ற பெயருக்குப் பொருத்தமாய் அமைவது எங்ஙனம்?

இ) உபநிடதங்களைச் சாந்தி பாடங்கள் என்பது பொருந்துமா?

ஈ) உபநிடதங்களின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகத் தருக.

05. **“இவ்வாத்மன் மிக நுட்பமானதாயும் உள்ளுறைகின்றதுமாயிருக்கிறது. அது இருதயக் குகையில் மறைந்திருக்கிறது. ஆகையால் இவ்வாத்மனை அறிவது கடினம்.” கடோபநிடதம்.**

அ) உபநிடதங்களில் ஆத்மா பற்றிக் கூறப்படுவனவற்றைச் சுருங்கத் தருக.

ஆ) ஆத்மாவும் இறைவனும் ஒன்றா வேறா?

இ) பிரபஞ்சத்துக்கும் ஆத்மாவுக்குமிடையேயான தொடர்பு யாது?

ஈ) பிரபஞ்சத்துக்கும் இறைவனுக்குமிடையேயான தொடர்பை உபநிடதங்களில் காட்டப்படும் வகையினைச் சுருங்கத் தருக.

06 **“இல்லத்தலைவன் வேட்ட சிறிய மனைவேள்விகள் பிற்கால இந்துமதத்தில் முதன்மை பெற்றிருந்தனவாதல் வேண்டும். ஆயின் அவற்றை விபரிக்கும் மிகப்பழைய நூல்கள் காலத்தால் சாலவும் பிற்பட்டவையான கிருகிய சூத்திரங்களேயாம் ”**

– A. L. பசாம்

அ) கிருஹிய சூத்திரம் என்றால் என்ன?

ஆ) அதன் வகை தொகைகளைத் தருக.

இ) கிருஹிய சூத்திரத்தின் உள்ளடக்கம் யாது?

ஈ) அவை பெறும் முக்கியத்துவம் யாது?

07. **“இந்துசமயம் பற்றிய விளக்கத்திற்குத் துணைபுரியும் சம இலக்கியவரிசையில் பதினெண் புராணங்கள் குறிப்பிடத்தக்கன” – ப.கோபாலகிருஷ்ண ஐயர்**

அ) மகா புராணங்களுக்குரிய பத்துப்பண்புகள் பற்றிச்சுருக்கமான விளக்கம் தருக.

ஆ) உபபுராணங்கள் யாவை? அவற்றின் இலக்கணங்கள் எவை?

இ) வரிசை ஒழுங்கிற் புராணங்களின் பெயர்களைத் தந்து அவற்றுள் எவை எவை எவ்வெக்கடவுளர்க்குரியவை என்று காட்டுக.

ஈ) தென்னாட்டுத் தமிழ்ப் புராணங்களில் இடம்பெறும் சிறப்பம்சங்கள் எவை எனச் சுருக்க விளக்கந்தருக.

08. **“பஞ்சமகாயக்ஞம் எனப்படும் ‘ஐம்பெரும் வேள்விகளை’ ஒழுங்காக ஆற்றலும் அறத்தின்பாற்பட்டன”** – **A. L.** பசாம்

அ) பஞ்சமகாயக்ஞங்கள் யாவை?

ஆ) அவை பற்றிச் சிறு விளக்கம் தருக.

இ) இவை அறத்தின்பாற்படுவது எவ்வாறு?.

ஈ) இந்துமதச்சடங்குகளோடு யக்ஞங்கள் எவ்வாறு தொடர்புபடுகின்றன?

09. **“இதிகாசங்கள் மூன்று. அவை சிவரகசியம், இராமாயணம், பாரதம்”**

– அருணாசலதேசிகர்

அ) இதிகாசம் என்பதன் பொருள் விளக்கம் தந்து அது தோற்றம் பெற்ற வகையினைக் கூறுக.

ஆ) பாரத இராமாயணங்கள் சமயத்தில் பெறும் இடத்தினை விளக்குக.

இ) அவை வாழ்க்கையில் ஒழுகும் வகையைப்புலப்படுத்தும் வகையினைக் கூறுக.

ஈ) புராணங்களிலிருந்து இதிகாசங்கள் எவ்விதம் வேறுபடுகின்றன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" – திருமூலர்

அ) ஆகமம் என்ற சொல் தரும் வெவ்வேறு பொருள்கள் யாவை?

ஆ) ஆகம வழிபாட்டிற்கும் வேதவழிபாட்டிற்குமுள்ள வேறுபாடு யாது?

இ) சிவாகமங்கள் எத்தனை? அவற்றில் குறிப்பிடப்படும் சிறப்பமிசங்கள் பற்றிச்சுருக்கமாக விளக்குக.

ஈ) ஆகமம் போற்றும் 'குரு' வின் முதன்மை பற்றித்தெளிவாகக்கூறுக.

11. 'ஆலயந்தானும் அரனெனத்தொழுமே' – மெய்கண்டார்

அ) ஆலயம் இந்து மதத்தில் பெறும் முக்கியத்துவம் யாது?

ஆ) ஆலய அமைப்புமுறை பற்றி விளக்கம் தருக.

இ) ஆலய வழிபாட்டுமுறைமையினை விளக்குக.

ஈ) ஆலயங்கள் சமயவழிபாட்டு நிலையங்களாய் மட்டுமன்றிக் கலாசார நிறுவனங்களாயும் விளங்குகின்றன இக்கூற்றை விளக்குக.

12. "தேவாரம் வேதசாரம்' – காசிவாசி செந்திநாதையர்.

அ) தேவாரம் என்பதன் பொருளை விளக்குக.

ஆ) தேவாரங்கள் வேதக்கருத்துக்களுக்கு எவ்வாறு தம்மகத்தே முதன்மையளித்துள்ளன?

இ) தேவாரங்கள் பக்தி சார்ந்த உணர்வுகளை எவ்வாறு ஊக்குவிக்கின்றன?

ஈ) சைவசித்தாந்தம் வலியுறுத்தும் அடியார் பக்திக்கு ஊற்றுக்கால்களாய்த் தேவாரங்கள் அமைந்திருக்குமாற்றினை தெரிக்குக.

13. 'கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

– திருத்தொண்டர்புராணம்

அ) திருத்தொண்டத் தொகையின் வழிநூலாகத் திருத்தொண்டர் புராணம் அமைந்தவாற்றினை விளக்குக.

ஆ) அப்புராணத்திலே தொகையடியார்களாகக் குறிக்கப்படும் ஒன்பது வகையினரும் எவர் எவரெனக் காட்டுக.

இ) அவர்களின் சிறப்பினை விளக்குக.

ஈ) அடியார் கூட்டச்சிறப்பினைச் சேக்கிழார் எவ்வாறு விரித்துரைப்பர்? சுருக்கமாக விளக்குக.

14. 'யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம்'

– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அ) கந்தபுராணம் யாக்கப்பட்ட வரலாற்றினைச் சுருங்கத் தருக.

ஆ) கந்தபுராணத்திலே சைவசித்தாந்தக் கருத்துக்கள் விரித்துரைக்கப்பட்டுள்ளவாற்றைத் தருக.

இ) கந்தபுராணத்தில் சிவபெருமானும் கந்தசுவாமியும் வேறல்லர் ஒருவரே எனக்கூறும் பாடல் ஒன்றினை உதாரணமாக எடுத்துக்காட்டுக.

ஈ) புராணபடன மரபினை விளக்கி அதன் மூலம் கந்தபுராணப்படிப்பும் பயன்பாடும் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளைக் காட்டுக.

15. "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே" – தாயுமானவர்

அ) சைவ நாற்பாதங்களும் கூறப்பட்ட முதல் நூல்கள் எவை?

ஆ) சரியை வழிபாட்டில் இடம்பெறுவனவற்றை விபரிக்குக.

இ) கிரியை வழிபாட்டிற்குத் தகுதியுடையவராக ஆறுமுகநாவலர் எவரெவரைக் குறிப்பர்? காரணம் யாது?

ஈ) யோகத்தின் எட்டுறுப்புக்களையும் சுருக்கமாகத் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ......... காணப்பெற்றால்

**மனித்தப் பிறவியும் வேண்டுவதே" – அப்பர் சுவாமிகள்**

அ) இந்துசமயத்தில் விக்கிர வழிபாடு பெறும் இடத்தைக் கூறுக.

ஆ) விக்கிரகங்களின் உருவமைப்புக்களில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் எவை?

இ) விக்கிரக அமைப்புவிதிகளைக் கூறும் ஆகமங்கள் எவை?

ஈ) நடராசவிக்கிரகத்தின் அமைப்பையும் அது குறித்து நிற்கும் தத்துவங்களையும் எடுத்துக்காட்டுக.

17. **'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' – அருணகிரிநாதர்**

அ) குகன் எனும் குமரக்கடவுளின் தொன்மையையும் தமிழரிடையே அவர் பெறும் முதன்மையையும் தருக.

ஆ) குமரக்கடவுளைத் தேவசேனாதிபதி என அழைப்பதேன்? விளக்குக.

இ) 'சுப்பிரமணியன்' என்ற திருநாமத்தின் தத்துவ விளக்கத்தினைக் கூறுக.

ஈ) இலங்கையில் முருகவழிபாடு பெற்றுள்ள சிறப்பினைச் சுருங்கத் தருக.

18. **'அச்சுதா அமரர் ஏறே ஆயர்தங் கொழுந்தே' – தொண்டரடிப்பொடியாழ்வார்.**

அ) திருமாலாகிய மாயோன் வழிபாடு தமிழகத்துக்குப் புதுவதன்று என்பதை ஆதாரத்துடன் தருக.

ஆ) திருமால் பற்றி வேதங்களிலே கூறப்படுவனவற்றைச் சுருங்கத் தருக.

இ) பிரபத்தி என்பது யாது? வைணவர் இவ்வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதேன்?

ஈ) ஈழத்தில் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயம் ஒன்றின் வரலாற்றையும் சிறப்பையும் சுருங்கக் கூறுக.

19. **"பற்றற்ற வத்துவைப் பற்றறக் கண்டோர்க்குக் குற்றங்கள் இல்லையடி குதம்பாய்'**
**– குதம்பைச்சித்தர்**

அ) வித்தகச்சித்தர்கணம் எனப்போற்றப்படுவோர் யாவர்?

ஆ) சித்தர்களின் இயல்புகள் யாவை?

இ) அவர்களின் பெருமைகள்யாவை?

ஈ) நீர் அறிந்த ஈழத்துச் சித்தர் ஒருவர் பற்றிச் சுருங்கத் தருக.

20. **' கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த**
**கோணமா மலையமர்ந்தாரே' – திருஞானசம்பந்தர்**

அ) ஈழத்தில் பாடல்பெற்ற தலங்கள் யாவை? அவை இலங்கையின் எவ்வெவ்விடங்களில் உள்ளன?

ஆ) அவற்றுள் ஒன்றாகிய கோணேச்சரத்தின் தல வரலாற்றைச் சுருங்கத் தருக.

இ) அக்கோயிலில் எழுந்தருளிய பெருமானின் மகத்துவங்கள் திருஞானசம்பந்தரால் வெளிப்படுத்தப்படுமாற்றினைச் சுருங்கக் கூறுக.

ஈ) திருக்கோணமலையில் சிறப்பாக இடம்பெறும் பெருவிழாக்களைப் பற்றிக் கூறுக.

## இந்து நாகரிகம் 1
## பகுதி–3

01. வேதகாலக் கடவுட் கோட்பாட்டினைத் தக்க ஆதாரங்களுடன் கட்டுரையாக வரைக.

02. இருக்குவேதம் கூறும் வழிபாட்டுமுறையில் அமைந்த வளர்ச்சி நிலையை விளக்குக.

03. உபநிடதங்களிலே குறிப்பிடத்தக்க தத்துவ சிந்தனைகளில் ஒன்றினை விரிவாக விளக்குக.

04. 'ரிதம்' என்னும் உலக ஒழுங்குக்கோட்பாடு ஒழுக்கவியல்கோட்பாட்டையும் உள்ளடக்கிவளர்ந்த வகையினை ஆராய்க.

05. ஆகமங்கள் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு உறுதுணையாமாற்றினை விளக்குக.

06. இந்துசமய வழிபாட்டிலும், பத்திமரபிலும் புராணங்களின் பங்களிப்பினை விபரிக்குக.

07. 'பகவத்கீதை ஆன்மிக ஞானத்தில் கருவூலமாய் மட்டுமன்றி வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கும் வழிகாட்டுவதோர் மகோன்னத நூல்' – ஆராய்க.

08. பாரத, ராமாயண இதிகாசங்கள் இந்துமத ஒழுக்கவாழ்விற்கு ஆற்றுப்படுத்துமாற்றினைச் சான்றுகளுடன் தருக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. இந்து ஒருவனின் வாழ்க்கை அவன் கருவுற்ற நாள் தொடக்கம் இறக்கும் வரையும் பல [illegible] நெறிப்படுத்தப்படுவதாகும்: – இக்கூற்றினை ஆதாரங்களுடன் விளக்குக.

10. வேதத்தின் பிரிவுகளையும் அவற்றின் உள்ளடக்கங்களையும் தருக.

11. சண்மதங்களுள் ஒன்றான 'சாக்தம்' பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.

12. சைவ சித்தாந்தக் கருத்து வளர்ச்சிக்குச் சமயகுரவரின் பங்களிப்பினை ஆராய்க.

13. சிவஞானபோதம் மெய்கண்டசாத்திரங்களுள் தலையானது. அதன் சாரத்தினைச் சுருக்கமாகத் தருக.

14. "வேதாந்திகள் மாயை பற்றிக் குறிப்பிடுவனவும் சைவ சித்தாந்திகள் மாயைபற்றிக் குறிப்பிடுவனவும் ஒன்றிற்கொன்று வேறுபட்டவை" – ஆராய்க.

15. இராமானுசரின் விசிட்டாத்துவிதக்கோட்பாடு சைவசித்தாந்திகளின் சுத்தாத்துவிதக்கோட்பாட்டின் ஒருபுடை ஒத்து, ஒருபுடை வேறுபட்டுள்ளவாற்றினை விளக்குக.

16. சைவசித்தாந்தத்தில் ஆணவம் பெறும் இடத்தினை விளக்குக.

17. 'மத்துவர் பேதவாதி' என்பதை அவரின் துவிதக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

18. வைணவ ஆழ்வார்கள் பிரபத்திமார்க்கத்தை வளர்ப்பதில் தலைசிறந்து விளங்கியமையைத் தகுந்த சான்றுகளுடன் தருக.

19. 'கன்மம் மறுபிறப்புப்' பற்றிய இந்துசமயக்கோட்பாட்டினை விளக்கி அதனைப் பௌத்தம், சமணம் என்பவற்றின் கோட்பாட்டோடு ஒப்பிடுக.

20. "நால்வகைப்புருடார்த்தங்களில் முதல் மூன்றும் சரிவர அநுட்டிக்கப்பட்டால் வீடுபேறு உறுதி" – ஆராய்க.

## இந்து நாகரிகம் I

### பகுதி – I

### விடைகள்

01. காணபத்தியம்
02. சாகைகள்
03. இருக்குவேதம்
04. மந்திரம்
05. இந்திரன்
06. ஓரிறைக்கோட்பாடு
07. ஹீனோதீய்ஸம் (Henothism)
08. படைப்புப்பாடல் (Song of Creation)
09. காயத்ரீ மந்திரம் (தத்சவிதுர் வரேணியம்
    பர்க்கோ தேவசிய தீமகி
    தியோ யோ ந : பிரச்சோதயாத்)
10. வருணன்
11. உட்டாலகர்
12. பிரமம்
13. கிருஹியசூத்திரம்
14. நசிகேதன்
15. அக்கினி
16. அதிதி
17. ஹிரண்யகர்ப்பம்
18. த்ரிவித்யா
19. உத்காத்ரி
20. கேனோபநிடதம்
21. அதிதியக்ஞம்
22. தைத்திரிய உபநிடதம்
23 ஆன்மா
24. இருடிகள்
25. ஈசாவஸ்ய உபநிடதம்
26. பிரமன்
27. பிரஸ்தானத்திரயம்
28. பிரதி கற்பம்
29. வாமனபுராணம்
30. மத்ஸ்யபுராணம்
31. கந்தபுராணம்
32. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
33. சிவரகசியம்
34. வியாசபாரதம்
35. நிஷ்காமிய கர்மம்
36. திருமந்திரம்
37. பத்ததிகள்
38. திரியதார்த்தங்கள்
39. கர்ஷணம்
40. காரணாகமம்
41. சகலாகம பண்டிதர்
42. சிவஞானசித்தியார்
43. உமாபதிசிவாச்சாரியார்
44. மறைஞானசம்பந்தர்
45. ஸ்ரீகண்டருத்திரர்
46. திரோதான சத்தி
47. (உடலின்) தோலிலே சூடு, குளிர், மென்மை. கடினம் ஆகிய இவைகளைக் காட்டுவது.
48. கேவலாவஸ்தை
49. சஞ்சிதம்
50. கோபுரம்
51. பலிபீடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. பஞ்சகோசங்கள்
53. சிவன்
54. சுத்தம்(சுத்தாத்துவிதம்)
55. அநிர்வசனீயம்
56. அவித்தை
57. பிரமசூத்திரம்
58. விவர்த்தவாதம்
59. சாங்கியதரிசனம்
60. சத்காரணவாதம்
61. சற்காரியவாதம்
62. வைசேடிகம்
63. சீவன்முத்தர்
64. விதேகமுத்தி
65. யோகதரிசனம்
66. பிராதிபாஷிகம்
67. நிர்க்குணப்பிரமம்
68. விசேடியம்
69. ஸ்ரீபாஷ்யம்
70. பிரமபரிணாமவாதம்
71. தத்துவத்திரயம்
72. அப்பிரதக் சித்தி
73. சுவகதபேதம்
74. எப்பொழுதும் முத்திநிலையிலிருப்போர்
75. பெத்தர்
76. சதசத்விலக்ஷணம்
77. பிரபத்திமார்க்கம்
78. ஆனந்ததீர்த்தர்
79. துவைதம்
80. வேள்விக்கு
81. ஐந்து (பேதங்கள்)
82. ஈசுவரசட பேதம்
83. சீவபரஸ்பரபேதம்
84. பிரபத்தியை
85. கருவி கரணங்களோடு சம்பந்தப்படுவதால்
86. சடசம்பந்தத்தினின்றும் நீங்கியபின் முத்தி பெறுவோர்
87. கன்மத்தளையிற்கட்டுண்டு என்றும் முத்தியடையாதோர்
88. சாயுச்சியம்
89. இராதாகிருஷ்ணன்
90. சங்கரர்
91. 51
92. ஐங்குறுநூறு (காப்புச்செய்யுளில்)
93. பாலைநிலத்துக்கு
94. சிவஞானசித்தியாரில்
95. எங்கும் யாவிலும் நிறைந்தவன்
96. அந்தர்யாமி
97. பரிபாடல்
98. முருகனுடன்(வேல்,சேவற்சிலை, காவடிச்செதில்)
99. குமாரதந்திரம்
100. விசுவகர்மசில்ப

## பகுதி 2

01. வேதகாலமக்கள் இயற்கையை வெற்றிகொள்ளும் ஆற்றலற்றிருந்தனர். எனவே அதற்குப் பணிந்து அதனைத் திருப்தி செய்வதன் மூலம் தம்மை அழிவினின்று காப்பாற்றவும், தமது விருப்பங்களை நிறைவு செய்யவும் முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். அக்கினி, வருணன், இந்திரன், உருத்திரன் முதலாக இயற்கையின் பண்புகளைக் குறியீடுகளாகக் கொண்டு அவற்றிற்குத் தாம் உண்ணும் உணவின் ஒரு பகுதியை தீயிலிட்டு அவ்வத்தெய்வங்களைப் பிரீதி செய்வனவாகிய மந்திரங்களை ஓதி வழிபடலாயினர். அக்கினி, தாம் அளிக்கும் உணவினை (அவியை) தாம் குறித்து வேண்டும் தெய்வத்திற்குக் கொண்டு சென்றளிக்கும் என்றும், அத்தெய்வத்திடம் தமது வேண்டுகோளை அறிவித்து அதனை நிறைவேற்றி வைக்கும் என்றும் நம்பினர். இவ்வாறு வேள்வி வழிபாடு ஆரம்பித்தது.

தொடக்கத்தில் ஒவ்வொரு குடும்பஸ்தனும் சிறிய அளவில் தனது வீட்டிலே வேள்வியை நடத்தி வந்தான். இவ்வேள்வி நாள்தோறும் நடைபெற்றது. அக்கினியை வளர்த்து அது அணையாது பேணும் வழக்கமும் , அதற்கென இல்லத்தில் ஓர் இடம் ஒதுக்குதலும் அவசியமாயின காலப்போக்கில் வேள்விகளை ஒழுங்குபடுத்திச் சிறந்தமுறையிலே நடத்துவது ஒரு வித்தையாக வளர்ந்தது. இதன் நுட்பங்களைக் கற்றோர், சமூகத்தில் போற்றுதலுக்கு உள்ளாகி மேலாண்மை பெற்றனர். திருஞானசம்பந்தர் 'கற்றாங்கு எரியோம்பி' எனத் தமது தேவாரத்திற் கூறியமை கருதத்தக்கது.

காலப்போக்கில் ஆட்சியாளர் தோன்றிச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்று அரசர்களாய் மேலோங்கியபோது அவர்கள் தமது ஆதிக்கப்பரம்பல், செல்வப்பெருக்கம், புகழ் ஆகியவற்றை வளர்த்திடப் பெரிய எடுப்புக்களில் வேள்விகளை நிகழ்த்தத்தொடங்கினர். அவர்கள் இராஜசூயம், அஸ்வமேதம், ஹிரண்ய கர்ப்பம், வாஜபேயம், முதலாம் வேள்விகளைத் தமது ஏகாதிபத்திய அடையாளமாகவும் பல நாடுகளைக் கைப்பற்றியதற்கு அறிகுறியாகவும். பொன்தேடிப் பெருவாழ்வு வாழ்தற்காகவும், வலிமையைக் கூட்டுவதற்காகவும் (வாஜாபேயம் = வலிமைப்பானம்) நடத்தினர். இத்தகைய வேள்விகள் சிக்கல்கள் பல கொண்டனவாகவும், புரோகிதர் பலரின் தேவையை வேண்டி நிற்பனவாகவும் அமையலாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவு விரிவடைந்த இவ்வேள்விகளுக்கான விதிமுறைகளை அனுபவத்தாலும் அறிவாலும் பெற்றுக்கொண்ட புரோகிதர்களுக்கு அரசர் உள்ளிட்ட அனைவரதும் பெருமதிப்புக்கிடைத்ததில் வியப்பில்லை. இப்புரோகிதர்கள் வேள்வியில் தத்தம் கடமைகளுக்கேற்ப நான்கு பிரிவினராய் விளங்கினர். 'ஹோத்ரி' என்பவன் கடவுளரைப் பிரீதிசெய்து யாகத்திற் பிரசன்னமாக அவர்களை அழைப்போன். 'உட்காத்ரி' வேள்வியின் போது பாசுரங்களை இசைப்போன். 'அதர்வாயு' என்பவன் வேள்விச் சடங்குகளை நிகழ்த்துவோன். 'பிரமன்' இம்மூவர்க்கும் தலைமைதாங்கி வேள்விக்கான விதிகள் சரிவர நிகழ்வதை மேற்பார்வை செய்வோன். இவ்வாறு, வேள்விகளில் புரோகிதர் முதன்மைத்தானத்தைப் பெற்றனர்.

02. கண்ணுக்குப் புலனாகாத சக்திகளைத் தனித்தனித் தெய்வங்களாக உருவகப்படுத்தி அவை ஒவ்வொன்றிற்கும் பெயர்களை வழங்கி அவ்வவற்றால் அடையக் கூடிய நன்மைகளையும் அவற்றின் பெருமைகளையும் எடுத்துரைத்து வழிபட்டபொழுது ஆரிய உலகில் பல தெய்வங்கள் இடம் பெறலாயின. வேத கால இருடிகளும், புலவர்களும் இவை பற்றிப் பாசுரங்கள் பல இயற்றி மக்களிடையே பரப்பினர். பல்லிறைக்கோட்பாடு உருக்கொண்ட வரலாறு இதுதான். இத்தெய்வங்கள் சில விண்ணுக்குரியவையென்றும், சில இடை நிலத்திற்குரியவையென்றும்,சில மண்ணுலகுக்குரியவையென்றும் பாகுபடுத்தப்பட்டன. இவற்றின் மொத்த எண்ணிக்கை முப்பத்து மூன்று எனவும் கொண்டனர். காலஞ்செல்லச் செல்ல இவற்றின் எண்ணிக்கையும் பெருகலாயிற்று. பேராசிரியர் இராதாகிருஷ்ணன் தமது 'இந்திய தத்துவம்' என்ற நூலிலே வேதங்கள் பல தெய்வங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாய் விளங்கின என்பர். தாய், தந்தை, குரு, ஆசிரியர், 'ரிதம்' என்ற உலகொழுங்கு, சோமம் என்ற வேள்விக் காலத்து அருந்தும் பானம், அதிதிகள் (விருந்தினர்) எல்லாமே தெய்வங்களாகக் காண்கின்றோம். இதுவே பல்லிறைக்கோட்பாடு.

வேதகாலத்தெய்வங்களுள் முதன்மை பெற்ற மூன்று தெய்வங்கள் வருமாறு :-

1. வருணன் :

ரிதம் என்பது உலக ஒழுங்கைக் குறித்தது; பின்னர் ஒழுக்கத்தையும் குறித்தது; வழிபாட்டிற்குரியதும் ஆயிற்று. ரிதத்தின் காவலன் வருணன் (ரிதஸ்யகோபன்) உலகில் எந்த மூலையிலும் எவராவது ஒழுக்கந்தவறினால் அவர்களுக்குத் தண்டனை வழங்கும் ஆற்றல் வருணனுக்கு உண்டு. எனவே வருணன் மீது அச்சங்கலந்த பக்தி ஏற்படத், தம் குற்றங்களை மன்னித்தருளுமாறு அவனை வேண்டி வழிபட்டனர். வேதகாலத் தெய்வங்களில் வருணன் தலைமைபெற அவனது தண்டிக்கும் இயல்பே காரணமாயிற்று.

2. இந்திரன் :

ஆரியர்களின் பகைவரை அழித்திடும் சேனாபதியாகவும் அவர்களுக்கு வளம் வழங்கும் அருளாளனாகவும் இந்திரன் விளங்கினான். விருத்திரன் என்ற அசுரனை அழித்தும், ஹரியூப்பிய என்னுமிடத்தில் தஸ்யுக்கள் என்ற ஆரியப் பகைவரை வென்றும் ஆரியரைக் காத்தவன் அவன். இருக்கு வேத பாசுரங்களில் மிக அதிகமானவை (இந்திரன்) இவனையே போற்றிப்பரவுகின்றன.

3. பிரஜாபதி :

உயிர்களின் தலைவன் என்னும் பொருள் பிரஜாபதி என்ற பெயரினாற் குறிக்கப்பட்டது. இவன் தெய்வங்களின் தலைவனாகவும் கொள்ளப்பட்டான். பின் வேத காலத்திலே அனைத்துப்படைப்புக்களுக்கும் மூலகாரணமாகவும் பிரஜாபதி கொள்ளப்படல் காணலாம். இவன் பற்றிய செய்திகளே அவதாரக்கோட்பாட்டிற்கும் வித்திட்டன என்பர். பூமியானது நீரில் மிதந்து கொண்டிருந்தவேளையில், பிரஜாபதி பன்றி வடிவங்கொண்டு அதனை நீரிலிருந்து மீட்டுவந்தான் என்னும் கதை, விஷ்ணுவின் கூர்மாவதாரத்தோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

இவ்வாறு பல்லிறைக்கோட்பாடு முனைந்து நின்ற வேளையிலும் சிந்தனையாளர் சிலர் உலகத்தோற்றம் நிலைபேறு அனைத்துக்கும் மூலாதாரமான சக்தி ஒன்றே என்ற முடிவுக்கு வரவுந்தவறவில்லை. இந்த சிந்தனை வளர்ச்சிக்கு இடைப்பட்ட காலத்தில் ஒரு தெய்வம் பற்றி வழிபடுகையில் அதற்கே அனைத்துத் தெய்வங்களதும் மகிமையை ஏற்றி வழிபடும் ஒருவகைக்கோட்பாடும் உருவானதாக மாக்ஸ்முல்லர் என்பார் கொண்டு அதற்கு ஹீனோத்தீய்ஸம் எனப் பெயர் வழங்கினார். இருக்குவேதத்தில் ஓரிடத்தில் "இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, யமன், மாதரிஸ்வான் என்று அறிஞர்கள் பல பெயர்கள் கொண்டு அழைப்பதெல்லாம் ஒரு பரம்பொருளையே" என்றதோர் குறிப்பு வருவது கொண்டு அக்காலத்தில் ஓரிறைக்கோட்பாடும் நிலவியது என்ற உண்மை புலனாகின்றது. பெண் தெய்வங்களைப் பொறுத்தவரை உஷை, இராத்திரி, பிருதிவி, ஆரணியானி (காடுகிழாள்) முதலாகச் சில பெண் தெய்வங்கள் பற்றிய செய்திகளும் ரிக் வேதத்தில் வருகின்றன. அதிதி என்பாள் தெய்வங்களுக்கெல்லாம் தாய் எனக் கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. எனினும் வேத காலத்தில் பெண் தெய்வங்களுக்கு முதன்மைப்பாடு வழங்கப்படவில்லை என்பதுண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. வேதங்களின் உறுப்புக்கள் வேதாங்கங்களாகும். அவை தொகையினால் ஆறு ஆகும். அவை சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, கற்பம், நிருத்தம், சோதிடம் எனப்படும்.

1. சிட்சை :- வேதங்களை உதாத்தம் அநுதாத்தம் முதலிய சுரவேறுபாட்டினால் உச்சரிக்கும் முறைமை.
2. வியாகாரணம் :- வேதங்களின் எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களை அறிவிப்பது.
3. சந்தோவிசிதி :- வேத மந்திரங்களிற் காயத்ரி முதலிய சந்தங்களின் பெயரையும் அவற்றின் எழுத்து இவ்வளவு என்பதையும் கூறுவது.
4. கற்பம் :- வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களைக் கடைப்பிடிக்கும் முறையைக் கூறுவது.
5. நிருத்தம் :- வேதங்களின் சொற்களுடைய பொருளை அறிவிப்பது.
6. சோதிடம் :- வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்வதற்கு உரிய காலங்களை அறிவிப்பது.

இந்து மதத்தில் தொடக்கநிலை அதன் செயல்முறைப்பட்டதும், தத்துவரீதியானதுமான சிந்தனைத்திறம், தெய்வநம்பிக்கை, பத்தி, ஞானம் என்பவற்றாற் பெறத்தக்க நன்மைகள், அக்காலத்தில் மக்கள் வாழ்ந்த வாழ்க்கைமுறை, குறிக்கோள்கள், பண்பாடுகள், சாதனைகள் என்ற பலவற்றையும் விரிவாக அறிந்து கொள்வதற்கு வேதங்கள் பயன்படுகின்றன. ஆன்மிக சாதனைகளோடு அமையாது உலகியல் வாழ்க்கையையும் அக்காலத்தவர் எவ்வளவு சிறந்த முறையில் நடத்தினர் என்பதை வேதவாயிலாக அறிந்து அவற்றை இந்து மதத்தில் மீண்டும் சுவறவைப்பதன் மூலம், அம்மதத்தினைக் கடைப்பிடிக்கும் நாமும் அவ்வாழ்க்கைமுறையினைக் கடைப்பிடித்து இம்மை மறுமைப்பயன்களை அடையவும் வேதங்கள் உதவும் என்பதற்கு ஐயம் இல்லை. 'நான்மறை அறங்கள் ஓங்குக' என்று திருஞானசம்பந்தர் வேத தருமங்களைப் போற்றி வாழ்த்துவதும் குறிப்பிடத்தக்கதாகும். அன்றியும் "இந்தியாவில் வழக்கில் இருந்துவரும் மதங்கள் எல்லாவற்றையும் நன்கு விளக்குவதற்கு வேதங்களின் அறிவு மிகவும் பயன்படும்" என்பர் அறிஞர்.

வேதங்கள் நீண்டகாலமாகச் செவிவழியாகக் கேட்டு நினைவில் வைத்துப் பேணப்பட்டவை. சுருதி, எழுதாமறை என்ற பெயர்கள் இக்காரணத்தினாலேதான் வேதங்களுக்கு வழங்கி வருகின்றன. மேலே எடுத்துக்காட்டிய ஆறு அங்கங்களையும் சிரத்தையுடன் கற்று இடைவிடாது ஓதி வந்தமையாலேயே அவை எவ்வித மாற்றமுமின்றி இன்றும் பண்டுபோல் விளங்குகின்றன. மறையவரே இவ்வாறு அறங்களையும் கசடறக்கற்று வேதங்களை ஓதி அவற்றைக்காத்து வந்தார்கள். இவ்வுண்மையையே திருஞானசம்பந்தர் "அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணர்" (அழகிய தண்ணளி உடையோர்) என்று அவர்களைச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

04. வேதங்கள் கருமகாண்டம், ஞானகாண்டம் என்ற இரு பெரும் பிரிவுகள் கொண்டவை. கருமகாண்டம் சங்கிதை, பிராமணம் என்னும் இரு உபபிரிவுகள் கொண்டது. சங்கிதை பாசுரங்களின் தொகுதி. பிராமணம் யாகக்கிரியைகளின் விதிமுறைகளைக் கூறுவது. ஞானகாண்டம் ஆரணியம், உபநிடதம் ஆகிய இரு உபபிரிவுகளை உடையது. ஆரணியம் என்பதன் பொருள் வன நூல். இருடிகள் வனத்தில் உறைந்து அகவயமான தியானத்தைக் கடைப்பிடித்துத் தமது அநுபவங்களை வெளிப்படுத்திய பகுதியே ஆரணியகம், பிரபஞ்சம், ஆன்மா, பிரமம் ஆகியவை பற்றி ஆழமாக ஆராய்ந்து கிடைத்த உண்மைகளைக் குரு சிஷ்யக்கிரமத்தில் வெளியிட்டு, வேதத்தின் இறுதியில் அமைந்தனவே உபநிடதங்கள். இந்திய தத்துவச் சிந்தனைகளின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஞானச் சுரங்கமான இவை வேதத்தின் இறுதியானவை என்ற பொருளில் வேதாந்தம் எனப்பெயர் பெற்றன என்றும் கொள்ளலாம். உபநிடதத்தின் தலைமைப்பாடு கருதி அதனை வேதசிரசு எனவும் அழைப்பர்.

வேதத்திற்குப் பொதுப்பெயர் மறை. மறை என்பது இரகசியம். இப்பொதுப்பெயர் உபநிடதங்களைப் பொறுத்தவரை அவற்றிற்கே சிறப்புப்பெயராக அமைகின்றன. ஏனெனில் குருவும் சீடனும் அருகருகே அமர்ந்து தத்துவ ஆராய்ச்சி நிகழ்த்தி அவற்றை மறைபொருளாகக் கூறியனவே உபநிடதங்களாகும்.

வனத்திலே அமைந்த ஆச்சிரமங்களிலே அமைதியான சூழலில் மனத்தை ஒருமுகப்படுத்தி வெளிச் சூழல் போலவே அகத்திலும் சாந்தி நிலவச் செய்து உபநிடதபாடம் நடந்தது. இதனால் உபநிடதத்தினைச் 'சாந்திபாடம்' என்பது வழக்கு. மேற்கூறிய புற, அகச் சூழல்களிரண்டிலும் தத்துவ ஆராய்ச்சிக்கு வேண்டிய அமைதி அகத்திற்கே கூடுதலாக வேண்டப்படுவதாகும். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் போர் ஆரவாரங்களின் – மத்தியிலும் சீடனான அருச்சுனன் தன்குருவாய் அமைந்த கண்ணபிரானின் உபதேசத்தைச் செவிமடுத்து உண்மையை உணரும் மனப்பக்குவத்தை, சாந்தியை அடைந்திருந்தமையால் பகவத்கீதையும் சாந்திப் பாடமே என்பர் சுவாமி சித்பவானந்தர்.

பிரபஞ்சம் சேதனம், அசேதனம் என்னும் அறிவுள்ளவை, அறிவற்றவை (சடம்) யாகிய இரண்டினதும் தொகுதியாகக் காட்சி தருகின்றது. ஆனால் இவற்றின் மூலாதாரமாய் உள்ள பொருள் எது என்பதுதான் கேள்வி. அந்தமூலப்பொருளை அறிவதே ஞானம். விறகில் தீ போலவும், நீரில் கலந்த உப்புப் போலவும், ஆலம் வித்தினுள்ளே அதன் வளர்ச்சிக்கு மூலமாய், அதே வேளை காணொணாததாகவும் உள்ளது எதுவோ அதுவே உண்மைப்பொருள். அதுவே சத் அதுவே பிரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தத்துவம் அஸி' (அது நீயாகிறாய்), 'அஹம் பிரஹ்மாஸ்மி' (நான் பிரமமாகிறேன்) என்ற மகாவாக்கியங்கள் மூலமாகப பிரமம் என்பதே உள்பொருள் என்றும் அதுவன்றி வேறில்லை என்றும் உபநிடதம் கூறுவதாகக் கொள்வர் ஒருசாரார். உலகு பொய். சீவன்களும், அவற்றின் நிமித்தகாரணமான பிரமமும் உண்மையானவை என்று மற்றொருசாரார் கொள்வர். பிரபஞ்சம், ஆன்மா, பரமான்மா மூன்றும் உண்மையானவை; பிரமத்திலிருந்தே மற்றிரண்டும் தோன்றி இறுதியில் அதனுள் ஒடுங்குகின்றன என்பர் ஒருசாரார். இம்முத்திறத்தாரின் முடிபுகளுக்குமான ஆதாரங்களையெல்லாம் உள்ளடக்கமாகக் கொண்டனவே உபநிடதங்கள். பிற்காலத்தில் இந்து மதத்தின் பல்வேறு கூறுகளும் அதற்கு மாறான பௌத்தம், சமணம் முதலானவும் தமது முடிபுகளை உபநிடதங்களிலிருந்தே பெற்றுக்கொண்டன என்று ஆய்வாளர் கொள்கின்றனர். புறக்கிரியைகளான வேள்விகளைச் சில உபநிடதங்கள் கண்டித்துப் பிரமத்தை உணரும் ஞானமே உயர்ந்தது என்று பேசல் காணலாம். அந்த ஞானத்தை அடையத்துறவு ஒன்றே வழி என்றும் ஆங்காங்கே வற்புறுத்தும் இடங்கள் உள்ளன. அதே சமயத்தில் வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கான ஒழுக்கநெறிகளும் இல்லாமலில்லை. உருவகக்கதைகள், உரையாடல்கள், உபதேசங்கள் என்ற மூன்று உத்திகளைக் கையாண்டு உண்மை ஞானம் பற்றியும் அந்த ஞானத்தின் பயனான வீடுபேறு பற்றியும் ஆழமாக எடுத்துரைப்பன உபநிடதங்கள் எனலாம்.

05. இப்பிரபஞ்சமானது இயங்கும்பொருள் இயங்காப்பொருள் என்ற இரண்டினாலும் ஆனது. இவற்றுள் இயங்குவனவற்றைக் குறித்ததொரு காலம் வரை இயங்கவும் செயற்படவும் வைப்பது! எது என்ற வினா எழுந்த போது, தொடக்கத்தில் மூச்சுக்காற்று என்ற விடை கிடைத்தது. (ஜீவன்-(ஜீவ்)-தொடர்ந்து மூச்சுவிடுவது) ஆனால் அந்த விடை திருப்தி தரவில்லை. மேலும் ஆராய்ச்சி தொடர்ந்தது. பிராணன் என்ற ஒன்றே இயக்கம், செயற்பாட்டிற்கெல்லாம் காரணம் எனக்கருதினர். அதுவும் திருப்தி தரவில்லை. அடுத்து உடலினுள்ளேனின்று அதைச் செயற்படுத்துவது அகம் என்னும் ஆன்மா என்ற முடிவு ஏற்பட்டது. ஒவ்வொரு தனியாளுள்ளும் இந்த ஆன்மா – அகம் உள்ளது என்றும் அறிவு–இச்சை செயல் ஆகிய யாவிற்கும் அதுவே மூலம் என்றும் கொண்டனர். மேலும் ஆராய்ச்சி வளர்ந்தது. பௌதிகமான சடப்பொருள்கள், அறிவும் இயக்கமும் கொண்ட அகம் ஆகிய ஆன்மாக்கள் என்ற இரண்டுக்கும் மூலாதாரமான அகம் என்ற ஒன்றுண்டு. அதுவே பேரான்மா. அந்தப் பேரான்மாவின் வியாபகமே பிரபஞ்சம், சீவன்கள் என்ற முடிவேற்பட்டது. எனவே பிரபஞ்சம், ஆன்மா, பிரமம் என்று பாகுபடுத்தாது யாவும் ஒன்றின் விகசிப்பே எனும் முடிவை உபநிடதம் வெளிப்படுத்தியது.

"ஓம்" பூரணமே, அது அனைத்தும் பூரணமே. பூரணமே இது அனைத்தும். பூரணம் பூரணத்திலிருந்து பிறந்துள்ளது. பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தும் எஞ்சியிருப்பது பூரணமே." என்னும் ஈசாவஸ்ய உபநிடதக் கூற்று பூரணமான வஸ்துவாக ஒன்றையே பரமான்மாவையே சுட்டுகின்றது. "இங்குப் பன்மை என்பதில்லை" ஆன்மா ஒன்றல்ல பல என்ற கருத்துக்களும் ஆன்மா வேறு பிரமம் வேறு என்ற கருத்துக்களுமாக உபநிடத மகாவாக்கியங்கள் முரண்பட்ட கருத்துக்களுக்கும் இடம் தருகின்றன என்பதும் கருதத்தக்கதாகும்.

"ஒரு பறவை மரத்தில் உள்ள கனியைச் சுவைக்கின்றது. மற்றொரு பறவை அக்கனியைப் பார்ப்பதோடு நின்றுவிடுகிறது" என்னும் மாண்டுக்கிய உபநிடதக்கூற்றில் பேசப்படும் இரு பறவைகள், பிரமமும், ஆன்மாவும் ஆகிய இரண்டினது உண்மையையும் பேசுவதாகக்கொள்ளலாம். மரம் என்பதைப் பிரபஞ்சம் என்று கொண்டால் மூன்றும் உள்பொருள்களே. மூன்றும் வெவ்வேறானவையே. ஆனால் பிரபஞ்சமும், ஆன்மாக்களும் பிரமத்தின் தோற்றங்கள் என்று கொண்டு ஈற்றில் எஞ்சுவது பிரமமே என்ற முடிவும் ஏற்பட இடமுண்டு. தத்சத் (அதுவே உள்ளபொருள்), தத்துவம் அஸி (அது நீ ஆகிறாய்), அஹம் பிரஹ்மாஸ்மி (நான் பிரமமாகிறேன்) என்ற மகாவாக்கியங்கள் ஆன்மா வேறு இறைவன் வேறு என்ற கோட்பாட்டினை மறுதலிக்கப்பயன்படுகின்றன. இவற்றின் கருத்துப்படி இறைவனே பிரமமே உள்பொருளாகின்றான்.

கடோபநிடதத்தில் பூமி (பிரபஞ்சம்) ஆத்மன் என்ற இரண்டு பொருள்கள் பற்றிய குறிப்பு உண்டு.

"இப்பூமி தூலமானது, இவ்வுடம்பு தூலமானது. ஆனால் ஆத்மன் சூக்குமத்திலும் அதி சூக்குமமானது" "சப்தம் முதலிய சடப்பொருளின் குணங்கள் ஆத்மன் அல்லது பிரமத்தில் இல்லை. ஆகையால் அதுதேய்வதில்லை. அது பெருகவோ குறையவோ முடியாது"

என்ற மகா வாக்கியங்கள் பிரமத்தையே ஆத்மன் எனவும், அந்த ஆத்மன் பிரபஞ்சத்தின் இயல்பெதுவும் அமையாத – அதனோடு தொடர்புறாத – தனிப்பொருள் எனவும் கூறல் காணலாம்.

பிரமம் நித்தியமானது, மனதுக்கெட்டாதது, பிறவாத அது, இயல்பில் சர்வானந்தமானது, துயரம் தொல்லைகள் அனைத்தினின்றும் சுயாதீனமானது. அது அனைத்துக்கும் அகத்தும் புறத்தும் உள்ளது"

என்ற பிரச்னோபநிடதக் கூற்றை நோக்குகையில் பிரமமானது, பிரபஞ்சம், ஆன்மாவாகிய சீவன் என்ற அனைத்துக்கும் உள்ளும் புறமும் நின்று அவற்றை இயக்குவதாகிய பிறிதொரு நோக்கும் வெளிப்படுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானின்றிழிந்தமாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும்; உயிரும், உடலும் போல உள்ளும் புறமும் உளன் என்ப" என்று கம்பநாட்டாழ்வார் கூறுவது உபநிடதசாரமாய் உள்ளதெனலாம்.

06. மிகப்பழைமையான சூத்திரங்களைக் கொண்டதாகக் கல்பசூத்திரம் என்ற நூல் கொள்ளப்படுகின்றது. இது பிராமணங்களுடனும், ஆரணியகங்களுடனும் நேரடித்தொடர்பு கொண்டதாகும். பொருளடக்கத்தினைப் பொறுத்தவரை, கல்பசூத்திரம் இரு கிளைகளாகப் பிரிகின்றது. சிரௌத சூத்திரம், கிருஹிய சூத்திரம் என்பனவே அவ்விரு பிரிவுகளுமாம். பெரும் எண்ணிக்கையிலான புரோகிதர்களைக் கொண்டு பிராமணங்களின் விதிக்கமையச் செய்யப்படும் பெருவேள்விகள் பற்றிக்கூறுவதே சிரௌதசூத்திரம். கிருஹிய சூத்திரமோ இல்வாழ்வானின் நாளாந்தக் கடமைகளையும் இல்லவேள்விகளையும் பற்றி விளக்கம் தருகின்றது. இவ்வகையில் சிரௌத சூத்திரத்திலும் கிருஹிய சூத்திரம் விரிவானதெனலாம்.

மனிதனின் வாழ்க்கையின் பல்வேறு கட்டடங்களிலும் அவன் நிகழ்த்த வேண்டிய சமயம் சார்ந்த கிரியைகள் கிருஹிய சூத்திரத்தில் விளக்கப்படுகின்றன. குழந்தை கருக்கொள்வதிலிருந்து (கருப்பதானம்) அது பிறந்து அதன் தலைமயிரைமழித்தல் (சௌளம்), சோறூட்டல் (அன்னப்பிராசனம்) தொடங்கி வயது வளர வளர முறையே வித்தியாரம்பம், உபநயனம் என்று அச்சடங்குகள் விரிவடைகின்றன. அடுத்து பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்) சார் கிரியைகள் விளக்கப்படுகின்றன. ஈற்றில் அந்திமக்கிரியைகள், சிறப்பாக பிதிர்க்கடனாகிய சிராத்தம் வரை கிருஹிய சூத்திரத்தின் வழிகாட்டல் அமையக் காணலாம். பிராமணனானவன் நாளாந்தம் செய்யவேண்டிய இன்றியமையாக் கடனாக வேதாத்தியாயனம் கூறப்படுகின்றது. ஐம்பெருவேள்வியாகிய பஞ்சயக்ஞம் பற்றியும் கிருஹியத்திலும் பேசும் (விபரம் 8ம் விடையிற் காண்க).

ஆக கிருஹிய சூத்திரம் வேதகால ஆரியரின் பிறப்பு முதல் இறப்பீறாக அமையும் வாழ்க்கையினை நெறிப்படுத்தியும், அவர்களைத் தமக்கென வாழாப்பிறர்க்குரியாராக ஆக்கியும் உதவிற்று. இவ்வகையில் அந்நூல் இல்வாழ்வார்க்குத் தலைசிறந்த வழிகாட்டியாயிற்று.

07. புராணங்களை மகாபுராணம், உபபுராணம் என்று அவற்றின் அளவுக்கும் உள்ளடக்கத்திற்கும் ஏற்பப் பாகுபடுத்தினர். புராணங்களின் இலட்சணங்களைப் பொதுப்படையில் ஐந்தாக வகை செய்வதே மரபு. ஆனால் மகாபுராணங்கள் பத்திலக்கணங்களையும் (தசவிலட்சணம்) உபபுராணங்கள் ஐந்திலக்கணங்களையும் (பஞ்சவிலட்சணம்) கொண்டவை எனப் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் தமது 'இந்துப் பண்பாட்டின் கருவூலமான பதினெண்புராணங்கள்' என்ற கட்டுரையிலே (இந்துப் பண்பாட்டு மரபுகள்) விளக்கியுள்ளார். அவர் எடுத்துக் காட்டியுள்ள பத்திலட்சணங்களும் பின்வருவன.

1. விருத்தி : தானம், விரதம், சிராத்தம் போன்றவற்றை விளக்குவன.
2. ரக்ஷா : தெய்வ அவதார வரலாறு
3. முக்தி : இறுதியாய் அடைவதற்கான முத்தி பற்றிய விளக்கம்
4. ஹேது : ஆன்மா பற்றிய விவரணம்
5. அபாகிரய : பிரமம் பற்றிய விவரணம் (இவை பாகவதபுராணத்திற் காணப்படுவன என்பர்)

இவற்றோடு பொதுவாகவுள்ள பஞ்சலட்சணங்களையும் சேர்த்துக் கொள்ளத் தசவிலட்சணங்கள் (10) ஆகின்றன.

6. சர்க்கம் : படைப்பு (உலகின்)
7. பிரதிசர்க்கம் : அழித்துப் பின் படைத்தல்
8. வம்சம் : இருடிகள் பரம்பரை பற்றிய வரலாறு
9. மன்வந்தரம் : மனுவின் காலம்
10. வம்சாநு சரிதம் : மன்னர் பரம்பரை பற்றியது

மகா புராணங்கள் பதினெட்டு என்பது யாவர்க்கும் தெரிந்ததே. உபபுராணங்களும் எல்லாமாகப் பதினெட்டேயாகும்.

சனற்குமார, நரசிம்ம, நந்த, சிவ, தர்ம, துர்வாஸ, நாரதீய, கபிலவாமன, உஷண, மானவ, வருண, கலி, மகேஸ்வர, சாம்ப, சௌர, பராசர, பரீச, பார்கவ என்பன பதினெண் உபபுராணங்களாகும். எனினும் இவ்வெண்ணிக்கையில் ஒரு சீரான ஒழுங்கு இல்லை எனவும், இவை காலத்தாற் பிற்பட்டவை எனவும், வரலாற்றம்சம் சற்றுக்குறைவானவை எனவும் கோபாலகிருஷ்ண ஐயர் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மபுராணத்திற் குறிப்பிட்டபடி சாத்விக, ராஜச, தாமசகுணங்களின் அடிப்படையில் பதினெண் புராணங்களை வரிசைப்படுத்தும் வழக்கு ஒன்று உண்டு. அது வருமாறு.

அ) சாத்துவிகக்குணம் அமைந்தவை : விஷ்ணு, நாரதீய, பாகவத, கருட, பத்ம, வராகபுராணங்கள்

ஆ) தாமஸ குணம் அமைந்தவை : மத்ஸ்ய, கூர்ம, லிங்க, சிவ, அக்கினி, ஸ்கந்த புராணங்கள்

இ) ராஜஸ குணம் அமைந்தவை : பிரமாண்ட, பிரம வைவர்த்த, மார்க்கண்டேய பிரம, வாமன, பவிஷ்ய புராணங்கள்

இனி, இன்ன இன்ன கடவுளர்க்குரியவை இன்ன இன்ன புராணங்கள் என வரிசை செய்தலும் ஒன்று.

1. பிரமன் : பிரம, பத்ம புராணங்கள்
2. சூரியன் : பிரம வைவர்த்த புராணம்
3. அக்கினி : அக்கினி புராணம்
4. சிவன் : சிவ, ஸ்கந்த, லிங்க, கூர்ம, வாமன, வராக, பவிஷ்ய, மத்ஸ்ய மார்க்கண்டேய, பிரமாண்ட புராணங்கள்
5. விஷ்ணு : நாரத, பாகவத, கருட, விஷ்ணு புராணங்கள்

இப்புராணங்கள் யாவும் வடநாட்டிலே வடமொழியில் ஆக்கப்பட்டவையாகும். தமிழ்நாட்டிலே தோன்றிய தமிழ்ப்புராணங்களும் பலவுள. வடமொழிப் புராணங்களிலிருந்து தமக்குவேண்டிய கருவை மட்டும் பெற்றுக்கொண்டு விரிவாகப் பாடப்பட்ட புராணங்கள் ஒருவகை. இவற்றிலே குறிப்பிடத்தக்கது கந்தபுராணமாகும். வடமொழி ஸ்கந்தத்தில் ஒரு பகுதியைக்கொண்டு கச்சியப்பசிவாசாரியர் சுத்த சைவசித்தாந்த தத்துவம் புலனாகும் வகையில் கந்தபுராணத்தை அருளினார். பொதுவாகக் கந்தசுவாமியின் வரலாற்றை விரித்துரைத்த புராணமான கந்தபுராணம் புராண நன்னாயகமாகும். மன்றுளாரடியாரவர் வான்புகழ் கூறும் திருத்தொண்டர் புராணம் சேக்கிழாரால் பத்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியருளப்பட்டது. சிவபெருமானின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கூறுவது பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடற்புராணம். கடவுண் மாமுனிவர் மாணிக்கவாசகரின் வரலாற்றை விரித்துத் திருவாதவூரர்புராணம் பாடினார். மற்றும் காஞ்சிப்புராணம், தொண்டைப்புராணம் முதலாகத் தலமகிமைகளை விரித்துரைக்கும் புராணங்கள் பெரும் எண்ணிக்கையில் தமிழில் உள்ளன. இவ்வாறு பல்வேறு வகைகளில் தமிழில் புராணங்கள் அமைந்துள்ளமை சிறப்பாக எடுத்துக்கூற வேண்டுவதாகும்.

08. பஞ்சமகாயக்ஞங்கள் ஐம்பெருவேள்விகள் எனப்பொருள்படும். இவை இல்லறத்தான் நடாத்தவேண்டிய இன்றியமையாக் கடன்களாகக் கிருஹிய சூத்திரத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவை பற்றிய விளக்கம் பின்வருமாறு.

1. பிரமயக்ஞம் : வேதங்களை ஓதிப் பரமான்மாவாகிய பிரமத்தை வழிபடல்.
2. பிதிர்யக்ஞம் : இறந்த தன் முன்னோருக்கு (பெற்றோர் முதலானோர்க்கு) நீர்க்கடன் இறுத்துக் காலந்தோறும் சிரார்த்தம் நிகழ்த்துதல்
3. தேவயக்ஞம் : வேள்வித்தீயில் அவிசொரிந்து தேவரை வழிபடல்.
4. பூதயக்ஞம் : விலங்குகள், பறவைகள், ஆவிகள் ஆகியவற்றிற்கு வாயிற்படியிலே தானியம் தூவி எல்லாவுயிர்களையும் வழிபடல்
5. புருடயக்ஞம் : விருந்தினரை வரவேற்று உபசரித்தல். இது அதிதியக்ஞம் எனவும்படும்.

(A,L பசாமின் வியத்தகு இந்தியாவை ஆதாரமாகக்கொண்டது.)

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பர் திருவள்ளுவர். 'தர்மம் செய்க' என்பது உபநிடத அறிவுரை. இல்வாழ்வில் அமர்ந்தவனின் இன்றியமையாக் கடன்களே தருமம் ஆகும். மேற்குறித்த ஐந்தும் தனது ஆன்ம ஈடேற்றத்துக்கும், தன்பின்னோரின் ஈடேற்றத்துக்கும், சகல சீவராசிகளையும் காத்தற்கும் உபகாரமாவன. எனவே இவை அறத்தின்பாற்படுகின்றன. 'அறத்தான் வருவதே இன்பம்' –திருக்குறள்.

ஆறாம் வினாவுக்கு விடையாகக் கிருஹிய சூத்திரம் பற்றிய விளக்கம் தரப்பட்டது. பிரமயக்ஞம், தேவயக்ஞம், பிதிர்யக்ஞம் ஆகியன சமயச்சடங்குகளாகவே நடத்தப்படுவதால் அவை வேள்விகள் என்ற பெயருக்குக் கூடிய பொருத்தமானவை. அதிதியக்ஞமும், பூதயக்ஞமும் வேள்வியாகிய சமயச்சடங்குகளோடு நேரடித்தொடர்பு கொள்ளாவிடினும், தன்னலமற்றுச் செய்யப்படும் மானசீக வேள்விகளே. எனவே மேற்குறித்த ஐம்பெருவேள்விகளும் ஏதோ ஒருவகையில் சடங்காசாரங்களோடு இயைந்தவையேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. இதி-ஹ-அஸ என்ற மூன்று பதங்களின் கூட்டுச்சொற்றொடரே இதிகாசம் என்பது. இது இவ்வாறு இருந்தது (நிகழ்ந்தது) என்ற பொருளை இச்சொற்றொடர் தருகின்றது. முற்காலத்திலே நடைபெற்றபோர்கள், அப்போர்களிலே கலந்துகொண்ட வீரர்கள், அவர்களின் போர்க்காரணிகள், பிற நிகழ்வுகளை ஓரளவு வரலாற்றுணர்வுடன் கர்ணபரம்பரையாகச் சொல்லிவந்து பின்பு ஒருவரால் சுவை குன்றாது பாட்டுவடிவில் எழுதப்பட்டனவே இதிகாசங்கள். வீரத்தலைவர்கள் மக்களால் தெய்வங்களாகப் போற்றப்பட்டு அவர்களை மக்கள் வழிபடத்தொடங்கியபோது இதிகாசங்கள் சமயமெருகேற்றப்பட்டு இந்துசமயத்தின் இன்றியமையாத இலக்கியங்களாய் இடம்பெறலாயின. பாரதக்கதை ஸ்ரீ கிருஷ்ணனைத் தெய்வமாக்கியது. இராமாயணக் கதை ஸ்ரீ இராமனைத் தெய்வமாக்கியது. இவ்விருவரும் திருமாலின் அவதாரங்களாகி வைணவ மதத்தில் முதன்மைபெற்றனர். சிவரகசியம் என்ற இதிகாசம் சிவனது மகிமை பேசுவதாயிருப்பினும், பாரதம், இராமாயணம் போலப் பிரபலம் பெறாதும், பலராலும் அறியப்படாதும் உள்ளது.

தருமம் என்ற பொருள் ஒன்று உள்ளது. அதற்கு எதிரானது அதருமமாகும். தருமம் ஒளியெனில் அதருமம் இருள் எனலாம். தருமத்தைக் கடைப்பிடிப்பதும் அதருமத்தை விலக்குவதும் மானிடரால் கைக்கொள்ளப்படவேண்டியவை. ஆனால் காமம், குரோதம், மதம், மாற்சரியம் எனும் இழிகுணங்களும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் ஆசைகளும் மனிதரை இழிகுணத்தவராக்குகின்றன. இக்கொடியவர்களால் தருமம் நலிவுக்குள்ளாகின்றது. அதருமம் மேலோங்கத் தொடங்குகின்றது. ஆரம்பத்தில் தருமம் வழிநிற்போர்க்கு அவலம் பல ஏற்பட்டாலும், அதரும வழி நிற்போர்க்கு நலம்பல விளைந்தாலும் இறுதியிலே தருமமே வெல்லும்.

"தீமையை அழிக்கவும் நன்மையைக்காக்கவும் தீயோரை நாசம் செய்யவும், நல்லோரைப் புரக்கவும் நான் யுகந்தோறும் என்னைப் பிறப்பித்துக் கொள்கின்றேன்" என்பது ஸ்ரீ கிருஷ்ணனின் திருவாக்கு. எனவே பாண்டவரின் இறுதிவெற்றியும், இராமனின் இராவணவதமும் தருமத்தால் விளைந்தவை என்ற உண்மையை மிகத்தெளிவாகப் பாரதமும் இராமாயாணமும் எடுத்தியம்புகின்றன. இதனோடு புராணங்கள் போலவே செபம், தவம், விரதம், பக்தி, முதலாம் சமயம் சார்ந்த ஒழுக்கநெறிகளும் அவற்றைப் பேணுவோர் அடையும் மேன்மையும், வேள்விகளால் பயனும், இலௌகிக வாழ்க்கையில் பெற்றோர், குரு, மூத்தோரை வழிபடல், சகோதரபாசம், ஒற்றுமை பேணல் என்பனவும் இதிகாசங்கள் மூலம் வலியுறுத்தப்படுகின்றன.

புராணங்களையும் இதிகாசங்களையும் ஒப்பிட்டு நோக்கினால் இரண்டினதும் உயிர்நாடிகளாய் விளங்குவன வேத அநுசாரங்களும், கடவுட் கோட்பாடும், முனிவர், தேவர் முதலியோரின் மேன்மைகளும், பரம்பொருளின் அருள்பற்றிய உண்மையுமேயெனலாம். புராணங்களிலும் வரலாறு, புவியியல், அறிவியல் சார்ந்த உண்மைகள் பேசப்படுகின்றன. இதிகாசங்களும் இவற்றைப் பேசுகின்றன. இதிகாசத்தில் புராணத்திலும் மேலதிகமாகப் பெரும்பாலும் போர், காதல் என்பன பேசப்படும் எனலாம். இவை புராணத்திலும் ஆங்காங்கே இல்லாமல் இல்லை என்பதுண்மை. இரண்டிற்கும் வேறுபாடு என்று ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் புராணம் நேரடியாகவே சமய அநுசாரங்களைக் கூற இதிகாசங்கள் ஓரளவு மறைமுகமாகவோ இலக்கியச்சுவை படவோ கூறுகின்றன என்று அமைதி காணலாம்.

உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பன பிரஸ்தானத் திரயங்கள் எனப்படுகின்றன. வேதம் பசு என்றும் பகவத்கீதை அதிலிருந்து பெறப்படும் பால் என்றும் குறிப்பிடப்படுவதிலிருந்து அதன் பெருமை நன்கு புலனாகும். பகவானின் நேரடி உபதேசமாகப் பகவத்கீதை சித்தரிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கதுமாகும். ஒவ்வொருவரும் தமக்கென விதிக்கப்பட்ட தருமத்தை விடாது கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தைப் பகவத்கீதை வற்புறுத்துவதை நோக்க அது சமுதாயம் நன்முறையில் இயங்க வழிகாட்டும் நூலாகவும் கொள்ளத்தக்கதாயுள்ளது. கடமையைச் செய்யும்பொழுது அதன் பயனிற் பற்றுவையாது செய்ய வேண்டும் என்றும் பகவத்கீதை வலியுறுத்துகின்றது. இது நிஷ்காமிய கர்மம் எனப்படும் பலனிற் பற்றுவையாமை என்பது பயனைத் தருவதை இறைவனின் கடனாக விட்டுவிடுதலே என்று கொள்ள வேண்டும் கர்மயோகம், ஞானயோகம், இராஜயோகம் என்றும் எல்லாமே யோகமாகக்கொள்ளப்படும் பகவத்கீதையானது ஆழ்ந்த தத்துவநோக்குக் கொண்டதாய் விளங்கும் அதேவேளை உலகியல் வாழ்க்கையை உயர் முறையிலே நடாத்தவும் வழிவகுப்பதால் அது இம்மை, மறுமை இரண்டுக்கும் பயன்படுவதே அதன் தனிச்சிறப்பெனலாம்.

10. ஆகமம் என்பது தொன்றுதொட்டு வரும் அறிவு எனப்பொருள்படும். ஆ-பாசம், க-பசு(ஆன்மா), ம-என்பது பதி எனக்கொண்டு அநாதியான இம்முப்பொருள்களையும் விளக்குவது ஆகமம் எனவும் கொள்வதுண்டு. கம என்ற வடசொல் போதல் எனப்பொருள்படும். அதன் உபசர்க்கமாய் அமையும் 'அ' என்பது போதலுக்கு எதிரான வருதல் எனப்பொருள் தருவதாகும். அதாவது இறைவனிடமிருந்து (சிவன்) வந்தது என்பதாகும். ஆ என்பதைச் சிவஞானம் எனவும், க என்பதை மோட்ச சாதனம் எனவும் ம என்பதை மலநாசம் எனவும் கொண்டு சிவஞானமாகிய மோட்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனத்தால் மலத்தை நாசம் செய்ய வழி காட்டுவது ஆகமம் எனவும் பொருள் கொள்வர். அநாதியான முப்பொருள்களை விரித்துரைத்து அவை ஒன்றோடொன்று கொள்ளும் தொடர்பையும் விளக்கி இறையோடு ஆன்மா கூடுவதாகிய வீடுபேற்றுக்கான சரியை, கிரியை, யோகம் ஞானமாகிய நான்கு பாதங்களையும் விரித்துரைப்பதே ஆகமம்.

வேதவழிபாடு வேள்வியை முதன்மைப்படுத்துவது. உருவவழிபாட்டிற்கு வேதம் முதன்மையளிப்பதில்லை. வேதங்கள் தெய்வங்களின் உருவத்தை வருணித்தபோதும் அவ்வருணனைக்கமைவான உருவங்களை அமைத்து வழிபடல் இல்லை. ஆனால் ஆகமமோ பூசைக்கிரமத்துக்கு முதன்மையளிப்பதாகும். பூசைக்கான இலட்சியத்திருவடிவங்களே விக்கிரகங்கள். விக்கிரகங்களைப் பிரதிஷ்டை பண்ணி வழிபடும் இடமே ஆலயம். எனவே ஆலய அமைப்பு, விக்கிரக அமைப்பு, அவற்றை ஆலயத்தில் எழுந்தருளப்பண்ணல், நித்திய நைமித்திக பூசை என்பவற்றிக்கான விதிமுறைகளும் ஆகமங்களில் இடம்பெறுதல் இயல்பேயாகும்.

சிவாகமங்களின் தொகை இருபத்தெட்டு. அவை காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்குமம், சகசிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்காதம், இலலிதம், சித்தம், சந்தானம், சர்வலோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்பனவாம். இவை மிகப்பழங்காலத்திலேயே தோன்றிச் செவிவழியாகவும் செயல்முறையாகவும் நிலவி நீண்டகாலத்திற்குப்பின் ஏட்டில் எழுதப்பட்டன. மிக அண்மைக்காலத்தில் இவற்றிற் சில அச்சுவாகனம் ஏறியுமுள்ளன. தென்னாட்டிலேயே ஆகமங்கள் தோன்றின எனவும், ஆகமமுறை வழிபாடும், தத்துவமும் சாதனைகளும் சாதனங்களும் தென்னாட்டிலேயே கடைப்பிடிக்கப்படுகின்றன எனவும் அறிந்தார் உரைப்பர்.

முன்னர்க்குறித்த கோயில்சார்ந்த அனைத்து விடயங்களும் பசு, பதி, பாசமாகிய முப்பொருளிலக்கணங்களும், நாற்பாத விளக்கமும், மூவகை வழிபாட்டுமுறைகளும், இசைக்கலை, கோயிற் கட்டடக்கலை, விக்கிரகக்கலையாகிய கலையமிசங்களும் சிவாகமங்களின் உள்ளடக்கங்களாகும். சிவாகமங்கள் போலவே வைணவாகமங்கள் (பாஞ்சராத்திரம், வைகானசம்), சாக்தாகமங்கள் (தந்திரங்கள்), குமரக்கடவுளுக்கான ஆகமங்கள் (குமாரதந்திரம்), விநாயக ஆகமங்கள் (ஏரம்பஉபநிடதம்) முதலியன உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வேதங்களில் மட்டுமன்றி ஆகமங்களிலும் குருவின் முக்கியத்துவம் மிகுதியும் போற்றப்படுகின்றது. குருவாயிலாகத்தீட்சை பெறுதல், உபதேசம் பெறுதல் என்பன நிகழவேண்டும் என ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. "குருவே பிரமா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன், குருவே சாட்சாத் பரப்பிரம்மம் எனவே குருவாகிய உமக்கு வணக்கம்" என்னும் குருவணக்கம் ஆகமமும் ஏற்றுக்கொண்ட ஒன்றேயாம். ஆகம சாரமான திருமூலரின் திருமந்திரங்கள், மெய்கண்ட சாத்திரங்கள் ஆகியனவும் குருவினை முதன்மைப்படுத்தித் தெய்வமாக வழிபடவேண்டும் என வற்புறுத்துகின்றன.

ஐம்புல வேடரின் அமர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே
என்பது சிவஞானபோதம்.

11. ஆன்மாவானது இறைவனிலே லயிக்கும் பரியந்தம் அதற்குப் பயிற்சியும் அனுபவமும் வழங்கும் இடமே ஆலயமாகும். தொடக்கத்தில் 'காடும், காவும், கவின்பெறும் துருத்தியும் யாறும் குளனும் வேறுபல் வைப்பும் சதுக்கமும் முதலாகத் திறந்த வெளியான இடங்களிலும் இறைவழிபாடு நடத்தியோர். மழை, வெயில் முதலாம் இயற்கை இடையூறுகளினின்றும் தவிர்த்துக்கொள்ள ஆலயங்கள் அமைத்தனர். அவை காலப்போக்கில் இந்துமதத்தவரின் சமய, கலாச்சார, சமூக மேம்பாட்டு நிலையங்களாக மாறிவருகின்றன. 'திருக்கோயில் இல்லாத திரு இல் ஊர் அடவி காடே' என்பது அப்பர் சுவாமிகளின் முடிந்த முடிபு.

ஆலயத்தின் அமைப்பை எடுத்துக்கொண்டால் அதன் முகப்பில் உள்ள கோபுரமே எமது முதல் தரிசனத்துக்கு உரித்தாகின்றது. அசலலிங்கம், அல்லது தூலலிங்கம் எனப்படும் கோபுரம் சித்திரக்கலை நுட்பம் பொருந்தி, படிப்படியாக ஒடுங்கி மேலெழுமாறு அமைந்துள்ளது. அண்டசராசரங்களிலுள்ள உயிரினங்கள் பலவற்றையோ, குறித்த இறைவனது திருவிளையாடல்களையோ கோபுரச்சிற்பங்கள் புலப்படுத்துகின்றன. இறைவனது திருப்பாதத்தினைக் கோபுரம் உணர்த்தும் என்பர். கோபுரத்தை அடுத்து கல்யாண மண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபம், ஸ்நபன மண்டபம், அலங்காரமண்டபம் முதலாய் பல மண்டபங்களைக் கொண்டவை பேராலயங்கள். இம்மண்டபங்கள் யாவிற்கும் சிகரம் வைத்தாற்போன்று சிவமூர்த்தி எழுந்தருளியுள்ள கர்ப்பக்கிருகம் அல்லது மூலஸ்தானம் அமைந்திருக்கும். சிகரம், தூபி, என்ற பெயர்களாலும் அழைக்கப்படும் விமானம் என்பது கோயிலில் மூலஸ்தானத்திலிருந்து மேல்நோக்கி எழுந்து நுனியில் தாமரைப் பூ வடிவுபெற்று முடியில் ஒரு கலசத்துடன் விளங்கும். மகா மண்டபத்தின் நடுவே பலிபீடம், கொடிஸ்தம்பம், நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன அமைந்திருக்கும். உள்வீதியில் மூலஸ்தான மூர்த்தியான மூர்த்தங்கள், பரிவார தேவதைகள் எழுந்தருளத் தனித்தனி அறைகள் உள்ளன. கோயிலின் அளவுக்கும், விசாலத்திற்குமேற்பக்கோயில் மதிலை அடுத்து வெளி வீதி ஒன்று முதல் இரண்டு, மூன்று என அமைந்திருக்கும். ஆலயத்திற் தெற்குப்புறத்தில் தீர்த்தக்குளம், நீராழி மண்டபம் என்பன காட்சி தரும். ஆலய அமைப்பனைத்தும் ஏதோ ஒரு தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன் மண்டபவாயிலிலே இருபுறத்தும் துவாரபாலகர் நின்று வழிபடச் செல்வோர்க்கு அனுமதியையும் பயபக்தியையும் வழங்குவர்.

ஆலயவழிபாட்டுமுறை பற்றி மிகவிரிவான விளக்கத்தினை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முதலாம் சைவவினாவிடையின் ஆலயத்தரிசனவியல் தருகின்றது. கோயிற்குளத்தில் கால் கழுவி, ஆசமனம் செய்து, கோபுரத்தை முதற்கண் வணங்கி, துவாரபாலகரிடம் அனுமதிபெற்று, உள்நுழைந்து, நந்தியை வணங்கி, மூலஸ்தானத்தில் உள்ள மூர்த்தியை மனலயிப்புடன் வழிபட்டு, சிவசிவ என்று ஓதிய வண்ணம் கருப்பவதி ஒருத்தி தலையில் எண்ணெய்க் குடத்துடன் வீதியை வலம்வருவது போன்று ஒவ்வொரு மூர்த்தியையும் உரியமுறையில் வணங்குதல் வேண்டும் என்பது நாவலர் கூற்றின்சாரம். வீதி வலம் மும்முறைக்குக் குறையாதிருத்தல் வேண்டும் என்பதும், அருச்சகரைப் பணிந்து விபூதி பிரசாதம் பெற்று அவரைப் பாராது மறுபுறம் திரும்பி விபூதி தரித்தல் வேண்டும் என்பதும், அ:ருச்சனை செய்வித்தபின் ஆலயவீதியில் ஒருசார் அமர்ந்து சிவநாமம் செபித்தல் வேண்டும் என்பது அவர் கூறும் விதிமுறைகள். ஆலயத்தில் செய்யத்தகாத குற்றங்கள் என அவர் எடுத்துக்காட்டுவனவும் நம்மவரால் பின்பற்றப்பட வேண்டுவனவாகும்.

ஆலயங்களின் கட்டடச் சிற்பம், விக்கிரக அமைப்பு, இசைக்க வேண்டிய வாத்தியங்கள், வரையப்பட்டுள்ள ஓவியங்கள், வாகனங்கள் யாவும் சமய தத்துவ அடிப்படையோடு நின்றுவிடாது கலையம்சமும் பொருந்திக் கோயில்களைக் கலாசார மையங்களாக்கிவிடல் காணலாம்.

12. தேவாரம் என்ற பதம் தேவு ஆரம், தே வாரம் என இருவகையாகப் பிரித்துப்பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது. தே, தேவு என்பன கடவுளைக் குறிப்பன. ஆரம் என்பது மாலையைக் குறிக்கும். வாரம் என்பதன் பொருள் உரிமை, (தெய்வம்) பாட்டு எனப்பொருள் தரும். ஆகவே கடவுளுக்கு அணியும் மாலை எனவும், கடவுளுக்கு உரிமைப்படுத்தப்பட்டது. கடவுட்பாட்டு எனவும் மூன்று பொருள்களைத் தேவாரம் என்ற பதம் தருகின்றது. தேவாரத்தைப் பாமாலை, தமிழ்மாலை என்றெல்லாம் தேவாரங்களிற் குறித்துள்ளமையும் நோக்கத்தக்கது. கடவுளுக்கு உரிமைப்படுத்திச் சமய குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தமிழ் மலர்கொண்டு கட்டி இறைவனுக்கு அணிந்த மாலைகளே தேவாரங்களாம்.

தேவாரமுதலிகள் தமது அருளிச்செயல்களாகிய தேவாரங்களிலே வேதத்தின் முதன்மையையும் அது சிவபெருமானுக்கு எவ்வகையிற் பிரீதியானது, உறவுடையது என்பனவற்றையும் அடிக்கடி எடுத்துக்கூறக் காண்கின்றோம். 'வேதத்திலுள்ளது நீறு, வேதத்தொலியாலும் மிகுவேணு புரந்தன்னை', 'வெந்தவெண்ணீறு பூசி விடையேறிய வேதகீதன்', 'வேதம்பல வோமம் வியந்தடிபோற்ற' என்றெல்லாம் வேதத்தின் சிறப்பு, விமலனாகிய சிவன்வேதத்தை இசைத்தல், வேதமுறை வேள்விச் சிறப்பு என்ற பலவற்றையும் திருஞானசம்பந்தர் தமது பாடல்களிலே எடுத்துரைப்பர். "வேதங்கள் நான்கும் அங்கம் பண்ணினார்", 'வேதநாயகன் வேதியர் நாயகன்' என்று வேதத்தோடு சிவனுக்குரிய உறவினை அப்பர் சுவாமிகள் எடுத்தியம்புவார்.

"வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆகமில்லி அமணொடு தேரரை"

என்று சம்பந்தர் வேதவேள்வியை நிந்திக்கும் சமணரையும், தேரரையும் கண்டிப்பதும் இவ்விடத்தில் நினைவு கூறவேண்டுவதே. 'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி' என்னும் வேதமகாவாக்கியத்தின் ஓரிறைக் கொள்கை, 'பேராயிரம்பரவி வானோர் ஏத்தும் பெம்மானை' என்று அப்பரடிகளால் நினைவுகூரப்படுகின்றது. வேதாந்தக் கருத்தாகிய, "பிரமம் நீரிற்கலந்த உப்புப்போல ஆன்மாவுடன் இரண்டறக் கலந்து" நிற்பதை அவர், "விறகில் தீயினன் பாலிற்படுநெய்போல் மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்" என்ற தேவாரத்தில் விளக்குவதும் ஈண்டு நோக்கத்தக்கது. இவைபோன்ற வேதசாரமான கருத்துக்கள் தேவாரங்களில் மிகுதியும் விரவியுள்ளன.

பத்தியின் தோற்றம் பத்தி புரிபவனின் கழிவிரக்கத்திலிருந்தே முகிழ்ப்பதாகும். அப்பர் சுவாமிகளும், சுந்தரரும் தாம் செய்த தவறுகளை எடுத்தியம்பிக்கண்ணீர்விட்டுக் கசிந்துருகும் சந்தரப்பங்கள் பலவாகும். அவ்விடங்களிலெல்லாம் பக்தியின் உருக்கத்தினைக் காண்கிறோம். தாம் சமணராகி வாழ்ந்த காலத்தை நினைத்து, 'கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வனேன்.' 'கரும்பிருக்க இரும்புசித்த தெய்த்தவாறு' 'பனிநீராற் பாவை செய்யப்பாவித்தேன்' என்பன அப்பரின் கழிவிரக்கத்தினைப் புலப்படுத்துவன.

'செய்வினையொன்றறியாதேன் திருவடியே சரணென்று
பொய்யடியேன் பிழைத்திடினும் பொறுத்திட நீ வேண்டாவோ'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், 'வழுக்கிவீழினும் திருவடிபிழையேன்' என்றும் சுந்தரர் புலம்புவனவும் கழிவிரக்கத்திற்கு நற்சான்றுகளாம். பற்றற்றான் பற்றினைப் பற்றி நின்று நலந் தீங்குயாவினும் அவனே துணையென உறுதி பூண்டு, தன்செயலுக்கெல்லாம் அவனிடமே அனுமதி வேண்டிநிற்கும் பத்தியின் மற்றோரியல்பினைச் சம்பந்தரின் திருப்பாடல்கள் வெளிப்படுத்துவன. 'ஈனர்கட்கெளியேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே' என்றும், ஞாயிறு திங்கள் முதலாம் கோள்கள் யாவும் "ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே' என்றும் நம்பிக்கை உறுதியைச் சம்பந்தர் வெளிப்படுத்துகின்றார். கண்ணீர்வார மெய்ம்மயிர்பொடிப்ப நின்று கசிந்துருகி அழும் நிலைக்கும் தேவாரப்பாடல்களில் சான்றுகள் உள. விரிக்கிற் பெருகும்.

'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பது ஔவையாரின் அமுதமொழி. மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன் எனத்தொழுமே' என்ற சிவஞானபோதத் திருவாக்கு சிவனடியாரை (மாலறநேயம் மலிந்தவர் வேடமும்) அவரின் தவவேடத்தைச் சிவனாகவே கருதி வழிபடுமாறு வலியுறுத்துகின்றது.

'ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்..............'

என்பது திருவருட்பயன். இவற்றையெல்லாம் உள்வாங்கிக்கொண்ட அப்பர் முதலாம் தேவாரம் பாடிய திருவருட்செல்வர்கள், அடியார்கள் எக்குலத்தவராயினும் எச்சாதியராயினும் அவர்களைச் சிவனாகவே பாவித்து வழிபடுமாறு வற்புறுத்தக்காண்கின்றோம்.

'ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தாற் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே'

என்பது அப்பர் திருவாக்கு. 'தொண்டுசெய்து நாளாறிற் கண்ணிடந்தப்பவல்லே னல்லன்' என்று கண்ணப்பநாயனாரின் பத்திவைராக்கியத்தை அவர் வியந்து நிற்கின்றார். சுந்தரர் 'அடியார்க்கும் அடியேன்' என்று அடக்கத்துடன் பணிந்து வகையடியார் அறுபத்து இருவரையும் தொகையடியார் ஒன்பதின்மரையும் போற்றித் திருத்தொண்டத் தொகை பாடியது யாவரும் அறிந்ததே. (சுந்தரர் தம்மை விலக்கி அறுபத்திரு நாயன்மார்களைப்பாடினார். அவருடன் சேர்க்க நாயன்மார் அறுபத்து மூவராவர்.)

"நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்றசூதன்நற் சாக்கியன் சிலந்தி கண்ணப்பன் கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங் குணமெனக் கருதும் கொள்கைகண்டு நின்குரைகழல் அடைந்தேன்........."

என்று சுந்தரர் பாடி, அடியவர்கள் செய்யும் குற்றங்களையும் சிவபெருமான் குணமாகக்கொள்வார் என்ற உண்மையைப் பெறவைத்து அதன் மூலமும் அடியவர்களின் பெருமையை அறிவுறுத்துகின்றார் எனலாம்.

13. திருவாரூரிலே வன்மீகநாதர் திருக்கோயிலின் தேவாசிரியன் மண்டபத்தில் எழுந்தருளியிருந்த (பிரதிட்டை பண்ணப்பட்ட) சிவனடியார்களைத் தரிசித்த சுந்தரர் இவர்களுக்கு அடியவனாகி நான்வாழ்வது எந்நாள் என்ற ஆவல் மீதூரத் திருத்தொண்டத்தொகை என்னும் பதிகத்தைப் பாடியருளினார். இப்பதிகத்தினை அடியொற்றி நம்பியாண்டர் நம்பி ஒவ்வொரு நாயனாருக்கும் ஒவ்வொரு பாடலாகத் 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்னும் வழிநூலை ஆக்கினார். அநபாயசோழமகாராசாவின் அமைச்சராய் விளங்கிய அருண்மொழித்தேவர் என்னும் சேக்கிழார், இராசாவும் மக்களும் அவக்கதையாகிய சீவகசிந்தாமணியைப் படித்துச் சுவைத்து மகிழ்வது கண்டு வருந்தித் "தவக்கதையான அடியார் வரலாற்றைப்பாடுவேன்" என்று தீர்மானித்து இராசாவின் இசைவோடு சிதம்பரம் சென்று, அங்குச் சிவபெருமான் 'உலகெலாம்' என அடிஎடுத்து (அசரீரி வாக்காக)க் கொடுத்தருளத் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார். இத்தொண்டர்மாக்கதை திருத்தொண்டத்தொகையின் சார்புநூல்.

திருத்தொண்டர் புராணத்தில் ஒன்பது தொகையடியார்களாகக் குறிக்கப்பட்டோர் வருமாறு.

1. தில்லைவாழந்தணர்
2. பொய்யடிமையில்லாத புலவர்
3. பத்தராய்ப்பணிவார்
4. பரமனையே பாடுவோர்
5. சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்
6. திருவாரூரில் பிறந்தார்கள்
7. முப்போதுந் திருமேனி தீண்டுவார்
8. முழுநீறு பூசிய முனிவர்
9. அப்பாலும் அடிசார்ந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 1. | தில்லைவாழ் அந்தணர் | – | சிதம்பரத்து நடராசப் பெருமானின் கோயிலுக்குப் பரம்பரைபரம்பரையாக அருச்சகராய்ப் பணிபுரியும் பேறுபெற்ற மூவாயிரவர். இவர்களை இக்காலத்திற் தீட்ஷிதர் என வழங்குவர். |
| 2. | பொய்யடிமையில்லாப் புலவர் | – | மானிடரைப் புகழ்ந்து இச்சைபேசினாலும் அவர்கள் பொய்ம்மையாளராதலால் கொடை வழங்காது ஏமாற்றுவர். எனவே அவர்கட்கு அடிமையாகாது இறைவனுக்கே அடிமைபூண்டு அவனையே பாடிப்பரவுவோர். |
| 3. | பத்தராய்ப் பணிவார் | – | உண்மையடியார்களாய்ப் பிறதெய்வங்களைப் பணியாது சிவனுக்கே பணிந்து தொழும்பு பூண்டோர். |
| 4. | பரமனையே பாடுவோர் | – | அவனையே (சிவனையே) பாடுவோர் |
| 5. | சித்தத்தைச் சிவன்பால் வைத்தோர் | – | தம்உள்ளத்தை முழுமையாகச் சிவனில் பதித்து அவனை வழிபடுவதையே வாழ்வாகக்கொண்டோர். |
| 6. | முப்போதும் திருமேனி தீண்டுவார் | – | இறைவனை மூன்றுவேளையும் தீண்டிப்பூசை செய்யும் சிவாசாரியார்கள் |
| 7. | திருவாரூர் பிறந்தார் | – | 'திருவாரூரிற் பிறக்கமுத்தி 'என்பது முதுமொழி. எனவே அங்கு பிறப்போர் சீவன் சிவன் ஆகும் தகுதியையுடையோர். அவர்களுக்கு அடிமையாவதாகச் சுந்தரர் கூறுவது கருதத்தக்கது. |
| 8. | முழுநீறு பூசிய முனிவர் | – | திருநீறு தலைசிறந்த சிவசின்னம். அதன் பெருமையைத் திருஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் சிறப்பாக எடுத்துரைக்கும். எனவே இவர்களும் வணங்குதற்குரியோரே. |
| 9. | அப்பாலும் அடிசார்ந்தார் | – | சைவசமயத்துக்கு அப்பாலாய்ப் பிறசமயங்களைப் பூண்டும் சாக்கியர் போலச் சிவசிந்தையராய் உள்ளோர். |

திருவாரூரர் ஆலயத்தின் திருவாசிரியன் மண்டபத்தில் எழுந்தருளியிருந்த சிவனடியார்களின் திருக்கூட்டப் பெருமையைத் திருக்கூட்டச்சிறப்பு என்ற பகுதியிலே சேக்கிழார் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார், அதன் சாரம்வருமாறு.

அத்தரான சிவபெருமான் தம்மை ஆட்கொண்ட திறத்தினை வியந்து மெய்நடுக்கமுறுகின்ற உள்ளத்தினரான இவ்வடியார்கள் திருக்கோயிலிலே சரியையாகிய கைத்தொண்டுகள் புரிவார்கள். மாசிலாத தம் மேனியிலே உருத்திராக்கமணி அணிந்து, திருநீறணிந்தவராய்க்காட்சிதருவர். அவர்களின் உள்ளங்கள் அந்தத்திருநீறு போலவே புனிதமானவை. தமது ஒளியினால் திசைகள் அனைத்தையும் பிரகாசிக்க வைப்பர். குணப்பெருங்குன்றுகளான இவர்கள் ஐம்பூதங்கள் நிலைகலங்கினாலும் கலங்காத உறுதிபுடன் சிவனடிமறவாச் சிந்தையராவர். நலம், தீங்கு என்ற வேறுபாடு இவர்களுக்கில்லை. ஓடும் செம்பொன்னும் அவர்களுக்குச் சமமாகவே காட்சி தருவன. இறைவனில் உறைத்த அன்பு காரணமாக அவனை வழிபடுதற்காய் முத்தியைக்கூட விரும்பாதவர்கள் இவ்வடியார்கள். ஈரமும், வீரமும் இவர்கட்கு இயல்பாயமைந்தவை. கண்டிகையும் கந்தையும் அணிந்தபோதிலும் கங்கைவேணியனது பணியன்றி வேறு பணியறியாத இவர்களின் பெருமை என்னால் விளம்பத்தக்கனவல்ல என்றார் சேக்கிழார்.

14. காஞ்சிபுரத்திலே குமரக்கோட்டம் என்ற முருகன் ஆலயத்தின் அர்ச்சகராய் விளங்கியவர் கச்சியப்பசிவாச்சாரியார். அவர் முருகன் மீது அளவிலாப்பத்தி பூண்டு ஒழுகியவர். சைவசித்தாந்த அறிவும், தமிழ் வடமொழிவிற்பத்தியும் கவித்துவ ஆற்றலும் மிக்கவர். முருகன் தனது திவ்விய சரித்திரத்தை அவர் மூலமாகச் சைவ உலகிற்கு வெளிப்படுத்தத் திருவுளங்கொண்டு, அவரது கனவில் தோன்றிப் பணித்ததோடு 'திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்' என அடி எடுத்துக்கொடுத்துமருளினார். கச்சியப்பர் அப்பெருமானின் பணிப்பினை ஏற்றுப்பாடியருளியதே கந்தபுராணம் என்னும் அதிமதுர திவ்வியத் திருநூல்.

வடமொழி ஸ்கந்தபுராணத்தின் சங்கரசங்கிதையிலே சிவரகசிய காண்டத்திலிருந்து கச்சியப்பசிவாசாரியார் பெற்ற வரலாற்றினை அடிப்படையாகக்கொண்டு கந்தபுராணம் இயற்றப்பட்டதென்பர். கந்தபுராணத்திலே தட்ஷகாண்டத்திலே தத்சியுபதேசம் சைவசித்தாந்த நுண்பொருள்களை மிகுதியும் விரித்துரைக்கும். மாயை உபதேசப்படலத்தில் மாயாவாதமும், சுக்கிரனுபதேசப்படலத்தில் கேவலாத்துவித வேதாந்தமும் பேசப்படுவது சைவசித்தாந்தத்தின் பரபக்கத்தினைக் கூறிச் சைவசித்தாந்த உண்மைகளை நிறுவுவதற்கான உபாயமாகும். கந்தபுராணவரலாறே சைவசித்தாந்த உருவகக்கதை எனக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கந்தபுராணபாத்திரங்கள் | உருவகம் |
|---|---|
| கந்தசுவாமி | பரம்பொருள் |
| வேல் | ஞானசக்தி |
| தெய்வயானை | கிரியாசக்தி |
| வள்ளி | இச்சாசக்தி |
| சூரபன்மன் | ஆணவம் |
| சிங்கமுகன் | மாயை |
| தாரகன் | கன்மம் |
| ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் | கிரவுஞ்ச மலை |

வள்ளிநாயகி திருமணம் வேறொரு தத்துவத்தையும் புலப்படுத்தும். வள்ளிக்கிழங்ககழ்ந்த குழி என்பது கருக்குழி அதனின்று (கண்டெடுக்கப்பட்ட) தோன்றிய வள்ளி ஆன்மா. வேடர்கள் ஆன்மாவைப்பற்றி நிற்கும் ஐம்புலன்கள், முருகப்பெருமான் மலபரிபாகம் செய்து தமது திருவருளால் ஆன்மாவைத் தம்மோடு அத்துவிதம் செய்கின்றார்" என்று பொருள் கொள்வது சைவசித்தாந்த மரபு.

"பரம் பொருளாகிய சிவபெருமானும் கந்தசுவாமியாகிய முருகப்பெருமானும் வேறல்லர் ஒருவரே " என்பதைப் பின்வரும் கந்தபுராணப்பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன் காண்
ஆசி லாவவ னறுமுகத் துண்மையால் அறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்

இப்பாடலிலே இரத்தினக்கல்லும் அதிலெழும் கதிரும் போல முருகனும் சிவனும் ஒன்றானவர் என விளக்கம் தரப்படுகிறது. 'ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகம் அன்றால்' என்ற பாடலடியில் வரும் சிவபெருமான் திருவாக்கும் இவ்வுண்மையை வலியுறுத்தும். புராணத்திலுள்ள பாடல்களை ஒருவர் இசையுடன் பாடி, தொடர்ந்து பாடலைப் பொருளுக்கிசையப் பிரித்துச் சில சீர்களையோ அடியையோ (அவற்றையும் இசையோடு) உரைப்பார். மற்றொருவர் முன்னர் பாடிய அதே இசையில் (இராகத்தில்) பொருள் உரைப்பார். இந்நிகழ்வு 'புராணபடனம்' என்னும் பெயரில் ஆலயங்களில் இடம்பெறும் மரபு யாழ்ப்பாணத்திற்கே உரியதொன்று. கந்தபுராணத்தைக் கச்சியப்பர் இயற்றியருளிய காலத்திலேயே கச்சிக்கணேசையர் என்பார் யாழ்ப்பாணம் வந்து இப்புராணபடன மரபினைத் தொடக்கிவைத்தார் என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார். இப்புராணபடன மரபு இன்று அருகி வருகின்றது எனினும் இந்நூற்றாண்டின் தொடக்கம் வரை புராணபடனம் (கந்தபுராணம், திருவாதவூரர் புராணம், பெரியபுராணம் போன்றவை புராணபடனத்தில் இடம்பெறும்) சிறப்பாக ஆலயங்கள் தோறும் நிகழ்ந்து வந்ததால் சாதாரண தமிழறிவுடையவர்களும் புராணங்களைக் கேட்டுச் சமய அறிவு மிகுதியும் பெற்றிருந்தனர். புராணங்கள் கூறும் சைவாசாரங்களைக் கண்போலப் பேணியும் வந்தனர்.

15. சிவனடியார்கள் தத்தம் தரத்திற்கேற்ப, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு படிகளில் ஒழுகிச் சைவநன்னெறியை வகுத்துக்காட்ட அவற்றை ஆகமங்கள் வரையறை செய்து சைவ நாற்பாதங்களாய் விளக்கம் தந்தன. எனவே இவற்றின் முதல் நூல்கள் ஆகமங்களேயாம்.

"அவை (ஆகமங்கள்) பதி, பசு, பாசம் என்பவைகளின் இலக்கணங்களையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு சிவஞானசாதனங்களையும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம் என்னும் சதுர்விதமுத்திகளையும் இன்னும் அநேக கிரியைகளையும் விடயங்களையும் தெளிவாக விளக்குகின்றன."
என்று தேசிகமணி கா. அருணாசல ஆசிரியர் தமது 'சைவ சமய சிந்தாமணி' என்ற நூலிலே குறிப்பிட்டமை ஈண்டு நினைவு கூருதற்குரியது.

**<u>சரியை வழிபாடு</u>** : இறைவனுக்கு எமது உடலை உரிமையாக்கி இந்த உடம்பினால் செய்யப்படும் திருத்தொண்டுகள் யாவும் சரியையுள் அடங்கும். அப்பர் சுவாமிகளின் 'நிலைபெறுமாறு எண்ணுதியேல்..... ' எனத்தொடங்கும் திருத்தாண்டகம் சரியை வழிபாட்டில் இடம்பெறுவனவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டும். திருமூலரின் திருமந்திரம் சரியை வழிபாட்டைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசமார்க்கம் என வகுத்து ஆலயங்களிலே தீபமிடல், மலர்கொய்தல், கோயில் தரையினைத் திருவலகிடல், மெழுகல், குண்டுகுழிகளைத்தூர்த்தல், இறைவனை வாழ்த்தி வணங்கல், கோயிற்றொண்டு செய்தல் (திருநந்தவனம் சமைத்தல், தீவர்த்தி தாங்கல், சுவாமிகாவுதல், மாலைகட்டி அளித்தல் முதலான கைங்கரியங்கள்) என்பனவற்றை எடுத்துரைக்கின்றது. சரியை வழிபாட்டில் ஒழுகியோர் சாலோகம் என்னும் வீடுபேற்றினை அடைவர் என்பது பொதுவிதி

<u>**கிரியை வழிபாடு**</u> : இதனைச் சற்புத்திரமார்க்கம் எனவும் இவ்வழிபாட்டை நிகழ்த்தியோர் சாமீபம் என்ற பதத்தினை அடைவர் என்றும் கூறப்படுகின்றது. இவ்வழிபாடு மந்திரங்களை ஓதியும் விக்கிரகத் திருமேனி தொட்டு அபிடேகம் பூசை முதலிய கிரியைகள் செய்தும் நிகழ்த்தப்படுவதாகும். பூசைக்குரிய திரவியங்கள் (பூ, தூபம், திருமஞ்சனம் திருவமுது) தேடுதல், பூதசுத்தி முதலாகிய ஐவகைச்சுத்திகள் செய்து ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்தல், மந்திரத்தால் துதித்தல், அக்கினிஹோமம் இயற்றல் என்பனவெல்லாம் கிரியை வழிபாட்டுள் அடங்கும் என்று சிவஞானசித்தியார் உரைக்கின்றது. இவ்வழிபாட்டில் ஈடுபடுவோர் அகமும் புறமும் தூயவராய் விளங்குவதன் இன்றியமையாமையைத் திருமந்திரம் வற்புறுத்தும்.

யோக வழிபாடு : மனம் முதலாம் அகக்கருவிகளை உள்முகமாய் ஒடுக்கி அகத்தொழிலினால் இறைவனை அருவவடிவில் வழிபடல். இவ்வழிபாடு சகமார்க்கம் எனவும், இதனை மேற்கொள்வோர் சாரூப முத்திப் பேற்றினை அடைவர் எனவும் உரைப்பர். யோகவழிபாட்டில் எட்டு அங்கங்கள் கூறப்படும் அவை பின்வருமாறு.

1. <u>இயமம்</u> : (தன்னடக்கம்) அறவிதிகளான இன்னா செய்யாமை, வாய்மை, கள்ளாமை, கற்பு, அவாவறுத்தல் ஐந்தையும் பயிலுதல்.
2. <u>நியமம்</u> : மேற்கூறிய ஐந்துவிதிகளையும் முற்றாய் ஒழுங்காய்க்கடைப்பிடித்து ஒழுகல்.
3. <u>ஆசனம்</u> : சிற்சில தோரணையில் அமர்தல் (ஆசனம் – அமர்வு), இவற்றுட் புகழ்போனது பதுமாசனம்.
4. <u>பிராணாயாமம்</u>: இதனால் மூச்சையடக்கிக் கட்டுப்படுத்தி இரேக, பூரக, கும்பம் செய்தல்.
5. <u>பிரத்தியாகாரம்</u> : இதன்படி ஐம்புலன்களும் பொறிவழிச்செல்லவிடாது தடுக்கப்படும்.
6. <u>தாரணை</u> : மூக்குநுனி, நாபி, உருவச்சிலை, திருச்சின்னம் போன்றவற்றுள் ஒன்றில் உள்ளத்தைப்பதித்தல்.
7. <u>தியானம்</u> : சிந்தனைக்குரிய பொருளே சிந்தையில் வியாபித்து நிற்றல்.
8. <u>சமாதி</u> : இந்நிலையில் தன்னியல்பே ஒடுங்கிவிடும். (ஆதாரம் : வியத்தகு இந்தியா – A.L. பசாம் பக். 442 – 443)

16. விக்கிரகம் என்றசொல் வி–கிரகம் எனப்பிரிந்து இறைவனை மேலாகப் பற்றியிருப்பது எனப்பொருள் தருகின்றது. எனவே தெய்விகம் பொருந்திய விக்கிரகங்கள் இந்துசமயத்தில் சிறப்பிடம் வகிப்பது இயல்பேயாகும். பிம்பம், மூர்த்தி, பிரதிமை, படிமை என்பன விக்கிரகத்துக்கு அமைந்த மறுபெயர்களாகும். உருவவழிபாட்டில் நம்பிக்கையும் அந்நம்பிக்கையை நிறைவு செய்ய ஆலயங்களும் அவற்றிலே பிரதிஷ்டை செய்யும் விக்கிரகங்களும் இன்றியமையாதனவாகின்றன. ஆகம, சிற்ப சாஸ்திரவிதிகளுக்கு அமைவானவையாகவும், அவற்றால் அமைவனவாகிய பேரெழிலும், தெய்வசாந்நித்தியமும் விக்கிரகங்களை மகத்துவமுடையனவாக்குகின்றன. விக்கிரகங்களின் தெய்வப்பேரெழிலில் தமை இழந்த திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலாம் சமய குரவர்களும், ஆழ்வார்களும் அவற்றை வழிபடுவதொன்றே தம் உன்னத குறிக்கோளாகக் கொண்டிருந்தமை அவர்களின் அருளிச்செயல்களால் நன்குபுலனாகும். விக்கிரகங்களை அமைப்போர் ஆகம, சிற்பசாத்திர அறிவுமிகுந்தவராயும் உடல் உளத் தூய்மை பத்தி முதலாம் சிறப்புகள் வாய்ந்தோராயும் இருத்தல் வேண்டும் என்பது விதி. விக்கிரகங்களை அமைக்கும் இலட்சண விதியை நன்குணர்ந்து அவ்விக்கிரகங்களின் திருவுருஅமைப்பிற்கான தியான மந்திரங்களைச் செபித்தவண்ணம் அவர்கள் தமது பணியில் ஈடுபடுவர் "புறக் கருவிகளாகிய கை, கால், கண். செவி முதலியவற்றின் அபிநயங்கள் மூலமாக அகக்கருவிகளின் நிலைமையைக் காட்டுவது தமிழ் நாட்டுத் தெய்வத் திருவுருவங்களின் தனித்த இயல்பு" என்பர். நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் நான்கு வகையான அபிநயங்கள் ஆகிய ஆங்கிகம் (உடல் சார்ந்தது), வாசிகம்(பாடல்), ஆகார்யம்(அணிகலன் சார்ந்தவை), சாத்வீகம் ( அமைதி) என்பவற்றுள் உடல் சார்ந்த அபிநயங்களே விக்கிரக அமைப்பில் முதன்மைபெறுவனவாகும். கால், கை, மார்பு, விலா, உடம்பு என்பவற்றின் அபிநயம் ஆங்கிகம் எனவும் தோள்கள், மேற்கைகள், முதுகு, வயிறு, தொடை, கணைக்கால், அபிநயம் பிரத்யாங்க அபிநயம் எனப்படும். விக்கிரகங்களின் நிலைகள் சமபங்கம் (நேர்நிலை), சுபங்கம்(சுபகாசனம்), திரிபங்கம்(சரிவுநிலை) என மூவகைப்படும். விக்கிரக அமைப்புக்கான அளவுப்பிரமாணங்கள் அங்குலம், தாலம் என இருவகையின. அங்குலம் என்பது சிற்பியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரலில் இறையளவினது. இவ்வாறு பன்னிரு அங்குலம் கொண்டது தாலம் ஆகும். பேரங்குலம், மத்தியாங்குலம், தேகவத்தாங்குலம் என்பன அங்குல அளவைகள். இவற்றின் நீட்சி, நடுத்தரம், குறுக்கல் என்பவற்றிற்கமைவாய் விக்கிரக அளவுகள் உத்தமதசதாலம், மத்தியமதசதாலம், அதமதசதாலம் என மூவகையாகக் கொள்ளப்படும். விக்கிரகம் அமைப்போர் அவ்வற்றிக்குரிய அளவு விதிகளைத் தவறாது கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும்.

நடராசப்பெருமானுடைய திருவுருவ விக்கிரகம் உத்தமதசதால அளவுகொண்டது. அதன்முன்இடது கை தண்டாக நீண்டு உடம்பைச் சாரும் வண்ணம் திரும்பி உடம்பின் முன்னர் சற்று வளைந்து தொங்கும். இவ்வாறு தொங்கும் கை டோலஹஸ்தம் எனப்படும். பின்பக்க இடக்கையில் அக்கினி விளங்கும், முன்பக்க வலது கை அபயகரமாகும். இக்கையின் மணிக்கட்டில் பாம்பு வளையமாக அணியப்பட்டிருக்கும். பின் வலதுகையில் உடுக்கை அமைந்திருக்கும். வலதுகாலின் கீழ் முயலகன் என்னும் அபஸ்மாரபுருஷன் கிடந்த நிலையில் தோன்றுவான். இடதுகால் வலதுகால் பக்கமாக குறுக்கே மடித்து அதைத்தாண்டி விரல்கள் தொங்கியவாறு இருக்கும். இது குஞ்சிதபாதம் எனப் பெயர்பெறும். இத்திருவுருவத்தின் பின் திருவாசி காணப்படும். இத்திருவுருவ அமைப்பின் தத்துவம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருக்கரத்தில் ஏந்திய உடுக்கை | – | படைத்தல் | பஞ்சகிருத்தியங்கள் |
| 2. | அபயகரம் | – | காத்தல் | |
| 3. | அக்கினி ஏந்திய கரம் | – | அழித்தல் | |
| 4. | ஊன்றிய திருப்பாதம் | – | மறைத்தல் | |
| 5. | தூக்கிய திருவடி | – | அருளல் | |

நடராசரின் நடனவுருத் தத்துவம் மனவாசகம் கடந்ததேவரின் உண்மை விளக்கம் என்ற நூலிலே மிக விரிவாக கூறப்பட்டுள்ளது.

17. சைவசமயிகளின் பரம்பொருளாய் விளங்கும் சிவபெருமானும் முருகனும் வேறல்லர் ஒருவரே. முருகன் தமிழரின் பழம்பெருந் தெய்வம். சூர்நவைமுருகன், சினமிகுமுருகன் என்றெல்லாம் சங்கநூல்களான புறநானூறும் அவன் திறம் பேசுகின்றன. தீமையை, அஞ்ஞானத்தைக் காய்ந்து அழிக்கும் அவனது சினம் (முருகன் சீற்றத்து உருகெழுகுரிசில் பொருநணராற்றுப்படை), நினைத்ததை முடிக்கும் அவனது ஆற்றல் (முருகுகாத்தீயே முன்னிய முடித்தலின்– புறம்) என்பனவும் சங்கநூல்கள் கூறும் உண்மைகள் ஆகும். பரிபாடல் என்னும் பழம்பெரும் நூலில் எட்டுப்பாடல்கள் முருகனைப் போற்றித் துதிக்கின்றன. திருமுருகாற்றுப்படை முருகனிடத்தே அடியாரை ஆற்றுப்படுத்துகின்றது. சிலப்பதிகாரம் 'ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ்கோயில்' பற்றிப்பேசுகின்றது.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே.

ஒரு திருமுருகனாய், முக்கண்ணனின் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய செவ்வேள், தேவரையும், மண்ணவரையும் காத்தருள்புரிவதற்கே வந்தவன். சூரன், சிங்கமுகன், தாரகன் ஆகிய அசுரர்களின் கொடுமைகளுக்காற்றாத தேவர்களின் வேண்டுகோளினை நிறைவேற்றி அவர்களை வாழவைக்கவே சிவபெருமான் தம்மைப் பாலகனாகிய முருகனாய் தோற்றுவித்தார். வேல், தோமரம், துவசம், குலிசம், அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில் என்னும் பன்னிரு ஆயுதங்களையும் வழங்கினார். உருத்திரர், தேவர், பூதகணங்கள் எல்லாவற்றையும் படைகளாய் உதவினர். இவர்களுக்குத் தலைமைதாங்கிச் சேனை நடாத்திச் சென்றமையாலேயே முருகன் தேவசேனாதிபதி எனப்பட்டான். சிங்கமுகனையும், தாரகனையும் வதைத்து, சூரபன்மனின் ஆணவத்தினை ஒடுக்கி அவனைச் சேவலும், மயிலுமாகக் கொண்ட பரம கருணாநிதியே முருகப்பெருமான்.

சுப்பிரமணியன் என்ற திருநாமத்தை, சு, பிரஹ்ம, நிய என்ற மூன்று பதங்களாகப் பிரிக்கலாம். சு என்பதன் பொருள் ஆனந்தம். பிரஹ்ம என்பது பரம்பொருளைக் குறிக்கும். நிய என்பது யாவும் தன்னை இடமாகக் கொண்டு தோன்றுவன எனப் பொருள்படும். ஆக ஆனந்தமும் பரம் பொருட்டன்மையும் கொண்டு பிரபஞ்சம் அனைத்தும் தன்னிடத்தே தோன்ற இடமாயுள்ள பெருமான் என்பதே சுப்பிரமணியன் என்பதன் பொருளாகும்.

இலங்கை வாழ் இந்துக்களில் பெரும்பாலோர் கலியுகவரதனாகிய கந்தசுவாமியையே தமது இஷ்ட தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். அண்மைக் காலம்வரை (இன்றும் கூட) இந்துக்கள் பெரும்பாலாரின் பெயர் அவர்கள் ஆண்களாயின் 'முருகனின் திருநாமங்களாயே அவன் சக்திகளாகிய வள்ளி, தெய்வானையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாமங்களையோ தமக்குரிய பெயர்களாகத் தரித்துள்ளமை காணலாம். வேலும் மயிலும் அவர்களின் பெயர்களோடு இணைக்கப்படுவது வழக்கு. (வேலாயுதன், மயில்வாகனன், வேலும்மயிலும், மயூரன்) கதிர்காமம் இந்துக்களுக்கு மட்டுமன்றிப் பௌத்த சமயிகளுக்கும் வழிபாட்டுத் தலமாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். திருக்கோயில், சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், கந்தவனக்கடவை, வெருகல் முதலாகப் பழம் பெரும் முருகத் தலங்கள் பல இலங்கையில் உள்ளன. அங்கெல்லாம் முருகப்பெருமானின் நித்திய, நைமித்திய பூசைகள், கந்தசஷ்டி, கார்த்திகை விரதனுட்டானங்கள், காவடியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல் முதலாகிய நேர்த்திக் கடன்கள் மிகப்பரவலாக பெருமெடுப்பில் நடந்துவரல் காணலாம். கதிர்காமம், திருகோணமலை, நல்லூர் முருகத்தலங்கள்மீது அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்களும் குறிப்பிடத்தக்கன. இவ்வாறு இலங்கையிலே முருகவழிபாடு தலைசிறந்து விளங்குகிறது.

18. திருமால் என்றும் மாயோன் என்றும் பெயர் வழங்கிப் பழந்தமிழர் போற்றிய தெய்வம் விஷ்ணுவே. திருமால் என்பது 'தெய்வத்தன்மை பொருந்திய பெரியோன்' என்றோ, திருவாகிய இலக்குமியோடு கூடிய பெரியோன் என்றோ பொருள்படும். மாயோன் என்பது மானம (மாநிறம், கரியநிறம்) அமைந்தவன் என்ற பொருளது. தமிழர் வகுத்த நான்கு நிலங்களாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பவற்றுள் காடும் காடுசார்ந்த நிலமும் மாயோனைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர். இதற்கு

'மாயோன் மேய காடுறை உலகமும்'

என்ற தொல்காப்பியச் சூத்திர அடியே சான்று பகரும். முருகனைப் போலவே மாயோனும் தமிழர்தம் கடவுளே என்பதற்கு ஆதாரம் வருமாறு.

"விஷ்ணு என்ற சொல்லின் தோற்றம் ஆரியர்களுக்கு முற்பட்ட காலத்திலே உள்ளது என்று மொழியியல் சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். பெர்ஸ், லுஸ்கி, ரூபன், கியூபர் போன்ற அறிஞர்கள் இவர்களின் கருத்தை அரணாகக்கொண்டு இந்த ஆய்வு தமிழ் இலக்கியப் பின்னணியில் அணுகுகிறது. இந்த இலக்கியப்பின்னணி அணுகுமுறை மேனாட்டார் கருத்துக்களுக்கு வலிமை சேர்க்கிறது."

இக்கூற்றுக்கு ஆதாரமாக தமிழர் ஆநிரைகாக்கும் தெய்வமாக மாயோனைக் கொண்டது போலவே, ஆரியரும் அவனை ஆயனாக மந்தை மேய்ப்போனாகக் கொண்டதனையும், மாயோன் ஆரியரின் கடவுளர் போலல்லாது, திராவிடர்க்கான கருநிறக்கடவுளாய் விளங்குவதையும் ஆய்வாளர் சான்று காட்டுவர். பழம்பெரும் சங்க நூலாகிய பரிபாடலிலும், புறநானூறு, அகநானூறு, பெரும்பாணாற்றுப்படை முதலாம் நூல்களிலும் மாயோனாகிய விஷ்ணுவின் பெருமைகள் பேசப்படுதல் காணலாம். சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவை கண்ணபிரானின் திருவிளையாடல்களைப் போற்றுவதும் குறிப்பிடத்தக்கதே.

இருக்குவேத காலத்தில் விஷ்ணு முக்கிய கடவுளாய் விளங்கவில்லலை. உருளும் சக்கரம் போல எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருப்பது அவனது இயல்பு என்று கூறப்படுகின்றது. அகன்ற செலவினன் (உருகாயன்). அகன்ற சுவட்டினன் (உருக்கிரமன்) என்பன அவனுக்குரிய பட்டப்பெயர்கள். இவ்வாறு அவன் உலாவருவதை எவரும் காணலாம். ஆனால் இவற்றிலும் மிக உயர்வான உலா ஒன்றும் அவனால் மேற்கொள்ளப்படுவதுண்டு. அவ்வுலாவானது வானத்திற் பறக்கும் பறவைகளுக்கும் அப்பாலாகவும் எவராலும் காணொணாததாகவும் அமைந்தது. அவ்வுலாவின்போது அவனுடைய விழிகள் மிக்க ஒளியோடு சுவர்க்கத்திலிருந்து பூமியை நோக்குவதாயிருக்கும். (இவ்வாறு நோக்குகையில் விஷ்ணு சூரியனது உருவகமாகக்கொள்ளப்பட்டவனோ என்ற ஐயமும் எழுகின்றது) இவன் பன்னிரு ஆதித்தரில் ஒருவன் எனவும் கொள்ளப்பட்டான். பின் வேதகாலத்தில் விஷ்ணு மகத்துவம் பெற்றுப் பிற்காலத்தில் பாகவதநெறியில் தலைமைபெற்ற தெய்வமாக ஆரியரால் கொள்ளப்படல் காணலாம்.

பிரபத்தி என்பதன் பொருள் சரணாகதி மார்க்கம் என்பதாகும். அடியவன் தான் பரம்பொருளாகப் போற்றும் விஷ்ணுவிடமே தனது சகல பாரங்களையும் பொறுப்புக்களையும் வழங்கிவிட்டு அவனை வழிபடுவது ஒன்றே தனது வாழ்விலட்சியமாகக்கொள்வதே பிரபத்தியின் குறிப்பிடத்தக்க அமிசமாகும். உபாயம் என்பதன் பொருள் வழி. உபேயம் என்பது அவ்வழிச்சென்று அடைவதாகிய இலக்கு. பிரபத்தியைப் பொறுத்தவரை பிரபத்தியே உபாயமாகவும், விஷ்ணு அதன்வழி அடையவேண்டிய இலக்காகவும் விளங்குகின்றது. அடியவன் வேறெவ்விதமுயற்சியும் வேண்டாதிருக்கத் திருமாலே அவனைச் சம்சாரபந்தத்திலிருந்து விடுவித்துத் தனது உலகு சேர்க்கிறான் என்ற அழுத்தமான நம்பிக்கையே பிரபத்தியின் உயிர்நாடி எனலாம்.

யாழ்ப்பாணத் தமிழரசின் முதலாவது தலைப்பட்டினம் சிங்கைநகர் எனப்பட்டது. வரலாற்றாய்வாளரின் கருத்துப்படி சிங்கைநகர் அமைந்திருந்த இடமே இன்றைய வல்லிபுரம். பருத்தித்துறை, மருதங்கேணி வீதியில் மூன்றுமைல் தொலைவிலும் மந்திகையிலிருந்து ஒன்றரை மைல் தொலைவிலும் அமைந்துள்ள கிராமம் அது. இங்கு மாயவன் ஆலயம் எனப்படும் வல்லிபுர ஆழ்வார் கோயில் தொன்மை வாய்ந்த விஷ்ணு ஆலயமாகத் திகழ்ந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழவரக்கடலும் மணற்றிடருமாக நெய்தல் நில எழில் கொழிக்க அதன் நடுவே வல்லிபுர ஆழ்வார் கோயில் உள்ளது. மூலஸ்தானத்திலே விஷ்ணுவின் சக்கராயுதமே சக்கராழ்வார் என்ற பெயரிலே பிரதிஷ்டை பண்ணப்பட்டு உள்வீதியில், பூதேவி, ஸ்ரீதேவி சமேத ஸ்ரீமகா விஷ்ணு, ஸ்ரீ இராமர், சப்தகன்னியர், ஆழ்வார்கள் தனித்தனிப் பகுதிகளிலே எழுந்தருளப்பட்டுள்ளனர். அண்மைக்காலத்தில் புனருத்தாரணம் செய்யப்பெற்ற இவ்வாலயம் கோபுரம், சிற்ப, சித்திரங்களோடு பேரெழில் பொருந்தி விளங்குகின்றது. இவ்வாலயத்தின் தென் புறத்தே குருக்கட்டுப் பிள்ளையார் எழுந்தருளியுள்ள ஆலயமும் சிறப்புடன் இலங்குகின்றது. இவ்விரண்டாலயங்களும் நாள்தோறும் யாழ்குடா நாட்டிலுள்ள அடியார்களின் வருகையால் பொலிவும், கலகலப்பும், பக்திப்பிரவாகமுமாய்க் காட்சி தருகின்றன. ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரக்கோயிலிலே சிறப்புவிழா இடம்பெறும் திருநாளாகும். இடையிடையே தீபாவளி, ஏகாதசி விழாக்களும் நிகழ்கின்றன. புரட்டாதி மாதம் மகோற்சவகாலமாகும். சப்பரம், தேர், கடல்தீர்த்தம் கேணித்தீர்த்தம் என்பன மகோற்சவங்களின் உச்சக்கட்டங்களாகும். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் இவ்விழாக்காலங்களிலே திரண்டுவந்து மாயவனைத்தரிசித்து இஷ்ட சித்திகள் பெற்று வருகின்றார்கள். வைணவம் ஈழத்திலே குறிப்பிடத் தக்க இடத்தைப்பெறாவிட்டாலும் சைவ மக்கள் வல்லிபுரம், பொன்னாலை, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களிலே எழுந்தருளி அருள்பாலிக்கும் திருமாலை எவ்வித மதபேதமின்றி வழிபட்டுவருவது சிறப்பாகக் குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

19. கூடுவிட்டுக் கூடுபாய்தல் (ஓர் உடலிலுள்ள தனது உயிரைப் பிறிதோர் உடலிற் செலுத்துதல். (கூடு–கூடு போன்ற உடல்), கண்ணுக்குப் புலனாகாத சிற்றுருவம் கொள்ளல், இதற்கு எதிரான பேருருக்கொள்ளல், சிறுவடிவத்தைப் பெரும்பாரம் உடைத்தாக்கல், பெரிய வடிவினைப் பாரமாற்றதாய் ஆக்குதல், நினைத்த இடத்திற்கு நினைத்தபோதே சென்றடைதல், பல இடங்களில் ஒரே பொழுதிற்காட்சிதரல், இறைவன் போலப் படைத்தல் முதலான கிருத்தியங்களைச் செய்திடும் ஆற்றல் உடையவராதல் என்பன (அணிமா, மகிமா,லகிமா முதலாக) அட்டமா சித்திகள் எனப்படும். தமது தியானம், யோகசாதனம் முதலியவற்றால் இந்தத் திறன்களைப்பெற்றோர் சித்தர் எனப்படுவது பொதுவழக்கு. ஆனால் இத்திறன்களை – சித்திகளை – அடைந்திருப்பினும் இவற்றை அவசியமின்றி வெளிப்படுத்தாது, பித்தர்போலவும் பேயர்போலவும் உலகப்பற்றற்றுச் சித்தம் போக்குச் சிவம் போக்காய் உலாவிவந்து, உன்னத தத்துவங்களையும் ஆன்மாநுபவங்களையும் எளிமையாகப் பாடிய வண்ணம் மக்களின் அறிவுக்கண்ணைத் திறந்து விட்டு, அவர்களின் உடற்பிணி முதலானவற்றைப் போக்கும் அருமருந்துகளைக் கண்டுணர்த்தி வாழ்ந்த ஞானிகள் சித்தர் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். அகத்தியர், திருமூலர், சிவவாக்கியர், அகப்பேய்ச்சித்தர், குதம்பைச்சித்தர், மாங்காய்ச்சித்தர் முதலாகச் சித்தர் கூட்டம் ஒன்று தமிழகத்தில் வாழ்ந்தது என்று அறிகிறோம். இன்றும் இலைமறைகாய்போலச் சித்தர்கள் ஆங்காங்கே வாழ்ந்தே வருகின்றனர். வித்தகச்சித்தர் கணம் என்று இவர்களைப் போற்றிச் சிறப்பித்தல் வழக்கம். மேலே குறித்ததுபோல்ச் சித்தர்கள் உலகின் இயல்பான போக்கினின்று பெரிதும் வேறுபட்டவர்களாகவே விளங்குவர். சாமானியரால் அவர்களின் அதிபக்குவ நிலையினை விளங்கிக்கொள்ளல் இயலாத காரியம். ஆடுவர், பாடுவர், அழுக்கிற் புரள்வர், கிடைத்ததை உண்பர், உண்ணாமலும் இருப்பர், ஞானக்கருத்துக்களை அநாயாசமாக மந்திரங்கள் போல வெளிப்படுத்துவர், தம்மை விளங்கிக்கொண்டு அடிபணிந்து சீடராவோரில் அருட்கண்பார்வை செலுத்தி அவர்களுக்கு நலங்கள் செய்வோராயும் சித்தர்கள் விளங்குவதுண்டு. சித்தர்கணத்தின் முதல்வர்களாக அகத்தியரையும் திருமூலரையும் கொள்வதுண்டு. திருமூலர் மூலன் என்பானின் உடலினுள்ளே தமது உயிரைச் செலுத்திய வரலாறும், அவர் திருமந்திரம் செய்தருளிய வரலாறும் திருத்தொண்டர் புராணம் மூலம் அறியவருவதாகும். தேரையர், புலிப்பாணி முதலாம் சித்தர்கள் சிறந்த மருத்துவர்களாய் விளங்கி மக்களின் உடற்பிணியைப்போக்கியதும், இவர்கள் வகுத்த மருத்துவமுறை சித்தவைத்தியம் என இன்றும் வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கன.

சித்தர்களின் போக்கும் வாக்கும் அமையும் வகையினைப் பின்வரும் கூற்றினால் நன்கு அறியலாம்.

"சித்தர்கள் சமயம் உருவவழிபாடு கடந்தது : பெயர் நிலையும் கடந்தது: கோயில், குளம், நீராட்டு, தேர்த்திருவிழா, சடங்கு இன்னவை எல்லாவற்றையும் பொருட்டாக எண்ணாதது. புறக்கோலங்களில் கருத்துச்செலுத்தாமல் அகவுணர்வுகளிலேயே அழுத்தமாக ஊன்றி உயிர்களுக்கெல்லாம் உரிமைத்தொண்டு செய்தலையே உயிர்ப்பாகக்கொண்டது. சித்தர்கள் பார்வை எல்லாமும் பொதுமையில் கனிந்த ஒருமைப்பாட்டிலே இயலக்காணலாம்."

எனவே சித்தர்தம் பெருமை சொல்லவும் பெரிதே என்று கொள்வதே பொருத்தமாகும். இத்தகைய சித்தர்கணம் ஒன்று ஈழத்திலும் நிலவி வந்தமையும் நில்வி வருவதையும் பலர் அறிந்துள்ளனர். யாழ்ப்பாணத்துச் சித்தர்களிலே முதல்வராகக்கொள்ளப்படுபவர் கடையிற்சுவாமிகளாவர். (19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி). இவர் தென்னிந்தியாவிலே பெங்களூர் என்ற நகரத்திலிருந்து இங்குவந்தவர் என்றும் அங்கு நீதிபதிப் பதவியிலிருந்தவரென்றும், அதனையும் தமது உலகியல் வாழ்வையும் துவரத்துறந்து பித்தர் போலத்தம்மைக்காட்டி யாழ்ப்பாணத்துப் பெரியகடை வீதிகளில் உலாவித்திரிந்தவரென்றும் அதனால் இவரைக் கடையிற்சுவாமிகள் என்று அக்காலத்தவர் அழைத்தனர் என்றும் அறிகிறோம். பல அற்புதங்களை நிகழ்த்தியவர் என்றும் இவர்பற்றிச் செவிவழிக்கதைகள் பல நிலவுகின்றன. மிகவும் சிக்கல் நிறைந்த சமயதத்துவங்களைத் தம்மை நாடிவந்தோருக்கு மிக எளிமையாக விளக்குவதும், தம்மை நம்பியோர்க்கு உலகியல் வாழ்க்கைக்கான நலங்களை அருளுவதும் இவரின் வழக்கமாய் இருந்து வந்தன. யாழ்ப்பாணம் இந்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிவீதியிலே கிழக்குமுகமாக முந்நூறு மீற்றர் தொலைவில் தெற்கு நோக்கிய ஒழுங்கையில் இவரது சமாதிக்கோயில் அமைந்துள்ளது. இதனைக் கடையிற்சுவாமிகோயில் எனவும், ஒழுங்கையைக் கடையிற்சாமி ஒழுங்கை எனவும் வழங்குவர்.

20. ஈழத்தில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் என்ற இரண்டும் பாடல் பெற்ற தலங்களாகும். திருக்கேதீச்சரத்துக்குச் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் பதிகங்களும் திருக்கோணேச்சரத்துக்குச் சம்பந்தரின் பதிகமும் உள்ளன. திருக்கேதீச்சரம் வடமாகாணத்தில் மன்னாருக்கு ஆறுகல் தொலைவில் உள்ளது. திருக்கோணேச்சரம் கிழக்கு மாகாணத்தின் துறைமுக நகரமான திருக்கோணமலையில் உள்ளது.

சிவபெருமான் திருக்கைலாய மலையிலே எழுந்தருளியிருந்து படைத்தல் முதலாகிய பஞ்சகிருத்தியங்களுக்கும் பிரம்மா, விஷ்ணு முதலியயோரை நியமித்துப் பூமியைத் தாங்குவதற்கு ஆதிசேடனையும் அமைத்தார். ஒரு கால் வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் யார் அதிக வலிமையுடையவன் என்ற போட்டி நிகழலாயிற்று. ஆதிசேடன் திருக்கலையத்தை இறுகப்பற்ற வாயுதேவன் பேராற்றலுடன் வீசித் திருக்கைலாயத்தைப் பெயர்க்க முயல அண்டசராசரங்களெல்லாம் நிலைதழும்பலாயின. இந்நிலையில் வடகைலையில் எழில்யாவும் அமையத் தென்னகத்திலே சிவபிரானின் அருள்நோக்கத்தால் தெக்கணகைலை அமைந்தது. அத்தென்கைலையிலிருந்து வாயுதேவன் பெயர்த்து அவற்றுள் திருக்கோணேச்சரத்தை இலங்கையின் கீழ்பால் கடற்கரையில் வைத்தான். இத்திருக்கோணமலையில் நவரத்தினவீதி, மரகதவீதி முதலாம் ஒன்பது வீதிகளும் அவ்வொன்பது வீதிகளிலும் ஒன்பது சிவாலயங்களும் அமைந்தன. சிவகணங்கள், தேவர்கள் முதலியோர் இங்குவாழ்வார்கள் என்று மானியக் கதைகள் திருகோணமலைத் தோற்றத்தினை விபரிக்கின்றன. தெக்கணகைலாயபுராணம் கூறும் கதை வேறொன்று. அதுவருமாறு. இலங்கேஸ்வரனான இராவணன் தனது தாயாகிய கைகசியின் வழிபாட்டிற்காகச் சிவபெருமானிடமிருந்து சிவலிங்கம் ஒன்றைப் பெற்று வருகையில் தேவரின் சூழ்ச்சியாலும் விநாயகரின் தலையீட்டாலும் அது அவன் வைத்த இடத்திலேயே நிலையாக இருந்துவிட்டது. இதனால் சினமுற்ற இராவணண் தக்கிணகைலாயமான திருகோணமலை வந்து இங்கிருந்த சிவலிங்கத்தை மலையோடு கிளப்பமுற்பட்டு, சிவபெருமானின் பெருவிரற்கீழ் அகப்பட்டு வருந்திப் பின் சாமகீதம் பாடி அப்பெருமானின் மன்னிப்பையும் அருளையும் பெற்றுச் சிவலிங்கம்ஒன்றையும் பெற்றுத் திரும்பினான். ஆனால் விஷ்ணு மூலம் தாய் இறந்துவிட்ட செய்தி கேட்டு வருந்தி "என்தாயின் வழிபாட்டுக்கு உதவாத இந்தச்சிவலிங்கத்தால் என்னபயன்?" என்று விஷ்ணுவிடமே வினாவினான். அவர் அச்சிவலிங்கத்தைத் திருக்கோணாசலத்தில் தாபிக்குமாறு கூறவே இராவணனும் அவ்வாறு செய்தான். அந்தத்திருக்கோணாசலமே இன்றைய திருக்கோணமலைத் திருத்தலம் என்பது தக்கிணகைலாய புராணத்தால் அறியவரும் செய்தி.

கோணமாமலையமர்ந்த பெருமான், தாயினினும் நல்லர் என்று அடியார்கள் அவருடைய பாதங்களை வணங்கிப் போற்றுவார்கள். அவர்களின் வாய்களிலும் மனங்களிலும் மருவிநின்று எங்கும் அகலாதவர் ஆக அப்பெருமான் விளங்குகின்றான். அடியார்களின் நோய்களையும் பிறவிகளாகிய பிணிகளையும் போக்கியருளும் மகாவைத்தியநாதரே கோணமாமலைஅமர்ந்த பெருமான். அவர் வீரக்கழலும், சிலம்பும் தமது திருப்பாதங்களில் ஒலித்திட அர்த்தநாரிச்சுரராயும் மலங்களற்ற நிமலராயும் விளங்குகின்றார். பர்வதவத்தினியாகிய மாதுமையாளைத் தமது பாகத்தே கொண்ட வடிவினரான அவர் இடபத்தைக் கொடியாக உடையவர். விரைந்து வெகுண்டு வந்த யானையின் தோலை உரித்து அதனைத் தமது திருமேனியில் போர்த்தருளுவார். திருமுடியிலே நாகமும், கங்கையும் தரித்து, மகாமேருவினை வளைத்து வில்லாகக் கொண்டும் மதனனை (மன்மதனை)த் தமது நெற்றிக்கண் தீயினால் எரித்தும், மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த யமனை உதைத்து மார்க்கண்டேயரைக் காத்தும் திருக்கைலாயத்தினை எடுத்திடமுயன்ற இராவணனின் தருக்கினை அடக்கியும் பிறப்பறியா அநாதியாய் அவர் விளங்குகின்றார். தக்கன் வேள்வியைத் தடுத்து, பின்னர் தமது பேரருளால் அவனுக்கு வாழ்வளித்த பேரருளாளர் கோணேஸ்வரர். அருவருப்பின்றிப் பிரமனின் மண்டையோட்டினை ஏந்தி இல்லம்தோறும் பலியேற்ற பெருமான் மாலும் பிரமனும் அறியாத பெரும்சுடராய் எழுந்துநின்றவருமாவார்.

இவ்வாறு சம்பந்தப்பெருந்தகை கோணேச்சரத்தாரைப் பாடிப் பரவுகின்றார்.

**திருகோணேச்சரத்தில் இடம்பெறும் சிறப்பு உற்சவங்கள் பின்வருவன :-**

பங்குனி உத்தரத்தை தொடக்க தினமாகக் கொண்டு கொடியேறி 18 நாள்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. சிவராத்திரி, தைப்பூசம், மாசிமகம், பங்குனிஉத்தரம், சித்திரைவருடப்பிறப்பு, ஆனியுத்தரம், கார்த்திகைவிளக்கீடு, மார்கழித்திருவிழா என்பன விசேட உற்சவ தினங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வேதகாலம் கி. மு. 1500 இல் தொடங்கி அவற்றின் இறுதிப்பகுதியாகிய உபநிடதங்கள் தோன்றிய காலமான கி. மு. 9ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பிரிவினை உள்ளடக்கியது என ஆய்வாளர் கொள்வர். (உபநிடதங்கள் 9ஆம் நூற்றாண்டுக்கு பின்னரும் வெளிவந்துள்ளன.) வேதங்களில் மட்டுமன்றி உலகஇலக்கியங்களிலேயே மிகப் பழமையானதாக கொள்ளப்படும் இருக்குவேதத்திலேயே நான்கு வகையான கடவுள்கோட்பாடுகள் நிலவின என்று தெரியவருகின்றது. அவையாவன பல்லிறைக் கோட்பாடு, ஹினோத்தீய்ஸம் எனப்படும் குறித்தசந்தர்ப்பத்தில் குறித்ததெய்வத்திற்கு மற்றெல்லாத் தெய்வங்களிலும் முதன்மையளிக்கும் கோட்பாடு, ஓரிறைக்கோட்பாடு, ஒருமைக்கோட்பாடு என்பனவாம்.

இருக்குவேதத்திலே எல்லாமாக – அண்ணளவாக – முப்பத்துமூன்று தெய்வங்கள் பற்றிப் பேசப்படுகின்றது. இவை விண்ணுக்குரியவை, இடைவெளிக்குரியவை, மண்ணுக்குரியவை என்று மூன்று பிரிவுகளாய் வகுத்துப் பேசப்படும்.

1. விண்ணுக்குரியவை – தியௌ, மித்திரன், வருணன், ஆதித்தியன், சூரியன், சவிதா, விஷ்ணு, அஸ்வினிதேவர்கள், உஷை, ராத்திரி.
2. மண்ணுக்குரியவை – பிருதிவி, அக்கினி, பிருகஸ்பதி, சோமன், துவஷ்டா
3. இடைவெளிக்குரியவை – இந்திரன், திருதஅபத்யன், அஜஏகபாதன், மருத்துக்கள், வாயு, பர்ஜன்யன், அப்பு (நீர்த்தெய்வம்)

இவற்றைவிட உலக, ஒழுக்கநெறிகளுக்கு அறிகுறியான ரிதம், சோமன் (வேள்வியின் போது அருந்தப்படும் பானம்), சோமன் என்பது சந்திரனையும் குறிக்கும் என்பர்), சரஸ்வதி முதலாம் நதிகள், ஆதித்தியரின் தாயான அதிதிஆகியனவும் தெய்வவரிசையில் இடம்பெற்றன. யமன், யமி என்பனவும் குறிக்கப்பட்டன. இவை ஒவ்வொன்றும் அவ்வவற்றின் மூலம் பெறக்கூடிய பேறுகளை வேண்டியும் தவிர்க்கப்படவேண்டிய இடையூறுகளை நீக்கக்கோரியும் வழிபடப்பட்டன. இவையாவிலும் முதன்மைப்பாட்டில் வருணன், இந்திரன், அக்கினி, பிரஜாபதி, உருத்திரன், விஷ்ணு என்போர் குறிப்பிடத்தக்கவராவர் கண்ணுக்குப்புலனாகாத சூக்குமமான த்ரி, விதார்த்தி, விஸ்வகர்மன், பிரஜாபதி, சிரத்தா (நம்பிக்கை), மன்யு (சீற்றம்) என்பன பிற்காலத்தில் தெய்வநிலைக்கு ஏற்றப்பட்டன.

தமது கோரிக்கையினை நிறைவேற்றக் கூடியது என முடிவுசெய்யப்படும் தெய்வத்தை, அக்கோரிக்கையினை முன்வைக்கும் பொழுது அதனையே பிறதெய்வங்கள் யாவிலும் உயர்ந்ததாகவும் கொண்டு வழிபடும் முறைமைக்கு மாக்ஸ்முல்லர் ஹேனோத்தீய்ஸம் (Henotheism) எனப்பெயர் வழங்கினார். உதாரணமாகச் சூரியனைப் பற்றிய பாசுரங்களில் "அவன் உலகம் முழுவதையும் மறைந்துநின்று பார்ப்பவனாயும், இயங்கும் பொருள்களினதும் நிலையியற்பொருள்களினதும் உயர்வானவனாயும், நாள்களைப் பிரித்து அளந்து மக்களின் வாழ்வினை நீடிக்கச் செய்பவனாயும் விளங்குகின்றான்" என்னும் பகுதியை எடுத்துக்காட்டலாம்.

தெய்வங்கள் பல என்று பேசப்படினும் அவை யாவிற்கும் மூலமாயும் முதலாயும் அமைந்த பெருந்தெய்வம் – பரம்பொருள் – ஒன்று இருக்கின்றது என்ற உண்மையும் இருக்குவேதத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது. இது ஓரிறைக் கோட்பாட்டின் மூலம் எனக்கொள்ளப்படும்.

"இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, யமன், மாதரிஸ்வான் என்றும் அறிஞர்கள் பல பெயர்கள் கொண்டு அழைப்பதெல்லாம் ஒரு பரம்பொருளையே" என்பது இருக்குவேத மகாவாக்கியமாகும்.

பிரபஞ்சம் அனைத்துக்கும் ஒரே பரம்பொருள் மூலாதாரமாக இருக்கிறது என்ற நம்பிக்கையையடுத்து, உண்மையில் உள்ளபொருள் ஒன்றா, பலவா என்ற ஆய்வும் கருக்கொள்ளத் தொடங்குகின்றது. உள்பொருள் என்பது யாது? அதற்கு வரைவிலக்கணம் என்ன? இவை இருக்குவேத காலத்திலேயே அரும்பத் தொடங்கிவிட்டதற்கு மேலும் சான்றுகள் உள்ளன. உள்பொருளாவது வேறொன்றால் எதுவித மாற்றமுமின்றி உளதாதல் கூடும். அதனோடு ஒப்பிடுகையில் தோன்றிச் சில நாள் இருந்து மறைவன எவையும் உள்பொருள்கள் என்று கொள்ளத்தக்கவையல்ல. அவை வெறும் தோற்றங்கள். தோற்றம் பொய்யெனில் உளதாதலும் அவற்றிற்கில்லை. எனவே உள்பொருள் ஒன்றுதான். இதுவே ஒருமைக்கோட்பாடு (Monism). இவ்வொருமைக்கோட்பாடும் இருக்குவேதத்தில் காணப்படுவதற்குப் படைப்புப்பாடல் என்ற (Song of cocation) ஒன்றினை எடுத்துக்காட்டாகக் கொள்வது வழக்கம்.

"------- மரணமோ மரணமின்மையோ இருக்கவில்லை.
பகலுக்கும் இரவுக்கும் வேறுபாடு இருக்கவில்லை
அது ஒன்றே அமைதியுடன், தன்னிலே தான்சார்ந்து உயிர்த்தது
அது தவிர வேறு ஒன்று இல்லை, இருக்கவும் முடியாது"

என்பது படைப்புப்பாடலின் ஒரு பகுதியாகும். 'இந்திய தத்துவம்' என்ற தமது நூலிலே எம். ஹிரியண்ணா "உலக இலக்கியத்தில் இடம்பெற்றுவிட்டதென்று சொல்லக்கூடிய இப்பாடல் ஒருமைக்கொள்கையின் பிழிசாறாக உள்ளது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர். எனினும் 'பிரமம்' என்ற சொல் அக்காலத்தில் இடம் பெறவில்லை. 'பிரமன்' என்ற சொல் மறைமொழியின் மந்திரசக்தியைக் குறித்தது என்பர்.

இருக்குவேத காலத்திற்குப் பின்பு முற்குறித்த கடவுட்கொள்கைகளிலே மாற்றங்கள் சில ஏற்படுகின்றன. வேதகாலத் தெய்வங்களிற் பலரும் பின்வேதகாலத்தில் மகிமை இழக்கின்றனர். இக்காலகட்டத்தில் விஷ்ணுவும் உருத்திரனும் முதன்மை பெறுதல் காணலாம். இந்திரனும், வருணனும் இவர்களோடு ஒப்பிடப்படும்பொழுது தமது மகிமையை இழந்துவிட்டனர் என்றே கொள்ளலாம். ஆரணியகங்கள், உபநிடதங்கள் மேலோங்கிக் கடவுட் கோட்பாட்டில் ஓரிறை, ஒருமை வாதங்கள் முதன்மை பெறக்காண்கின்றோம். அனைத்துப் படைப்புக்களுக்கும் மூல காரணமாகப் பிரஜாபதி கொள்ளப்பட்டதும் பின் வேதகாலத்திலேயேயாம்.

02. இருக்குவேதத்தின் வழிபாட்டுமுறைமை வேள்வியை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வேள்விக்கான விதிமுறைகளை விரித்துரைக்கும் பகுதி பிராமணம் எனப்படும். தொடக்ககாலத்தில் வழிபாடு மிகவும் எளிமையாயிருந்தது, என்பதைப் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களின் பின்வரும் கூற்றினால் அறிந்துகொள்ளலாம்.

"இருக்குவேத காலத்தில் வழிபாட்டுமுறை மிகவும் எளிதாகவே அமைந்திருந்தது. "நான் உனக்கு நெய் முதலிய ஆகுதிகளைத் தருகின்றேன். நீ எனக்கு வீரர்களான மக்களையும் பசுக்களையும் நீண்ட ஆயுளையுந்தா" என்பதே வழிபடுவோர் இருக்குவேத காலத்தில் தெய்வங்களை மீண்டும் மீண்டும் வேண்டிய வேண்டுகோள். நெய் முதலிய ஆகுதிகளைக் கொடுக்கும் இவ்வழிபாட்டுமுறை பல்கிப்பெருகி மிகவும் விரிந்து விரிவான முறையில் வேள்வி எனக் குறிக்கப்படலாயிற்று" (வடமொழி இலக்கிய வரலாறு)

வேள்வியில் ஆகுதி வழங்குவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது அக்கினி. எனவே அக்கினி பற்றிய செய்திகளும், தோத்திரங்களும் இருக்குவேதத்தில் முக்கிய இடம்பெற்றது இயல்பே. அக்கினிக்கு ஹோதா, புரோகிதன் என்ற பிறபெயர்களும் வழங்கின. ஹோதா என்பதன் பொருள் யாகம் வேட்பவன் என்பதாகும். புரோகிதன் என்பதன் பொருள் வேள்வியிலே பயிற்சி மிக்கவன், அந்த வித்தையை நன்கறிந்தவன் என்பனவாகும். இவற்றோடு யாகங்களில் அளிக்கப்படும் அவிர்ப்பாகத்தைத் தேவர்களிடம் கொண்டு சேர்ப்பித்தலாலும் இவனுக்கு யாகத்தில் மகத்துவம் வழங்கப்பட்டது. மனைவேள்விகள் நாள்தோறும் நிகழ வேண்டியிருந்தமையால் அக்கினி காரியத்திற்கென இல்லங்களில் அக்கினி அணையாது பேணிக்காக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலப்போக்கில் அரசுகள் அமைந்து அவை சமுதாயத்தின் நிலைபேற்றுக்கான இன்றியமையாத நிறுவனங்களாய் மாறியபொழுது, அவற்றின் ஆட்சியாளர், தம் நலங்கள், புகழ், ஆதிக்கம், செல்வம் என்பவற்றிற்காகப் பெரும் எடுப்பில் வேள்விகள் செய்யமுற்பட்டனர். வேள்விகள் மிகவும் விரிவான வகையில் பலவிதமான சிக்கல்கள் நிறைந்தனவாய் மாறின. எனவே விரிவான வகையில் பலவிதமான சிக்கல்கள் விடுவிப்புப் பற்றியும் அனுபவத்தாலும் அறிவாலும் தெரிந்துகொண்ட புரோகிதர்கள் தேவைப்பட்டனர். அத்தகைய புரோகிதர்கள் அரசர்களின் மதிப்பிற்கும் உரியவராயினர். (இவர்களின் விபரங்களைப் பகுதி 2இல் முதலாம் வினாவில் இ, ஈ விடைகளிற் காண்க)

இவ்வாறு வேள்விகள் வளர்ச்சி கண்டபொழுது இவ்வேள்விகளின் அடிப்படையிலே அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பூர்வமீமாம்சை என்ற தர்சனம் ஒன்றே எழுவதாயிற்று. "ஆகுதி வழங்கி வழிபடப்படும் தேவர்கள் அவ்வாகுதியைப்பெறுவதன் மூலம் அதனை வழங்கியோருக்குக் கடப்பாடுடையவராகின்றனர். அவர்கள் வேட்போனின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தேயாக வேண்டும்" என்னும் அளவிற்குப் பூர்வமீமாம்சை வேள்வியை முக்கியத்துவப்படுத்திற்று. இதனால் வேட்கப்படும் தேவர்களிலும் வேள்வியே முதன்மையானது என்று அதன் இன்றியமையாமை வற்புறுத்தப்படலாயிற்று. எனினும் புறக்கிரியைகளின் மூலம் ஒருவன் தான் அடையவேண்டிய இறுதி இலக்கினை அடைவானா என்ற ஐயமும் அதன் காரணமாக வேள்வியைக் கண்டிக்கும் நிலையும் ஒரு கட்டத்தில் உருவாகத் தவறவில்லை. ஆரணியகம் புறத்தே நிகழும் வேள்விகளை மறுத்து அவற்றை மானசீகமாக உள்ளத்தே நிகழ்த்தித் தியானிப்பதன் மூலம் இலக்கினை அடையலாம் என அறிவுறுத்தலாயிற்று.

இலக்கு என்பது என்ன? உலக இன்பங்களை அனுபவித்து, மண்ணுலகில் உண்டாகும் இடையூறுகளிலிருந்து விடுபடுவதுதானா முக்கியம்? இல்லையே! பிரமத்தை அடைந்து பிறவித்தளையை நீக்கி ஆன்மிக ஞானம்பெற்று என்றும் குறையாத பேரின்பத்தை, வீடுபேற்றினை அடைவதல்லவா உண்மை இலக்கு. இத்தகைய சிந்தனைகளை முன்வைத்த உபநிடதங்கள் ஆங்காங்கே வேள்விக்கிரியைகளைக் கண்டிக்கத்தவறவில்லை.

"வேள்விகளைப் பற்றிய பிராமணங்களில் உள்ள அறிவுரைக்கு அடிப்படையாக அமைந்த பிரபஞ்சக்கொள்கைக்கு முற்றிலும் வேறான கொள்கையை உபநிடதங்கள் கொண்டுள்ளன. முந்திய உபநிடதங்களில் யாதாவதொரு வகையில் இவ்வெதிர்ப்புச் சுட்டிக்காட்டப்படுகிறது. சில உபநிடதங்களில் எதிர்ப்பு மிகவும் வெளிப்படையாக உள்ளது. இவ்வாறு வேள்வி செய்வதை எதிர்க்கும் தாக்குதல்களில் மிகத்தெளிவான தொன்று முண்டகோபநிடதத்தில் உள்ளது. அப்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இச்சடங்குகளால் உண்மையான நன்மை விளையுமென எவன் நினைக்கிறானோ அவன் முட்டாள். மீண்டும் மீண்டும் இவன் முதுமைக்கும் இறப்பிற்கும் கட்டாயம் உள்ளாவான்" என்று கூறப்பட்டுள்ளது. (இந்திய தத்துவம்) இவ்வாறு கூறும் ஹரியண்ணா, ஒரு கட்டத்தில் வேள்விகளை முற்றாகப் புறந்தள்ளாது அவற்றைக் கண்டிப்பதிலும் அதிக தீவிரமில்லாத ஒரு நிலைப்பாடு இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டத்தவறவில்லை.

"உபநிடதக்கொள்கைகள் வெற்றிபெறப்பெற இவற்றை (வேள்வியையும் தியானத்தையும்) இணைவிக்கும் முயற்சி செய்யப்பட்டது என்பதைச் சுட்டும் வகையில் எதிர்ப்புக் குறைந்தாவது போகிறது. பிற்கால உபநிடதங்களில் இவ்விணக்கம் தெளிவாகக் காணலாகும். சுவேதாசுவதர உபநிடதம் வேள்விக்குரிய கடவுளரில் முதன்மையுடையோராக அக்கினியையும் சோமனையும் ஏற்கும் வகையில் அவர்களைச் சுட்டிக்காட்டிய பழைய சடங்குமுறை வழிபாட்டை மீளவும் செய்யச் சொல்கிறது."

வேதகாலத்துக்குப்பின் எழுந்த மகாபாரதம், இராமாயணம், புராணங்கள் யாவும் வேள்வி முறைக்கு மகத்துவம் வழங்கவும், செய்யப்படும் வேள்விகளால் நற்பயன்கள் ஏற்படும் என வலியுறுத்தவும் தவறவில்லை. மகாபாரதத்தில் இராஜசூயயாகத்தைப் பாண்டவர் நிகழ்த்துவது குறிப்பிட்டதோர் இடத்தினை வகிக்கக் காண்கிறோம். இராமாயணத்தில் இராமன் அரக்கரிடமிருந்து வேள்வியைக் காக்கின்றான். இவனது அவதாரமே புத்திரகாமேஷ்டியாகத்தின் பயனே. உத்தர ராமாயணத்தில் இராமன் அஸ்வமேதயாகம் செய்தது பற்றிய செய்தியைக் காண்கிறோம். குப்தர்காலத்தில் (கி.பி. 400 – 700) மீண்டும் வேள்வி முதன்மை பெறுகின்றது. ஏறக்குறைய இந்தியா முழுவதையுமே தன்னடிப்படுத்திய சமுத்திர குப்தன் அஸ்வமேதயாகம் செய்கின்றான். குப்தருக்கு முன்னவரான மௌரியரை வெற்றிகொண்ட புஷ்யமித்திரன் வேள்விகளை ஊக்குவித்தான் என வரலாறு கூறுகின்றது. பகவத்கீதை மனிதனது செயல்கள் யாவுமே யக்ஞங்களாகக் கருதப்பட்டுத் தூயனவாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்துவதை நோக்க, யக்ஞத்தின் வியாபகமும் அதன் மற்றொரு முகமும் நன்கு புலனாகின்றன. (பகவத்கீதை – கர்மயோகம் – சுலோகம் 9–13 காண்க)

03. உபநிடதங்களின் குறிப்பிடத்தக்க சிந்தனைகளில் தலையாயது பிரமம் பற்றியதாகும். உபநிடத ஞானிகள் பலரும் பிரமத்தை அறிவதே உண்மை ஞானம் எனக் கொண்டிருந்தனர். தமது மகன் சுவேதகேது, குருகுலவாசம் செய்து வேதங்கள் முதலாக அக்காலத்திலே கற்கக்கூடியனவாயிருந்த அனைத்து வித்தைகளையும் கற்றுத்திரும்பியிருந்தும், பிரமத்தை அவன் அறியாமையால் அவனது அறிவு குறைபாடுடையது என்று உத்தாலகர் முடிவு செய்ததை இதற்கு உதாரணமாக எடுத்துக் காட்டலாம். கண்ணுக்கு புலனாகும் பிரபஞ்சமும் இதன் மூலம் பெறத்தக்க இன்பங்களுமே நிலையானவை என்று கருதி அவற்றிற்காகத் தெய்வங்களைப் பிரீதி செய்துவந்த நிசிந்தனைப் போக்கிலிருந்து விடுபட்டு, உண்மைப்பொருளாகிய பிரமத்தை அறிவதையே குறிக்கோளாகக்கொண்டு நடத்திய ஆராய்ச்சிகளின் உள்ளடக்கங்களே உபநிடதங்கள் எனலாம்.

"எதனைத் தெரிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்தவனாக ஆகலாம்? ஐயனே அதனை அருளுக எனக்கே" எனவரும் முண்டகோபநிடதக் கூற்றும் இந்த வேணவாவினையே புலப்படுத்துகின்றது.

"இவை பிரமம், ஆத்மா என்னும் இருசொற்களாகும். இந்திய தத்துவம் என்னும் கட்டடம் முழுவதையும் தாங்கும் இருதூண்கள் என இவை கூறப்பட்டுள்ளன" என்பர் ஹரியண்ணா. ஒரு கட்டத்தில் ஆன்மா, பிரமம் என்ற இரண்டுமே ஒன்று எனக் கருதப்பட்டதாகத் தெரிகிறது.

1. "ஆத்மன் எங்கும் வியாபித்து அநந்தமாயிருப்பதால் மனம் ஒரு தளத்தை அடையமுன் அது அங்கு ஏற்கெனவே இருக்கிறது"
2. "ஆத்மன் சேய்மையானதும் அண்மையானதுமாயிருக்கிறது. அது இதன் (இவ்வுலகத்தின்) அகத்தும் புறத்தும் இருக்கிறது."
3. "ஆத்மனே எல்லாப்பிராணிகளின் அடிப்படை அல்லது ஆதாரம் (அதிஷ்டானம்)"
4. "ரிஷி எல்லாப் பிராணிகளையும் ஆத்மனிலும் ஆத்மனை எல்லாப் பிராணிகளிலும் பார்க்கிறார்."

(ஈசாவஸ்ய உபநிடதம் – 14, 15, 18, 19)

இக்கூற்றுக்கள் தனியாள் ஒருவனின் அகமாக ஆன்மா உள்ளது என்ற கருத்துக்கு மாறாக பிரபஞ்சம் அனைத்திலும் வியாபித்து எல்லாவற்றிற்கும் மூலாதாரமாயுள்ளது ஒரே ஆன்மா என்று உரைக்கின்றன. இந்தப் பிரபஞ்ச ஆன்மாவே பின்பு பிரமம் ஆயிற்று என்பதும் ஒருசாரார் கொண்ட முடிவாகும்.

பிரமம் என்ற சொல்லின் வேர்ச்சொல் 'பிருஹ்' என்பதாகும். அது வளர்வது, வெளிக்கிளம்புவது என்னும் பொருள்களைத்தருவதாகும். இதிலிருந்து உபநிடதஞானிகள், பிரபஞ்சத்தின் முதற்காரணம் இயற்கையின் முழு உருவிலிருந்தும் (சேதன, அசேதனப் பொருள்களிலிருந்தும்) வெளிக்கிளம்பியது, வளர்ந்தது எனப்பொருள் அமைத்துப் பிரமம் என்ற சொல்லைக் கையாண்டனர் என்று கருதலாம். இவ்வாறு வெளிக்கிளம்பிய பிரமம் மனிதனின் உள்ளிருந்து அவனை இயக்கிச் செயற்படுத்தும் அகம் (Self) ஆக ஒடுங்கியபோது தனியான்மா நிலைக்குத் தன்னைக் குறுக்கிக் கொண்டது. எனவே ஆன்மா என்பது பலவல்ல. அது ஒன்றாகிய பிரமந்தான். எனவே எங்கும் எல்லாவற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபித்தும், தன்னுள் தானாக வியாப்பியம் அடைந்தும் ஒன்றாகவோ இரண்டாகவோவன்றி-ஏகவஸ்துவாக உள்ளதே பிரமம் எனக்கொள்வது பொருத்தம் போலத் தெரிகின்றது.

ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க!

என்னும் மணிவாசகரின் திருவாக்கும் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கதே.

ஆனால் இவ்விடத்திலும் பிறிதொரு சிக்கலுக்கு இடம் ஏற்படுகின்றது. ஒரே ஆன்மா(பிரமம்) தன்னை வெளிப்படுத்தப் பிரபஞ்சத்தை மூலாதாரமாகக்கொள்ளுமானால் அந்த ஆன்மாவும் பிரபஞ்சமும் ஆக இருபொருள்களை உள்பொருளாகக் கொள்ளுமானால் அந்த ஆன்மாவும் பிரபஞ்சமும் ஆக இரு பொருள்களை உள்பொருள்களாகக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகுமல்லவா? அதனோடு அறிவுடைப்பொருளும், அறிவற்ற சடப்பொருளும் சமநிலையில் சமதரத்தில் உள்ளன என்ற சிக்கலுக்கும் இடம் ஏற்படுகின்றது. ஆனால் இதற்கும் உபநிடதத்தில் பதில் கிடைக்கின்றது. "சிலந்தி தனது உமிழ்நீரிலிருந்து வலைபின்னி அதிலேயே தான் இருப்பது போல, பிரமமும் பிரபஞ்சத்தைத் தன்னுள்ளிருந்து தோற்றுவித்து அதில் அமர்கிறது" என்பது சிறந்ததோர் உவமையாக அமைந்து பிரமமே அனைத்தையும் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் சக்தி பெற்றுள்ளது என்ற உண்மையைப்பெற வைக்கின்றது.

பிரமத்தின் உண்மையைச் சொல்கொண்டு விளக்குதல் இயலாது. "அதனை அடைய முடியாமல் சொல்லும் கருத்தும் திரும்பி விடுகின்றன" என்று தைத்திரிய உபநிடதம் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். உபநிடத காலத்து மகாஞானியான யாக்ஞவல்கியர், தமது மனைவியாகிய கார்க்கிக்குப் பிரமத்தை எதிர்மறையுத்தியைக் கையாண்டே விளக்கமுற்படுகின்றார்.

"இது அழிவற்றது, ஞானிகள் போற்றுவது – பருமையன்று, நுண்மையன்று. குட்டையன்று, நெட்டையன்று, சிவப்பன்று, ஒட்டுவதன்று, நிழலற்றது, இருளற்றது, காற்றற்றது, இடம் அற்றது. தொடர்பற்றது, சுவையற்றது, மணமற்றது, பார்வையற்றது, காதற்றது, பேச்சற்றது, மனமற்றது, ஒளியற்றது, மூக்கற்றது, வாயற்றது, உருவற்றது, உள்ளோ புறமோ அற்றது. அதனை உண்பதும் ஒன்றுமில்லை. அது உண்பதும் ஒன்றில்லை."
(பிருஹதாரணியக உபநிடதம்)

எனினும் அது ஒன்றுமற்ற பாழன்று என்பதைத் தெளிவுபடுத்த, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் தன் இருப்பினை அதினின்றே – பிரமத்தினின்றே பெறுவதாக யாக்ஞவல்கியர் கூறுவது சிந்தனையைத் தூண்டுவதாயுள்ளது.

சாந்தோக்கிய உபநிடதத்தில், சாண்டில்ய வித்யா என வழங்கும் பகுதியில் பிரமத்துக்கு 'தஜ்ஜலான்' என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. தத்–அது, ஜி–உலகத்தைத் தோற்றுவிப்பது. லி–தன்னுள் ஒடுக்குவது. அன்–தாங்குவது என்பது தஜ்ஜலான் என்ற சொல்லின் பொருளாகும். எனவே உலகினைத்தோற்றுவித்தும் தன்னுள் ஒடுக்கியும், தாங்கியும் தான் என்றும் மாறாத இயல்புடன் என்றும் இருந்தபடி இருப்பதே பிரமம் என்பது உபநிடதங்கள் தெரிவிக்கும் உண்மையாகும்.

"பிரமத்தை அறிந்தவன் பிரமமே ஆகின்றான்" என்ற கேனோபநிடதமகாவாக்கியமும், "இது பிரமம், இங்கிருந்து நான் செல்லும்போது அது ஆவேனாக" என்ற பிருஹ தாரணியக உபநிடத மகாவாக்கியமும், ஒவ்வொருவனது இறுதியிலக்கும் பிரமத்தை அடைந்து நித்தியானந்தத்தில் திளைப்பதேயாகும் என்பதை உணர்த்துகின்றன.

4. சூரியன் காலையில் தோன்றி மாலையில் மறைகின்றது. இரவில் விண்மீன்கள் வானப்பரப்பை அணி செய்கின்றன. மாதத்தில் பதினைந்து நாள்கள் வளர்ந்தும் பின் பதினைந்து நாள்கள் படிப்படியாகத்தேய்ந்தும் வருகிறது வெண்ணிலா. தீ கான்று எரிகிறது. தண்ணீர் குளிர்ந்து தண்மை பயக்கின்றது. பருவங்கள் மாறிமாறிவருகின்றன. பயிர்கள் வளர்கின்றன. காடும் காவும் கவின் பெறுதுருத்தியும் கண்களுக்கு இனிமை பயக்கின்றன. இவையாவும் ஓர் ஒழுங்கிலே விளங்குவதற்குக் காரணம் யாது. வெய்யோனின வெப்பமும், வெண்ணிலவின் தண்மையும் மாறாது இயற்கை ஒரு சீர்மையாக இயங்குவது எதனால்?

இத்தகைய சிந்தனைகள் வேதகால ஆரியரிடையே முகிழ்த்தெழுந்தபோது இவற்றுக்கெல்லாம் மூலமாக ஒரு சக்தி உள்ளது என்ற முடிவு அவர்களுக்கு உண்டாயிற்று. இதனை 'ரிதம்' என்ற பெயரிட்டுத் தாம் வழிபடும் தெய்வங்களின் பட்டியலிலே அவர்கள் சேர்த்துக்கொண்டார்கள்.

இயற்கையின் ஒரு சீர்கையைப்போலவே மாந்தரின் ஒழுக்கநெறியிலும் அவர்களுடைய கவனம் சென்றது. உண்மை பேசுதல், உயிர்களிடத்தில் அன்பாய் இருத்தல், கள்ளாமை, விபசாரம் செய்யாமை, மது அருந்தாமை என்பன தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் இன்றியமையாது வேண்டப்படும் ஒழுங்காகும் என்ற உண்மை அவர்களுக்குப் புலனாயிற்று. இவற்றிற்கு மாறான பொய்மை, களவு, உயிர்க்கொலை, விபசாரம் போன்றவை தீமைபயப்பதும் அவர்களுக்குப் புலனாயிற்று. எனவே இயற்கை ஒழுங்கோடு ஒழுக்கமாகிய நெறியையும் இணைத்து அதனையும் ரிதத்தினுள் அடக்கலாயினர்.

அடுத்து ரிதம் ஒரு சக்தியாயினும் அதனை இயக்கவும் பேணிக்காக்கவும் மூலகாரணன் ஒருவன் வேண்டும் என்ற சிந்தனையும் ஏற்பட்டது. இந்தச் சிந்தனையின் பயனாக வருணன் உருவானான். 'ரிதத்தைக் காப்போன்' என்னும் பொருளில் அவனை 'ரிதஸ்யகோபன்' என அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருணன் சர்வசக்தி படைத்தவன். எங்கும் உறைபவன். அவனுடைய கூரிய விழிகளுக்கு எவையும் தப்பமாட்டா. எவர் எந்த மூலையிலிருந்து எக்கருமத்தை இயற்றினாலும் அதனைக் கண்டு அதற்கான பலாபலன்களைக் குறித்த ஆளுக்கு வழங்க வருணன் தவறமாட்டான். எனவே தீயன புரிவோர் அவனுக்கு அஞ்சினர். அவனுடைய தண்டனையிலிருந்து தவிர்ந்துகொள்ள அவனையே சரணடைந்து கழிவிரக்கத்தோடு மன்றாடி மன்னிப்புக்கோரி வழிபடராயினர். வருணனுக்கு அஞ்சிய அச்சமே பத்திக்கு அடிகோலிற்று என்பது ஆய்வாளர் முடிபு.

"அவன் (வருணன்) பாவத்தை வெறுத்தான், பாவஞ்செய்தோரை வருத்தி ஒறுத்தானாதலின், மனக்களிப்புக்கொண்ட வேதப் புலவன் வருணனைப் பாடியபோது தவக்கோலம் பூண்டு தன் பாவத்துக்கு இரங்கினான்" என்று பசாம், தமது வியத்தகு இந்தியா, என்ற நூலிலே கூறியுள்ளமை நினைவு கூரத்தக்கதாகும்.

ஒழுக்கக்கேடோ தீமையோ புரிபவன் தனது வாழ்நாள்காலத்திலே தனது தீமைகளுக்கான பயன் அடையாமையும் சிந்தனைக்கு உரியதாயிற்று. தீயனவாகிய பாவங்களுக்கு என்றோ தண்டனை கிடைப்பது உறுதி என்பதில் சந்தேகம் இருக்கவில்லை. எனவே ஒருவன் தான் செய்த குற்றத்தின் பலனை இப்பிறவியில் அனுபவிக்காவிட்டாலும் மரணத்தின்பின்பு வேறொரு பிறவி எடுத்தாவது அனுபவித்தேயாக வேண்டும் என்ற முடிவு உண்டாயிற்று. நல்லதும், தீயதுமாகிய செயல்கள் வித்தாய் முளைத்துப் பெருமரமாய் வளர்ந்து பயனளிக்க ஒரு பிறவி போதாது என்று உணர்ந்தனர். இவ்வுணர்விலிருந்தே கன்மம், மறுபிறப்புக்கோட்பாடு உருவாயின என்றும், இக்கோட்பாடுகளுக்கு மூலமாய் ரிதம் அமைந்தது என்றும் கலாநிதி டீ.எம்.பி. மகாதேவன் தமது 'இந்து சமயத்தத்துவம்' என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாயின் பிற்காலச் சமய தத்துவ வளர்ச்சிக்கும் 'ரிதம்' மூலமாக அமைந்தது என்று கொள்வது தவறாகாது.

05. சைவ சித்தாந்தத்தின் இறுதி இலக்கு சிவபெருமானுடன் பாலும் நீரும் போலவும், தாளும், தலையும் போலவும் ஒன்றன்றியும் இரண்டன்றியுமான சுத்தாத்துவித முத்தியைப் பெறுவதே. இவ்விலக்கிற்கு வழிகாட்டி உதவுவன வேதங்களும் ஆகமங்களுமாம். வேதங்கள் சைவசித்தாந்தத்துக்கு மட்டுமன்றி வைதிக சமயங்கள் யாவிற்கும் பொது நூல்கள். ஆனால் சிவாகமங்களோ சைவசித்தாந்த நெறிக்குரிய சிறப்புநூல்கள் என்பதால் அவை கூடுதலான முதன்மைபெறுகின்றன. இதனாலேயே சைவசித்தாந்தத்தை 'ஆகமாந்தம்' என அழைக்கும் வழக்கமும் ஏற்பட்டது.

சிவபெருமான் ஐந்து முகங்கொண்டு முனிவர் ஐவருக்குச் சிவபேதம், உருத்திரபேதம் என வகைப்படுத்தி உபதேசித்தருளிய சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். சிவபேதம் கூறுவன பத்து ஆகமங்கள். உருத்திரபேதம் கூறுவன பதினெட்டாகமங்கள். (இவ்விருபத்தெட்டு ஆகமங்களின் பெயர்களும் இரண்டாம் பகுதியிலுள்ள விடையில் தரப்பட்டன.)

ஆகமங்கள் சைவசித்தாந்த முப்பொருள்களாகிய பதி, பசு, பாசம் பற்றி விரிவாகப் பேசுகின்றன. ஆணவமாகிய மலத்தை நாசம் பண்ணி ஞானத்தை உதிப்பித்து முத்தியைப் பெறுதற்கான வழிவகைகளை அறிவுறுத்துகின்றன. ஆன்மாக்களுக்கு வேண்டும் மெய்யுணர்வினை வழங்குவதில் ஆகமங்கள் பெறும் இடம் மிகவும் முதன்மையானதாகும்.

ஒவ்வோராகமத்திலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களும் முறையே சரியாபாதம், கிரியாபாதம் யோகபாதம், ஞானபாதம் என வகைப்படுத்தி விளக்கம் தரப்படுகின்றது. சரியாபாதம் சமய ஆசாரங்களையும், பூசனைக்குரிய உபகரணங்களையும் பற்றியும் நாள் தோறும் செய்யவேண்டிய கடமைகள் பற்றியும் விரித்துரைக்கும். கிரியாபாதம் நித்திய, நைமித்திய, காமிய பூசைகள் பற்றிய விளக்கங்களை வழங்கும். யோகபாதம் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் முதலியவற்றின் இலக்கணங்களையும், ஆன்மசுத்தி, அந்தர்யாகம் (மனத்தினால் நடத்தும் வேள்வி) முதலியவற்றை விளக்கும். ஞானபாதம் பதி, பசு, பாசமாகிய முப்பொருளுண்மை, இவற்றின் இலக்கணம் ஆகியவற்றை உபதேசித்து அருள்வழிப்படுத்தி முத்திக்கு வழிகாட்டும்.

சைவசித்தாந்தத்தில் குருபெறும் இடம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ஞானநூல்களைத் தானாகவே கற்று ஒருவன் ஞானத்தை அடைதல் கூடாது என்பதும், குரு ஒருவனே ஞானத்தை உணர்த்த வல்லவன் என்பதும் சைவசித்தாந்தத்தின் முடிந்தமுடிபு. இவ்வுண்மையை, "குருவே தேவன், குருவே பிரமா, குருவே விஷ்ணு, குருவே மகேஸ்வரன் அவரே சாட்சாத் பரப்பிரம்மம். எனவே குருவுக்கு வணக்கம்" என்பது ஆகம மகாவாக்கியம். குருவின் மூலம் பெறுபவனவாகிய தீட்சைகள், அவற்றின் வகைகள், பயன்கள் என்பனவும் ஆகமங்கள் வாயிலாக விரிவாக அறியக்கூடியனவாயுள்ளன.

திருவுருவ வழிபாடு சைவசித்தாந்தத்தின் உயிர்நாடி எனலாம். மிகஉயர்ந்த சைவசித்தாந்த தத்துவ விளக்கக் கருவூலமான சிவஞானபோதத்தின் பன்னிரண்டாவதாகிய இறுதிச்சூத்திரம்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழிஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

என வலியுறுத்துகையில் ஆலயத்தையே அரனெனத் தொழவேண்டும் என்ற உண்மை பெறப்படுகிறது. இதேயுண்மையைச் சிவஞானசித்தியாரும் 'செங்கமலத் தாளிணைகள் சேரவொட்டா' எனத்தொடங்கும் பாடலிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"------ ஆலயங்களெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப்பாடி"

எனக்குறிப்பிட்டுள்ளது. சிவாகமங்கள் ஆலய அமைப்பு, ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்படும் விக்கிரகங்களின் அமைப்பு, சிவபூசைக் கிரமங்கள் முதலானவற்றை விரித்து விதி செய்துள்ளமை காணலாம். ஆகமங்களில் கூறப்படும் வழிபாட்டுமுறைமைகளைச் சாரமாகக்கொண்டு அமைக்கப்பட்ட பத்ததிகளின் வழியிலேயே சிவாலயபூசைகள் நிகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதுமாகும். கோயிற்கட்டட அமைப்பு, விக்கிரக உருவமைப்பு முதலாம் சிற்ப, விக்கிரகக் கலைகளுக்கு விதி செய்யும் சிற்பநூல்கள் யாவும் ஆகமமுறைகளை அனுசரித்தே உருவாக்கப்பட்டன.

சிவாகமத்தைப் பயிலும் அதிகாரமும் வரையறை செய்யப்பட்ட ஒன்றே என்பதைப் பின்வரும் கூற்றினால் தெளியலாம்.

"மக்கள் யாவருக்கும் (எந்தச் சமயத்தவருக்கும்) இப்பிறப்பிலே சமயம் புகுதல் இரண்டாவது பிறப்பாகக்கருதப்படும். கடமையாதல் பற்றிச் சிவ (சைவ) சமயத்தவர் சிவதீட்சை பெற்றுக்கொள்வர். சிவதீட்சை பெற்றுக்கொண்டு வழுவாது ஒழுகிவருவோரே சிவாகமம் பயிலும் தகுதியுடையார் என்பர்"

முற்குறித்த குரு, லிங்கம் என்பவற்றின் வழிபாட்டோடு சங்கமரான அடியார்களின் வழிபாடும் ஆகமம் வலியுறுத்துவதேயாகும்.

வேதங்களை ஓதவும் தியானம் செய்யவும் உரிமை உடையவராய்ப் பிராமணராகிய முதல் வருணத்தினரே கொள்ளப்பட்டனர். க்ஷத்திரியரும், வைசியரும் வேதத்தை ஓத உரிமை படைத்தாலும் வேள்வி முதலிய கிரியைகளை நடாத்தும் உரிமையும் கடமையும் முதல் வருணத்தினராகிய பிராமணர்க்கே இருந்தது. எனவே நாலாம் வருணத்தினரான சூத்திரர் இறைவனின் மாட்சியையும் மகத்துவத்தையும் அறிந்து முறைப்படி வழிபட வழியில்லாதிருந்தது. இந்நிலையில் அவர்களுக்கு அவற்றை எளிமையாக விளங்கிக்கொள்ள வகை செய்யவே புராணங்கள் எழுந்தன. வேதங்கள் பிரபுசங்கிதைகள், மீறமுடியாதவை. ஆண்டான் அடிமைக்குக் கட்டளையிடுவன போல அமைந்தன. புராணங்களோ சுஹிருத்சங்கிதைகள், நண்பன் ஒருவன் இனிமையாக அறிவுரை வழங்குவது போலச் சமய உண்மைகளைக் கவர்ச்சியோடு வழங்கும் தன்மையின. எனவே இந்துசமய வழிபாட்டில் புராணங்கள் முக்கிய இடம்பெற்றதில் வியப்பில்லை. (மகாபுராணங்களின் பத்துலட்சணங்கள், உபபுராணங்களின் பஞ்சலட்சணங்கள், பகுதி 2 வினையில் உள்ளன.)

வேதங்களில் உருவவழிபாட்டிற்கு இடமில்லை. புராணங்களோ இறைவனின் திருமேனிகளின் வடிவமைப்பையும் அவன் அடியவர்களுக்காகச் செய்தருளிய அற்புதச் செயல்களையும் அவதாரங்களையும் விரிவாக, சுவைபட எடுத்துக்கூறுகின்றன. அவற்றைப் படித்தோ, கேட்டோ அடியவன் பரவசம் ஆகின்றான். இறைமகிமையில் ஒன்றி நின்று உருகுகின்றான். இறைவன் தானே வந்து தலையளித்தாட்கொண்டருளுவான், பிழைகளை எல்லாம் மன்னித்தருள்வான், சம்சாரபந்தத்தினின்று கடைத்தேற்றுவான் என்றெல்லாம் அடியவன் பத்தியிலே கனிந்து தஞ்சம் புகுவதற்குப் புராணங்கள் வழிவகுக்கின்றன எனலாம். புராணங்களில் கூறப்பட்ட கடவுளரின் உருவலட்சணங்களை விதிசெய்து ஆகமங்கள் புலப்படுத்த அவற்றின் அடிப்படையிலே சிற்பசாத்திரங்கள் திருவுருவங்களில் அமைக்கும் விதிகளை உருவாக்கின எனலாம். இவ்வாறமைந்த திருவுருவங்களில் அப்பர் சுவாமிகள், தொண்டரடிப்பொடியாழ்வார் போன்ற பெருமக்கள் தங்கள் உள்ளங்களை லயிக்கவிட்டு மனிதப்பிறவியை வேண்டிநின்றதும், இந்திரலோகமாகும் அச்சுவையையும் வேண்டாது நின்றதும் வியப்பைத் தருவனவல்ல.

"இறைவா, எமது உரைகள் யாவும் உன்பெருமைகளாகவே விளங்குக. எம் செவிகள் உன் பிரதாபங்களையே கேட்பனவாகும். எம் கரங்கள் உன்பணிகளையே இயற்றுக. எம் உள்ளங்கள் உன் பாதபங்கயங்களையே என்றும் நினைக்குக. எம் தலைகள் நீ எழுந்தருளியுள்ள பூமியை நோக்கித் தாழ்க. எமது விழிகள் உனது திருவுருக்களாய் உலகில் உலாவரும் அடியார்களையே தரிசிக்குக."

என்ற இக்கூற்று, பாகவத புராணத்தில் வருவதாகும். அப்பர் சுவாமிகளின் 'தலையே நீவணங்காய்' எனத் தொடங்கும் திருவங்கமாலையினை இது நினைவூட்டி அடியவர்தம் கடமைகளை எடுத்துரைத்து அவர்களைப் பத்தியிலே கனிய வைக்கவல்லன என்பதற்கு ஐயமில்லை.

"விலங்குகளைத் தவிர இறைவனின் அற்புதச் செயல்களை அலட்சியப்படுத்தும் மாந்தரும் உளரோ? புலனுகர்ச்சி சாதனங்களான பொறிகளை அடக்கி இறைதரிசனம் ஒன்றுக்காகவே ஏங்கி அதனைப் பெறுவதாகிய ஒன்றிலேயே அவன் அடியார்கள் பரவசமடைகின்றார்கள். இறைவனின் மகிமையைக் கேட்டு மனம் உருகி அவனிலேயே லயிப்பதைவிட மனிதர்க்கு வேறு பேறும் உளதோ?" என்பதும் பாகவதபுராணம் வாயிலாக நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும்.

புராணங்களில் ஒருவகை தலபுராணங்கள். அவை இறைவனை வழிபடும் மார்க்கங்களையும் அவன் எழுந்தருளியுள்ள தலத்தையும், அத்தலத்தின் மகிமைகளையும் எடுத்தியம்புவனவாகும். காஞ்சிப்புராணம், சிதம்பரபுராணம், தொண்டைப்புராணம் முதலிய புராணங்கள் தமிழிலே எழுந்த சிறந்த தலபுராணங்களாகும். ஈழத்திலே தக்ஷிணகைலாயபுராணம், திருக்கேதீச்சர புராணம், ஈழத்துச் சிதம்பரபுராணம் என்பனவும் இவ்வகையில் சிறப்பித்துக் கூறத்தக்கவை. ஆழ்ந்த சைவசித்தாந்த தத்துவங்களை எடுத்தியம்புவது கச்சியப்பசிவாசாரியார் அருளிய கந்தபுராணம். அடியார்களின் மகிமையையும் அவர்களை இறைவனாகவே கொண்டு வழிபட வேண்டிய இன்றியமையாமையையும் திருத்தொண்டர் புராணம் எடுத்தியம்புகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இறைமகிமை, அவன்மீது அடியவர் பத்திகொள்ளவேண்டிய இன்றியமையாமை, அவ்வாறு பத்திசெய்வார் அடையும் பெரும்பயன், பத்தி செய்வதற்கான முறைமைகள், வழிபாடுகள் என்பவற்றையெல்லாம் புராணங்கள் விரித்துரைப்பதால் அவை இந்து சமயத்தில் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

7. இந்துசமயத்தின் முதலும் முடிவுமான இலக்கு இறைவனோடு கூடுதலாகிய முத்தியின்பத்தினை வலியுறுத்துவதேயாகும். பகவத்கீதையும் இதற்கு விதிவிலக்கன்று. ஆனால் அது எழுந்த சூழ்நிலை உடனடியாக எல்லாவற்றையும் துறந்து சம்சாரபந்தத்தினின்றும் விடுபடுவதை வலியுறுத்தக்கூடியதாயில்லை. தருமவான்களான பாண்டவருக்கும், அதருமத்தையே போற்றிய கொடியோரான கௌரவருக்குமிடையே அரசுரிமை பற்றி எழுந்த போரின் மத்தியில், பகவானுடைய உபதேசமாகப் பகவத்கீதை உருக்கொண்டதை நாம் மறந்துவிடலாகாது. பகவானின் இலட்சியம் கொடியோரை அழித்து நல்லோரைக் காப்பதாகவும், தருமத்தை நிலைநிறுத்தி அதருமத்தை ஒடுக்குவதாகவும் இருக்கையில், அருச்சுனனின் திடீர்த்துறவினை அவரால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அருச்சுனன் முதலான வீரர்களெல்லாம் பகவானின் கைகளிலே வெறும் பாவைகள். பகவான் சூத்திரதாரி. எனவே அவர் அருச்சுனனுக்கு அவனது க்ஷத்திரிய தருமத்தை நினைவூட்டுகின்றார். போர் செய்வது அவன் கடமை என்று வலியுறுத்துகின்றார். இவ்வகையில் வையத்து வாழ்வாங்கு வாழவேண்டிய விதிமுறைகளையும் பகவத்கீதை வாயிலாக அவர் எடுத்தியம்புகின்றார். வேறுவகையில் சொல்வதாயின் ஆன்மீகத்தின் ஆழ்ந்த தத்துவங்களைப் போதிக்கும் அதே வேளையில், ஒருவன் தான் பிறந்த நோக்கத்தை நிறைவேற்றுதற்குச் செயல்புரிய வேண்டிய அவசியத்தையும் பகவத்கீதை இடித்துரைக்கத்தவறவில்லை.

வையத்து வாழ்க்கை வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஒவ்வொருவரும் வலிவு படைத்தவராதல் வேண்டும். ஒளிபடைத்த கண்ணினராயும், உறுதி படைத்த நெஞ்சினராயும் விளங்குவது அவசியமாகும்.

"பார்த்தா, அலியின் இயல்பை அடையாதே, அது உனக்குப் பொருந்தாது. எதிரியை வாட்டுபவனே, இலகுவான உள்ளத் தளர்வினைத் துறந்துவிட்டு எழுந்திராய்" என்று அருச்சுனனின் உள்ளத்திலே பகவான் எழுச்சியினை ஊட்டக் காண்கின்றோம்.

வையத்து வாழ்வாங்கு வாழ்வதென்பது, தருமத்தைப் பலியிட்டு, நீதிகோடி, தமர் என்று பற்றுள்ளமும் பிறர், பகைவரென்று வெறுப்புள்ளமும் கொள்வதன்று. அருச்சுனன் பகைவன் தருமச்செயல்களையும் மறந்து அவர்களின் உறவினை மட்டும் போற்றி அந்த உறவினரைக் கொல்வதிலும் சந்நியாசியாகிக் காடு சென்று தவம் செய்ய முற்பட்டது எவ்விதத்திலும் போற்றத்தக்கதாய் இல்லை. அருச்சுனன் தன்குலம் அழியும் என்று கவலைப்படுகின்றானேயன்றிக் குலதர்மம் அழிகிறதே என்று கவலைப்பட்டானல்லன்.

"குலம் அழிந்தால் என்றுமுள்ள குலதர்மங்கள் அழிகின்றன. தர்மநாசத்தால் குலம் முழுவதையும் அதருமம் சூழ்கின்றது" என்று அவன் கூறுகையில் அவன் குலதர்மமாகிய மானிடரின் அழிவுக்கே வருந்துகின்றான். இது அஞ்ஞானம். இவ்வஞ்ஞானத்தைப் போக்கிக் குலத்திலும் மேலான தருமத்தைக் காத்து அத்தருமத்தின் மூலம் மானிட இனம் வாழவேண்டிய அவசியமே பகவானால் கீதையில் அவனுக்கு உணர்த்தப்படுகின்றது.

"துயரத்துக்குரியவர் அல்லார் பொருட்டுத் துயருறுகிறாய். ஞானியரது நல்லுரையும் நவில்கிறாய். இறந்தார்க்கோ இருப்பார்க்கோ புலம்பார் பண்டிதர்" என்று பகவான் அருச்சுனனின் வாதத்தை மறுத்து அவனுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்துகின்றார்.

"பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக்கொள்வது போன்று ஆத்மா பழைய உடல்களை நீத்துப் புதியன புகுகின்றது"

என்ற அறிவுரையில் மூலம் உடலே; ஆன்மாவல்ல என்ற உண்மையும் அதன் நித்தியமாந்தன்மையும் பேசப்படுகின்றன. ஆனால் ஆன்மா தான் உடலெடுத்து வாழும்வரை தனக்கென வகுக்கப்பட்ட கடமைகள் தருமங்களிலிருந்து விலக அதற்கு அதிகாரம் இல்லை. ஏனெனில் அவற்றின் கருமங்களை நிருணயிப்பவனும் அக்கருமங்களை அவை செய்யுமாறு வழிப்படுத்துபவனும் பகவானேயன்றி ஆன்மாக்கள் அல்ல. எனவே செயல்புரிவது ஒன்றுதான் அவற்றிற்கு ஒரேவழி. அச் செயல்களின் பயனை அருளுபவன் பகவான் என்று அவை நம்புவது அவசியம்.

இந்நிலையில் செயல்புரிகையில் பலனில் பற்று வையாமை அவசியம். இது நிஷ்காமிய கர்மம் எனப்படும். தாமரையிலையில் நீர்த்துளிபோலப் பயனை இறைவனிடத்து விடுத்து பிரபஞ்சத்தில் தோயாது ஒட்டியும் ஒட்டாமலும் செயற்படுவதைப் பகவத்கீதை வற்புறுத்துகின்றது. அது வலியுறுத்தும் வாழ்வாங்கு வாழுதலே செய்யத்தக்கது.

"நித்திய கர்மத்தை நீசெய். செயலின்மையை விடச் செயல் சிறந்தது. செயலிலானுக்கு உடலைப் பேணுதல் கூடாது" என்றும்,

"ஆகையால் யாண்டும் பற்றற்றுப் பண்புடன் பெருவினை ஆற்றுக.

ஏனென்றால் பற்றற்றுச் செயல் புரிபவனே பெருநிலையைப் பெறுகின்றான் "

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்மமெல்லாம் எனக்கற்பித்து, சித்தத்தைச் சைதன்யத்தில் வைத்து ஆசையையும் மமகாரத்தையும் அகற்றி, மனக்கொதிப்பின்றிப் போர் புரிவாயாக" என்றும்,

செயற்படும் அவசியத்தையும் அச்செயலால் விளையும் பயனில் தோயாது அதனைப் பகவானுக்கு அர்ப்பித்தும் வையத்து வாழ்வாங்கு வாழவேண்டிய முறைமை பகவத்கீதையில் பலவாறு வற்புறுத்தப்படுகின்றதெனலாம். இதனையே அப்பர் சுவாமிகளும்,

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

8. இந்துசமயிகளின் வாழ்விற்கு அடிநாதமாய் விளங்குவது தருமம். தருமம் என்ற சொல்லின் பகுதி 'த்ரு' என்பதாகும். அதன்பொருள் தாங்குவது, போஷிப்பது. மக்களின் வாழ்வைத் தாங்கிப் போஷிப்பதே தருமம். 'தருமத்தைச் செய்' – என்பது உபநிடத அறிவுறுத்தல். 'தருமம் என்று ஒரு பொருள் உளது' என்பது கந்தபுராணம். தருமத்தின் விளக்கமாய் அமைவன சுருதிகள். சுருதி கூறும் தருமவாழ்வினைக் கதைகள் வாயிலாக விளக்க எழுந்த இலக்கியங்களிலே பாரதம், இராமாயணம் என்பன முதன்மையிடம் வகிக்கின்றன.

பாரத இதிகாசத்தை எடுத்துக்கொண்டால், தருமத்தின் முழுமையான உருவமாக அமைந்த யுதிஷ்டிரன் தருமதேவதையின் புத்திரன் எனக்கொள்ளப்படல் காணலாம். இதன் காரணமாக சுவன், தருமன், தருமபுத்திரன் என்ற பெயர்களையும் பெறுகின்றான். 'தருமம் இறுதியில் வெல்லும்' என்பதில் அழுத்தமான நம்பிக்கையோடு 'நீதி' என்ற மயிர்ப்பாலத்திலே லாவகமாக நடப்பவனாக அவனைப் பாரதம் சித்திரிக்கின்றது. அவனுடைய மகோன்னதமான ஒழுக்க வாழ்வைச் சுற்றியே பாரதக் கதை வளர்க்கப்படுகின்றது.

1. தருமபுத்திரன், தனிமைலிருந்த தங்கள் (பாண்டவரின்) பத்தினியாகிய திரௌபதியைத் துரியோதனாதியோரின் சகோதரி (ஒரே சகோதரி) கணவன் ஜயத்திரதன் மானபங்கம் செய்யமுற்பட்ட போதும், தன் தம்பிமார் அவனைக் கொல்லமுற்பட்ட வேளையிலும் அச்செயலைத் தடுத்து நிறுத்த முற்படுகின்றான். "துரியோதனாதியராகிய நூற்றுவரும் என்சோதரர். அவர்களின் தங்கை எமக்கும் தங்கை. அவளின் கணவன் ஜயத்திரதன். அவனைக் கொன்றால் எமது சகோதரி விதவையாவாள். எனவே இவனை மன்னித்து அனுப்புவோம்" என அறம் உரைத்தவன் தருமன்.

2. நச்சுப்பொய்கை நீரருந்தித் தன் தம்பிமார் இறந்து கிடந்த வேளையில் தருமதேவதை அவர்களில் ஒருவனை எழுப்பித் தருவதாகச் சொன்னபொழுது, தருமன் "எம் அன்னையான குந்திக்கு நாம் மூவர் மக்கள் (தருமன், வீமன், அருச்சுனன்) எம் சிற்றன்னை மாத்திரைக்கு இருவர் மக்கள் (நகுலன், சகாதேவன்) குந்தியின் மகன் நான் உயிருடன் இருக்கின்றேன். என் தம்பிமார் நால்வரில் ஒருவனையே எழும்புவதாயில் நகுலனை எழும்பித் தாருங்கள். மாத்திரைக்கு மைந்தன் ஒருவன் வேண்டும்" என்று வேண்டினான் தருமன்.

3. துரியோதனாதியர் தமது அவைக்களத்தில் திரௌபதியை மானபங்கம் செய்ய முற்பட்ட காலத்திலும் பொறுமை காத்தான். ஈற்றில் துரியோதனன் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றினான் (12ஆண்டு வனவாசம், ஓராண்டு அஞ்ஞாத வாசம்) பாதி அரசு தருவதாக வாக்குறுதி அளித்ததை நம்பியே அவன் அந்நிபந்தனைகளை நிறைவேற்றினான். பின்பு துரியோதனன் தனது வாக்குறுதியை மீறி இராச்சியத்திற் பாதி தராதபோதிலும் பொறுமைகாத்து "ஐந்தூர் அல்லது ஐந்து வீடாவது தருமாறு கிருஷ்ணனைத் தூது அனுப்புகின்றான். இவ்விடங்களிலெல்லாம் தருமன் பொறுமை, நேர்மை, கருணை முதலாம் ஒழுக்க அடிப்படைகளை வெளிப்படுத்தும் பாத்திரமாகப் பாரதத்தில் உருவாக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது.

மூத்தோரை மதித்து அவர்களின் பணிகளை மீறாதவர்களாகப் பாண்டவரையும், வள்ளன்மை நன்றிக்கடன் என்பவற்றை எந்நிலையிலும் கைவிடாதவனாய்க் கர்ணனையும் உருவாக்கி அவர்கள் வாயிலாகவும் ஒழுக்கம் போதிக்கப்படுகின்றது. பொறாமை, வாக்குத்தவறல், அதருமவழியைக் கடைப்பிடித்தல் முதலாம் தீமைகளுக்கு உருவகங்களான கௌரவர், சிசுபாலன், சராசந்தன் போன்றோர் இறுதியில் அழிவதன் மூலம் ஒழுக்கக் கேட்டினால் விளையும் தீய பயன்கள் அறிவுறுத்தப்படுகின்றன. இவையாவிலும் மேலாகச் சர்வசக்தி வாய்ந்தவனும், பரமாத்மாவுமான கண்ணபிரானைத் தமது கதையிலே உலாவிட்டு அப்பெருமான் தருமத்தைக் காப்பதைத் தெளிவுறக் காட்டுவதன் மூலமும் வியாசர் ஒழுக்கம், பத்தி, சத்தியம் என்பவற்றின் மூலமும் நல்வாழ்வுக்கு ஆற்றுப்படுத்துகின்றார். எனலாம்.

வான்மீகியின் இராமாயணத்தில் வரும் ஸ்ரீ இராமன் சகல நற்குணங்களும் பொருந்திய புருஷோத்தமன், தந்தை, தாய் வாக்கிய பரிபாலனம் செய்தவன், குருவைத் தெய்வமாகவே போற்றியவன், தன் உடன்பிறப்பாளரை மட்டுமன்றித் தன்மீது அன்பு செய்யும் சாமானியரையும் உடன்பிறந்தோர் வரிசையில் வைத்துப்போற்றியவன். தன் மனைவியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாபிராட்டியைக் கவர்ந்து அவளைப் பேரவலங்களுக்கு உள்ளாக்கிய கொடும் பகைவனான இராவணனையும் செருக்களத்தில் அவன் நிராயுதபாணியாகித் துணையின்றி நின்ற வேளையில் கொல்லாது "இன்று போய்ப் போருக்கு நாளை வா" என்று உயிர்ப்பிச்சை வழங்கியவன். நட்பைப் போற்றியவன். இவனை மையமாகக் கொண்ட இராமாயண இதிகாசம் ஒழுக்கநெறியனைத்தையும் விரித்து மாந்தர்க்கு வழிகாட்டுகின்றது என்பதற்கு ஐயம் இல்லை.

ஒரு குடம் பாலிலே ஒரு துளி நஞ்சு கலந்தாலும் அந்தப் பால் முழுவதுமே நஞ்சாகி விடுகிறது. சிவபக்தி, கலைத்துவம், சகோதர பாசம் என்ற நற்பண்புகள் யாவும் படைத்திருந்தும் பிறர்மனை நயத்தலாகிய இழிவுகாரணமாக இராவணன் தான் அழிந்ததோடு தன் இனம் முழுவதன் அழிவுக்குமே காலாவதைக் காட்டுவதன் மூலம் வான்மீகி, நன்மையில் தீமை ஒரு சிறிது கலக்கவும் இடமளித்தலாகாது என்று மக்களை எச்சரிக்கின்றார். தருமத்திலிருந்து விலகியோன் தன் அண்ணனாயினும் இவனைவிட்டு நீங்கித் தருமரான இராமன் பக்கம் சேர்கிறான் விபீஷணன். தன் அண்ணன் தீயவனாயினும் அவனுக்காகச் செஞ்சோற்றுக்கடன்கழிக்கச் செருக்களத்தில் உயிர்விடுகிறான் கும்பகருணன். இவ்விருவர் வாயிலாகவும் தருமத்தின் வழிநிற்றலையும் நன்றிக்கடனையும் வலியுறுத்தல் காணலாம். சுருங்கச் சொல்வதாயின் பாரத, இராமாயண இதிகாசங்கள் ஒழுக்க நெறியின் மேன்மையை உடன்பாடு எதிர்மறை என்ற இரு முறைகளாலும் விளக்கி ஒழுக்க வாழ்விற்கு மாந்தரை ஆற்றுப்படுத்துவதில் தலைசிறந்து விளங்குகின்றன எனலாம்.

9. பரம் பொருள் பற்றற்றது. பற்றற்ற அதனைப் பற்றி வாழ்வதனால் நிலையில்லாத உலகின்மீதுள்ள பற்றுக்களை விடலாம். பற்றுக்களின் அழிவிலேயே வீடுபேறு சித்திக்கும். இவ்வுண்மையே இந்து சமயத்தின் உயிர்நாடியாகும். பற்றையும் வலிந்து துறப்பதாற் பயன் இல்லை அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப் பொருள்களை வாழ்வில் நன்கு கடைப்பிடிப்பதன் மூலமே இறுதியில் பற்றற்ற நிலை உண்டாகிப் பரமன் தாள் தலைப்படலாம். அறம், பொருள், இன்பம் என்பவற்றின் அடிப்படையாக விளங்குவது சமயநெறி நின்றொழுகல். சமய நெறி ஒழுக்கத்தில் கிரியைகளும் முக்கியமானவை. அவற்றை விதிமுறைப்பிரகாரம் அனுட்டிப்பதும் அவசியம். சிரௌத சூத்திரம், கிருஹியசூத்திரம் முதலானவை ஓர் இந்துவின் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அவன் கடைப்பிடிப்பதற்கான பல சமயக்கிரியைகளை வகுத்துத் தந்துள்ளன. இவற்றிற் பெரும்பாலானவை பிராமணரினால் இன்றும் கடைப்பிடிக்கப்படுவன. பிறவருணத்தினரின் சமயக்கிரியைகள் முன்னவருடையவற்றிலும் குறைவாகவோ சிறிது வேறுபட்டோ செயற்படுத்தப்படுகின்றன.

உதாரணமாகப் பிராமணர், குழந்தை கருவுற்ற நாளிலிருந்து பிறந்து சிறுவனாய் வளர்வது வரையுள்ள காலத்தில் கடைப்பிடிக்கும் சமயக்கிரியைகள் பின்வருவன.

| | | | |
|---|---|---|---|
| 1. | கருப்பதானம் | : | கருவுறுவதற்கு மேற்கொள்வது |
| 2. | புஞ்சவனம் | : | ஆண்பிள்ளை பெறுவதற்கென மேற்கொள்வது. |
| 3. | சீமந்தோன்னயனம் | : | பிள்ளை ஊறின்றிப் பிறப்பதற்காகச் செய்யப்படுவது. |
| 4. | சாதகருமம் | : | கொப்பூழ்க்கொடி அறுப்பதன் முன் செய்யப்படுவது |
| 5. | நாம கரணம் | : | குழந்தை பிறந்த பத்தாம் நாள் (தீட்டு நீங்கியபின்) அதற்குப் பெயரிடுவது. |
| 6. | கர்ணவேதனம் | : | காது குத்தல் |
| 7. | நிட்கிரமணம் | : | கதிரவனை பிள்ளைக்கு முதன் முதலில் காட்டுதல். |
| 8. | அன்னப்பிராசனம் | : | சோறூட்டல் |
| 9. | சூடாகரணம் | : | குடுமி வைத்தற் சடங்கு |
| 10. | அட்சராப்பியாசம் | : | வித்தியாரம்பம் |
| 11. | பூணூல் சடங்கு | : | (உபநயனம்) ஏழாவது வயதிலோ ஒன்பதாவது வயதிலோ பூணூல் தரித்து வேதத்தியானத்துக்கு தகுதியாக்கல். |

இவற்றில் நாமகரணம், அன்னப்பிராசனம், வித்தியாரம்பம் என்பன இந்துக்கள் யாவராலும் பொதுவாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன, குழந்தை பிறந்து குறித்த நாள்வரை (இது சாதிக்குச் சாதிவெவ்வேறு காலஎல்லைக்குள் அடங்கியவை) குழந்தை தாய், தந்தை, இரத்த உரித்துடைய உறவினர் ஆகியோரால் தீட்டுக்காக்கப்பட்டு அவ்வெல்லை முடிந்ததும் தீட்டுக்கழித்தல் இடம் பெறுவது வழக்கம்.

சிறுவர் சிறுமியர் பருவம் கடந்து இளைஞர் பருவம் எய்தும் பொழுது இந்துவின் திருமணச் சடங்கும் பல சமயக் கிரியைகளைத் தன்னகத்தே கொண்டதாகும். சிறுமி பருவமெய்தியதும் செய்யப்படும் சடங்குகளும் கிரியைகளும் பலவென்பதும் ஈண்டு நினைவுகூர்வதற்குரியது. பிராமணரின் திருமணச்சடங்குகள் மிக விரிவானவை. ஆனால் இந்துக்கள் பொதுவாகப் புரோகிதர் ஒருவரால் ஓமம் வளர்த்துச் செய்யப்படும் சமயக்கிரியைகள் பலவற்றையும் கொண்டதாய் தமது திருமணத்தினை நிறைவேற்றுவது வழமையாயுள்ளது. மாப்பிள்ளைக்கும் மணப்பெண்ணுக்கும் காப்புக்கட்டுதல், இறந்த முன்னோர்க்கான சிராத்தம் பண்ணல் அவர்களின் ஆசிகோரல், புரோகிதர் ஓமம் வளர்த்துத் திருமணம் சார்ந்த சமயக்கிரியைகளை இயற்றல், மாப்பிள்ளை மாங்கல்யம் பெண்ணுக்குத்தரித்தல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் என்பன வெல்லாம் திருமணக்கிரியைகளுள் அடங்குவன. திருமணத்திற்கு முன் மணமக்களின் சாதகப்பொருத்தம் பார்த்தல், பந்தற்கால் நாட்டல், பொன்னுருக்கல் முதலாகச் சமயஞ்சார்ந்த சில சடங்குகள் இடம்பெறுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கதாகும். காலப்போக்குகள் மாறினாலும் திருமணத்தின் புனிதமும் அது தொடர்பான சடங்குகளும் கிரியைகளும் புனிதமானவையாகவும் இன்றியமையாதவையுமாக விளங்குகின்றன. இவை பூர்வக்கிரியைகள் எனப்படும். மங்கலமும், மகிழ்வும் இறை நம்பிக்கையும் எதிர்கால இன்பங்களுக்கான எதிர்பார்ப்பும் இவற்றில் இடம்பெறும் முக்கிய அம்சங்களாகும்.

மரணம் என்பது மரணித்தவரின் உற்றார் உறவினருக்குத்துன்பம் தருவதாயினும் அது தவிர்க்கமுடியாததே. இறந்தோரின் ஆன்மா சாந்தியடையவும், நல்வழிச்செல்லவும் பிதிர்க்கடன் இயற்றுதல் சமயக்கிரியைகளிலே இன்றியமையாததோர் இடம்பெறுகின்றது. இல்வாழ்வானின் ஐம்பெரும்கடமைகளாகத் திருவள்ளுவர் கூறியவற்றுள் முதலிடம் தென்புலத்தாருக்கு இயற்றப்படும் கடனுக்கு வழங்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங் (கு)
ஐம்புலத் தாறுஓம்பல் தலை

இந்தக்கடன்கள், தீக்கடன், நீர்க்கடன் என இரண்டாக வகைப்படுத்தப்படும். தீக்கடனாவது இறந்தாருக்குச் சமய குருவைக்கொண்டு இயற்றவேண்டிய கிரியைகளைச் செய்தபின் அவரின் சடலத்துக்குத் தீயிட்டு எரிப்பதாகும். அதனோடு எரித்து எஞ்சிய அஸ்திகளைச்சேர்த்து வைத்தலும் தீக்கடனுள் அடங்கும். இறந்தோர்க்காகக் குறித்தநாள் வரை தீட்டுக்காத்து குறித்த எல்லையில் அந்தியேஷ்டிக் கிரியைகள் நிகழ்த்துவதும் (அந்திய- இறுதி, இஷ்டி - வேள்வி) அவரின் அஸ்தியைப் புனித தீர்த்தத்திற் கரைத்தலும், தீட்டுக்கழித்தலும் நீர்க்கடனுள் அடங்குவன. இறந்தவரின் (இறந்த) திதியினைக்குறிக்கொண்டு ஓராண்டு வரை மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் கிரியை மாசியம் எனப்படும். ஆண்டு இறுதியில் குறித்த திதியில் மேற்கொள்ளும் கிரியை சிராத்தமாகும். சிரத்தையுடன் செய்யப்படவேண்டுவதால் இது சிராத்தம் எனப்படும். இது ஆண்டுதோறும் செய்யப்படல் வேண்டும். இறந்தவரின் ஏழு பரம்பரைப் பிதிர்களும் நற்கதியடையப் பிண்டம் வைத்தலும், எள்ளும் தண்ணீரும் இறைத்தலும் சிராத்தத்தில் இடம்பெறும் முதன்மையம்சமாகும். பிதிர்க்கடன் செய்தற்குரியார் இறந்தவரின் ஆன்மாக்களே என்பது விதி. இவர்கள் இறந்தோரைப் 'புத்' என்ற நரகத்தில் வீழாவண்ணங் காப்போர் என்னும் பொருளில் புத்திரர் எனப்பட்டனர். (இக்காலத்தில் பெண்மக்களும் இக்கடன்கள் செய்கின்றனர்.)

பிராமணர்களுக்கு மேலும் விரிவான பல கிரியைகள், சடங்குகளைக் கொண்டனவான இந்த அபரக்கிரியைகள் இந்துக்களின் சமய நம்பிக்கையை மட்டுமன்றி, அவர்கள் நற்கதி அடைதலிற் கொண்ட பெருவிருப்பினையும் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றன. தொகுத்துச் சொல்வதாயின் இந்துவின் வாழ்க்கை முழுவதுமே சமயக்கிரியைகளாலும், சடங்காசாரங்களாலும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு ஐயம் இல்லை.

10. வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்கு. இவை ஒவ்வொன்றும் கருமகாண்டம், ஞானகாண்டம் என இருபெரும் பிரிவுகளாய் வகுக்கப்படும். கருமகாண்டம் வேதபாசுரங்களின் தொகுதியைக் கொண்ட சங்கிதைகளாகவும், வேள்வி விதிகளை விளக்கும் பிராமணங்களாகவும், இருபெரும் பிரிவுகள் அமைந்தது. அவற்றோடு மந்திரங்களும் இணைந்துள்ளன. ஞானவிளக்கங்களாகிய உபநிடதங்களையும் உள்ளடக்கியன. இருக்குவேதச் செய்யுள்கள் சம்பிதாபாகம் அல்லது புகழ்மாலைத்திரட்டு எனப் பாராட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

வேதங்களை வேறொரு வகையாகப் பிரிக்கையில் அவை சாகைகள் எனப்படுகின்றன. சாகை என்பது வைதிகனொருவன் பிறப்பு நாள் முதலாக இறப்புவரையும் செய்யவேண்டிய கடமைகளை விளக்குவதென்பர். (சாகை- கிளை) இருக்கு வேதம் இருபத்தொரு சாகைகள் கொண்டது. எனினும் இன்று அவற்றுள் ஐதரேயம் என்ற ஒரு சாகையே கிடைத்துள்ளது. யசுர் வேதம் நூற்றொரு சாகைகளைக் கொண்டதாயினும் இன்று கிடைப்பன காண்பசாகை, மைத்திரி சாகை, மாதயத்தின சாகை என்னும் மூன்று மட்டுமே. சாமவேதம் ஆயிரம் சாகைகள் கொண்டதெனப்படினும் கௌதம சாகை, தலவதாரசாகை என்ற இரண்டுமட்டுமே இன்று கிடைத்துள்ளன. அதர்வவேதம், மௌதம், சௌதகியம், பைப்பலாதம், ஜாஜலம், ஜலதம், பிரம்மவாதம், வேததாசம், சாரணம், வைத்தியம் என்னும் ஒன்பது சாகைகளை உள்ளடக்கியது.

இருக்குவேதம் எட்டுக்காண்டங்களையும் ஒவ்வொரு காண்டமும் எட்டு அத்தியாயங்களையும் உள்ளடக்கியது. யசுர்வேதம் நான்கு காண்டங்கள் கொண்டது. சாமவேதம் ஏகசாமி, பகுசாமி என்னும் இருவகை இசைநடைகளாகி இருக்குவேதப் பாசுரங்கள் பலவற்றையும் தன்னுள் அடக்கி விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். அதர்வவேதம் இருபது காண்டங்களை உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதங்களின் உள்ளடக்கங்கள்

1. இருக்குவேதம்

பாசுரங்கள் மந்திரங்கள், வேள்விக்கிரமங்கள், அகவழித்தியானங்கள், தத்துவங்கள் என்ற பலவற்றையும் உள்ளடக்கிய இருக்குவேதம் அக்கினி, இந்திரன், வருணன், திருமால் முதலியவர்களைப் புகழ்ந்து தோத்திரிக்கக் காணலாம். மற்றும் அக்கால மக்களின் வாழ்க்கை, தொழில், பொருளாதாரம், அறிவியல், அரசியல் சார்ந்த விடயங்களும் இருக்கு வேதத்தில் இடம்பெற்றுள்ளன. சுருங்கச் சொன்னால் வேதகால ஆரியரின் சமய வாழ்க்கை நம்பிக்கைகள், சமூகவாழ்க்கை, ஒழுக்கநெறிகள் என்று இன்னோரன்ன பலவிடயங்களையும் உள்ளடக்கியது இருக்குவேதம்.

2. யசுர் வேதம்

யஜ் என்பது வேள்வி. இருக்குவேதம் செய்யுளால் அமைந்து விளங்க யஜூர் வேதம் உரையும், பாட்டுமாகிய இரண்டினாலும் ஆக்கப்பட்டுள்ளது. பெயருக்கேற்ப வேள்விசார்ந்த பல நுணுக்க விபரங்களையும் யஜூர் வேதம் தருகின்றது. தேவாசுரரிடையே நடந்தபோர்கள் உருத்திரன் திரிபுரம் எரித்தது, அவர் கணங்களுக்குத் தலைவராய்ப் பசுபதியாய் விளங்குவது, வைதிகப்பிராமணரின் கடமைகள் என்பனவெல்லாம் யசுர்வேதத்தில் விரிவாகப் பேசப்படுகின்றன.

3. சாமவேதம்

வேதபாசுரங்களிலே இருக்குவேதத்திலுள்ளவற்றையே பெரும்பாலும் தன்னிடத்தே கொண்டு (75பாடல்கள் மட்டும் சாமவேதத்திற்குரியவை என்பர்) அவற்றிற்கு இசைவகுத்துத்தந்துள்ளமையே சாமவேதத்திற் சிறப்பாகக் கொள்ளத்தக்கதாகும்.

4. அதர்வ வேதம்

வேதங்களிலே காலத்தாற் பிற்பட்டதாகவும், சுதேசசமய நம்பிக்கைகள், தெய்வங்கள், வழிபாடுகளை உள்ளடக்கியதாகவும் அதர்வவேதம் விளங்குகின்றது. இவற்றோடு நோய்போக்குதல், வராதுகாத்தல், நாட்டமைதி, அரசன் புகழ், வெற்றி, திருமணம், வீடுபேறு, தீக்கனவுக்குக் கழுவாய், பிரேத கருமம், பிதிர்க்கருமம், வசியம் பண்ணுதல், பகைவரை அழிக்கும் மந்திர தந்திரோபயங்கள் என்னும் பல அபிசங்களை அதர்வவேதம் உள்ளடக்கமாய்க் கொண்டுள்ளது.

வேதங்களோடு உபவேதங்கள் எனப்படுவனவும் உள்ளன. தனுர் வேதம் (வில்வித்தை, போர்ப்பயிற்சி), ஆயுர்வேதம் (வைத்தியம்) முதலியன உபவேதங்களின் உள்ளடக்கங்கள்)

வேதாங்கங்களாக சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம் சோதிடம், கற்பம் என ஆறு கூறுகள் உள்ளன. (இவைபற்றிய விளக்கம் பகுதி 2இல் தரப்பட்டுள்ளது)

II. புராதன காலத்தில் உலகெங்கும் இருவகைச் சமூகங்கள் நிலவின. வேட்டை விவசாயம் என்பவற்றைத் தமது வாழ்வுக்குரிய தொழிலாகக் கொண்டோர் பெண்ணை முதன்மைப்படுத்தினர். அவர்கள் தாய்வழிச் சமூகம் என அழைக்கப்பட்டனர். மந்தைமேய்த்தலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தோர் தந்தையாகிய ஆணுக்கு முதன்மை வழங்கினர். இவர்கள் தந்தை வழிச்சமூகம் எனப்பட்டனர். தாய்வழிச்சமூகம் தனது தெய்வத்தைப் பெண்ணாக உருவகித்து வழிபட்டது. இவ்வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடு எனப்பட்டது. தாயே சகல தோற்றங்களுக்கும் மூலாதாரமான ஆற்றல் உடையவள் என்பதால் அந்த ஆற்றல் சக்தி எனப்பட்டு சக்தி வழிபாடு தோன்றிற்று. கி. மு. 3000 ஆண்டுக்கு முன்னைய சிந்துவெளிநாகரிகத்தில் தாய்த்தெய்வவழிபாடு நிகழ்ந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

வைதிக சமயங்கள் தத்தம் முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்களின் பெயரால் வழங்கின. இவ்வாறு வழிபடும் சமயங்கள் ஆறு. ஆறுவகைச் சமயங்கள் என்ற பொருளில் 'சண்மதம்' என வழங்கும் இவற்றை மீள்தாபிதம் செய்தவர் கேவலாத்துவித வாதியான ஆதி சங்கராச்சாரியார். இதனால் இவர் சண்மதப்பிரதித் தாபகர் எனப்பட்டார். சண்மதங்களாவன காணாபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்பன. உலக மாதாவான சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமே சாக்தம்.

வேதங்களிலே பெண் தெய்வங்கள் இடம்பெற்றாலும் ஆண் தெய்வங்களுக்கே முதன்மை வழங்கப்பட்டதாய் ஆய்வாளர் கொள்வர். இதற்குக் காரணம் உண்டு. மந்தை மேய்த்தலைத் தொழிலாகக் கொண்டிருந்த ஆரியர் தந்தைவழிச் சமூகத்தவராதலால் அவர்கள் ஆண் தெய்வத்திற்கு முதன்மை வழங்கியமை இயல்பானதே. வேதத்தில் குறிக்கப்படும் பெண் தெய்வங்களில் அதிதி குறிப்பிடத்தகுந்தவள். பன்னிரு ஆதித்தியரின் தாயாகவும் வனத்தெய்வமாகவும் அதிதி கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. உஷை (உதயத்தைக் குறிக்கும் தெய்வம்), இராத்திரி, சந்தியா (மாலைக்காலத்தைக் குறிக்கும் தெய்வம்) என்பனவற்றோடு சரசுவதி முதலிய நதிகளும் பெண் தெய்வங்களில் இடம்பெற்றன.

கேனோபநிடதத்திலேயே முதன்முதலாகப் பெண்தெய்வம், பரம்பொருள் நிலைக்கு ஏற்றப்பட்டதாக வரலாறு உண்டு. இந்திரன், வாயு, அக்கினி முதலாம் தேவர்கள் தாந்தாமே பெரியர் என்று ஒருகால் போட்டியிட்டனர். அதுகாலை பிரபஞ்சம் அனைத்துக்கும் தாயாகிய சக்தி ஒரு துரும்பு வடிவில் அவர்கள் முன்பு தோன்றினாள். "இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைக்கவோ, அழிக்கவோ வல்லவர் யாரோ அவரே ஆற்றல்கள் யாவையும் நிரம்பிய தலைவராகக் கொள்ளப்படுவர்" என்று ஓர் அசரீரி எழுந்தது. உடனே அக்கினி முன்வந்து அந்தத் துரும்பை எரித்திட முற்பட்டான். அவன் முயற்சி பலிக்கவில்லை. வாயு அந்தத் துரும்பினை அசைத்து அலைக்க முற்பட்டு இயலாது தோற்றான். தேவர்கள் யாவரும் தத்தம் வலிமை அனைத்தையும் பயன்படுத்தியும் அத்துரும்பு இருந்தபடியே இருந்தது. இறுதியில் அவர்கள் தங்களின் தோல்வியை ஏற்ற பொழுது சக்தியானவள் அவர்கள் யாவரும் வியந்து போற்றி வழிபடும் வகையில் பெருஞ்சுடராய் அவர்கள் முன்பு தோன்றினாள். இந்தக்கதை வாயிலாக வேதகாலத்தின் பிற்பகுதியான உபநிடதகாலத்தில் சக்தியின் மகத்துவம் மேலோங்கி, சாக்த மதத்துக்கு வித்திடப்பட்டது எனக்கொள்ளலாம்.

தமிழரைப் பொறுத்தவரையில் அவர்கள் தாய்வழிச்சமூகத்தினராதலால் தொடக்கத்தில் அவர்கள் சக்தியையே தமது முழுமுதல் தெய்வமாக் கொண்டிருப்பர் என்று கொள்வதில் தவறில்லை. இதனாலேயே ஆதித்தாயாகிய கொற்றவைக்கு 'பழையோள்' என்ற பெயர் தமிழில் உண்டாயிற்றும்போலும்.

"இழையணி சிறப்பிற் பழையோள் குழவி"

என்பது திருமுருகாற்றுப்படை. தொல்காப்பியத்தில் பாலைநிலத்திற்குத் தெய்வமாக எவரும் குறிப்பிடப்படாவிட்டாலும் உரையாசிரியரான நச்சினார்க்கினியர் பாலைநிலத்துக்குக் கொற்றவையும் சூரியனும் தெய்வங்களாகக் கொள்ளப்பட்டமைக்குச் சங்க இலக்கியங்களிலிருந்து சான்று காட்டுவர். தொல்குடிகளாக, இந்தியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் பிலிமக்கா, தார்ஜி, டொம், கடவா, ஒக்கதை, கங்கை, கொல்லா, அத்தி, புடுபுடுக்கி எனப் பெண் தெய்வங்கள் பலவற்றை வணங்குவதாக அரன்பெல்ஸ் என்ற ஐரோப்பிய ஆய்வாளர் கொள்வர். பாபிலோனியா, எகிப்து முதலாம் நாடுகளிலே பெண்தெய்வங்கள் முதன்மை பெற்றிருந்தமைக்கு வரலாற்றுச்சான்றுகள் உண்டு. இவ்வாறு உலகளாவியதாகவும் சிந்துவெளிக்காலப் பழைமைவாய்ந்ததாகவும் சக்தி வழிபாடு விளங்குகிறது. அது காலப்போக்கில் தனிமதமாக – சாக்த மதமாக உருக்கொண்டது.

'எங்கும் எவையும் உமை அல்லது சக்தியின் திருவடிவங்களே' என்று சூதசங்கிதை சக்தி வழிபாட்டை விசேடித்து உரைக்கக்காண்கின்றோம்.

நாள்தோறும் ஓதும் காயத்ரி மந்திரத்தில் காயத்ரிதேவி சூரியனுக்கு ஒளி தருவதாகக் கூறப்படுகின்றது. சூரியனின் ஒளியை மட்டுமன்றி மாந்தரின் உள்ளத்து ஒளியையும் தூண்டி எரியவைப்பவளாதலின் அவள் பரம்பொருட்டன்மை பொருந்தியவள் என்பதற்கு ஐயமில்லை.

"அன்னையே, உன்னை வழிபடுவோருக்கு நீ வரங்களை அருள்கிறாய். வேதங்களும் உலகங்களும் உன்னையே மூலமாகக் கொண்டு தோற்றின. எனது சிந்தையிலே ஒளிர்ந்து எனது வணக்கத்தினை ஏற்பாய். நீயே விவேகம். நீயே பொறுமையின் ஆற்றல். நீயே வல்லமை. நீயே ஒளி. நீயே தெய்வங்களின் வல்லமையாகுவாய். நீ யாவிலும் இருப்பதோடு யாவற்றையும் கடந்து நிற்கிறாய். உனது புகழிலே என்னைக்குளிப்பாட்டுவாய்." என்பது காயத்திரி மந்திரம் கூறும் தோத்திரம்.

சக்தியின் தத்துவங்களையும், வழிபாட்டு முறைமைகளையும் கூறும் ஆகமங்கள் தந்திரங்கள் எனப்படும். சிவபெருமான் சக்தியின் வழிபாட்டுமுறைமைகள் தத்துவங்கள் என்பனவற்றைத் திரட்டி ஸ்ரீதந்திரத்தை அருளினார் எனவும் தத்தாத்திரேயர் அவற்றில் வேண்டியவற்றைத் தொகுத்து 18000 சுலோகங்கள் அமையச் சங்கிதை ஒன்றினை அமைத்தார் எனவும், அவரின் சீடர் அதனை மேலும் சுருக்கி 6000 சுலோகங்களில் ஆக்கினார் எனவும், அதனையே தென்னாட்டுச் சாக்தர்கள் விதியாகக்கொண்டு சக்தி வழிபாட்டை நடத்துவர் எனவும் கூறப்படுகின்றன. சக்தியை ஸ்ரீசக்கரம் என்னும் யந்திரத்தகடமைத்து அதன் வடிவிலே வழிபடுவர். சிவபெருமானுக்குள்ளதுபோலவே சக்திக்குப் பதினெட்டு மூர்த்தங்கள் கூறப்படுகின்றன. அவையாவன பாலா, லலிதாம்பாள், ஸ்ரீராஜராஜேஸ்வரி, நவசஷ ரிபாலா, அன்னபூரணி, அஸ்வருதா, இராமசமாதங்கி, லகுசஷ்யாமா, வாக்வாதினி, நகுலி, வராகி, லகுவராகி, சொப்பனவராகி, திரஸ்கரிணி, பரை, புவனேஸ்வரி, சண்டி, துர்க்கை என்பனவாம். வங்காளத்தில் சக்தி வழிபாடாகிய 'சாக்தம்' முதன்மை பெற்றுள்ளது. சங்கராச்சாரியார் சௌந்தர்யலகரி, பிரபஞ்சசாரம் ஆகிய நூல்களில் சக்தி வழிபாடாகிய ஸ்ரீசக்கரவழிபாட்டை விரித்துரைத்துள்ளார். தமிழ்நாட்டில் நாயக்கர் காலத்தில் சக்திவழிபாடு நவராத்திரி விழாக்களால் சிறப்படைந்தது. குமரகுருபரசுவாமிகளின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சக்தியாகிய அம்மையின் புகழுரைக்கும். அபிராமிப்பட்டரின் அபிராமியந்தாதி அன்னையைப் பரம்பொருட்டன்மையில் ஏற்றிவைத்துப் போற்றுகின்றது. சக்திவழிபாட்டின் தீவிரமான நிலையில் மது, இறைச்சி என்பன இடம்பெறுவதும், மாதரைப் போகித்தலும் இடம்பெறுவதும் கவனத்திற்குள்ளாகும் ஒன்றே. ஆனால் இவ்வழிபாட்டுமுறை சாக்தர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒன்றன்று.

சமயகுரவர்கள் சாதகர்கள், பதியின் உண்மை இயல்புகள், பசுக்களாகிய ஆன்மாக்களின் தன்மைகளைப் பிறரிலும் தம்மிலும் கண்டும் பெற்ற அனுபவ உணர்வுகள், அறியாமையே இயல்பாகக் கொண்டு ஆன்மாவைப் பந்தித்து அதனைப் பிறவியிலே ஆழ்த்தி வருத்தும் ஆணவத்தின் விளைவுகள் என்பவற்றையெல்லாம் வெளிப்படுத்தியனவே அவர்களின் அருட்பாக்களாகும். சைவசித்தாந்த தத்துவ உருவாக்கத்திற்கு அவர்களின் திருவாக்குக்களும் ஆகமங்கள் போல வழிகாட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் இறைவனாகிய சிவபெருமானுக்குச் சொரூபம், தடத்தம் என்ற இருவகை நிலைகளை உரைக்கும்.
என உரைக்கும். சொரூபம் என்பது கற்பனைக்குள் அடங்காத, உள்ளங்கொண்டறியவியலாத பரம்பொருளின் உண்மை இயல்பாகும். அந்தப் பரம்பொருள் ஆன்மாக்களின் அல்லல் கண்டு அவற்றின் மீது பேரருள் கொண்டு அருவ, உருவ, அருவுருவத் திருமேனிகளைக் கொள்ளும் பொழுது அந்நிலை தடத்தம் எனப்படுகிறது. இவற்றின் முன்னதன் மகோன்னதத்தினைச் சமயகுரவர்கள் தெளிவாக அறிந்த ஞானமும் பின்னதன் பேரருட்டிறத்தினை உருவத்திருமேனிகளான ஆலய மூர்த்தங்கள் மூலம் அறிந்த அனுபவ அறிவும் வாய்ந்தவர்களாய்த் தமது திருப்பாடல்களிலே வழிப்படுத்தியுள்ளார்கள்.

"ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்"

என்ற திருவருட்பயனிலே அடியவர்க்கு விட்டு நீங்காத ஞானவடிவினையுள்ள பரமபதி வானாடரும் காணாத சொரூபவடிவினனாய் இலங்குவான் என்ற கருத்துப் பிரமவிஷ்ணு அப்பெருமானின் அடிமுடிதேடும் உருவக்கதை வாயிலாகத் திருஞானசம்பந்தரதும் மற்றைய சமயகுரவர்களாலும் வெளிப்படுத்தப்படுதல் காணலாம்.

நலநா ரணனநான் முகனநண் ணலுறக்
கனலா னவனே கழிப்பா லையுளாய்
உனவார் கழலே தொழுதுன் னுபவர்க்
கிலதாம் வினைதான் எயில் எய்தவனே!

இத்திருப்பாடலில் அரனும் அரியும் காணாத கற்பனை கடந்த சோதியான சொரூபநிலை உணர்த்தப்படுகின்றது. வினை பற்றிய செய்தி வருகின்றது. முப்புரம் எரித்தலாகிய செய்தியினால் மும்மலவாதனைகள் சிவபெருமானின் திருவருளினால் அழிவதாகிய சைவசித்தாந்த தத்துவத்தினை உருவகமாக விளக்குகின்ற தெனலாம்.

'மைப்படிந்த கண்ணாளும் தானும்' எனத்தொடங்கும் அப்பர்பெருமானின் திருத்தாண்டகப்பாடலில்
"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"

என்ற அடியிலும் சிவனது சொரூபநிலை மிகத்தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றது. இதே திருப்பாடலில்
அவனருளே கண்ணாகக் காணினல்லால் என்ற பகுதியும்
அவனருளாலே அவன்தாள் வணங்கி
என்ற மணிவாசகர் திருவாக்கும் சைவசித்தாந்தம் விதந்துபேசும் திருவருளின் திறத்தினைத் துல்லியமாய்ப் புலப்படுத்துகின்றன. 'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான்' என அப்பரடிகளும், 'ஏகன் அநேகன்' என மணிவாசகரும் சொரூப நிலையினின்றும் இறங்கித் தானே வந்தாட்கொள்ளும் இறைவனின் தனித்திறத்தையும் புலப்படுத்துகின்றன எனலாம்.

ஆணவமாகிய மூலமலத்திலிருந்து நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் கிளைக்கின்றன. சமயகுரவர்கள் தம்மை நாயினும் கடையாகப் பாவித்துப்பாடும் இடங்களிலெல்லாம் சைவசித்தாந்தம் அகங்காரத்தைக் களைதல் வேண்டும் என அறிவுறுத்தும் தத்துவத்தின் மூலத்தினை நாம் கண்டுகொள்ளலாம். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மமகாரங்களைத் துறத்தற்கான தேவையினையும் இவர்களின் திருப்பாடல்கள் சொந்த அனுபவங்கள் போலவும் ஆங்காங்கே புலப்படுத்தி நிற்றல் காணலாம்.

சிவனும் அம்மையாகிய திருவருட்சக்தியும் சூரியனும் கதிரும் போலப் பிரிவற்றவர்கள். இத்தத்துவ உண்மையே அர்த்தநாரீச்சர வடிவமாகும்.

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்

என்பது திருவருட்பயன். திருஞானசம்பந்தப்பெருமானின் திருப்பாடல்கள் எங்கணும் சிவனும் அம்மையும் உடனாக வீற்றிருந்தருளும் உண்மை எடுத்துக்காட்டப்படுவது இத்தத்துவத்தை உருவகப்படுத்துவதே என்று கொள்ளலாம். மைப்படிந்த கண்ணாளும் தானும் என்று இதே தத்துவம் அப்பராலும் புலப்படுத்தப்படும். மணிவாசகர் 'அம்மையே அப்பா' என்று இவ்வுண்மையைப் பின்னமறக் காண்பதும், பெருமாட்டியின் இன்னருளைத் திருவெம்பாவையிலே விரித்துரைப்பதும் நோக்கத்தக்கன. (எம்பிராட்டி திருவருள் போல..")

சைவசித்தாந்தம் வெறும் தத்துவமாக மட்டுமன்றிச் செயல்முறையிலே கடைப்பிடிக்கவேண்டிய சமய ஒழுக்கநெறிகளையெல்லாம் விரித்துரைப்பதாகும். சிவஞானபோதம் ஆழ்ந்த தத்துவ உண்மைகளை முப்பொருள் விளக்கமாகத் தந்துள்ளபோதும் அது ஆலய வழிபாடு, குருவழிபாடு, அடியார் வழிபாடு ஆகியவற்றையும் வலியுறுத்தத் தவறவில்லை.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
இம்மலங் கழீஇ அன்பரோடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமலம் இறைதாளை அடையத் தடையாயுள்ளது. அம்மலத்தைக்கழுவ நீக்கல் வேண்டும். அதற்கு வழி இறையடியாருடன் சேர்ந்து வாழ்ந்து வழிபட்டு ஒழுகல். ஆலயத்தை அரனாகவே தொழல் என்ற சாரப்படச் சிவஞானபோதம் தனது பன்னிரண்டாம் சூத்திரத்தினை அமைத்துள்ளது. சிவனடியார் பெருமைகளைப் பொதுவில் மற்றைய சமயகுரவர்களும், சிறப்பாகச் சுந்தரமூர்த்தி நாயனாரும் விதந்து பாடியுள்ளமை நாம் அறிந்ததே. சமயகுரவர் நால்வருமே ஆலயங்களுக்கு யாத்திரை சென்றும், அங்கு அரன் அடிபணிந்தும், அடியவர்களை அந்த வழிபாட்டுநெறிக்கு ஆற்றுப்படுத்தியும் உள்ளமையை உணர்ந்த உணர்வின் வெளிப்பாடே சிவஞானபோதத்தின் பன்னிரண்டாவது சூத்திரமாக அமைந்ததுபோலும். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களும் சைவசித்தாந்தம் வலியுறுத்தும் நான்கு பாதங்கள். இப்பாதங்களுக்கு உதாரணபுருடராய்க் கொள்ளப்பட்டோரும் சமயகுரவர்களே.

சைவசமய சின்னங்களுள் பஞ்சாட்சரத்திருமந்திரம் முக்கிய இடம் வகிக்கின்றது. சி-சிவன், வா-திருவருட்சக்தி, ய-ஆன்மா, ந-திரோதானசக்தி, ம-மலம். இவ்வைந்தையும் உள்ளடக்கிய சிவாயநமவாகிய சிகராதி பஞ்சாட்சரமும் நமசிவாய என்ற நகராதி பஞ்சாட்சரமும் சைவர்கள் ஒவ்வொருவரும் அவசியம் ஓத வேண்டுவன. சமயகுரவர்கள் நால்வருமே இம்மந்திரத்தின் மகிமையைப் பலபட விரித்துரைத்து வழி காட்டியதன் பேறே அது சைவசித்தாந்தத்தினுள் அடக்கப்பட்டமைக்கான காரணம் எனலாம்.

இவ்வாறு சைவசித்தாந்தக் கருத்து வளர்ச்சிக்குத் தமது வாழ்வாலும் வாக்காலும் பங்களிப்பு வழங்கிய வகையில் சமயகுரவர்கள் சிறப்பிடம் வகிக்கின்றனர் என்பது தெளிவு.

13. சிவஞானபோதம் சைவசித்தாந்தக்கருவூலம். அது பன்னிரண்டு சூத்திரங்களையும் அவற்றின் விளக்கமான 81 வெண்பாக்களையும் கொண்டுள்ளதோடு இடையிடையே உரைநடையிலான விளக்கமும் கொண்டது. அதனை இயற்றியருளியவர் மெய்கண்ட சிவாசாரியர். பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களிலே இது முதன்மையானதாகும். இதன் சாரம் பின்வருமாறு.

அவன், அவள், அது என்று பகுத்துப் பலவாகச் சுட்டி உணர்த்தப்படும் சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் என்னும் இரண்டும் தோன்றியும் நின்றும் ஒடுங்கியும் அமையும் முத்தொழிலை உடையவை. எனவே இம்முத்தொழிலுக்குமிடமான இவற்றைத் தோற்றுவிக்க ஒருவன் உளனாதலால் இவை உள்பொருள்களே. இவை தோன்றுவது போலவே ஒடுங்குவதற்கும் ஏதுவாய் நிற்போன் அந்த ஒருவனாகிய கடவுளே. அவனிலிருந்து பிரபஞ்சமிரண்டினதும் சகசமலம் நீங்காமையால் அந்த மலம் நீங்க மீண்டும் அவை தோன்றுகின்றன. இக்கடவுள் சங்காரகாரணன். இவன் உயிர்கள் தோறும் கலந்து நிற்பதால் ஒன்றாகியும், பொருளியல் பால் கண்ணில் சூரியன்போல் வேறாகியும், உயிருக்கு உயிராந்தன்மையால் உடனாகியும் நின்று அருள்புரிவான்.

உயிரை இயக்குவான் உயிர்க்கு உயிரான இறைவன். உடலை இயக்குவது உயிர். இது இல்லை என்பதாலேயே உள்ளது என்ற உண்மை புலனாகின்றது. மாயாகாரியமாகிய தநுகரணங்களின் வேறாய் அதேவேளை அவற்றினுள் உறைவதாய் உள்ளது ஆன்மா. ஆனால் இவ்வந்தக்கரணங்களைத் தனக்கு அமைச்சர்களாய்க் கொண்டு ஆன்மா அரசன் போல உடலை ஆட்சிபுரிகின்றது. இவ்வாறு செயற்படுகையில் அது சாக்கிரம் (நனவுநிலை), சொப்பனம் (கனவு நிலை), சுழுத்தி (துயில் நிலை), துரியம் (அறிதுயில்நிலை), துரியாத்தம் (இந்நான்கையும் கடந்த ஆனந்த நிலை) என்னும் ஐந்து அவத்தைகளுக்கு உள்ளாகின்றது.

ஐம்புலன்களுக்கும் வாயில்களான ஐம்பொறிகளும் தாமாக அறியமாட்டா. அவற்றின் அறிவிற்குத் தம்மை அதிட்டித்து நிற்கும் ஆன்மாவையே சார்ந்துள்ளன. ஆனால் தாம் சார்ந்து நிற்பது எது என்று அவை அறியமாட்டா. இவை போலவே ஐந்து அவத்தைகளுக்கும் உள்ளாகும் ஆன்மாவும் தன் வினைப்பயன்களை அனுபவித்தற்குத் தன்னைச் செலுத்துவதாகிய திருவருளையோ தன்னையோ அறியமாட்டாது. ஆன்மா காந்தத்தினால் கவரப்படும் இரும்பையொத்து இறைவனின் சந்நிதியாத்திரையில் இறைவனைச் சார்ந்து வினை புரிகின்றது. இரும்பை ஈர்ப்பதாற் காந்தம் விகாரப்படாததுபோல இறைவனும் சங்கற்ப காரணனாதலால் (ஆன்மா போன்று கரணங்களை இயக்காமையால்) அவன் விகாரப்படுவதில்லை.

சிவமாகிய முதற்பொருள் உணர்வுகளின் அளவைகளால் அறியப்படமுடியாதது. இவ்வாறு அறியப்படுவதாயின், அழிபொருளான பிரபஞ்சம் போல அது அசத்தாகும். அறியவொண்ணாதது. எனின் முயற்கொம்புபோல இல்பொருளாகிவிடும். இவ்விருதன்மையுமின்றி ஒருவகையால் அறியப்படாததாயும், பிறிதொருவகையில் அறியப்படுவதாயும் உள்ளது சிவசத்து என்பர் மெய்யுணர்ந்தோர். எனினும் இச்சிவசத்து வாக்கையும் மனத்தையும் கடந்ததாகும். இத்தகைய சத்தின் முன்பு அசத்தாகிய பிரபஞ்சம் (ஒளிமுன் இருள்போல) பாழாவதால் சிவம் இதனை அறிதல் செய்யாது. ஆகையால் ஒருவகையில் அறிவும், பிறிதொருவகையில் அறியாமையும் கொண்டதொன்று உண்டு. அதுவே சதசத்தாகிய ஆன்மா. (இவ்விளக்கத்தின் மூலம் பதி சத்து என்பதும் ஆணவம் (உலகு) அசத்து என்பதும் ஆன்மா சதசத்து என்பதும் பெறப்படுகின்றன. இவ்வுண்மையையே 'சத்தசத்தைச் சாராது' எனத்தொடங்கும் திருவருட்பயன் எளிமையானமுறையில் விளக்கும்.)

"ஐம்புலங்களாகிய வேடர்வசப்பட்டு இது நாள்வரை அறியாமையால் அல்லலுற்றாய். நீ மன்னன் மகன். உன் இயல்பு அதுவே" என்ற உண்மை ஆன்மாவுக்கு அதன் புண்ணியவசத்தால், குருவினால் உபதேசித்தருளப்படுகின்றது. இந்தக் குரு வேறுயாருமல்லர். இது காலவரை ஆன்மாவில் உள்நின்று உணர்த்தி வந்த பரம்பொருளே. அவர் மூலம் பெற்ற ஞானத்தினால் இதுவரை அவரிலிருந்து அந்நியமாய் நின்ற ஆன்மா அவ்வந்நியத்தனம் நீங்கப் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனுடைய அடியினைச் சென்றடையும். பசுஞானம், பாசஞானம் எனபன ஆன்மாவை வட்டு நீங்கப் பரமனது திருவடி ஞானம் பெறுவதாகிய உன்னதநிலை வெப்பத்தால் இளைத்தவன், குளிர்தருவின் நிழலில் இளைப்பாறுவதை ஒக்கும். இத்தகைய இளைப்பாற்றற்கான ஞானம் சரியாய்நிற்கும் பொருட்டு ஐந்தெழுத்தாகிய பஞ்சாட்சரமந்திரம் உறுதுணையாகும்.

ஞானக் கண்கொண்டு நாடப்பட்ட முதல்வன் பொருளியல்பால் வேறாயினும் வேறு காணப்படாது 'யானே கண்டேன்' என்னும்படி நிற்றல் அறியாமை. அந்த அறியாமை பெத்தநிலையாகும். ஆகவே தான்வேறு இறைவன் வேறென வேறுபடுத்தாது அவனே தான் என ஒற்றுமைப்படுதலும், அவ்விறைபணியில் வழுவாதிருத்தலுமாகிய நிலைப்பாட்டினைக் கொள்வது இன்றியமையாததாகும். அந்நிலையில் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் இல்லையாகி முற்றாகக் கழிந்துவிடும். கண் தானாக ஒன்றையும் காணாது. அந்தக் கண்ணின் உரிமையாளியாகிய ஆன்மா அதனோடு ஒருங்கிணைந்து காட்டும் பொழுதே அது உருவத்தைக் காணல் கூடும். அதே போன்று ஆன்மா இறைவன் தன்னோடு ஒருங்கிசைந்து அறிவித்தால் மட்டுமே அறிகின்றது. அவ்வாறிணையும் (ஆன்மா – இறைவன்) அத்துவிதநிலையை மறவாது (ஆன்மா) கடைப்பிடித்து அன்பு செய்தால், அது அம்முதல்வனின் திருவடியாகிய சிவானந்த அநுபூதியிலே தலைப்படும்.

ஆனால் அவ்வாறு அநுபூதியையடைந்து இவ்வுடலுடனேயே ஞானத்தைப் பெற்ற சீவன் முத்தன், தன்னை இறையடியில் தொடந்திராது அயர்தலைச் செய்விக்கும் மும்மல அழுக்கை ஞானமாகிய நீரால் கழுவி, தன்னைப்போன்ற இறையன்போடு கூடிய அடியார்களின் திருவேடத்தையும், சிவாலயத்தையுமே அரனெனக் கொண்டு வழிபட்டு வாழ்வான்.

14. மாயைக்கு வேதாந்திகள் சிறப்பாகச் சங்கரர் கொடுக்கும் அழுத்தம் காரணமாக அவர்களின் தத்துவக் கோட்பாட்டினைக் குறைகூறுவோரும் கண்டிப்போரும் 'மாயாவாதம்' என்றே அதனை வழங்குவர். மணிவாசகர் மேலும் ஒருபடி சென்று, 'மிண்டிய மாயாவாதம் என்னும் ஒண்டிறற் பாம்பு' என்று அதனை மிகுதியும் கண்டித்தல் காணலாம். மாயை பற்றிய சங்கரரின் கருத்துக்களைத் தொகுத்து நோக்கினால் பின்வரும் முடிவுகளைப் பெறக்கூடியதாயுள்ளது.

1. சாங்கியர் பேசும் பிரகிருதி போல மாயையும் உயிரற்ற சட இயல்பு வாய்ந்தது. எனவே பிரமத்திற்கு நேர்மாறானது என்றே கொள்ள வேண்டியதாயுள்ளது.
2. மாயை தன்னிச்சையாய்ச் செயற்படக்கூடிய சுதந்திரம் உடையதன்று.
3. அது பிரமத்தின் சத்தியாய் அதனோடு பின்னமற்று நிற்பது. இதனைப் பிரமத்தோடு அநன்யமாகவும் தாதான்மியமாகவும் அமைந்துள்ளதாக விளக்கம் தரப்படுகின்றது.
4. இருமையற்ற பிரமத்தை (நிர்க்குணப்பிரமத்தை) ஈசுவரன் (சகுணப் பிரமம்) உலகம் என இருமைப்படுத்தித் தோற்றுவிப்பது மாயை.
5. மாயை அநாதியானது.
6. அது பாவரூபமானது அதற்கு ஈரியல்புகள் உள்ளன. ஒன்று இல்லாத பொருளை உள்ளது போலக் காட்டுதல். மற்றது இருப்பதை இல்லாதது போல மறைப்பது. முன்னதை ஆவரணம் எனவும் பின்னதை விசேஷபம் எனவும் வழங்குவர்.
7. பொய்யறிவையும் பிழையறிவையும் தருவதும் மாயையின் தொழிற்பாடே.
8. மாயையைச் சொல்லால் விளக்கி வரைவிலக்கணம் செய்வதோ அது உளதோ இலதோ என்று கூறுவதோ இயலாது என்பதால் மாயையை அநிர்வசனீயம் என்பர்.
9. மாயை உண்மையன்று. ஏனெனிற் பிரமமின்றி இது இல்லை. அது பொய்யன்று. ஏனெனில் அது உலகினைத் தன்னூடாகப்பிரமத்திலிருந்து தோற்றுவிக்கின்றது.
10. விவர்த்தமென்னும் தோற்றப்பாடொன்றே அதற்கு உரியது (சிப்பியில் ஒளி தோன்றினாலும் அந்த ஒளி தனித்துப்பிரிக்க முடியாதது. அது போன்று தோற்றம் ஒன்று மட்டுமே மாயை.)
11. உண்மை ஞானம் ஏற்படும் பொழுது மாயை இல்லையாகி மறைந்து விடுகின்றது.
12. பிரமத்தை விடயமாகவும் ஆசிரயமாகவும் கொண்டபோதும் பிரமத்தை மாயையாலே தீண்டவும் முடியாது. நிறமற்ற ஆகாயத்தை நிறமுடையதாக்குவது முடியாதது போலப் (ஆகாயம் – வெளி (Space) பிரமத்தைப் பாதிப்பதென்பதுமாயைக்கு இயலாத காரியம்.

இவ்வாறு பலபட விளக்க முற்பட்டபோதும் மாயையைப்பற்றிய வேதாந்திகளின் வாதம் தெளிவுக்குப் பதில் மயக்கமே தருகின்றது. மாயை உண்டோ இல்லையோ என்று ஒரிடத்தில் ஐயுற்று, பின்பு அது பிரமத்தின் சக்தி என்பதும் உடைமைப்பொருள் என்பதும் ஏன் என்று விளங்கவில்லை. நிர்க்குணப்பிரமத்தைச் சகுணப்பிரமமாகவும், பலவாகிய பிரபஞ்சமாகவும் தோற்றுவிக்கும் சக்தி அதற்கு எங்கிருந்து வந்தது. பேறறிவும் ஒளிப்பிழம்புமான நிர்க்குணப்பிரமம் மாயையினூடாக அஞ்ஞானத்தைப் பரப்பி மயக்கத்தை உண்டாக்குவதன் நோக்கம் என்ன? கம்பநாட்டாழ்வார் கூறுவதுபோல அது பிரமத்தின் அலகிலா விளையாட்டு எனில் அதனால் ஆம் பயன் யாது? பயனில்லாத முயற்சி– வெறும் ஆடல் – எனில் பிரமத்திற்கு அது இழுக்காகவன்றோ அமையும்? சங்கரரின் விவர்த்த வாதத்தின்படி பாம்பு கயிறாகத் தோன்றுகின்றதென்றால் பாம்பு, கயிறு என்ற இருபொருள்கள் பற்றிய முன்னறிவு இருந்தால்தானே ஒன்றை மற்றொன்றாகக் கருதும் மயக்கத்திற்கு இடம் உண்டாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பல வினாக்களைச் சைவசித்தாந்திகள் எழுப்பி மாயை பற்றிய வேதாந்தக்கருத்தைக் கண்டிப்பர், மறுப்பர். சைவசித்தாந்திகள் மாயைபற்றிக் கொள்ளும் முடிபுகள் வேதாந்தத்திற்கு நேர்மாறானவை என்பதற்குப் பின்வருவன சான்றுகளாகும்.

1. மாயை உளதோ இலதோ என்று ஐயப்படவேண்டுவதில்லை. அது உள்பொருளே. உள்பொருள் எனவே அதற்குத் தொடக்கமோ முடிவோ இல்லை. அது அநாதியானது.

   மாயையே உடலுமாகும் மாயையே கரணமாகும்
   மாயையே புவனமாகும் மாயையே யோகமாகும்
   மாயையே பொறிகளாகும் மாயையே புலன்களாகும்
   மாயையே அண்ட பிண்டம் யாவையும் மாயையாமே

என்று மாயையின் செயற்பாடுகள், உள்ளடக்கம், அதன் வியாபகம் என்பவற்றைச் சிவஞானசித்தியார் அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கின்றது.

2. மாயை சிவபெருமானின் உடைமைப்பொருள். அதற்குத் திரோதான சக்தி என்று பெயர். உயிர் பதிபோலச் சூக்குமமானது. ஆணவத்தால் மூடப்பட்டு ஆணவம் வேறு தான் வேறு என்று அறியாது அது உள்ள நிலை பெத்த நிலை எனப்படும். அது கன்மங்களை இயற்றிப் படிப்படியாக தன்னைப் பிடித்துவருத்தும் ஆணவமல உபாதையினின்றும் விடுபடற்கு, கரணம், புவனம், போகம் என்பன வேண்டப்படுகின்றன. இவற்றை வழங்குவது மாயை என்ற பொதுப்பெயராலும், சுத்தமாயை, திரோதான சத்தி, குண்டலி, திரோதாயி என்ற சிறப்புப் பெயர்களாலும் வழங்கும். அது சிவனின் உமைச் சக்தியே. இதனை உமாபதி சிவாசாரியார்.

   விடிவா மளவும் விளக்கனைய மாயை
   வடிவாதி கன்மத்து வந்து

   என்று சிறந்ததோர் உவமையால் விளக்கியுள்ளார்.

3. சுத்தமாயை ஆன்மாவின் கன்மங்களுக்கு உபகாரப்படும் தநு, கரண, புவன, போகங்களை அளிப்பதாயினும் அதனிலே ஆன்மா முழுமையாகத் தங்கியிருத்தலாகாது. ஏனெனில் உலகபந்தங்களிருந்து ஆன்மாவை முழுமையாக விடுவிக்கும் ஆற்றல் இதற்கு இல்லை. இருவினை ஒப்பு, மலபரிபாகமாகியன ஏற்பட்டு ஆன்மாவிலே திருவருட்சக்தி பதியும் வரைதான் (சத்திநிபாதம் ஏற்படும் வரைதான்) சுத்தமாயை ஆன்மாவிற்கு உறுதுணையாகும். இதனாலேயே விடியும் வரை விளக்குப்போல உதவுவது என்று உமாபதி சிவாசாரியர் உவமை காட்டினார்.

4. சுத்தமாயை மட்டுமன்றி அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்று வேறிருமாயைகளும் பேசப்படுகின்றன. இவை சுத்தமாயையின் வெவ்வேறு நிலைகளையே குறிப்பன.

5. ஆன்மாவுக்காகச் சுத்தமாயை மலத்துடனும் கன்மத்துடனும் இணைந்து இயங்குகையில் அது அசுத்தமடைகின்றது. அந்நிலையில் அது அசுத்தமாயை ஆகின்றது. இவ்வசுத்தமாயை குறையறிவு நிலையிலே சுகத்தையும் துக்கத்தையும் தருகின்றது. அதினின்றும் வருவதே அசுத்தப்பிரபஞ்சம். இப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய் இயங்குகையில் பிரகிருதி மாயை ஆகின்றது.

6. அசுத்தமாயைக்கு மோகினி என்பதும் ஒரு பெயர். அதற்கு உருவம் இல்லை. அது மந்தமானது, அறிவற்றது. அதுவே தன்னிடமிருந்து பல்வேறு தன்மைகள் தோன்ற உடம்புகள், உலகங்கள், கருவிகளைத்தோற்றுவிக்கின்றது.

7. எனினும் ஆன்மாவின் பெத்தநிலையிலே அசுத்தமாயையும் அதற்கு இன்றியமையாது தேவைப்படுகின்றது. சாணம், உவர்மண், தேற்றாங்கொட்டை என்பன ஆடைகளிலும், நீரிலும் உள்ள அழுக்கைப்போக்க உதவுவது போல் அசுத்தமாயையானது ஆன்மாவுடன் சேர்ந்திருந்தே அதன் மல அழுக்கைப் படிப்படியாகப் போக்கி உதவுகின்றது.

15 இராமானுசர் சங்கரரைப்போலவன்றிப் பிரமபரிணாமவாதியாவர். சைவசித்தாந்திகளும் பரிணாமவாதிகளே. எள்ளிலிருந்து எண்ணெயும் பாலிலிருந்து நெய்யும் வெளிப்படுவது போல இறைவன் ஆன்மாவின் உள்ளிருந்து வெளிப்படுவதாகக் கொள்வதே (பிரம) பரிணாமவாதம்.

   விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல்
   மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

என்பது அப்பரடிகளின் திருவாக்கு. (பரிணாமம் என்பது காரணமாகிய பிரமமும் காரியமாகிய உலகும் உண்மை என்பதாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்திகள் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் அநாதியான முப்பொருள்கள் எனக்கொள்வர். இராமானுசரும் இவை மூன்றும் உள்பொருள்கள் எனக் கொள்கின்றார். ஆனால் சைவசித்தாந்திகள் போல மூன்றும் வேறுவேறான இருப்புக் கொண்டவை என இராமானுஜர் கொள்ளவில்லை. ஈசுவரனைச் சரீரியாகவும், சீவன், பிரபஞ்சம் இரண்டினையும் அவனது சரீரமாகவும் கொள்ளும் சரீரிசரீரசம்பந்தம் பேசுகின்றார். இவை பிரிக்க முடியாதவை என்பதற்கு அவர் கையாளும் சொற்றொடர் 'அப்பிரதக் சித்தி' என்பதாகும்.

சைவசித்தாந்திகள் சிவனை அறிவேமயமானவர் என்னும் பொருளில் சத்து எனவும், ஆணவமாகிய உலகினை அறிவேயற்ற சடமாகிய அசத்து எனவும் ஆன்மாவை அறிவிக்க அறியும் காரணத்தினால் சதசத்து எனவும் கொள்வர். இக்கொள்கை இராமானுஜருக்கும் உடன்பாடே. அவரும் அசித், சித், ஈசுவரன் ஆகிய மூன்றும் உள்பொருள் எனக்கொள்வர். (சித் – சீவன், அசித் – பிரபஞ்சம்.)

சைவசித்தாந்திகள் பன்மைவாதிகள். ஆன்மாக்கள் எண்ணுக்கணக்கற்றவை என்பது அவர்கள் முடிபு.

பிறந்தநாள் போலும் பிறக்குநாள் மேலும்
துறந்தோர் துறப்போர் தொகை

என்று திருவருட்பயனில் அவற்றின் வரையறைக்குளடங்காத பன்மைத்தன்மை பேசப்படும். இராமானுஜரும் ஆன்மாக்கள் பல என்றே கொள்கின்றார். சைவசித்தாந்திகள் மும்மலங்களாலும் பிணிப்புண்ட சகலான்மாக்கள், கன்மம் ஆணவத்தால் பிணிப்புண்ட பிரளயாகல ஆன்மாக்கள், ஆணவம் ஒன்றினால் மட்டும் பிணிப்புண்ட விஞ்ஞானகல ஆன்மாக்கள் என்று ஆன்மாக்களை அவற்றின் தரத்திற்கேற்ப மூன்று வகையாகப் பேதப்படுத்துவர். இராமானுசரும் அவ்வாறே பேதப்படுத்தினாலும் அவற்றினிடையே காட்டும் வேறுபாடுகள் பற்றிய பொருளில் வேறுபடுவர். அவர் கூறும் மூவகைச் சீவன்களும் பின்வருவனை.

1. நித்தியமுத்தர் : எக்காலத்திலும் விடுதலை அடைந்தவராய்க் கட்டின்றிப் பிறப்பின்றி இறைவனுக்கு நிலையான தொண்டு பூண்டவர்கள். இவர்கள் வைணவ பத்தியுலகில் நித்திய சூரிகள் எனப்பெயர் பெறுவர்.
2. முத்தர் : ஒருகால் கன்மத்தளையுள் கட்டுண்டு கிடந்து தமது முயற்சியால் அதனின்றும் விடுபட்டு முத்திக்குத்தகுதியானவர்.
3. பத்தர் அல்லது பெத்தர் : சம்சாரபந்தத்திற் கட்டுண்டு கன்மங்களைச் செய்து பிறப்பிற்கு உள்ளாகும் கீழ்நிலைச் சீவாத்துமாக்கள்.

இவற்றில் நித்திய முத்தரோடு விஞ்ஞானகலரையும், முத்தர் என்பவரோடு பிரளயாகலரையும், பத்தர் என்பவரோடு சகலர்களையும் ஓரளவு (ஓரளவுதான்) ஒப்பிடலாம்.

இராமானுஜருடைய அத்துவிதக் கோட்பாடு விசிட்டாத்துவிதம் எனப்படும். 'ஏகம் சத்', 'தத்துவம் அஸி', 'அஹம் பிரஹ் மாஸ்மி' என்ற உபநிடத மகா வாக்கியங்களுக்கு ஒன்றே உள் பொருள் பிறவெல்லாம் தோற்றங்கள் என்று சங்கரார் கொண்டது போல இராமனுஜர் பொருள் கொண்டிலர். "உலகையும் உயிர்களையும் அவ்விறைவனுக்கு (பிரமத்துக்கு)க் சரீரமாக்குவதால் அவனுக்குப் புறம்பாக அவனிலிருந்து வித்தியாசமான பொருள் எதுவும் கிடையாது" என்ற வகையிலேயே அவர் மேற்குறித்த மகாவாக்கியங்களுக்குத் தமக்கிசைந்தவாறு பொருள் கொள்கின்றார். அஃதாவது பிரமம் ஒன்றேதான் அதன் உறுப்புக்களே சீவன்களும் பிரபஞ்சங்களும் என்பதால் அவற்றை வேறுபடுத்திக் காண்பதற்கு வழி இல்லை. ஆனால் சைவசித்தாந்திகளோ சிவமானது ஒன்றாகி உடனாகி, வேறாகி உயிருடனும் நின்றாலும் அது தனித்துவமானது. ஆன்மாவும் பிரபஞ்சமும் (ஆணவம்) வேறுவேறானவை "என்று அறுதியிட்டுக் கூறுவர்.

விசிட்டாத்துவிதமாவது சீவன், பிரபஞ்சம் என்பன விசேடணம், ஈஸ்வரன் விசேடியம் இவையிரண்டும் ஒன்றிணைந்த ஒருமையே – இரண்டற்ற நிலையே – விசிட்டாத்துவைதம் (விசிட்டம் – விசேடிய விசேடண இணைவு. துவைதம் – இரண்டற்ற நிலை.)

சைவசித்தாந்திகள் இவ்விடத்தில் இராமானுஜரினின்றும் வேறுபடுகின்றனர். ஆணவமென்ற அநாதியான மூலமலத்தினால் பந்திக்கப்பட்ட ஆன்மாவானது, படிப்படியாகப் பல பிறவிகள் எடுத்து, பக்குவப்படி நிலையில் தனது பிறவிக்குக்காரணம் கன்மமேயென்று உணர்ந்து, நல்வினை தீவினை இரண்டையும் சமமாக ஒப்பாகக்காண்கின்றது. இவ்விருவினையொப்பினால் தனது ஆணவ மலத்தைப்பரிபாகம் செய்யச் சிவநெல்வினையில் ஈடுபட்டுக் காலப்போக்கில் திருவருட்சக்தி தன்னிலே பதிய இடமாகின்றது. திருவருள் வழிகாட்ட ஈற்றில் பாலில் நீர்போல இறையோடு ஒன்றெனவும் ஒண்ணாது இரண்டெனவும் மாட்டாது சுத்தாத்துவிதமாகிய முத்திப்பேற்றினை அடைகின்றது.

இராமானுஜர் பிரபத்திமார்க்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் தனது அறியாமையினின்றும் நீங்கப்பெற்ற ஆன்மா, அது நாள்வரை தான் வேறு தலைவன் வேறு என்ற பேதநிலையினைத் தவிர்த்துப் பிரமத்துடன் ஒன்றாகின்றது. இவ்வகையில் ஈற்றில் பிரமம் ஒன்றேயாகும் என்ற முடிவிற்கு இராமானுஜர் வருகின்றார்.

16. அநாதியாகவே ஆன்மாவைப் பீடித்து அதன் அறியாமைக்கு மூலகாரணமாய் அமைந்து அதனை அணுத் தன்மையுடையதாய் ஆக்குவது ஆணவம் என்னும் மூலமலம் என்பது, சைவசித்தாந்திகளின் கோட்பாடு. இறைவனது திருவருள் வழிபட்டு அவன் தாளிலே ஆன்மா அத்துவிதமாகும் பொழுது, ஆணவம் தனது வலி ஒடுங்கப்பெற்று நெல்லில் உமிபோலவும் செம்பிற் களிம்புபோலவும் அந்நிலையிலும் ஆன்மாவிற் கலந்து கிடக்கும். அஃதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா இறைவனுடன் கூடிப் பேரானந்தம் அனுபவிக்கின்ற [illegible]
ஏனெனில் அது அநாதியானது. எனவே அதற்கு அழிவு இல்லை. "உள்ளது போகாது. இல்லது வாராது" என்பது சற்காரிய வாதம்.

ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைக்கும் வல்லமை வாய்ந்தது. அதன் சேர்க்கையால் நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களிலே கிடந்து ஆன்மா உழலநேர்கின்றது. நான் என்னும் தன்னிலே பற்றுவைத்துத் தன்னை மற்றவரிலும் பெரியவராக நினைத்தும் தனது நலத்தையே குறிக்கொண்டும் செயற்பட வைக்கும் அகப்பற்றே அகங்காரம். தனது உற்றார், உறவினர், செல்வம் என்று பற்றுவைத்தும் அவற்றினையே நிலையானவையாகக் கருதி வாழ்வதுமாகிய புறப்பற்றே மமகாரம். இவ்விரண்டிற்கும் மூலமாய் அமைவதாதலின் ஆணவமானது மூலமலம் என்றும், ஆன்மாவை அநாதிகாலந்தொட்டுப் பந்தித்திருப்பதாற் சகசமலம் என்றும், குற்றமுடைத்தலின் ஆசு (ஆசு - குற்றம்) என்றும்; ஆன்மாவின் அறிவொளியை மறைப்பதால் இருள் என்றும், ஆன்மாவைக் கட்டிவைப்பதால் 'பாசம்' என்றும் (பாசத்தாற் கட்டுண்டிருப்பதாலேயே ஆன்மாவுக்குப் 'பசு' என்ற பெயர் அமைந்தது) பல பெயர்களால் விளக்கப்படும். இருள் என்று உபசாரமாகக்கூறிய போதிலும் ஆணவம் இருளிலும் கொடியது என்பர் உமாபதிசிவாசாரியார். ஏனெனில் இருளானது தன்னைக்காட்டிப் பிறபொருள்களை மறைக்கும். ஆணவமோ தன்னையும் காட்டாது பிறபொருள்களையும் காட்டாது. பல ஆன்மாக்களோடு கலந்து நின்றும் அவற்றிற்குத் தன்னை அது புலப்படுத்தாது என்பதைப்

பலரைப் புணர்ந்தும் இருட்பா வைக்குண்டென்றும்
கணவர்க்குந் தோன்றாத கற்பு

என்ற உவமை கொண்டு உமாபதி சிவாசாரியார் விளக்குகின்றார்.

ஆணவத்தினை விளக்கும் பிறர் அது ஆன்மாவை இடையில் வந்து சேர்ந்தது என்பர். சைவசித்தாந்தம் இதனை ஏற்காது. ஆணவம் அநாதி என்பதை அது நிறுவும் வகை பின்வருமாறு:

1. ஆணவம் தொடக்கம் (ஆதி) உடையதாயின் அது தோன்றுவதற்கு ஒரு காரணம் வேண்டும். அக்காரணம் யாது?

"ஒரு பொருள் இருந்தபடி இருப்பதற்குக் காரணம் வேண்டும். உதாரணம், பலகையின் மேலிருக்கும் புத்தகம் இருந்தபடி இருப்பதற்குப் புதிதாக ஒருகாரணம் வேண்டுவதில்லை. எந்தெந்தத் தத்துவங்கள் அதை அந்த இடத்தில் முன்நிறுத்தினவோ அவைகளே அதைப்பின்னும் நிறுத்தத் தக்கவை. அந்தப் புத்தகம் அதில் இல்லையாயின் அந்த மாறுதலைச் செய்வதற்கு ஒரு புதுக்காரணம் வேண்டும். அந்த இடத்தில் அதை நிறுத்தின தத்துவங்கள் குறைந்தாயினும் கூடியாயினும் இருத்தல் வேண்டும். அந்தப் பலகையைச் சரித்தலாகிய ஒரு தத்துவம் கூடுதலால் அந்தப்புத்தகம் விழக்கூடும். அல்லது அந்தப் பலகையைத் தாங்கி நிற்கும் கால்கள் இரண்டு விலகுவதனால் அந்தப் புத்தகம் விழக்கூடும்" - (சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் - திருவருட்பயன் - உரை)

ஆணவத்தை ஆன்மாவோடு சேர்க்கத்தக்க காரணம் இல்லை. எனவே ஆணவம் அநாதியானது.

2. ஆணவம் இடையில் ஆன்மாவைச் சேர்ந்ததும் அன்று. அவ்வாறு அஃது இடையிலே சேர்ந்ததாயின், ஆன்மா முத்தி நிலையிலிருக்கும்போதும் இடையில் வந்து சேரலாமல்லவா? அவ்வாறு சேர்வதில்லை. (ஆன்மாவினுள்ளேயே ஒடுங்கிக் கிடக்கும் என்பது முன்னரே கூறப்பட்டது.)

3. ஆன்மாவின் இயல்பான குணமே ஆணவமெனில், ஆன்மாவின் உடலோடு அந்தக் குணமும் அழிந்துபோம். ஆனால் ஆணவம் அவ்வாறு அழியாமல் ஆன்மாவின் பிறவிகள் தோறும் அதனை மறைத்து வருத்திக்கொண்டிருப்பதால் ஆணவம் இடையில் வந்து சேர்ந்ததோ இடையில் தோன்றியதோ அன்று.

காமம், வெகுளி, மயக்கம் முதலாய இழிகுணங்களுக்கு மூலமாகவும், ஆன்மாவின் பிறப்புக்கள் வினைகள் யாவிற்கும் காரணமாகவும், அதனை என்றும் விட்டு நீங்காததாகவும், சடத்தன்மைவாய்ந்து அறியும் ஆற்றல் அற்றதாகவும் (அசத்து - அறிவற்றது) உள்ளதே ஆணவம் என்பது சைவசித்தாந்திகளின் முடிபு.

17. சங்கரர் பிரமம் ஒன்றே உள்பொருள் என்று கொண்டமையால் அவர் அபேதவாதி எனப்படுவார். இராமானுஜர் ஈசுவரனுக்கும் சீவன்களுக்குமிடையே பேதமும், பேதமின்மையுமாகிய நிலை உண்டென்று நிறுவமுற்பட்டமையால் அவரைப் பேதாபேதவாதி எனக் கொள்ளலாம். அவர் பின்வந்த மத்துவர் ஈசுவரன், சீவன் ஆன்மா ஆகிய மூன்றிற்குமிடையே வேறுபாடு கற்பிப்பதால் அவர் பேதவாதி என்று கொள்ளப்படுகின்றார். அவர் ஈசுவரன், சிவன் என்பவற்றோடு பிரபஞ்சமாகிய சடத்தையும் உள்பொருளாகக் கொண்டமையால் இம்மூன்றிற்குமிடையே ஐந்து வகைப்பேதங்களைக் காட்ட முற்படுகின்றார். அவையாவன.

1. சீவன்களுக்கும் சீவன்களுக்குமிடையே காணப்படும் பேதம் இது சீவபரஸ்பரபேதம் எனப்படும்.
2. சீவன்களுக்கும் ஈசுவரனுக்குமிடையே காணப்படும் பேதம் சீவேசுவரபேதம் எனப்படும்.
3. சீவன்களுக்கும் சடப்பொருள்களுக்குமிடையேயுள்ள பேதம் சீவசடபேதமாகும்.
4. சடப்பொருள்கள் ஒன்றுக்கொன்று பேதம் உடையவை. இப்பேதம் சடபரஸ்பர பேதம் எனப்படும்.
5. சடங்களுக்கும் ஈசுவரனுக்குமிடையேயுள்ள பேதம் சடேசுவரபேதம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பேதங்களை முதன்மைப்படுத்தி அதனால் துவைதம் எனப்படும் இருமைக் கோட்பாட்டினை நிறுவமுற்படும் மத்துவர் சீவன்களிடையே கற்பிக்கும் பேதம் விசேடித்துக் கூறப்படவேண்டியதொன்றாகும். இராமானுஜரும், சைவசித்தாந்திகளும் சீவன்களின் (சைவசித்தாந்திகள் ஆன்மாக்கள் என்பர்) தனித்தனியான பேதம் பற்றிக் கவனத்திற்கொள்ளாது அவற்றை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி அப்பிரிவுகள் ஒவ்வொன்றினதும் இயல்புகளை விளக்குகின்றனர். ஆனால் மத்துவரோ சீவன்கள் ஒவ்வொன்றும் தத்துவம் இயல்புகளினால் வேறுபடுகின்றன என்பதனையுங் கூறி அதேவேளை அவற்றை மூவகையாகப்பகுத்தும் விளக்கம் தர முற்படுகின்றார். இம்மூவகைச்சீவன்களுள் முதலின்வகையும். இராமானுஜர் குறித்தவற்றை ஒத்தனவே. அநாதியே ஞானத்தில் அமர்ந்தவை, பிறவிகள் பல எடுத்துப்படிப்படியாக ஞானம் பெற்றுமுத்திக்குத் தகுதியாகின்றவை என்ற பிரிவுகள் இராமானுஜருக்கும் உடன்பாடே. ஆனால் நித்தியபெத்தராய் என்றுமே முத்திக்குத் தகுதிபெறாமல் உள்ளவை என்ற பிரிவு மத்துவருக்கே உரிய பிரிப்பாகும். அத்தகைய சீவன்கள் ஆவிகளாகவும் பைசாசங்களாகவும் என்றும் அலைந்து கொண்டிருக்கும் என்பது மத்துவர் கொண்ட முடிபு. அவ்வாறாயின் சீவன்கள் தமது பத்தியினாலோ கழிவிரக்கத்தினாலோ, பாவங்களைக் கைவிட்டுப் புண்ணியங்கள் செய்வதாலோ எவ்விதபயனும் இல்லை என்கின்றது. இது சமயநம்பிக்கையையே ஆட்டம் காண வைப்பதாகும்.

சைவசித்தாந்தம்

> பிறந்தநாள் போலும் பிறக்கும் நாள் போலும்
> துறந்தோர் துறப்போர் தொகை

என்ற திருவருட்பயன் வாயிலாக முத்தியடைந்தோர் முத்தியடையப்போகின்றவர் எனப்பாகுபடுத்தி ஈற்றில் எல்லாருமே முத்தியடைவர் என்று தரும் நம்பிக்கைக்கு இது நேர்மாறாயுள்ளது. பிரளயகாலத்திலே ஆன்மாக்களின் சஞ்சிதகன்மத்தையும் அவை அனுபவிக்காது முத்தியடைய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (சஞ்சிதம் – பிறவிதோறும் எஞ்சி நிற்கும் கன்மத்தொகுதி.)

சீவன்களில் ஒரு சில என்றுமே முத்திக்குத் தகுதியாவதில்லை என மத்துவர் வந்த முடிபு கிறிஸ்தவ சமயச் செல்வாக்கினால் ஏற்பட்டதோ என்ற ஆசங்கையைக் கிளப்பும். தத்துவஞானி எஸ். இராதாகிருஷ்ணன் அவ்வாறு முடிவுகொள்ள ஆதாரம் இல்லை என்றும் குறிப்பிடுவர். முத்திக்கு வழிகாட்டி அழைத்துச்செல்வோன் வாயு புத்திரனான அனுமான் எனவும் மத்துவர் குறிப்பர். இம்முடிபுக்கும் கிறிஸ்தவரின் 'பரிசுத்த ஆவி' என்ற தத்துவத்திற்கும் தொடர்பு உண்டோ என்பதும் ஆராயத்தக்கது.

ஈசுவரன், சீவன், சடம் என்பவற்றிற்கிடையே நிரந்தரமான பேதங்களைக்கற்பிக்கும் மத்துவரின் வீடுபேற்றுக்கோட்பாடும் இந்த இருமை அடிப்படையிலேயே அமைவதால் அது துவைதம் அல்லது துவிதம் என அழைக்கப்படும். சைவசித்தாந்திகள் போல ஆன்மாவின் முத்திநிலைகளும் மத்துவரால் நான்காக வகைப்படுத்தப்படுவதும் கருத்திற்கொள்ள வேண்டுவதாகும். அவையாவன

1. சாலோகம் : ஈசுவரனுக்குரிய உலகில் (வைகுந்தத்தில்) வாழ்தல்
2. சாமீபம் : ஈசுவரனுக்கு அண்மையில் வாழ்தல்
3. சாரூபம் : உருவத்தில் ஈசுவரன் போலாதல்
4. சாயுச்சியம் : ஈசுவரனின் சரீரத்துட் புகுந்து அவரது பேரானந்தத்திற் பங்கு கொள்ளல்

இவ்விடத்திலும் மத்துவர் மற்றைய தத்துவவாதிகளின்றும் ஒருவகையில் வேறுபடுகின்றார். ஈசுவரனோடு கலந்த நிலையிலும் சீவன் தனக்கேயுரிய தனித்துவத்திலிருந்து வேறுபடாது. காரணம் மத்துவர் இருமைவாதியாகத் தம்மை இனங்காட்டுவதேயாகும்.

இவ்வாறு சிற்சில வகைகளிலே இராமானுஜர், சைவசித்தாந்திகளோடு மத்துவருக்கு ஒற்றுமை காணப்பட்டாலும் பல வழிகளிலே அவர் இவர்களிலிருந்து வேறுபட்டு பேதவாதியாகவும் இருமைவாதியாகவும் விளங்கல் காணலாம்.

18. பிரபத்தி என்பது பத்தியின் மிகஉன்னதமான நிலையினைக் குறிப்பதாகும். இதனைப் பிரபத்தி எனவும் அழைப்பர். பகவானுக்கு முற்றாக அர்ப்பணித்து அவனையே அடைக்கலமாகக் கொள்ளும் சரணாகதி மார்க்கமே பிரபத்தியாகும். இறைவனை அடைவதற்கான உபாயமும், அந்த உபாயத்தின் பயனான உபேயமும் இறைவனே எனக்கொள்கையில், உலக வாழ்க்கையின் நலம், தீங்குயாவும் அர்த்தமற்றவையாகி விடுகின்றன. "என்கடன் பணி செய்தல் பலன் தரல் அவன் கடன்" என்றும் 'நன்றே செய்யினும் தீமை செய்யினும் எல்லாம் அவன் செயலே' என்றும் கொள்ளும் பிரபத்தி மார்க்கத்தில் பத்தி செய்வோனுக்கு எவ்வித பொறுப்பும் இல்லை. இவன் சிட்டுக்குருவி போலக் கட்டற்று எதிலும் எங்கும், எப்பொழுதும் இறைவனையே கண்டு அந்தக் காட்சியிலேயே பரவசமாகி அவன் நாமத்தையும், சிறப்புக்களையும் வாய்குளிர மனங்குளிரப் பேசுவதிலும், அவ்வாறு பேசுவோருடன் கூடிவாழ்வதிலும் ஆடிப்பாடி மகிழ்வதிலுமே மனநிறைவடைவான். இந்த மனநிறைவில் வாழ்ந்தவர்களே ஆழ்வார்கள். இறைவனின் லீலைகளிலும் பெருங்கருணையிலும் ஆழ்பவர்கள் என்ற பொருளிலேயே இவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்படுகின்றனர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாணாழ்வார், மதுரகவியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் ஆகிய பன்னிராழ்வார்களும் தாம் கடைப்பிடித்த பிரபத்தி மார்க்கத்தைத் தங்களின் திருப்பாசுரங்கள் வாயிலாக வெளிப்படுத்தி அம்மார்க்கத்தினை வளர்த்தார்கள். என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் பாடியருளிய திருப்பாசுரங்கள் நாதமுனிகளால் தொகுக்கப்பட்டு 'நாலாயிரத்திவ்யப் பிரபந்தம்' என வழங்குகின்றன.

சைவத்தில் நிலவும் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பவற்றிற்குச் சமமும் சமாந்தரமுமாக வைணவபத்தியில் தஸ்யபாவம், வாத்ஸல்யாபாவம், சக்யபாவம், மதுரபாவம் என நான்கு மார்க்கங்கள் பேசப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தஸ்யபாவம் | : | இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும் பாவனை செய்தல் |
| 2. | வாத்ஸல்யபாவம் | : | ஆண்டவனைத் தந்தையாக மட்டுமன்றி பிள்ளையாகவும் பாவனை செய்தல். |
| 3. | சக்யபாவம் | : | ஆண்டவனை நண்பனாகப்பாவனை செய்தல். |
| 4. | மதுரபாவம் | : | இறைவனைத் தலைவனாவும் தன்னைத் தலைவியாகவும் பாவனை செய்தல். |

1. தஸ்யபாவம் : ஆழ்வார்கள் அனைவருமே தம்மை இறைவனின் அடிமைகளாகப் பாவனை செய்தாலும் முதலாழ்வார்களும், தொண்டரடிப்பொடியாழ்வார்களுமே தஸ்யபாவத்திற்கு எடுத்துக் காட்டாக (சிறப்பாக)க் குறிப்பிடத்தக்கவர்கள்.

2. வாத்ஸல்யபாவம் : பெரியாழ்வார் தம்மை யசோதையாகவும் திருமாலைத் தம் மைந்தனான கண்ணனாகவும் பாவனை செய்து பாடினார். குலசேகராழ்வார் தம்மைத்தசரத–னாகவும் திருமாலை இராமனாகவும் பாவனைசெய்து பாடினார்.

3. சக்யபாவம் : சுந்தரர்போல ஆழ்வார்கள் எவரும் தம்மை இறைவனின் நண்பராகப் பாவனை செய்து பாடியமைக்குச் சான்றில்லை.

4. மதுரபாவம் : ஆண்டாள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் நாயக நாயகிபாவத்தில் தலைநின்று பாமாலை பாடியவர்கள்.

இவற்றோடு சுந்தரர் போல (சிவனடியார் திறம்பேசி அவர்களுக்கு ஆட்படுவேன் என உறுதிகூறிப்பாடியது போல (திருத்தொண்டத்தொகை), நம்மாழ்வாரைப் பரவிப்பாடியவர் மதுரகவியாழ்வார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நாடிலும் நின்னடியே நாடுவேன் எம்பெருமான்
பாடிலும் நின்புகழே பாடுவன் – சூடிலும்
பொன்னாழி எய்தினான் பொன்னடியே சூடுவதற்கு
என்னாகி லென்னே எனற்கு

என்று பாடிய பொய்கையாழ்வார் தமது பக்தி வைராக்கியத்தை இப்பாடலின் மூலம் புலப்படுத்திச் சரணாகதித் தத்துவத்திற்குத் தம் வாக்கினால் வரையறை செய்கின்றார். 'வானந்துளங்கிலென் மண்கம்ப மாகிலென்' என முழங்கிய அப்பர் சுவாமிகளின் குரலொலியை இப்பாசுரத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். அன்பே தகளியாகவும் ஆர்வமே நெய்யாகவும் ஞானச்சுடர் விளக்கேற்றிய பூதத்தாழ்வாரின் பத்தி பொதுளிய ஞானமும், என் அளவன்றால் யானுடைய அன்பு என்றும், 'கோல்நாடி ஓடுங்கொழுந்ததே போன்றதே மால்நாடி ஓடும் மனது' என்றும் இவர்கள் தங்கள் அன்பானது எல்லையை உடைத்துக்கொண்டு ஓடும் பிரவாகமாகப் பெருகியோட அதில் நீந்தித்திளைத்தவர்கள். பெரியாழ்வார்.

எடுத்துக் கொள்ளில் இடையை முறித்திடும்
ஒடுக்கிப் புல்இல் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந்தேன் நங்காய்

என்று யசோதரை பாவனையில், குண்டனாகிய கண்ணக் குழந்தையைத்தூக்க முடியாது படும் இடரைக் கூறும் இடத்திலே தாய்மையினூடு அவரின் பத்திப் பிரமை வெளிப்படுவதையும்,

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாயவன்தன் வாயுமிழும் நீரும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

என்று ஆண்டாளின் பத்திக்காதலின் ஏக்கப் புலப்பாட்டின் இயல்பையும்.

பேராயிரம் பிதற்றிப் பெருந்தேருமேல்
ஊரார் பழித்தாலும் ஊரா தொழியேன்காண்
வாராரும் பெண்ணை மடல்

என்று திருமங்கையாழ்வார் தமது பத்தி விரகதாபம் அணை கடந்து பெருகுவதைப் புலப்படுத்தும் வகையையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் ஸ்ரீரங்கநாதர் தரிசனத்தினால் ஏற்படும் உறுதிப்பாட்டின் வெளிப்பாட்டையும்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையருங் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே

என்ற குலசேகர ஆழ்வாரின் அன்புமுதிர்வின் அங்கலாய்ப்பையும்

கறந்தபால் நெய்யே நெய்யினின் சுவையே
கடலினுள் அமுதமே அமுதில்
பிறந்தவின் சுவையே சுவையது பயனே
பின்னைதோள் மணந்தபேராளா!

எனப் பரந்தாமனின் இன்னமுதச்சுவையில் பெருந்தாகங்கொண்ட நம்மாழ்வாரின்

கண்ணன் அல்லால் இல்லை கண்டீர் சரணது நிற்கலந்து
மண்ணிற் பாரம் நீங்கு தற்கே வடமது ரைப்பிறந்தான்
திண்ணை மாறும் உடைமை உண்டேல் அவனடி சேர்ந்துய்ம்மினோ
எண்ண வேண்டாதும்ம தாறும் அவனன்றி வேறில்லையே

என்ற பரிபூரண சரணாகதியில் உதித்த பெருமிதத்தையும் கொண்டு ஆழ்வார்கள் வளர்த்த பிரபத்தி நெறிக்கு ஒருபானை சோற்றில் ஓர் அவிழ் பதமாய் மேலேயுள்ள பாசுரங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

19. வேதகாலத்தொடக்கத்தில் கன்மம், அக்கன்மத்தின் பயனை அனுபவிப்பதற்குச் சீவன் எடுக்கும் பிறப்புக்கள் பற்றிய கருத்து நிலவவில்லை என்பர். மரணத்தின் பின்னர் மரணமடைந்தவர் முதலில் மரணமடைந்து யமனுலகு செல்வர் என்றும் அங்கு அவனது ஆதரவில் சில காலம் வாழ்வர் என்ற நம்பிக்கை நிலவியதாகத் தெரிகின்றது. உலகியல் வாழ்வில் நலந்தீங்குகளைக் கருத்திற்கொண்டு தீங்குகளினின்று விடுபடவும் நலங்களை அனுபவிக்கவுமே தெய்வங்களைப் பிரீதி செய்யும் வேள்விகள் நடத்தப்பட்டன. அடுத்து உலகின் ஒழுங்கிற்குக் குறியீடான 'ரிதம்' என்ற கருதுகோளும் காலப்போக்கில் அது ஒழுக்கநெறிகளுக்கு குறியீடாக மாறியதும் அதன் காவலனாக வருணன் கொள்ளப்பட்டதும் வேத ஆய்வாளரால் எடுத்துக்காட்டப்பட்டன. தீமை புரிந்தவர் வருணனின் தண்டனைக்கும் நன்மை செய்தோர் அவனுடைய பாராட்டுக்கும் காப்பிற்கும் உள்ளாவர் என்ற அடிப்படையிலே மறுபிறப்புக்கோட்பாடு அரும்பியது என்று, டி. எம். பி. மகாதேவன் தமது 'இந்து சமயத் தத்துவம்' என்ற நூலிலே கூறியுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

பின் வேதகாலத்தில் (ரிக் வேதம் தோன்றிய காலம் முன்வேதகாலம் என்றும், மற்றைய வேதங்களும் உபநிடதங்களும் தோன்றிய காலம் பின்வேதகாலம் என்றும் கொள்ளப்படும். ) முதன் முதல் கன்மம் மறுபிறப்புக்கோட்பாடு பிருஹதாரணியக உபநிடதத்தில் அரும்புவதாய் ஏ.எல். பசாம் 'தமது வியத்தகு இந்தியா' என்ற நூலிற் காட்டியுள்ளார். அவர் கூற்று பின்வருமாறு.

"தியாக வாழ்வும் அறவாழ்வும் தவவாழ்வும் வாழ்ந்தோர்தம் உயிர்கள் சில இருண்ட இடங்களில் சுற்றித் திரிந்தபின் எமனுலகாய தென்புலத்துக்குச் செல்லும். அங்குச் சில காலம் இன்பம் நுகர்ந்தபின் அவை திங்கள் மண்டிலத்துக்குச் செல்லும். திங்கள் மண்டிலத்திலிருந்து அவை வெறுவெளிக்குச் சென்று அங்கிருந்து வளிக்குச் சென்று, பின் மழையோடு நிலத்துக்கு இறங்கும். அங்கே அவை உணவாகி.................. பெண்ணென்னும் தீயில் மீண்டும் பிறப்பதற்கு ஆணென்னும் வேள்வித்தீக்குக் கொடுக்கப்படும். அறத்தாற்றில் வாழாதோர் புழுவாகவேனும் பூச்சியாகவேனும் பிறப்பர்" இக்கருத்துக் காலப்போக்கில் திட்டவட்டமாக உருப்பெற்று இந்து சமயத்தின் எல்லாப் பிரிவுகளுமே கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டன. 'வாழ் நாள் வழியடைக்கும் கல்' எதுவென்று தேடலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலும் இந்து சமயி ஒவ்வொருவனதும் தவிர்க்கவியலாத கடன்களாக மாறின.

ஒரு பிறப்பில் ஒருவன் செய்த நன்மை தீமைகளுக்கு அமைவாக அவற்றின் பயன்களை அனுபவிக்க அவன் மறுபிறப்பு எடுக்க வேண்டியவனாகின்றான். இம்மறுபிறப்பிலும் அவனது கன்மங்கள் மீண்டும் அவனைப் பிறவி எடுக்க வைக்கின்றன. இப்படியே விஷ சக்கரமாகப் பிறவிகள் தொடர்ந்து வருவதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்
எல்லாப் பிறப்பும்.................................

எனப் பிறவிகளின் வகைகளும் தொகைகளும் மணிவாசகரால் சிவபுராணத்தில் விரித்துக் கூறப்படல் காணலாம்.

சைவசித்தாந்தம் கன்மங்களை மூன்று வகைகளாய்ப்பிரித்து விளக்கம் தருகின்றது. பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்பனவே அந்த முப்பிரிவுகளாகும். பிராரத்தம் என்பது முன்பிறப்பிலே செய்து இப்பிறப்பிலே அனுபவிக்கப்படுவது. ஆகாமியம் இப்பிறவியிலே செய்யப்படும் வினை. சஞ்சிதம் என்பது ஒவ்வொரு பிறவியிலும் அனுபவிக்காது எஞ்சிய வினைகளின் தொகுதி. இவ்விடத்தில் சஞ்சிதமாகிய வினைத்தொகுதி ஓர் ஆன்மாவால் எப்போது அனுபவித்து முடிவிற்கு வரும் என்ற கேள்வி எழுகின்றது. உலக முடிவாகிய பிரளயகாலத்தில் ஆன்மாவைப் பற்றி எஞ்சிநிற்கும் வினை தவிர்க்கப்பட்டு அதற்கு இறைவன் முத்திப்பேற்றினை அருளுகின்றான் என விளக்கம் தரப்படுகிறது.

பிற சமயங்கள் நல்வினை செய்பவர் இறைவனின் சுவர்க்க உலகடைந்து இன்பம் அனுபவிப்பர் என்றும் தீவினை செய்தோர் நரகம் அடைவர் என்றும் கூறுவதோடு நிறைவு காண்கின்றன. இந்து சமயமோ நல்வினையும் பிறவிக்குக் காரணமாதலால் அதனையும் தவிர்த்து வினைகளைச் சமயத்துவ நோக்கில் கண்டு இறைவனுக்கே பொறுப்பினை ஈந்து நிஷ்காமிய கர்மம் இயற்றுவதொன்றே வினைகளில் தோயாதிருக்க வழியென்றும் அதுவே முத்திக்கான நெறி என்றும் வலியுறுத்துகின்றன. இக்காரணத்தினாலேயே திருவள்ளுவர் 'இருள்சேர் இருவினை' என்றும், சைவசித்தாந்திகள் நல்வினையைப் பொன் விலங்கென்றும், தீவினையை இரும்பு விலங்கென்றும் கூறுவர்.

வேதங்களை ஏற்காத பௌத்தர், சமணர் ஆகியோரும் கன்மத்தையும் மறுபிறப்பையும் ஏற்கத் தவறவில்லை. ஆனால் வைதிக மதங்கள் போன வினைப்பயனை அவ்வவ்வான்மாவிடம் சேர்த்து – இறுத்து – அவற்றின் பயனை அனுபவிக்கச் செய்பவன் இறைவன் என்பதை பௌத்தம் ஏற்கவில்லை. கன்மமே அதனைச் செய்பவனை நாடி அடையும் என்பது பௌத்தசமயிகளின் முடிபு. பசுக்கூட்டத்தின் நடுவே கன்று தனது தாயைத் தேடிக் கண்டுகொள்வது போல வினையும் அதனைச் செய்பவனை நாடி அடையும் என்ற உவமையால் அவர்களின் முடிபு விளக்கப்படுகிறது. சமணரோ தர்மம் என்பது சர்வசக்தி வாய்ந்தது என்றும் அணுச்சேர்க்கையால் உருவான சீவன்கள் தமது கன்மப் பயன்களை அனுபவிக்கவும் பிறப்பெடுக்கவும் தருமமே நெறிப்படுத்துகின்றது என்றும் கன்மம், மறுபிறப்பிற்கு விளக்கம் தருகிறார்கள்.

கன்மத்தின் முடிவில் பிறவியின் வழி அடைக்கப்படுகையில் ஆன்மா பிறவியற்ற ஒன்றுமேயற்றுப்போகிறது என்பது பௌத்தர்களின் முடிபு. இந்நிலையை நிர்வாணம் என்ற பெயரால் அவர்கள் வழங்குகிறார்கள். சமணர் பிறவிகளின் முடிவில் கன்மங்களின் அழிவில் சீவன் தெய்வமாகி விடுகின்றது என்பர்.

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

என்ற வள்ளுவர் வாய்மொழி இவ்வுண்மையையே புலப்படுத்துகின்றது.

20. மனிதன் அடையவேண்டிய உறுதிப்பொருள்கள் ஆக அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் இந்து சமயச்சான்றோரால் வகுத்து உரைக்கப்பட்டன. புருஷார்த்தங்கள் என்று இவை வடமொழியில் வழங்கும். தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பன அறம் முதலான நான்கிற்குமான வடசொற்கள்.

"அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்." என்று அறத்தின் வரைவிலக்கணமும், வகைகளும் பரிமேலழகரால் திருக்குறள் உரையின்கண் தரப்பட்டன.

தருமம் என்ற சொல் 'த்ருஷ்' என்ற வடசொல்லடியாய் பிறந்தது. போஷித்தல், தாங்குதல் என்பது இதன் பொருள். இம்மை, மறுமை ஆகிய இரண்டிற்குமான வழிவகைகளை அறிந்து அவற்றைப் போஷித்து, தாங்கி வாழும் வகையினை, கடன்களை வலியுறுத்துவதே தருமமாகும். வேதவழிப்பட்ட மனுஸ்மிருதி, கௌதமஸ் மிருதி, யக்ஞவல்கியஸ் மிருதி போன்றவை தருமத்தைக் காரணமுறையில் விளக்குகின்றன. புராண இதிகாசங்கள் தருமத்திற்கான காரணத்தினைத் தமது கதாபாத்திரங்களின் காரியம் கொண்டு விளக்கித் தரும வழியில் ஒழுக ஒவ்வோர் இந்துவிற்கும் வழிகாட்டுகின்றன.

தருமத்தினை பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரராகிய நால்வகை வருணத்தினருக்குமென அவ்வவர் தரத்திற்கும், தகுதிக்குமேற்ப விதிகளை வகுத்துத் தந்தவை ஸ்மிருதிகளாகிய தருமசாத்திரங்கள். இவற்றிலிருந்து வேறுபட்டு மக்கள் யாவரும் பொதுவாக மேற்கொள்ள வேண்டிய நீதிகளை, தருமங்களை இல்லறம், துறவறம் என இரண்டாக வகுத்துத் தமிழிலே தந்த பெருமை திருக்குறளுக்கு உண்டு. இல்லறமாகிய குடும்பவாழ்கையிலே ஈடுபடும் இல்வாழ்வான் அன்பை அணிகலனாகக் கொண்டு தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவரையும் பேணுதல் வேண்டும். துறவிகள், ஏழைகள், வானப்பிரத்தர் முதலானோருக்கு உண்டியும் உறையுளும் மருந்தும் அளித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தல் வேண்டும். கதியின்றித் தன்னிடத்தே வந்து இறந்தவருக்குத் தீக்கடன், நீர்க்கடன் புரிந்து அவர்களின் ஆன்மாவிற்கு நற்கதி வழங்கல் வேண்டும். அன்பு, நடுவுநிலை, ஒழுக்கம் முதலான நற்குணங்களைப் போற்றிக் கடைப்பிடித்தல் வேண்டுமென அறிவுரை பலவும் திருவள்ளுவரின் இல்லறவியலிலே காணப்படும் செய்திகளாகும். துறவறவியலிலே, அருளுடைமை, விரதம், போலி ஒழுக்கமின்மை, துறவு, தியாகம், யான் எனது என்னும் செருக்கறுத்தல், கொல்லாமை, இன்னாசெய்யாமை முதலான துறவிக்கு வேண்டும் ஒழுக்கங்கள் விரித்துரைக்கப் படுகின்றன. இவற்றோடு புலனடக்கம், எளிமை, தவம், கல்வி என்பனவும் சேர ஒட்டுமொத்தமான தருமநெறி நன்கு விளங்குவதாகும். அடுத்துவரும் அர்த்தம் காமம், என்பவற்றின் அடித்தளமாகவும் உயிர்நாடியாகவும் விளங்குவதும் புருஷாத்தங்களுக்குள் முதன்மையானதும் முதலானதுமான தருமமேயாகும்.

அர்த்தம் என்பது தருமவழியிற் பொருளீட்டலை மட்டும் குறிப்பதன்று. சமுதாயத்தின் பொதுநலத்தைக் கட்டிக்காத்து மக்களைத் தருமவழியிலே ஒழுக வழிகாட்டுவதான ஆட்சியியலும் அர்த்தம் என்பதனுள் அடங்கும். 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்ற முதுமொழிக்கேற்ப குடிமக்கள் ஒழுக்கம் தவறாது பிறருக்கு எவ்விததீங்கும் விளைவிக்காது வாழ்வதற்கு அரசனே (அக்காலத்தில்) பொறுப்பாளனாக கருதப்பட்டான். எனவே அரசன் அவனுடைய அங்கங்களான அமைச்சு, ஒற்று, படை முதலியவற்றின் கடமைகளும் உரிமைகளும் அர்த்தம் என்னும் பொருளினுள் அடக்கப்பட்டமை விளங்கிக்கொள்ளக்கூடியதே. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் அரசநீதி, கடமைபற்றியெல்லாம் விரிவாகப் பேசும் வடநூல். திருக்குறள் இவற்றைத் தமிழில் எடுத்து (பொருட்பாலில்) விளக்குகின்றது. மனுஸ்மிருதி போன்றனவும் அரச தருமத்தினை எடுத்தியம்புகின்றன.

காமம் என்பது ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் தம்முட் கூடுகின்ற கட்டத்தின் வரையறைகளை அறிவுறுத்துகின்றது. நாகரிகமும், பண்பும் அமைந்த சமூகங்களிலே ஆண் – பெண் காதலும் அக்காதல் வாழ்வும் குறித்த சில இலட்சியங்களின் அடிப்படையிலே அமைந்துள்ளன. இவற்றை வரையறை செய்து ஆணையும் பெண்ணையும் நெறிப்படுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் விலங்குகளுக்கும் மனிதனுக்குமுள்ள வேறுபாடு புலனாகும் என்பதையுணர்ந்து வாத்ஸாயனர் காமசூத்திரம் செய்தார். திருவள்ளுவர் தமது திருக்குறளிலே காமத்துப்பால் வகுத்து இருபத்தைந்து அதிகாரங்களிலே அதன் மாட்சியைப் புலப்படுத்தினார். இவர்களின் அறிவுரைகளின் வழிக்காதலாகிய காமத்தைக் கையாள்வது இன்றியமையாதது என்பதுக்கையமில்லை.

இறுதியாக அமைந்த புருஷார்த்தம் வீடு எனப்படும் மோட்சமாகும். அது சொல்லால் விளக்கவொண்ணாதது. இதுபற்றிப் பரிமேலழகர் உரைப்பன மனங்கொள்ளத்தக்கன.

"இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்து அழிவில் வீடும், நெறியறிந்து எய்தற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தாதலின் துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையான் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்."

இதே சாரம் அமையும் வகையிலும் உறுதிப்பொருள்களிலே தனித்துவமானவற்றைப் புலப்படுத்தும் வகையிலும் அமைய ஔவையார் கூறிய வெண்பாவும் நினைவு கூரத்தக்கதே.

ஈதல் அறம் தீவினைவிட் டீட்டல் பொருள் எந்நாளும்
காதல் இருவர் கருத்தொருமித்து – ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org